# சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும்!

- ஓர் ஆய்வு



அ. சீனிவாசன்

# சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும்

- ஓர் ஆய்வு .

அ. சீனிவாசன்

பழனியப்பா பிரதர்ஸ்

*கோனார் மாளிகை*

(ப.எ. 14) 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 600 014.

*கிளைகள் :*

திருச்சி - 620 002. சேலம் - 636 001.

கோயமுத்தூர் - 641 001. மதுரை - 625 001.

ஈரோடு - 638 001.

முத்றப்பதிப்பு : 2002

விலை : ரூ. 60-00

ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

# முன்னுரை

சிலப்பதிகாரம், திவ்யப்பிரபந்தம் ஆகிய இரு நூல்களுமே தமிழ் மொழியின் மூல நூல்களின் பிரிவைச் சேர்ந்தவை. சிலப்பதிகாரம் தலைசிறந்த தமிழ்க் காப்பியம். இந்தச் சிறப்புமிக்க தமிழ்க் காப்பியம் மூன்று தமிழ்நாடுகளையும் ஒற்றுமைப் படுத்துகிறது; மூன்று தமிழ் மன்னர்களையும் புகழ்ந்து போற்றுகிறது; முத்தமிழையும் இணைக்கிறது.

**"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்**
**தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு**
**மாட மதுரையும் பீடா ருறந்தையும்**
**கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரும்**
**அரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்"**

என்று இளங்கோவடிகள் தமிழகத்தின் ஒட்டுமொத்த எல்லை களையும், தலைமையான நகரங்களையும், அங்கு அமைந்திருந்த ஆட்சியரை இணைத்துக் கூறுவதையும் காண்கிறோம்.

சிலப்பதிகாரக் காப்பியம் தமிழையும் தமிழகத்தையும், தமிழகத்தின் நாடு நகரங்களையும் தமிழ் மன்னர்களையும் தமிழ் மக்களையும், அவர்களின் நாகரிக வளர்ச்சியையும் சிறப்பித்துக் கூறும் அதே சமயத்தில் தமிழகத்துடன் பாரதத்தை இணைத்தே காண்கிறது; பிரித்துப் பார்க்கவில்லை. இக்காப்பியத்தில் பொதிகையும் இமயமும் விந்தியமும் சேர்ந்து காணப்படு கின்றன; கங்கையும் காவிரியும் வைகையும் சேர்ந்து காணப்படுகின்றன; புகாரும் அயோத்தியும் இதர பல நகரங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

"தெய்வம் தெளிமின், தெளிந்தோர் பேணுமின்" என்று குறிப்பிட்டுக் கூறுவதுடன் இறைவனையும் இறைவியையும் ஆறுமுகவேளையும் திருமாலையும் இராமனையும் பலராமனையும் குறிப்பிட்டுக் கூறுகிறது. இந்திரனுக்கு விழா வெடுப்பதை விவரிக்கிறது. அவ்விழாவைக் காண வடக்கே யிருந்து சிலர் வருவதையும் கூறுகிறது. திருவேங்கடமும் திருவரங்கமும் திருமாலிருஞ்சோலையும் திருவனந்தபுரமும் காப்பியத்தில் சிறப்பான இடங்களைப் பெறுகின்றன. ஆழ்வார்களின் பக்திப் பாடல்களுக்கு ஈடான ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

திவ்யப் பிரபந்தம் தமிழில் உள்ள சிறப்பான மூலநூல் வகையில்லானதாகும். சைவத் திருமுறைகளும் திவ்யப் பிரபந்தமும்

சிறந்த பக்தி நூல்களாக, தலைசிறந்த தமிழ் இலக்கியங்களாக, வேத சாத்திரங்களாகத் திகழ்கின்றன. திவ்யப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் பாரதம் முழுவதிலும் உள்ள வைணவ திவ்ய தேசங்களைப்பற்றியும், அவைகளில் எழுந்தருளியுள்ள பெருமாளின் பெருமைகளைப்பற்றியும் திவ்யமாகப் பாடியுள்ளார்கள். இராமபிரானையும் கண்ணபிரானையும்பற்றி மிக அதிகமாகப் பாடியுள்ளார்கள். திவ்யப் பிரபந்தம் குறிப்பிடும் திவ்ய தேசங்கள் பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் என்றும், சோழ நாட்டுத் திருப்பதிகள் என்றும், மலைநாட்டுத் திருப்பதிகள் என்றும், தொண்டை நாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள் என்றும் தொகுத்துக் கூறப்படுகின்றன.

இமயத்திலுள்ள வதரியிலிருந்து (பத்ரி நாராயணப் பெருமாள்) திருவனந்தபுரம் (அனந்தசயனப்பெருமாள் - பத்மநாபப் பெருமாள்) வரையிலான பாரத நாடு முழுவதிலு முள்ள சிறப்புமிக்க வைணவத் திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள பெருமாளின் புகழைப் பரப்பியுள்ளார்கள். இமயத்தையும் பொதிகையையும் இணைத்துள்ளார்கள். கங்கையையும் காவிரியையும் பொருனையையும் இணைத்துள்ளார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் படர்ந்துள்ள பாரதப் பண்பாட்டை நன்னெறிகளை இணைத்துள்ளார்கள். ஆழ்வார்கள் சிறப்பித்துப் பாடியுள்ள திவ்ய தேசங்கள் அனைத்தும் வரலாற்றுச் சிறப்புமிக்கவைகளாகும்.

சிலப்பதிகாரக் காப்பியம் தமிழகத்தின் மூன்று தமிழ் மன்னர்களின் அரசியலையும் ஆட்சிமுறைகளையும், மூன்று தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஆதாரமாய்க் கொண்டு அமைந்துள்ள சிறந்த பெருங்காப்பியமாகும்.

திவ்யப் பிரபந்தம் திருமாலின் அவதாரப் பெருமைகளை விளக்கும் வியாச பகவான் அருளிய ஸ்ரீ பாகவதத்தையும் மற்றும் வேதங்களையும் உபநிடத தத்துவங்களையும் இதிகாசங்களை யும் புராணங்களையும், மனித வாழ்க்கை அனுபவங்களையும் ஆதாரமாய்க்கொண்டு இனிய தமிழ்ப் பாசுரங்களில் கூறும் சிறப்புமிக்க எழுச்சிமிக்க பக்திப் பேரிலக்கியமாகும்.

திவ்யப்பிரபந்தம் கூறும் இப்பக்திப் பாசுரங்கள், வேதாந்த தத்துவஞானக் கருத்துகளையும் வைதிக நெறிகளையும் இயற்கையுடனும் மக்களின் வாழ்க்கையுடனும் இணைத்துத் திவ்யமான தமிழில் பாடப்பட்டுள்ளன.

இந்த இருபெரும் தமிழ்ப் பேரிலக்கியங்களும் இவைகளின் ஆசிரியர்களும் தங்கள் வழிபாட்டு முறைகளில் வேறுபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும், தமிழகத்தின் -

அகண்ட பாரதத்தின் இயற்கை வளத்தையும் அதன் அற்புதமான மலைகளையும், பொங்கிவரும் ஆறுகளையும், கடல்களையும், வற்றாத நீர்நிலைகளையும், தெய்விக விருட்சங்களையும் இதர எண்ணற்ற வகையிலான தாவரங்களையும் விலங்குகளையும், இதர ஜீவராசிகளையும் (உயிர்க்கூறுகளையும்) அதன் வளத்தைப் பற்றியும், மனித முயற்சிகள்பற்றியும் தொழில் பெருக்கம் பற்றியும், செயற்கை வளங்கள்பற்றியும் வாழ்க்கை மேம்பாடுகள் பற்றியும் விவரித்துக் கூறுகின்றன.

திவ்யப் பிரபந்தம் கூறும் பக்தியும் பிரபத்தி தத்துவங்களும் வாழ்க்கையோடு இணைந்தவைகளாகும். இருபேரிலக்கியங்களும் மனித வாழ்க்கையின் நெறிமுறைகளைப்பற்றியும் சீலங்களைப்பற்றியும் விவரித்து எடுத்துக்காட்டி வாழ்க்கைக்கு வழிகாட்டும் அறிவுரைகளை எடுத்துக்கூறுகின்றன. அவை தனி மனிதனுக்கும் மனித சமுதாயத்திற்கும் மனித குல முழுமைக்கும் வழிகாட்டிகளாக அமைந்துள்ளன.

சிலப்பதிகாரக் காப்பியமும் திவ்யப் பிரபந்தமும் திருமாலைப்பற்றியும் திருமால் பெருமைகளைப்பற்றியும் பாடுகின்றன. திருமால் வழிபாடுகளும் திருவிழாக்களும் தமிழகத்திலும், பாரத கண்டம் முழுவதிலும் மக்களுடைய வாழ்க்கையோடு இணைந்து முக்கிய இடம் பெற்றிருக்கின்றன.

சிலப்பதிகாரக் காப்பியம், தமிழகத்தில் உள்ள திருமால் வழிபாடுபற்றியும் திருமால் கோயில்கள்பற்றியும் பல இடங்களில் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. திவ்யப் பிரபந்தம் திருமாலையும் திருமால் வழிபாடுகள்பற்றியும், திருவிழாக்கள்பற்றியும், திவ்ய தேசங்கள்பற்றியும் அவைகளின் தனிச் சிறப்புகள்பற்றியும், அங்கு நடைபெறும் திருவிழாக்கள் தேரோட்டங்கள்பற்றியும், அவ்விழாக்களில் மக்கள் திரளாகக் கூடுவதைப்பற்றியும் மிக விரிவாக விவரித்துக் கூறுகின்றது.

சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும் இனிய நல்ல தமிழ் நூல்களாகும்; அவ்வினிய தமிழின் மூலநூல்களாகும். தமிழைப் பற்றியும், தமிழின் இனிமையைப்பற்றியும் தமிழ்மொழியின் வளத்தைப்பற்றியும் விவரித்துக் கூறும் இனிமையான கவிதைகளும் காவியங்களுமாகும். இருபேரிலக்கியங்களும் தமிழ்மொழியின் சிறப்புகள், தமிழகத்தின் சிறப்புகள், தமிழகத்தின் நாடு நகரங்கள், மலைகள், ஆறுகள், வளமான பூமி, மனிதவளம், மனித முயற்சிகள், அதன் செல்வ வளம், தொழில் வளம், வாணிபம், உற்பத்திப் பண்டங்களின் பெருக்கம், தமிழ் மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை, வளர்ச்சியடைந்த நாகரிகம் ஆகியவைபற்றியெல்லாம் விரிவாகப் பேசுகின்றன.

திவ்யப் பிரபந்தம் வைணவ பக்தி இயக்கத்தின் அடிப்படையான இலக்கியமாகும். சிலப்பதிகாரக் காப்பியம், அடிப்படையில் சமண பௌத்த சார்பு இலக்கியமாகும். இந்தியத் திருநாட்டின் வரலாற்றில் வடக்கிலும் தெற்கிலும் பக்தி இயக்கம் ஒரு வலுவான இயக்கமாக மக்களுக்கிடையில் தோன்றி இடம் பெற்றதை அறிகிறோம். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பக்தி இயக்கம் தமிழகத்தில் மிகவும் பலமாக வேரூன்றிப் பரவியிருந்தது. இந்தப் பக்திப்பேரியக்கத்தின் ஆதாரக் கருத்துகளின் சித்தாந்த அடிப்படையாகத் திவ்யப் பிரபந்தங்களும் சைவத் திருமுறைகளும், தமிழகத்தில் வலுவாக வேர்விட்டுப் பரவியுள்ளன.

பக்திப் பேரியக்கம் ஒரு வலுவான திரளான மக்களியக்க மாகத் தமிழகத்தில் பொங்கி எழுந்திருக்கிறது. இன்றும் நமது நாட்டில் திருவிழாக்களிலும் திருக்கோயில்களிலும் பல்லாயிரக் கணக்கான, பல இலட்சக்கணக்கான மக்கள் திரள்வதைக் காண்கிறோம்.

இந்தப் பக்திப் பேரியக்கத்தின் அடிப்படை அமைப்பு களாக நமது சமயங்களும், மடங்களும், தர்ம ஸ்தாபனங்களும் அமைந்துள்ளன. அவைகளின் தளங்களாக நமது ஆலயங்களும் கோவில் நகரங்களும் அமைந்துள்ளன. அந்தப் பக்திப் பேரியக்கத்தின் சித்தாந்தமாக, தத்துவ ஞானமாக, அறிவொளி யாக, ஆசார நெறிகளாக, மக்களுக்கு வழிகாட்டும் சீலங்களாக இனிய இசையில் திவ்யப் பிரபந்தமும் திருமுறைகளும் அமைந்துள்ளன. இந்தப் பக்தி பேரியக்கத்தின் வெளிப்பாடாகத் திரளான மக்கள் பங்கு கொள்ளும் திருவிழாக்களும் தேரோட்டங்களும் தீர்த்தாடனங்களும் அமைந்துள்ளன.

திவ்யப் பிரபந்தத்தின் அத்தகைய சிறப்புகளை இந்த நூலில் எடுத்துக்காட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பணி மிகப்பெரியதும் மிகக் கடினமானதுமாகும். ஆயினும், இந்த மகத்தான பெரும்பணியில் ஒரு சிறு துளியாக இந்த நூலைத் தமிழ் மக்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

நமது இனிய தமிழ் நூல்கள், அவைகளின் ஆழ்ந்த கருத்துகள் தமிழ் மக்களிடம் இன்னும் விரிவாகச் செல்ல வேண்டும். பாரத நாட்டில் இதர பகுதிகளிலும் அவை விரிவாகப் பரவவேண்டும். இந்த மகத்தான மக்கள் பணியில் - மகேசன் பணியில் ஒரு சிறு தொண்டாக - தொண்டரடிப்பொடியாக இந்தச் சிறு மலரைத் தமிழ்த்தாயின் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்.

இந்த நூலில் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களைச் சற்று அதிகமாகவும் முழுமையாகவும் எடுத்துக்காட்டுகளுக்காகக்

குறிப்பிட்டுள்ளேன். ஆயினும் அவைகளின் கருத்தாழத்தையும் இனிமையையும் கருத்துக்குறைவு ஏற்படாமல் சுவை குன்றாமல் இருக்கப் பல பாடல்களை முழுமையாக எடுத்துக்கூறி மேற்கோள் காட்டியுள்ளேன். அவை மிகைபடவிருப்பின் பொறுத்தருள்க.

திவ்யப் பிரபந்தத்தின் சீரிய கருத்துகள் மக்களிடம் விரிவாகச் செல்ல வேண்டும். பாரதப் பண்பாட்டின், அதன் தலைசிறந்த கலாச்சாரத்தின் அடிப்படையான கருத்துகள், நமது மக்களின் நீண்ட வரலாற்றில் எதிர்ப்பட்ட துன்ப துயரங்களை யும் தடைகளையும் இடையூறுகளையும் சமாளித்து அவை களைக் கடந்து வந்திருக்கின்றன; கடுமையான பாதைகளில் பயணம் செய்து வந்துள்ளன. அவைகளை நிலை நிறுத்த, உறுதிப்படுத்த இன்னும் தொடர்ச்சியான முயற்சிகள் தேவைப் படுகின்றன. அடிப்படையான கருத்துகளை மக்களிடையில் பரப்புவது என்பது ஒரு கடினமான பணியாகும். ஆயினும் அப்பணிகளில் எத்தகைய சிரமங்கள் ஏற்பட்டாலும் தளர்ச்சி யடையாது தொடர்ச்சியாகக் கவனம் செலுத்த வேண்டியதும் அவசியமானதாகும்.

கருத்துகள் மக்களுடைய மனத்தில் வலுவாகப் பதிந்து விடுமானால் அதுவே ஒரு வல்லமைமிக்க பௌதிகச் சக்தியாக அமைந்துவிடும். பாரதத்திருநாட்டின் அறிவுச் செல்வத்தை மங்கவிடக்கூடாது, மழுங்கவிடக்கூடாது. அவை முடங்கி விடவும் கூடாது. ஜனநாயக மறுமலர்ச்சியின் புதிய சூழ்நிலைகளுக்கேற்பச் சித்தாந்தப் பணிகளை ஒரு வலுவான அறிவுப் பேரியக்கமாக நாம் நமது மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும். அந்தப் பெரும்பணியில் ஒரு சிறு துளியாக இந்த நூலைத் தமிழ் மக்களிடம் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இந்த நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடும் **'பழனியப்பா பிரதர்ஸ்'** நிறுவனத்துக்கும் என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது முந்தைய நூல்களைச் சிறப்பாக ஆதரித்த நண்பர்களும், கல்வி நிலையங்களும், தமிழறிஞர்களும் தமிழ்ப் பற்றுமிக்கவர்களும் தமிழ்ப்பெருமக்களும் இந்த நூலையும் ஆதரிக்க வேண்டும் என்றும், படித்துப் பயன்பெற வேண்டுமென்றும் வேண்டுகிறேன்.

**– நூலாசிரியர்.**

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| | ஆசிரியர் முன்னுரை – | 3 |
| 1. | தோற்றுவாய் – | 9 |
| 2. | இயற்கை வளமும் உயிரின வளமும் – | 24 |
| 3. | மனித முயற்சிகளும் வாழ்க்கை மேம்பாடுகளும் – | 43 |
| 4. | வாழ்க்கை நெறிமுறைகளும் அறிவுரைகளும் – | 85 |
| 5. | திருமால் வழிபாடும் திருவிழாக்களும் – | 134 |
| 6. | தமிழும் தமிழ்நாடும் – | 224 |

# சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும்

## 1. தோற்றுவாய்

சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும் தமிழ் மொழியில் தனித்தன்மை பெற்றுள்ள, தனிச்சிறப்புமிக்க பேரிலக்கியப் படைப்புகளாகும்; தலைசிறந்த காப்பியமும் பிரபந்தமுமாகும். சிலப்பதிகாரக் காப்பியம் சிறப்புமிக்க மனிதப்பிறவியைத் தெய்விக நிலைக்கு உயர்த்தி நம்மை வழிபாடு செய்ய வைக்கிறது. திவ்யப்பிரபந்தப் பாசுரங்கள் தெய்வத்தையே மனித வடிவில் பாராட்டி, சீராட்டிப் பக்தி செலுத்தி நம்மையும் பக்தி செலுத்த வைத்துப் பரவசமூட்டச் செய்கிறது.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு" என்று பாரதி இந்தத் தலைசிறந்த காப்பியத்தைப்பற்றிப் பெருமைபடக் கூறுகிறார். இன்னும் "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை" என்றும் பாரதி உறுதிப்படுத்திப் பேசுகிறார். இன்னும் சிலப்பதிகாரச் செய்யுளின் பெருமையைப் போற்றி மேலும் பேசுகிறார்.

"சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் திருக்குறளுறுதியும், தெளிவும், பொருளின் ஆழமும் விரிவும் அழகும் கருதியும், 'எல்லையொன்றின்மை எனும் பொருளதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும் முன்பு நான் தமிழச் சாதியை அமரத் தன்மை வாய்ந்தது' என்று உறுதி கொண்டிருந்தேன்' என்று பாரதி மேலும் குறிப்பிட்டுப் பெருமைப்படுகிறார்.

தமிழ்ச்சாதிக்கு அமரத் தன்மையளிக்கும், சாகா வரம் அளிக்கும் நூல்களுள் ஒன்றாகச் சிலப்பதிகாரத்தைக் குறித்துப் பாரதி பெருமைப்படுவதைக் காண்கிறோம். இன்னும் பாரதி தமது சுயசரிதைப் பாடல்களில்,

“கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்,

.................................................................................

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்”

என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

தமிழகத்தின் ஒற்றுமையை மனத்தில் வைத்து மூன்று குலத் தமிழ் மன்னர்களையும் இளங்கோவடிகள் சிறப்பித்துப் பாடுகிறார். அவர்களுடைய மேலான ஆட்சியையும், வீரத்தையும், தமிழை வளர்த்த சிறப்புகளையும், ஆரியத்திற்கு நிகராகத் தமிழை உயர்த்திய பெருமைகளையும் தமிழகத்தின் வளத்தையும், உற்பத்தி வளர்ச்சியையும், வாணிபப் பெருக்கத்தையும், ஆடல் பாடல் சிறப்புகளையுப் இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் விரிவுபட கூறுகிறார்.

அதை நினைத்தே பாரதியார் தமது தமிழ்த்தாய்பற்றி பாடலில்,

“மூன்று குலத்தமிழ் மன்னர் - என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே - உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்”

என்றும், தமது சுயசரிதைப் பாடலில்,

“பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததும் தர்மம் வளர்த்ததும்”

என்றும் பாடுகிறார்.

கம்பனும் வள்ளுவனும் சேரன் தம்பியும் பாரதியின் உள்ளத்தை அள்ளியதைப் போலவே, ஆழ்வார்களின் திவ்யப் பிரபந்தப் பாடல்களும் பாரதியின் உள்ளத்தில் பெரும் அளவில் ஆழ்ந்த தாக்கங்களை உண்டாக்கியிருக்கின்றன. ஆழ்வார்களின் வழியில் பாரதி, கண்ணனைப் பல வேறு வடிவங்களில் பலவேறு உறவுகளை வைத்துப் பாடுகிறார்.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் அரங்கத்தம்மனின் பள்ளி யெழுச்சிப் பாடல்களைத் தொடர்ந்து பாரதி பாரத மாதா திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பாடுகிறார்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோவடிகள் மூன்று தமிழ்நாடுகளைப்பற்றியும், மூவேந்தர்களைப் பற்றியும், அவர்களின் ஆட்சிகளைப்பற்றியும், அந்த மன்னர்களின் அருங்குணங்கள், சிறப்புகள், ஆற்றல்கள் அருஞ்செயல்கள்பற்றியும் மிகவும் விரிவுபட எடுத்து கூறுகிறார். மனித சமுதாய வரலாற்றில் அரசுகள் என்னுட அமைப்புகள் ஏற்பட்டது என்பது ஒரு முக்கியமான சமுதாய வளர்ச்சிக் கட்டமாகும். மக்கள் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு, கால்நடைகளைப் பராமரித்துக்கொண்டு, காலப் பயணத்தில் பசுமை நிறைந்த புல்வெளிப்பகுதிகளைத் தேடிக்கொண்டு, இடம்விட்டு இடம் மாறிக்கொண்டு, புதிய இடங்களுக்குச் சென்றுகொண்டு, நிலையில்லாத சமுதாயக் குழுக்களாகவும் கூட்டங்களாகவும் இருந்துகொண்டிருந்த நிலை மாறி, சாகுபடித் தொழிலையும், பல வேறு குடிசைத் தொழில்களையும் கற்றுக்கொண்டு, ஆற்றோரங்களிலும் கடலோரங்களிலும் நிலைபெற்ற இனக்கூட்டங்கள் இணைந்த சமுதாயக் கூட்டங்களாக வளர்ச்சியடைந்து கொண்டிருந்த காலத்தில் அரசுகள் தோன்றின.

அந்த அரசுகளின் காவலர்களாக, ஆட்சிப் பொறுப்பாளர்களாக அரசர்கள் வந்தார்கள். முதலில் குறுநில மன்னர்களாக, அடுத்த வளர்ச்சிக் கட்டமாகச் சிறுநில மன்னர்களாக அதற்கடுத்த வளர்ச்சிக் கட்டமாகப் பெருநில மன்னர்களாக வரலாற்றில் இடம் பெற்று அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். அத்தகைய பெருநில நாடுகளாகவே பாரதத்தில் ஐம்பத்தாறு தேசங்களும், அவைகளின் அரசுகளும் அரசர்களும் என்று அமைந்திருந்தார்கள். அதன் பகுதியாகவே தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூன்று தமிழ் மன்னர்களும், அவர்களின் அரசுகளும், அவர்கள் ஆண்ட நிலப்பகுதிகளும் அமைந்திருந்தன. அந்த மூன்று நிலப்பகுதிகளை மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுவது சிலப்பதிகாரக் காப்பியமாகும். இச்சிலப்பதிகாரக்

காப்பியத்திற்கு, அதன் கதைப்பகுதிகளுக்கு இந்த மூன்று நிலப்பகுதிகளும் களங்களாக அமைந்திருப்பது தனிச் சிறப்பாகும். இதில் தமிழ் மக்களின் ஒற்றுமை, தமிழ் மக்கள் வாழும் தமிழகத்தின் ஒற்றுமை என்பது இளங்கோவடிகளின் அடித்தளமான சிந்தனையாக இருப்பதைக் காணமுடிகிறது.

இந்த மூன்று நாடுகளின் தலைநகரங்கள், துணை நகரங்கள், நாட்டுப்பகுதிகள், ஆறுகள், மலைகள், காடுகள், மரங்கள், சோலைகள், தோப்புதுரவுகள், விலங்கினங்கள், ஆடுமாடுகள், பறவையினங்கள், அந்த நாடுகளில் வாழும் மக்கள், மக்கள் பிரிவுகள், அவர்கள் வழிபட்ட தெய்வங்கள், கோவில்கள், அவர்கள் விளைவித்த விளைபொருள்கள், செய்துவந்த தொழில்கள், அத்தொழில்கள் மூலம் கிடைத்த பொருள்கள், செல்வங்கள், அப்பொருள்களின் பண்ட மாற்றங்கள் நடைபெறும் சந்தைகள், பலவகை அங்காடிகள், வாணிபம், உள்நாட்டு வெளிநாட்டு வாணிபம், அம்மக்கள் வளர்த்த கலைகள், அருங்கலைகள், இசை, ஆடல் பாடல், கூத்துகள், நாட்டியம், நாடகம், வாழ்க்கை நெறிமுறைகள், மனித வாழ்க்கையின் நலன்களுக்காக, அம்மக்களின் முன்னேற்றத்திற்காக அவர்கள் சிந்தித்த சிந்தனைக் கருத்துகள் முதலியவைகளைப்பற்றியெல்லாம் காப்பியத்தில் மிகவும் விரிவாகப் படிக்கிறோம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தின் கதைப்பிரிவுகள் வரலாற்றுத் தன்மையையும் புவியியல் தன்மையையும், அரசியல் மற்றும் சமுதாய வாழ்க்கையையும் பிரதிபலிப்பன வாகவும் அமைந்திருக்கின்றன. இராமன் அயோத்தியிலிருந்து புறப்பட்டுப் பல ஆறுகளையும் மலைகளையும் காடுகளையும் வனங்களையும் நாடுகளையும் பல மக்களையும் சந்தித்து, இலங்கைவரை சென்று, அங்கு போரிட்டு வெற்றிகண்டதைப் பற்றிக் கம்பன் மிகவும் விரிவாக விளக்குவதைப் படிக்கிறோம்.

அதே போல, புகாரிலிருந்து புறப்பட்ட கோவலனும் கண்ணகியும் பல ஆறுகளையும் மலைகளையும், ஊர்களையும் நகரங்களையும், கோவில் குளங்களையும், புனல்களையும், கானல்களையும், வயல் வெளிகளையும் காடுகளையும் கடந்து, பல மக்களையும் சந்தித்து, மதுரை

மாநகரம் சென்றதையும், அங்கிருந்து கணவனை இழந்த கண்ணகி சூழ்ந்த துயரத்துடன் சேரநாட்டை அடைந்து, அங்கு தெய்வநிலை பெற்று வானுலகு அடைந்ததைப் பற்றியெல்லாம் இளங்கோவடிகள் மிக விரிவாக விவரிப்பதைச் சிலப்பதிகாரத்தில் படிக்கிறோம்.

இந்தத் தெய்விகக் கதைகள் மூலம் இந்திய நாட்டின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும், தமிழ்நாட்டின் ஒற்றுமையையும், அந்நாடுகளின் சிறப்பையும், கம்பனும் இளங்கோ அடிகளும் மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

சோழ, பாண்டிய, சேர மன்னர்களின் அவையிலும், அவர்களுடைய நகரங்களிலும் இருந்த பல வேற்று நாட்டு அரசர்களைப்பற்றியும், வேற்று நாட்டு மக்களைப்பற்றியும், சேரன் செங்குட்டுவன் தன் படையுடன் இமயம்வரை சென்று திரும்பியதுபற்றியும், அப்பயணத்தில் அவன் சந்தித்த அரசர்கள்பற்றியும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் மூலம் அறிகிறோம். இன்னும், சேரன் செங்குட்டுவன் வடநாட்டு அரசர்களுடன் நடத்திய போரை முருகனுக்கும் சூரபத்மனுக்கும் நடந்த போருக்கும், இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போருக்கும், கவுரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த மகாபாரதப் போருக்கும் ஒப்பிட்டு, பதினெட்டு ஆண்டுகளும், பதினெட்டு மாதங்களும், பதினெட்டு நாள்களும் நடந்ததுபற்றியும், சேரன் செங்குட்டுவன் நடத்திய போர் பதினெட்டு நாழிகைகளில் நடந்து முடிந்ததாகக் காப்பியத்தில் செய்திகளைக் காண்கிறோம். மகாபாரதப் போரில் கலந்துகொண்ட போர் வீரர்களுக்குத் தமிழ் மன்னர்கள், ஒருபட்சம் காட்டாமல் அனைவருக்கும் உணவளித்ததாகவும் சிலப்பதிகாரச் செய்தி கூறுகிறது.

ஒவ்வொரு நாட்டு மன்னனுக்கும் தனது ஆட்சி எல்லையை விரிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என்பது அக்கால மன்னர்களின் பொதுவான சிந்தனை வழியாக இருந்தது. குறுநில மன்னர்கள் சிறுநில மன்னர்களாகத் தங்கள் எல்லையை விரிவுபடுத்திக்கொள்ளவும், சிறுநில

மன்னர்கள் தங்கள் எல்லையை விரிவுபடுத்திக்கொண்டு பெருநில மன்னர்களாகச் சிறப்படைய விரும்புவதும், பெருநில மன்னர்கள் தங்கள் எல்லைகளை விரிவுபடுத்திக் கொண்டு பேரரசுகளாக விளங்க விரும்புவதும் அக்கால மன்னர்களின் சிந்தனைப் போக்காக இருந்திருக்கிறது. அதற்கான போர்ப் படைகளைத் தயாரிப்பதும், போர்களை நடத்துவதும் அம்மன்னர்களின் இயல்பாகப் பெரும்பாலும் இருந்திருக்கிறது. அதையே வீரத்தின் சின்னமாகவும், புறப்பொருள் இலக்கிய நூல்கள் பலவும் விவரித்துக் கூறுகின்றன.

இவ்வாறாகவே மூவேந்தர்களின் வீரமும், போர்ப்படை பலமும் சிந்தனைகளுங்கூட விவரிக்கப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரக் காப்பியமும் மூவேந்தர்களைப்பற்றிக் கூறும்போது, அவர்களுடைய எல்லையை இமயம்வரை விரிவுபடுத்துவதில் எண்ணம் கொண்டவர்களாகவும் இமயத்தில் தங்கள் புலிக்கொடி, மீன்கொடி, விற்கொடிகளைப் பொறித்ததாகவும் கூறுகின்றது. இதில் மூவேந்தர்களின் வீரமும், இமயம் வரையிலுமான பாரத நாட்டின் ஒற்றுமை உணர்வும் பிரதிபலிப்பதைக் காண்கிறோம்.

இந்திய இலக்கியங்கள் பலவும், அரசியல் நெறிமுறைகளில் அரசர்கள் தங்கள் குடிமக்கள்பால், நாட்டின்பால், நாட்டுமக்களின்பால் அன்பு செலுத்தி, மக்களை உயிராக மதித்து, மக்களுடைய நலன்களின்பால் செய்ய வேண்டிய நல்லாட்சியின் கடமைகளை, செங்கோலாட்சியின் கடமைகளைப்பற்றியெல்லாம் விவரித்துக் கூறுகின்றன. போர்களைத் தவிர்த்து, நீர் நிலைகளைப் பெருக்கி அமைதி வழிகளில் சிந்திக்கவும் நமது இலக்கியங்கள் அரசியல் நெறிகளை எடுத்துக் கூறுகின்றன. சிலப்பதிகாரக் காப்பியமும் அத்தகைய அரசியல் அறநெறிகளைச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

திவ்யப்பிரபந்தத்தில் ஆழ்வார்கள் நூற்று எட்டு திவ்ய தேசங்களைப்பற்றிப் பாடியுள்ளார்கள். அந்தத் திருப்பதிகள் சோழ நாட்டில் 42-ம், பாண்டிய நாட்டில் 18-ம், மலை

நாட்டில் (சேர மண்டலம்) 14-ம் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் தொண்டை நாட்டுத் திருப்பதிகள் 22-ம், வடநாட்டுத் திருப்பதிகள் 11-ம் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த எண்ணிக்கைப் பிரிவுகளில் சிறிய சில வேறுபாடுகள் கூறப்பட்டபோதிலும் திவ்யப்பிரபந்தத்தின் கணக்குப்படி மேலே குறித்துள்ள எண்ணிக்கையை எடுத்துக் கொள்ளலாம். இந்தக் கணக்குப்படி 108 திருப்பதிகளுள் 74 திருப்பதிகள் சேர சோழ பாண்டிய மண்டலங்களிலே இடம் பெற்றுள்ளன. ஆழ்வார்கள் தமிழ்நாட்டை அடித்தளமாகக் கொண்டு பாரத நாடு முழுவதையும் இமயம் முதல் குமரி வரை ஒரே நாடாகவே சிந்தித்திருக்கிறார்கள்.

இளங்கோவடிகளின் காலத்தில் தொண்டை மண்டலத்தில் பிற்காலத்தில் ஏற்பட்ட பல்லவர் ஆட்சி அமைந்திருக்கவில்லை. அவர் சங்க காலத்திய மூன்று தமிழ் அரசுகளைப்பற்றி மட்டுமே குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்திய வரலாற்று ஆசிரியர்கள் பல்லவ அரசைப்பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆழ்வார்கள் தொண்டை மண்டலத் திவ்ய தேசங்களைப்பற்றியும் பாடியுள்ளார்கள். சிலப்பதிகாரத்திலும் மாங்காட்டு மறையோன் திருவரங்கத்தையும், திருமாலிருஞ்சோலையையும் குறிப்பிடுவதுடன் திருவேங்கடத்தைப்பற்றியும் குறிப்பிடுகிறான். திருவனந்தபுரம் பற்றிய குறிப்பும் காப்பியத்தில் காணக்கிடக்கிறது. இது ஒரு சிறிய குறிப்பேயானாலும் இங்கும் சோழ நாடும் (திருவரங்கமும்), பாண்டிய நாடும் (திருமாலிருஞ்சோலை), திருவேங்கடமும் (தொண்டை மண்டலம்), சேரநாடும் (திருவனந்தபுரமும்) சேர்ந்து காப்பியத்தில் குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

ஆழ்வார்கள் தாங்கள் பாடியுள்ள திவ்ய தேசங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அந்தத் திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள திருமால் வடிவங்களின் பெருமைகளுடன் அந்தத் திருத்தலங்களின் பெருமைகள், அவைகளின் நீர்வளம், நிலவளம், விருட்சங்கள், தாவரங்களின் பெருமை, அந்தத் திருத்தலங்களைச் சுற்றியுள்ள காட்சிகள், அவை அமைந்துள்ள நாடுகளின் சிறப்புகள், ஆறுகள், மலைகள்,

மரங்கள், தாவரங்கள், விலங்குகள், பறவையினங்கள், நீர்நிலைகள், மக்கள், அவர்களின் தொழில் பெருமைகள், விளைபொருள்களின் சிறப்புகள், அவர்கள் உண்டு மகிழ்ந்த உணவுப்பண்டங்கள், ஆடை ஆபரணங்கள், கல்வி, வேத சாத்திரங்களின் ஞானம், அறிவுச்செல்வம், மக்களின் ஒழுக்கம், மகிழ்ச்சியான வாழ்க்கை முறை, அந்த நிலப்பகுதிகளை ஆண்ட மன்னர்கள், அவர்களுடைய நல்லாட்சி, நீதி நிர்வாக முறைகள், அவர்களின் ஆலயத் திருப்பணிகள், கல்விப் பணிகள் முதலியவற்றையும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவையெல்லாம் பொதுவாக இலக்கியங்களில் காணப்படும் வர்ணனைகள் மட்டுமல்ல. இவை உயிரோட்டமுள்ள இயற்கையின் இயக்கமும் மக்களின் செயல்பாடுகளும், இயற்கைச் சக்திகளின் அபூர்வமான காட்சிகளும் மாயா ஜாலங்களுமாகும். ஆழ்வார்களின் இந்தப் பிரபந்தப் பாடல்களில் சிறந்த மனிதாபிமான கருத்துகளையும், திருவிழாக்களில் திரண்டு வரும் பெரும் மக்கள் கூட்டத்தின் மகிழ்ச்சி ஆரவாரங்களையும் காண்கிறோம்.

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் காப்பியம் அடிப்படையில் சமண சமய இலக்கியச் சார்புடையது என அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். சமண சமயத் துறவிகள், சாரணர்கள், மடங்கள் முதலியவற்றைக் காப்பியத்தில் நெடுகிலும் சந்திக்கிறோம். சமண சமய நிலைப்பாட்டில் கண்ணகி உறுதியாக உள்ள மனநிலையைக் காண்கிறோம். இதர சமயங்களிலும் வழிபாடுகளிலும் உள்ள சில மூடங்களை அவர் ஏற்காததைக் காண்கிறோம். வாழ்க்கையில் தாங்க முடியாத துன்ப துயரங்கள் ஏற்படும்போது அவற்றிலிருந்து விடுபடத் துறவு மேற்கொள்ளும் வழிமுறைகளையும் காண்கிறோம்.

அருகக் கடவுளும், அறப்பள்ளிகளும் சமணத் துறவிகளும் காப்பியம் முழுவதிலும் சிறப்பித்துக் கூறப்படுவதைக் காண்கிறோம். காப்பியத்தின் தலைசிறந்த பாத்திரம் காப்பியத் தலைவி கண்ணகி, சமண சமயப் பழக்க வழக்கங்களில், சிந்தனையில், நெறிமுறைகளில் உறுதியாக

நின்றவள், பத்தினியாக நின்று அரசியல் பிழைத்தோருக்குக் கூற்றாகி, அறத்தின் சின்னமாகி, பத்தினித் தெய்வமாகி வானில் செல்வதைச் சிறப்பான காட்சியாகக் காப்பியத்தில் காண்கிறோம். சமணத்தின் முக்கிய கருத்தாக ஊழ் வினையைப்பற்றியும், முன்பிறப்புகள்பற்றியும் பல கதைகளையும் கதைக்கூறுகளையும் காப்பியத்தில் காண்கிறோம்.

சமண சமயத்தில் திளைத்த இளங்கோவடிகள், இதர சமயக் கருத்துகளுடன் சமரசம் செய்துகொள்வதாகப் புலப்படாவிட்டாலும், அவர் தமது காப்பியத்தில் அக்காலத்தில் மக்களிடத்தில் பழக்கத்தில் இருந்துவந்த பல வேறு வழிபாடுகளையும், வழிபாட்டு முறைகளையும்பற்றி மிகவும் விரிவாகவே குறிப்பிடுகிறார். திருமால், இறைவன், முருகன், சக்தி, இறைவி, திருமகள், பலராமன், இந்திரன், பல சிறுதெய்வங்கள், மற்றும் பல வகைப் பூதங்கள் பற்றியெல்லாம் இளங்கோவடிகளார் மிகவும் சிறப்பாகவே குறிப்பிடுகிறார். அவை தொடர்பான மக்களையும் பாராட்டியும் வாழ்த்தியும் பாடுகிறார். அத்துடன் தெய்வம் தெளிமின் என்று அறிவுரை கூறுகிறார்.

இந்திர விழா, மங்கல வாழ்த்து, கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை முதலிய விழாக் களையும், வரிப்பாடல்களையும், குரவைப் பாடல்களையும், மக்களிடையில் பழக்கத்தில் இருந்த பலவகைக் கூத்துகளையும் தெய்வக் கூத்துகளையும்பற்றியெல்லாம் காப்பியத்தில் படித்து மகிழ்கிறோம்.

இவைகளுள் தனிச்சிறப்பு மிக்கனவாகத் திருமால் கோயில்களையும், பலராமன் கோயில்களையும் மற்றும் திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருவனந்தபுரம் முதலிய கோயில்களில் எழுந்தருளியுள்ள திருமாலின் பெருமைகளையும் பல வேறு பாத்திரங்களின் வாயிலாகக் கேட்டு மகிழ்கிறோம். ஆய்ச்சியர் குரவையென்னும் ஆயர்பாடி அணங்குகள் வேடம் கட்டி ஆடிப்பாடும் கூத்துப் பாடல்கள் மூலம், திவ்யப்பிரபந்தப் பாடல்களுக்கு ஈடாகத் திருமால் பெருமைகளை, திருமாலின்

பரிபூரண அவதாரமான கண்ணன் பெருமைகளையும், எட்டெழுத்து மகிமைகளையும்பற்றியெல்லாம் காதாரக் கேட்டு மகிழ்கிறோம்.

ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தப் பாடல்கள் தனிச் சிறப்பான முறையில் தனித் தமிழில் பாடப்பட்டுள்ளவை களாகும். ஆழ்வார்களின் பாடல்களின் தனித் தமிழ்ச் சுவைக்கு ஈடு இணையே இல்லை. தனித் தமிழ்ப் பாடல்களுக்கும் தனித் தமிழில் உயர்ந்த பக்தி தத்துவக் கருத்துகளுக்கும் வித்திட்டவர்களே ஆழ்வார்கள்தாம் என்று உறுதியாகக் கூறலாம்.

ஆழ்வார்கள் திருமாலின் தனிப் பெருமைகளைப்பற்றி மட்டுமே பாடுகிறார்கள். "நாராயணா" வென்னும் நாமத்தைத் தவிர வேறு நாமத்தைப்பற்றி அவர்கள் சிறப்பித்துக் கூறவில்லை; கூற விரும்பவில்லை. திருமாலை வழிபடுபவர்களை மட்டுமே அவர்கள் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ள விரும்பியுள்ளார்கள். இதர வழிபாடுகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதர சமயங்களைக் குறிப்பாக, அக்காலத்தில் தமிழகத்தில் பரவியிருந்த சமணத்தையும், புத்தத்தையும் அச்சமயத்தார் களின் தனித் துறவுத் தத்துவங்களையும் மறுத்தே, அவைகளை விலக்கியே பாடியுள்ளார்கள்.

ஆழ்வார்கள் வாழ்க்கையின்பத்தை நிராகரிக்கவில்லை. ஆனால், அதே சமயத்தில் எத்தகைய துன்பங்களைப்பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை. தங்களை மறந்து அவர்கள் திருமால் பக்தியில் ஒன்றி இணைந்துவிட்டார்கள். பிரபத்தியில் ஆண்டவனுடன் இரண்டறக் கலந்து விட்டார்கள். இவ்வுலகத்தில் உள்ள அத்தனை வாழ்க்கை இன்பங்களையும் அனுபவிக்கவும் காணவும் விரும்பினார்கள்; பெருமாள் சேவையே பெரும் சேவையாகக் கருதினார்கள்.

மனிதன் எந்தத் தொழில் செய்தாலும், வாழ்க்கையில் - குறிப்பாக - இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே திருமால் சேவையில் ஈடுபடலாம் என்னும் கருத்துகளை ஆழ்வார்கள் கடைப்பிடித்திருப்பதைத் திவ்யப்பிரபந்தப் பாடல்களில் நாம் காணலாம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் மக்களுக்கு நல்வழி காட்டும் சிறந்த கருத்துகளைக் கதைப்போக்கிலும் மாடல மறையோன் போன்ற சிறந்த, கற்றறிந்த மேலோன் மூலமும் கவி வாக்காகவும் நாம் அறிகிறோம். அவையெல்லாம் காலத்தை வென்ற சிறந்த கருத்துகளாகும்.

ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தப் பாடல்கள் சிறந்த பக்தி நெறிகளையும் தத்துவ ஞானக் கருத்துகளையும் வாழ்க்கை நெறிமுறைகளையும் இயற்கைச் சக்திகளின் பாங்கான செயல்முறைகளையும்பற்றித் தெளிவுபடுத்தி விளக்கிக் கூறுகின்றன.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரக் காப்பியத்தை எழுதிய காலமும், திவ்யப்பிரபந்தப் பாடல்களை ஆழ்வார்கள் பாடிய காலமும் மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாகும். பொதுவாகத் தமிழ் இலக்கியங்கள் இலக்கணங்கள் தோன்றிய காலம்பற்றி, அவை எழுதப்பட்ட காலம்பற்றிப் பல வேறு கருத்துகளும் கருத்து வேறுபாடுகளும் நிலவுகின்றன. அவைபற்றி இன்னும் நுணுக்கமான வழிமுறைகளில் ஆதாரங்களுடனும் தக்க சான்றுகளுடனும் ஆய்வு செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அவைபற்றி வெறும் தன்னிலை உணர்வு மட்டும் போதாது.

தமிழ் மொழி இந்திய மொழிகளுள், மிகவும் தொன்மையான மொழிகளுள் ஒன்று என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. தமிழ் மொழி வரலாற்றில் முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்று கூறப்படும் காலங்கள், அகத்தியம், தொல்காப்பியம் முதலான பழைய இலக்கண நூல்கள் தோன்றித் தமிழ் இலக்கியத்திற்கு வழிகாட்டிய காலம், சங்க இலக்கியங்கள் தோன்றி வளர்ந்துள்ள காலம்பற்றியெல்லாம் மேலும் அதிகமான ஆய்வுகளும், இன்று பலராலும் கூறப்படும் பல வேறு கருத்துகளுக்குத் தக்க ஆதாரங்களும், அகச்சான்றுகளும் புறச் சான்றுகளும் இன்னும் தெளிவாகத் தேவைப்படுகின்றன. இப்பணிகளில் தற்காலத்தில் பல வேறு அமைப்புகளும்

நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. அவை அனைத்தையும் நாம் வரவேற்போம்.

இங்கு அத்தகையதொரு ஆழ்ந்த விசாலமான ஆராய்ச்சி வட்டத்திற்குள் நாம் போகவில்லை. அது இந்த நூலுக்குரிய வேலையும் அல்ல. ஆயினும் வரலாற்றிலும் இலக்கிய ஒப்பீடுகளிலும் காலம் என்பது ஒரு முக்கியமான விசயமாகும்.

பொதுவாகத் தமிழ் மொழி தொன்மையான மொழிகளுள் ஒன்று என்னும் வகையில், தமிழ் அன்பர்கள், தமிழ் அபிமானிகள், தமிழ் அறிஞர்கள், தமிழ் அறிவுச் செல்வர்கள், தமிழ் கற்றறிவாளர்கள், தமிழ்ப் பற்றாளர்கள் பலரும், குறிப்பாகத் தமிழ்ப்புலவர்கள் பலரும் - தமிழ் இலக்கியங்களுக்கு மிகவும் பழமையான, தொன்மையான காலங்களைக் குறிப்பதில் பெருமை கொள்கிறார்கள். ஐயாயிரம் பத்தாயிரம் ஆண்டுகள் என்றும், இன்னும் அவற்றிற்கு மேலும் பழமை கூறுவதிலும் மிகவும் அதிகமாகப் பெருமையும் பெருமிதமும் கொள்கிறார்கள்.

தமிழகத்திற்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியங்களுக்கும் இலக்கணங்களுக்கும் பல சிறப்புகளும் தனித் தன்மைகளும் இருக்கின்றன. இருந்தபோதிலும், பழங்காலந்தொட்டுப் பாரத நாடு முழுவதற்குமிடையில் பல துறைகளிலும், பொதுவாகவும், குறிப்பாகவும் மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு மரபுகள் முதலியவற்றில் தொடர்புகளும் சார்புகளும், கலப்புகளும், பரஸ்பர ஈடுபாடுகளும் அவைகளால் ஏற்பட்ட பல வகைத் தாக்கங்களும் பரஸ்பர இணைப்புகளும் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன. அவைகளின் பிரதிபலிப்புகளை அவைகளின் சாயல்களைத் தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கியங்களிலும் நாம் காணமுடிகிறது.

நான்மறைகள் (நான்கு வேதங்கள். அவை ரிக், யஜுர், சாமம், அதர்வணம் ஆகியவை) என்பவை பாரத நாட்டின் தொன்மையான இலக்கியங்களாகும். அவை வேதமொழி என்னும் ஒரு பழமையான மக்கள் மொழியில்

அமைந்துள்ளன. அவைகளைப்பற்றிய குறிப்புகளும் செய்திகளும் தமிழகத்தின் பண்டைய இலக்கியங்களில் காணப்படுகின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகள்பற்றிய குறிப்புகளையும் செய்திகளையும் தமிழ் இலக்கியங்களில் - குறிப்பாகப் பழைய சங்க இலக்கியங்களில் - முன்பே காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில்கூட 'இராமனைப் பிரிந்த அயோத்தியைப் போலக் கோவலனைப் பிரிந்த புகார் நகரம் காணப்படுகிறது' என்னும் பொருளில்,

" பெருமகன் ஏவ லல்லது யாங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும்பெயர் மூதூர் பெரும்பேது உற்றதும்'

என்று இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார்கள்.

பாரத நாட்டின் இலக்கிய வரலாற்றில் வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் முதலியவை செல்வாக்குப் பெற்று மக்களிடம் பரவியிருந்த காலத்திற்குப் பின்னர், புத்தமும் சமணமும் தோன்றி வளர்ந்து, பரவி அவை பாரதம் முழுவதிலும் வலுவான செல்வாக்கைப் பெற்றுப் பரவியிருந்தன. புத்த சாதகமும் சமண இலக்கியங்களும் நாடு முழுவதும் பரவியிருந்தன. அவைகளை இந்திய மொழிகள் பலவற்றிலும் காணமுடிகிறது.

வேதங்களும் உபநிடதங்களும் அனைவருக்கும் பொதுவானவை என்றாலும் அவை பிராமணர்களுக்குச் சிறப்பாக உரியனவென்று கூறப்படுகின்றன. அதே போல, இதிகாசங்களும் புராணங்களும் அனைவருக்கும் பொதுவானவை என்றாலும் அவை சத்திரியர்களுக்கு உரியனவாகக் கூறப்படுகின்றன. அவைகளின் கதைப் போக்குகளிலும் சத்திரியர்கள் முதலிடம் பெற்றிருக்கிறார்கள். அதைப் போல, அடுத்த கட்டத்தில் தோன்றி வளர்ந்த புத்த சமண இலக்கியங்களுக்கு வைசியர்கள் (வணிகர்கள்) அதிகமாக ஆதரவளித்தார்கள் என்று கூறலாம். வடமொழியில் உள்ள பஞ்ச காவியங்களிலும் சரி, தமிழில் உள்ள ஐம்பெரும்காப்பியங்களிலும் சரி, வணிகர்கள் முக்கிய

இடம் பெற்றுள்ளார்கள். சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் வணிக குலத்தவன் ஆவான் என்பதை அறிவோம். இந்தக் காலத்தைக் காப்பிய காலம் எனச் சில தமிழறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இது தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலத்திற்கு அடுத்த காலமாகக் கூறப்படுகிறது. எனவே, இளங்கோவடிகள் காலத்தை இரண்டாம் நூற்றாண்டுக் காலம் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். இதை மறுத்து, காப்பியத்தின் கற்பனை வளத்தை ஆதாரமாக மனத்தில் கொண்டு, சிலப்பதிகாரக் காப்பியம் எட்டாம் நூற்றாண்டிற்குரியதாகும் எனத் திரு. வையாபுரிப் பிள்ளை போன்ற ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஆங்கிலேய ஆட்சியின் தாக்கத்தினாலும் ஐரோப்பிய அறிஞர்களின் தலையீட்டாலும் நமது வரலாற்றுக் காலத்தை கிறிஸ்துவிற்கு முன் (கி.மு.) என்றும் கிறிஸ்துவிற்குப்பின் (கி.பி.) என்றும் கணக்கிட்டு நமது அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் அதே முறையைப் பின்பற்றி வருகிறார்கள். நமது ஆய்வு முறைகளை நவீனத்துடன் இந்தியப் பாரம்பரிய முறைகளையும் இணைத்துப் புதிய முறைகளை உருவாக்க வேண்டும்.

பௌத்த, சமண இலக்கியங்களுக்கும் கருத்துகளுக்கும் மாறுபட்டு அவைகளுக்கு எதிராகவே சங்கரர், இராமானுஜர், மத்துவர் முதலிய பெரியோர்கள், மகான்கள் பகவத் கீதைக் கருத்துகளுக்கு விளக்கங்கள் எழுதியும், அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம் ஆகிய வேதாந்தக் கருத்துகள் தோன்றியும் செல்வாக்குப் பெற்றுப் புத்த சமண சமயக் கருத்துகள் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

வேதங்களையும் ஆகமங்களையும் வேதாந்தக் கருத்துகளையும் சைவ சித்தாந்தக் கருத்துகளையும் மையமாக வைத்தே முறையே வைணவ, சைவ பக்தி இயக்கங்கள் தோன்றி வளர்ந்துள்ளன. அத்தகைய பக்தி இயக்கங்களின் வடிவங்களைக்கொண்டே திவ்யப்பிரபந்தங்களும் சைவத் திருமுறைகளும் தோன்றி வளர்ந்து, மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றுப் பரவியுள்ளன.

திவ்யப்பிரபந்தம் வைணவத்தையும் திருமுறைகள் சைவத்தையும் முன்வைத்துள்ளன. இவ்விரண்டும் புத்த சமணக் கருத்துகள் பலவற்றையும் மறுத்துக் கூறுகின்றன. திவ்யப்பிரபந்தத்தைப் பாடிய ஆழ்வார்கள் பெரும்பாலும் ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவர்கள் என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எனவே, சிலப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும் முன்னும் பின்னும் தோன்றியவைகளாக எடுத்துக்கொள்ளலாம். அவைகளில் வெளிப்படும் கருத்துமுரண்பாடுகளையும், மோதல்களையும், போராட்டங்களையும் நமது சமுதாயத்தில் ஏற்பட்டிருந்த பல வேறு சமுதாய முரண்பாடுகளைப் பிரதிபலிப்பனவாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

உதாரணமாக, இராமாயண காவியத்தில் பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்குமிடையில் இருந்த முரண்பாட்டைக் காணமுடிகிறது. சிலப்பதிகாரத்திலும் இதர நான்கு காப்பியங்களிலும் அரசர்களுக்கும் வணிகர்களுக்குமிடையிலான முரண்பாடுகளைக் காணமுடிகிறது. பக்தி இலக்கியங்களில் அனைத்து மக்களின் ஒற்றுமைக்கான முயற்சிகளைக் காணமுடிகிறது.

## 2. இயற்கை வளமும் உயிரின வளமும்

தமிழகம் உள்ளிட்ட பாரத நாடு இயற்கை வளமும் இதர எல்லா வளங்களும் நிறைந்தது. அதன் மலைகள், ஆறுகள், கடல், கடற்கரைகள், தாவரங்கள், விலங்கினங்கள், பறவைகள் இதர உயிரினங்களின் வளம் நிறைந்தது. அவை மனிதனுக்குத் துணையானவை; பக்க பலமாக இருப்பவை. சிலப்பதிகாரக் காப்பியத்திற்கும் திவ்யப்பிரபந்தத்திற்கும் தமிழகமே களமாகும். சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்கள் ஆண்ட பூமியும், பின்னர் பல்லவர்களும் ஆண்ட தொண்டை மண்டலமும் சேர்ந்து தமிழகமாகும். இந்த நான்கு பிரிவு மன்னர்களுங்கூடத் தங்கள் ஆட்சி எல்லைகளை விரிவுபடுத்திக்கொள்வதற்காக அவர்களுக்குள் பல போர்கள் நடந்த வரலாறும் தமிழக வரலாற்றின் பகுதியாக உள்ளன.

பல்லவர்களுக்கும் சோழர்களுக்கும் இடையில் நடந்த போர்கள், சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையில் நடந்த போர்கள், பாண்டியர்களுக்கும் சேரர்களுக்குமிடையில் நடந்த போர்கள், அவைகளின் விவரங்கள், அப்போர்களில் கலந்துகொண்ட மன்னர்கள், அவர்களின் வீரம், வெற்றி தோல்விகள் முதலியவை களெல்லாம் இக்காலத்திய தமிழ்ப்புலவர் பட்டம் பெறுவதற்குப் பாடப்புத்தகங்களில் பாடங்களாக உள்ளன.

ஆயினும், தமிழ் மக்களின் வரலாறு என்பது இந்தப் போர்களின் வரலாறு மட்டுமல்ல; அப்போர்களை நடத்திய மன்னர்களின் வரலாறு மட்டுமல்ல. தமிழகத்தின் வற்றாத வளங்களைப் பயன்படுத்தித் தமிழ்மக்கள் தங்களுடைய வாழ்க்கையை வளப்படுத்திக்கொள்வதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள், அவர்கள் நிர்மாணித்;

நீர்த்தேக்கங்கள், ஏரி குளங்கள், எண்ணற்ற நீர்நிலைகள், கட்டிய கோயில்கள், பண்படுத்திய வயல்வெளிகள், தோப்புகள், தோட்டங்கள், அறப்பள்ளிகள், கல்வி நிலையங்கள், அவர்கள் பட்ட அரும்பாடுகள், உழைப்பு, உருவாக்கிய பொருட் செல்வங்களும், அருட்செல்வங்களும், அறிவுச் செல்வங்களும் கலைச் செல்வங்களும், இதர சாகசங்களும் அவர்களுடைய நீண்ட வரலாற்றின் அவர்களுடைய சிறப்புமிக்க நாகரிகத்தின் ஆதாரங்களாகும்.

தமிழகத்தில் ஆண்டு முழுவதிலும் சூரியன் பிரகாசிக்கிறான். இருபருவங்களிலும் மழை பொழிந்து நீர் வளம்மிக்க ஆறுகள் பாய்ந்து நாடு வளம் பெற்றிருக்கிறது வான் பொய்க்கினும் தான் பொய்யாக் காவிரியும் வைகை என்றும் பொய்யாக் குலக்கொடியும் தமிழகத்தின் மையமாக விளங்குகின்றன. நீண்ட கடற்கரையும் அதன் வளங்களும் நிறைந்திருக்கின்றன. இம்மலைகளிலும் காடுகளிலும் கடற்கரைகளிலும் வளம் நிறைந்த பூமியிலும் மழையும் நிறைந்த சூரிய வெப்பமும் காரணமாக எண்ணற்ற தாவர இனங்களும் விலங்கினங்களும் பறவை இனங்களும் இதர உயிரினங்களும் இயற்கையில் தோன்றி வளர்ந்திருக்கின்றன.

மக்களும் தங்களுடைய முயற்சியால் உழைப்பால் அறிவின் ஆற்றலால் செயற்கையிலும் பல தாவர இனங்களையும் கால்நடைகளையும், பறவை இனங்களையும் எண்ணற்ற நீர்நிலைகளையும் தங்களுக்குத் துணையாக வளர்த்துக்கொண்டார்கள். இயற்கையுடன் இசைவாகச் செயற்கை வளமும் பெருகியுள்ளது.

இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரக் காப்பியத்தைத் தொடங்கும்போது கடவுள் வாழ்த்துப் பாடலில் தொடங்கவில்லை, மங்கல வாழ்த்துப் பாடல் களாகவே, 'ஞாயிறு போற்றுதும், திங்களைப் போற்றுதும், மாமழை போற்றுதும்' என்று நாட்டின் வற்றாத வளத்திற்குக் காரணமான ஞாயிற்றையும் திங்களையும் மழையையும் போற்றிப் பாடுகிறார்.

"அலைகடல் நீரை ஆடையாகவும், மலையை முலைகளாகவும், அம்மலையில் ஓடும் ஆறுகளைத் தனது

ஆரமாகவும், கருமேகங்களைக் கூந்தலாகவும் கொண்ட அகண்ட நிலப்பரப்பைக்கொண்ட நிலமடந்தை' என்று நாட்டு வளத்தை இணைத்து இளங்கோவடிகள் விவரிக்கிறார்.

**"அலைநீர் ஆடை மலைமுலை ஆகத்து**
**ஆரப் பேரியாற்று மாரிக் கூந்தல்**
**கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை"**

என்பன காப்பிய அடிகள்.

தெய்வம் ஏறப்பெற்ற மறக்குல மகளிர் மன்னனை வாழ்த்தும்போது "பெருநில மன்னன் ஆளும் நாடு முழுவதும் பசியும் பிணியும் பகையும் நீங்கி மழையும் வளமும் சுரப்பதாக" என்று சாமியாடிக்கொண்டு கூறுவதாக.

**"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
**பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"**

என்று நாட்டு வளத்தையும் மக்கள் நலனையும் இணைத்துக் குறிப்பிட்டுப் பாடுகிறார், இளங்கோவடிகள்.

இந்தப் பாடல் அடிகள், இளங்கோவடிகளின் மிக உயர்ந்த மனிதாபிமான தத்துவஞானக் கருத்தைக் குறிக்கிறது. உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் பசி நீங்க வேண்டும். வயிறார அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும். பிணிகள் நீங்கி மனித சமுதாயம் நீல்வாழ்வு பெறவேண்டும். போர்கள் ஒழிந்து, பகைகள் நீங்கி, நாடுகளும் மக்களும் அமைதியான சேதமில்லாத வாழ்க்கையைப் பெறவேண்டும். மழை பொழிந்து, நீர்வளம் பெருகி, நாடு அனைத்து வளங்களையும் பெறவேண்டும் என்பது இளங்கோவடிகளின் சீரிய சிந்தனைகளாகும்.

உயர்ந்த சிகரங்களையுடைய இமய மலையையும், வற்றாத நீர்ப்பெருக்கினையுடைய கங்கையையும், அழகான உஞ்சை நகரையும், விந்திய மலையையும் அதனைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகளையும், திருவேங்கட மலையையும், தாங்கமுடியாதபடி பெரும் அளவில் விளைபொருள்களைக் கொடுக்கும் காவிரி நாட்டையும் தன் காதலிக்குக் காட்டிக்கொண்ட ஒரு விஞ்சையன் புகார் நகரில்

நடைபெறும் இந்திர விழாவைக் காண வந்ததை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

> " சிமையத் திமையமும் செழுநீர்க் கங்கையும்
> உஞ்சையம் பதியும் விஞ்சத் தடவியும்
> வேங்கட மலையும் தாங்கா விளையுள்
> காவிரி நாடும் காட்டிப் பின்னர்ப்
> பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்தி"

என்று காப்பிய அடிகள் கூறுகின்றன.

இங்கு இளங்கோவடிகள் குறிப்பிடும் மற்றொரு முக்கியமான கருத்தைக் காண்கிறோம். காவிரி நாட்டை மிகச் சிறப்பாகத் "**தாங்கா விளையுள் காவிரி நாடு**" என்று குறிப்பிடுகிறார். இங்கு காவிரி நாட்டின் வளமும், நிறைவான விளைச்சலும் குறிப்பிடப்படுகின்றன. அத்துடன் உயர்ந்த சிகரங்களையுடைய இமயமும், செழுமையுடன் பொங்கி வரும் நீர்ப்பெருக்கினையுடைய கங்கை நதியும், மத்திய பாரதத்தின் சிறப்பும் கல்வியும் செல்வமும் நிறைந்த உஞ்சை நகரும் (உஜ்ஜைனி), விந்திய மலையும் அதைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகளும், வனவளமும், புண்ணியம் மிக்க வேங்கட மலையும் இணைந்து பாரத நாட்டின் ஒற்றுமையும் இணைப்பும் குறிப்பிடப்படுகின்றன. எனவே, காவிரி நாட்டின் சிறப்பையும் பாரத நாட்டின் ஒற்றுமையையும் பெருமைப்பட அடிகளார் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

தமிழகத்தின் எல்லைகளையும், இந்த வளம் நிறைந்த பூமியின் தலைசிறந்த அரசுகளின் தலைமையான நகரங்களையும் அடிகளார் சிறப்பாகக் குறிப்பிடும்போது அவருடைய தமிழ் நெஞ்சம், தமிழகத்தின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் மனத்தில் இருத்தி அதன் வளத்தையும் செல்வச் சிறப்பையும் கோடிட்டுக் காட்டுகிறது.

> " நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு
> மாட மதுரையும் பீடார் உறந்தையும்
> கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்
> அரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்"

என்றும் புகழ்மிக்க கவிதைகளில் சீரிய கருத்துகளை இளங்கோவடிகளார் குறிப்பிட்டிருப்பது பெருமைக் குரியதாகும். இன்னும் தமிழகத்தின் இதர வளங்களையும் பெருமைகளையும் அடிகளார் கூறி மகிழ்கிறார். தென்கடல் முத்தும் தென்மலைச் சந்தும் என்றும், பொதிகையின் தமிழ் மணமும், சந்தன மணமும்பற்றியெல்லாம் பெருமைப்படத் தென்னாட்டின் வளத்தை அடிகளார் சிறப்பித்துக் கூறுகிறார்.

கோவலனும் கண்ணகியும் .யாரும் அறியாதபடி அதிகாலையிலேயே புகார் நகரை விட்டு நீங்கி, காவிரியாற்றின் வடகரை வழியாக, அங்கிருந்து ஒருகாத தூரத்தில் இருந்த கவுந்தியடிகளின் தவப்பள்ளியை அடைந்தனர். அங்கிருந்து மூவரும் சோலைகளும், வயல்களும் நிறைந்த காவிரிக்கரை வழியாக மேற்கு நோக்கிச் சென்று திருவரங்கத்தை அடைந்து அங்கிருந்து காவிரியைக் கடந்து தென்கரைக்குச் சென்று உறையூரை யடைந்தனர். இந்தப் பயணத்தைப்பற்றிக் கூறும்போது இளங்கோவடிகள் காவிரியின் சிறப்பைப்பற்றி விவரித்துக் கூறுகிறார்.

சனிக்கோள் புகைந்தாலும், விசும்பில் தூமகேது தோன்றினாலும், விரிவான கதிர்களைக் கொண்ட பிரகாசமான சுக்கிரன் தென்திசையில் சென்றாலும், பருவக் காற்றுத் தாக்கிக் குடகு மலையின் உச்சியில் மேகங்கள் திரண்டு குவிந்து கடும் முழக்கத்துடன் மழைவளத்தை வழங்கிக் காவிரியில் நீர்ப்பெருக்கெடுத்து வரும் காட்சியை மிக அற்புதமாக அடிகளார் விளக்குகிறார்.

இந்த மழைப்பெருக்கினால் பொங்கி வரும் காவிரிப் புதுநீர் குடமலையிலிருந்து பலவேறு வளங்களை வாரிக்கொண்டு கடல் வளத்தை எதிர்கொண்டு புகார் நகரின் அருகில் செல்கிறது என்று அக்காவிரியின் வளத்தைக் குறிப்பிடுகிறார்.

> “கரியவன் புகையினும், புகைக்கொடி தோன்றினும்
> விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
> கால்பொரு நிவப்பின் கடுங்குர லேற்றொடும்
> சூல்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக்

குடமலைப் பிறந்த கொழும்பல் தாரமொடு
கடல்வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை"

என்று காப்பிய அடிகள் குறிக்கின்றன. இந்த அழகான பாடல் அடிகள்,

" மணியும் பொன்னும் மயில்தழைப் பீலியும்
அணியும் ஆனைவெண் கோடும் அகிலும்தன்
இணையில் ஆரமும் இன்னகொண்டு ஏகலால்
வணிக மாக்களை ஒத்ததுஅவ் வாரியே"

என்றும்,

" முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்தல் தன்னைப் பொருஅரு மருதம் ஆக்கி
எல்லையில் பொருள்கள் எல்லாம் இடைதடு மாறும் நீரால்
செல்லுறு கதியில் செல்லும் வினையெனச் சென்றது அன்றே"

எனவும்,

" கல்லிடைப் பிறந்து போந்து, கடலிடைக் கலந்த நீத்தம்"

என்றும் கம்பன் கூறிய பாடல் அடிகளை நினைவு படுத்துகிறது.

காவிரி ஆற்றின் வடகரையின் வழி நெடுகிலும் ஆம்பல், குவளை, தாமரை, தாழை, செண்பகக் காவு, மாதவிமலர், முல்லை மலர், மல்லிகை, நீலோற்பலம், பீர்க்கம்பூ, காந்தள் மலர், பச்சிலை, பித்திகை, குமிழமலர் முதலிய மலர்க் கொடிகளும் கொவ்வைக்கனி நிறைந்த கொடிகளும் வெட்டி வேர் மணமும் நிறைந்திருந்தன. மூங்கில், சந்தனம், புன்னை மரங்கள், மா, பலா, வாழை மரங்கள் நிறைந்திருந்தன. அருகம்புல், சிறுபூளைப் பூக்கள், நெல், கரும்பு வயல்கள் நிறைந்திருந்தன. வழி நெடுகிலும் பொய்கைகளும் தடாகங்களும் பொழில்களும், குளங்களும், இதர நீர் நிலைகளும் நிறைந்திருந்தன. ஆங்காங்கு அறப்பள்ளிகளில் அரச மரங்கள் வளர்ந்தோங்கி நின்று அழகாகக் காட்சியளித்தன.

நீண்ட நெடிய நெல்வயல்களுடன் வள்ளிக்கிழங்கு, பலா, மஞ்சள், இஞ்சி, வாழை, கரும்புத் தோட்டங்களும் நிறைந்திருந்தன.

மயில்களும், அன்னங்களும், பைங்கிளிகளும், சேவல் கோழிகளும், சம்பங்கோழிகளும், கானாங்கோழிகளும், நாரை, கொக்கு, நீர்க்காக்கை, உள்ளான், குளுவை, கணந்துட்புள், பெருநாரை முதலிய பல வகைப் பறவை இனங்களும் கயல்மீன், வாளை மீன், மலங்கு மீன், நண்டு, நத்தை முதலிய நீர்வாழ் உயிரினங்களும், ஆட்டுக் கிடாய்களும் எரினம் என்னும் கவரி மான்களும், நீர் நாய்கள், எருமைகள், பசுக்கள், நரிகள் முதலிய பல வகை விலங்குகளும் கால்நடைகளும் வழிநெடுகிலும் காணப்பட்டன என்று அடிகளார் விவரித்துக் கூறுகிறார்.

அடுத்த நீண்ட பயணமாக உறையூரிலிருந்து மதுரைக்கு அருகில் செல்லும்வரையிலும் பயணத்தில் கற்பாறைகள், சிறு மலைகள், ஏரிக்கரைகள், ஆழமான குளங்கள், சிறிய பொய்கைகள், ஊருணிகள், வயல்கள், பூஞ்சோலைகள் ஆங்காங்கு இடைப்பட்டன. வெண்கடம்பு, ஓமை, வாகை, மூங்கில், கள்ளி மரங்களும், இலவம், புன்க மரங்களும், வேங்கை, ஆச்சா, சந்தனம், அழிஞ்சில் மரங்களும், குரவம், கோங்கு, பாதிரி, புன்னை மரங்களும் நிறைந்து காணப்பட்டன என்று அடிகளார் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

ஐவனம் என்னும் நெல், கரும்பு, தினை, வரகு, வெள்ளுள்ளி, மஞ்சள், வாழை, கமுகு, தெங்கு, மா, பலா முதலிய தோட்டங்களும், தோட்டப் பயிர்களும் நிறைந்து காணப்பட்டன. மான்கள், வண்டுகள், பன்றி, புலி, யானை, காட்டெருமை, கரடி, கலைமான், பாம்புகள் முதலியவை காணப்படும் காடுகளும், கிளி, காட்டுக்கோழி, மயில், கரிக்கோழி, கரிக்குருவி முதலிய பல வகைப் பறவையினங்களும் காணப்பட்டன என்று இளங்கோவடிகளார், இயற்கையின் சிறப்புகளை எடுத்துக் கூறுகிறார். நமது பெரும்புலவர்களும் சான்றோர்களும் இயற்கையோடிணைந்த மனித வாழ்வைப் போற்றி வளர்த்தனர்.

நெடுந்தொலைவு நடந்து வந்து இரவும் பகலுமாய்ப் பயணம் செய்து கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் வைகை ஆற்றின் வடகரையை அடைந்தனர். இங்கு வையை ஆற்றின் வளத்தையும் நீர்ப்பெருக்கத்தையும் அவ்வாற்றின் கரையில் நின்ற வானளாவிய உயர்ந்த மரங்களைப்பற்றியும் இளங்கோவடிகள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறுகிறார் :

" குரவமும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
மரவமும் நாகமும் திலகமும் மருதமும்
சேடலும் செருந்தியும் செண்பக ஓங்கலும்
பாடலம் தன்னொடு பன்மலர் விரிந்து
குருகும் தளவமும் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெள்கூ தாளமும்
குடசமும் வெதிரமும் கொழுங்கொடி பகன்றையும்
பிடவமும் மயிலையும் பிணங்கரில் மணந்த
கொடுங்கரை மேகலைக் கோவை யாங்கணும்
மிடைந்துசூழ் போகிய அகன்றேந்து அல்குல்
வால்உகம் குவைஇய மலர்ப்பூந் துருத்திப்
பால்புடைக் கொண்டு பன்மலர் ஓங்கி
எதிரெதிர் விளங்கிய கதிர்இள வனமுலை
கரைநின்று உதிர்த்த கவிரிதழ்ச் செவ்வாய்
அருவி முல்லை அணிநகை யாட்டி
விலங்குநிமிர்ந்து ஒழுகிய கருங்கயல் நெடுங்கண்,
விரைமலர் நீங்கா அவிரறல் கூந்தல்
உலகுபுரந் தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி"

என்று மிக்க அழகிய காப்பிய அடிகளில் மிகச் சிறப்பாக அடிகளார் குறிப்பிடுகிறார்.

வையை ஆற்றின் கரையின் வெளிப்பகுதியெங்கும் குரா மரங்களும், மகிழ மரங்களும், கோங்கு, வேங்கை, வெண்கடம்பு மரங்களும், சுரபுன்னை, மஞ்சாடி, மருத மரங்களும், உச்சிச் செலுந்தின் மரங்களும், செருந்தி மரங்களும் மற்றும் சண்பக மரம் முதலியவைகளெல்லாம் பாதிரி மரங்களுடன் சேர்ந்து மலர்ந்து அந்த வையை

என்னும் நங்கைமீது உடுத்தப்பட்ட பூந்துகிலைப் போல விளங்கியது.

அவ்வாற்றங்கரையின் உட்பகுதியெல்லாம், குருக்கத்தியும் செம்முல்லையும் வளைந்து நெளிந்த கொடிகளையுடைய முசுட்டையும், மலர்ந்து விரிந்த மலர்கள் நிறைந்த மோசி மல்லிகையும், வெள்ளை நறுந்தாளியும், வெட்பாலையும், மூங்கிலும், இவற்றில் படர்ந்த பெருங்கை ஆலும், குட்டிப்பிடவமும், இருவாட்சியுமாகிய பல வகை மலர்களும் விரிந்து பூங்கொடிகள் பின்னிப் படர்ந்து கிடப்பனவற்றைத் தன்னைச் சுற்றிச் சூழ்ந்த கோவையாகிய மேகலையாகவும் உடைய, வளைந்த கரையாகிய அல்குலையும், அகற்சியையும் பொலிவையும் உடைய இடைக்குறையிலே, பக்கங்களிலே பருமனாகக்கொண்டு தம்மீது பல வேறு மலர்களை உதிர்தலாகப் பெற்று உயர்ந்து குவிந்துள்ள, ஒன்றுக்கொன்று எதிர் எதிராக நின்று திகழும் மணல் குன்றுகளாகிய ஒளியும் இளமையும் உடைய அழகிய முலைகளையும், முருக்க மரங்கள் கரையினின்று உதிர்த்த இதழாகிய சிவந்த வாயினையும், அருவி நீரோடும் இடையறாது வருகின்ற முல்லையரும்பாகிய எயிற்றினையும் உடையவளும், குறுக்கே மறித்தும் நெடுகிலும் ஓடியும் திரிகின்ற மீன்களாகிய நெடிய கண்களையும், மணம் மிக்க மலர்கள் ஒரு பொழுதும் நீங்குதல் இல்லாது விளங்குகின்ற அறலாகிய கூந்தலையும் உடைய, உலகத்தே வாழுகின்ற பல வேறு உயிரினங்களையும், பேணி ஊட்டி வளர்க்கின்ற அருங்குணங்களையும், அறவொழுக்கத்தையும், அவ்வொழுக்கங் காரணமாகப் புலவர் பலரும் புகழுமாறு அவர்களுடைய செந்நாவிலே பொருந்தியுள்ள பூங்கொடி போல்பவளான வையை, வையை என்று உலகத்தாரால் சிறப்பித்துக் கூறப்படுகின்ற பெயருடையவளாகிய தனதொழுக்கம் ஒரு காலத்தும் பொய்யாதவளும், பாண்டியர் குலத்துப் பெண்ணாயிருப்பவளுமாகிய அந்த அழகிய நங்கையானவள்" என்று இந்தச் சிலப்பதிகாரக் காப்பிய அடிகளுக்கு உரையாசிரியர்கள் பொருள் கூறுவர்.

இந்த ஆறு, நீர் ஆறு அல்ல, பூவாறு என்றும், "புனல்யாறு அன்றியப் பூம்புனல் யாறெனஅனநடை மாதரும் ஐயனும் தொழுது" என்று மூவரும் ஆற்றைத் தொழுதனர் என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

மதுரையின் புறப்பகுதியில் அமைந்திருந்த அறப்பள்ளியைப்பற்றிக் கூறும்போது, பறவைகள் நிறைந்து அழகு செய்யும் வயல்களையும், சோலைகளையும், மிகுந்த நீரோட்டமுள்ள ஓடைகளையும், தோட்டங்களையும், விரிந்த நீர் நிறைந்த ஏரிகளையும், குலை குலையாய்த் தொங்கும் காய்கள் நிறைந்த தென்னை, வாழை, கமுகு மரங்கள் நிறைந்த தோப்புகள், மூங்கில்களால் இடப்பட்ட பந்தல்களையும் கொண்ட இருப்பிடங்கள் என்றும், அறத்தினையே விரும்பும் துறவிகள் இருக்கும் இடமாக இருந்தது என்று குறிப்பிடுகிறார்.

"புள்அணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீர் ஏரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்
வேய்த்திரள் பந்தரும் விளங்கிய இருக்கை"

என்று காப்பிய அடிகள் குறிக்கின்றன.

குன்றக் குரவைப் பாடல்களில் தினைப்புனங்கள், குருவிகள், கிளிகள், அருவிகள் மிகுந்துள்ள சூழலை அடிகளார் குறிப்பிடுகிறார். மலைநாட்டில் வேங்கை, கடம்பம், கோங்கம், தொங்கும் பூங்கொத்துகளையுடைய மஞ்சாடி மரங்கள், வயிரம் பாய்ந்த நல்ல சந்தன மரங்கள், மதுகரம், ஞிமிறு என்னும் வண்டினங்கள் முதலியவை பற்றியும் அடிகளார் மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறார்.

சேரமன்னன் மலைவளம் காணச் சென்ற போது மலைவாழ் மக்கள், மன்னனுக்கு எண்ணற்ற பரிசுப் பொருள்களைத் தலைமேல் சுமந்துகொண்டு வந்து நின்ற காட்சியைக் காப்பியம் மிக அழகாகக் குறிப்பிடுகிறது.

யானையின் தந்தங்கள், அகிற்கட்டைக் குவியல், மான்மயிர்க் கவரிகள், சந்தனக் கட்டைகள், சிந்துரக் கட்டிகள், அஞ்சனத்திரள், கஸ்தூரி, ஏலக்கொடி, மிளகுக்

கொடிகள், கூவைக்கிழங்கின் பொடிகள், கவலைக் கொடிக் கிழங்குகள், தென்னையின் நெற்றுகள், இனிய மாங்கனிகள், பச்சிலை மாலைகள், பலாப்பழங்கள், வெள்ளுள்ளி, கரும்பு, கமுகுக் குலைகள், வாழைக் குலைகள், ஆளிக் குட்டிகள், சிங்கக் குட்டிகள், புலிக் குட்டிகள், யானைக் குட்டிகள், குரங்குக் குட்டிகள், கரடிக் குட்டிகள், வரையாடுகள், வருடை மான்கள், மான் குட்டிகள், கஸ்தூரிமான் குட்டிகள், கீரிப்பிள்ளைகள், ஆண் மயில்கள், புனுகுப்பூனைக் குட்டிகள், காட்டுக் கோழிகள், தேன் மொழி பேசும் கிளிகள் முதலிய பலவற்றையும் கொண்டுவந்து, தலையில் சுமந்துகொண்டு மன்னன் முன் நின்றனர் என்று காப்பியம் விவரிக்கிறது.

"யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும், அணிஅரி தாரமும்
ஏல வல்லியும், இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனும், தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்,
காயமும் கரும்பும் பூமலி கொடியும்,
கொழுந்தாள் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெரும்குலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியின் அணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும் குடாஅடி உளியமும்,
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலிமஞ் ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்கு"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

இதே போல, ஆழ்வார்கள் இயற்கை வளங்களைப் பற்றியும் இயற்கையோடு இணைந்த உயிரினங்களின் வாழ்நிலைபற்றியும் மிகவும் அழகுற விவரித்துப் பாடியுள்ளார்கள்.

திவ்ய தேசங்கள், அக்கோயில்களில் குடிகொண்டிருக்கும் எம்பெருமான் கோவிலைச் சேர்ந்த, அதைச் சுற்றியுள்ள நீர்நிலைகள், தாவரங்கள், மரம் செடிகொடிகள், மலர்கள், வண்டுகள், பறவைகள், நாட்டின் செழிப்பு, வயல்வெளிகள், விளைபொருள்கள், மக்கள் கூட்டம், அதன் நல்வாழ்வு, விழாக்கள் முதலியனவற்றையும் இணைத்து ஆழ்வார்கள் அற்புதமாகப் பாடியுள்ளார்கள்.

திருமாலிருஞ்சோலை மலையைப்பற்றிக் "குலமலை, கோலமலை, குளிர்மாமலை, கொற்றமலை, நீலமலை, நீண்ட மலை, பாண்தகு வண்டினங்கள் பண்கள் பாடி மதுபருகத் தோன்டல் உடைய மலை, கனங்கொழி தெள்ளருவி வந்து சூழ்ந்த கல்ஞாலமெல்லாம் இனங்குழு வாடும் மலை யென்றும், ஆயிரம் ஆறுகளும், சுனைகள் பலவாயிரமும், ஆயிரம் பூம்பொழில்களும் உடைய மாலிரும் சோலை மலையென் றெல்லாம் பெரியாழ்வார் உள்ளம் உருகப் பாடுகிறார்.

"வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் என்றும், கீசு கீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்" என்றும், "கனைத்திளம் கற்றெருமை கன்றுக் கிரங்கி நினைத்து முலை வழியே நின்று பால்சோர" என்றும், "உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்" என்றும், "பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்" என்றும், "மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்" என்றெல்லாம் திருப்பாவைப் பாடல்களில் காண்கிறோம்.

"காயுடை நெல்லொடு கரும்பமைத்துக் கட்டியரிசி அவலமைத்து" என்றும், "புன்னை குருக்கத்தி ஞாழல் செருந்திப் பொதும்பினில் வாழும் குயிலே" என்றும், "கள்ளவிழ் செண்பகப்பூ மலர் கோதிக் களித்திசை பாடும் குயிலே" என்றும், "போதலர் காவில் புதுமணம் நாறப் பொறி வண்டின் காமரங்கேட்டு உன் காதலியோடுடன் வாழ்குயிலே" என்றும், "மென்னடை யன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர்" என்றும், "தேங்கனிமாம் பொழில் செந்தளிர் கோதும் சிறுகுயிலே" என்றும்,

"பொங்கொளி வண்டிரைக்கும் பொழில்வாழ் குயிலே" என்றெல்லாம் நாச்சியார் திருமொழி குறிப்பிடுகிறது.

" மைப்பொழில் வாழ்குயில்காள், மயில்காள்
ஒண்கருவிளைகாள், வம்பக் களங்கனிகாள்,
வண்ணப்பூவை நறுமலர்காள்"

என்றும் நாச்சியார் திருமொழியில் காண்கிறோம்.

இன்னும், கார்க்கோடற்பூக்காள், கோவை மணாட்டி, முல்லைப் பிராட்டி, பாடும் குயில்கள், கணமாமயில்கள், இன்னும் மழையே கடலே என்றும், கார்த்தண் முகிலும், கருவிளையும், காயா மலரும் கமலப் பூவும் என்றெல்லாம் இயற்கையோடியைந்த மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இனிய பாடல்களை நாச்சியார் திருமொழியில் காண்கிறோம்.

தொண்டரடிப்பொடியாழ்வார், திருவரங்கத்தின் இயற்கையழகைப்பற்றி மிக அழகாகப் பாடுகிறார் :

" வண்டினம் முரலும் சோலை,
மயிலினம் ஆடும் சோலை,
கொண்டல்மீ தணவும் சோலை
குயிலினம் கூவும் சோலை"

என்று பாடுவதைக் காண்கிறோம்.

தென்பெண்ணை ஆற்றங்கரையில் திருக்கோவிலூர் என்னும் திவ்ய தேசம் இருக்கிறது. அந்த ஊர் மிகவும் வளமானது, செழிப்புமிக்கது. அதன் செழுமையைப்பற்றி, "செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும் திருக்கோவிலூர்" என்றும், "கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக் குழாவரி வண்டிசை பாடும் பாடல் கேட்டு, தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த திருக்கோவிலூர்" என்றும், "கருங்கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று காயெல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட, செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத் திருக்கோவிலூர்" என்றும் பெரிய திருமொழிப் பாடல்களில் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

திருவயிந்திரபுரத்தைப்பற்றி "மொய்கொள் மாதவி சண்பகம் முயங்கிய முல்லையங் கொடியாட, செய்ய

தாமரையைச் செழும்பணை திகழ்தரு திருவயிந்திரபுரம்" என்றும், "கொங்கு, செண்பகக் கொம்பினில் குதிகொடு குரக்கினம் இரைத்தோடி தேன் கலந்த தண்பலங்கனி நுகர்தரு திருவயிந்திரபுரம்" என்றும் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

திருவாலி என்னும் திவ்ய தேசத்தைப்பற்றி, "கொங்கு செண்பகம் மல்லிகை மலர்புல்கி இன்னிள வண்டுபோய் இளந்தெங்கின் தாதளையும் திருவாலி"யென்றும், "புன்னையும் அன்னமும் சூழ்வய லாலி"யென்றும், "செந்நெல் மரும் வளர்பொழில்சூழ் வயலாலி" யென்றும், அதன் செழுமையை விவரித்துப் பாடுகிறார்.

திருநாங்கூர் என்பது சோழ நாட்டுத் திருப்பதிகளைச் சேர்ந்ததாகும். பூம்புகார் நகரத்திற்கு நெருக்கமாக உள்ள ஊர்களாகும்; செழிப்பும் வளமும் நிறைந்தனவாகும். இதைச் சுற்றியுள்ள திவ்ய தேசங்களைப்பற்றித் திருமங்கையாழ்வார் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

"எண்திசையும் பெரும் செந்நெல் இளந்தெங்கு கதலி இலைக்கொடியொண் குலைக்கமுகொடு கலிவளம் சொரிய, வண்டுபல இசை பாட மயிலாடும் நாங்கூர்" என்றும், "காவிரி அந்தகில் கனகமுந்தி மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து வளம் கொடுப்ப" என்றும், "செம்பலா நிரை செண்பகம் மாதவி சூதகம் வாழைகள்சூழ் வம்புலாம் கமுகோங்கிய நாங்கூர்" என்றும், "மடலெடுத்த நெடுந்தெங்கின் பழங்கள் வீழ மாங்கனிகள் திரட்டுருட்டா வருநீர்ப் பொன்னி, கடலெடுத்து மலர்சுமந்தங் கிழியும் நாங்கூர்" என்றும், "மாங்கனி நுகர்ந்த மந்தி வந்துவண் டிரிய வாழைத் தீங்கனி நுகரும் நாங்கூர்" என்றும், "மன்றமும் வயலும் காவும், மாடமும் மணங்கொண்டு எங்கும், தென்றல்வந் துலவும் நாங்கூர்" என்றும், "பருத்தெழு பலவும் மாவும், பழம்விழுந் தொழுகும் நாங்கை" யென்றும், "பூத்தமர் சோலை யோங்கிப் புனல்பரந் தொழுகும் நாங்கை" யென்றெல்லாம் பெரிய திருமொழிப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

திருமங்கையாழ்வார் திருவெள்ளியங்குடி என்னும் திவ்ய தேசத்தைப்பற்றிப் பாடும்போது, "காய்த்தநீள் கமுகுகதலியும் தெங்கும் எங்கும் ஆம்பொழில்களின் நடுவே

வாய்த்தநீர் பாயும் மண்ணியின் தென்பால் திருவெள்ளியங் குடி"யென்றும், "கடியுடை கமலம் அடியிடை மலரக் கரும்பொடு பெருஞ்செந்நெல் அசைய, வடிவுடையன்னம், பெடையொடும் சேரும் வயல்வெள்ளி யங்குடி" யென்றும் குறிப்பிடுகிறார்.

திருப்புள்ளம் பூதங்குடியைப்பற்றி, "நறிய மலர்மேல் சுரும்பார்க்க, எழிலார் மஞ்ஞை நடமாட, பொறிகொள் சிறைவண் டிசைபாடும், பள்ளச் செறுவில் கயலுகளப் பழனக் கழனி யதனுள்போய், புள்ளூப் பிள்ளைக் கிரைதேடும், காவார் தெங்கின் பழம் வீழக் கயல்கள் பாயக் குருகிரியும், பூவார் கழனி யெழிலாரும், மன்னு முதுநீர் அரவிந்த, மலர்மேல் வரிவண் டிசைபாட, புன்னை பொன்னேய் தாதுதிர்க்கும், குடியா வண்டு கள்ளூண்ணக் கோல நீலம் மட்டுகுக்கும், புடையார் கழனி யெழிலாரும், புள்ளம் பூதங் குடிதானே" என்று கற்றார் பரவும் மங்கையர்கோன் ப்ாடுகிறார்.

திருக்கூடலூர்ப் பெருமானைப் பாடும்போது, அந்த வளம்மிக்க திவ்ய தேசத்தைப்பற்றி "நறுந்தண் தீந்தேனுண்ட வண்டு குறிஞ்சி பாடும், கள்ள நாரை வயலுள், கயல்மீன் கொள்ளை கொள்ளும், வண்டல் அலையுள் கெண்டை மிளிர, கொண்டல் அதிரும் எக்கலிடு நுண்மணல் மேல் எங்கும் கொக்கின் பழம்வீழ், இலைதாழ் தெங்கின் மேல் நின்று இளநீர்க் குலைதாழ் கிடங்கின் கூடலூரே" என்றெல்லாம் கோவைத் தமிழால் கலியன் சொல்லும் பாவைப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

திருநறையூரைப்பற்றி, "வம்பவிழும் செண்பகத்தின் வாச முண்டு, மணிவண்டு வகுளத்தின் மலர்மேல் வைகும், செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில், உழும் செறுவில் மணிகொணர்ந்து கரைமேல் சிந்தி, உலகெலாம் சந்தனமும் அகிலும் கொள்ள, செழும்பொன்னி வளம் கொடுக்கும் சோழன் சேர்ந்த, பொன்சிதறி மணிகொணர்ந்து கரைமேல் சிந்திப் புலம்பரந்து நிலம்பரக்கும் பொன்னி நாடன், தென்தமிழன் வடபுலக்கோன் சோழன் சேர்ந்த, மலைத் தடத்த மணிகொணர்ந்து வைய முய்ய,

வளங்கொடுக்கும் வருபுனல்அப் பொன்னி நாடன், சிலைத் தடக்கைக் குலச் சோழன் சேர்ந்த கோயில் திருநறையூர்" என்றெல்லாம் மங்கை வேந்தன் பாடுகிறார்.

திருமாலிருஞ்சோலையைப்பற்றிச் "சந்தொடு மணியும் அணிமயில் தழையும் தழுவிவந் தருவிகள் நிரந்து, வந்திழி சாரல் மாலிருஞ் சோலை, கார்மலி வேங்கை கோங்கலர் புறவில் கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் வார்புனல் சூழ் தண்ண மாலிருஞ் சோலை, தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத் தடவரைக் களிறென்று முனிந்து, மடங்கல்நின் றதிரும் மாலிருஞ் சோலை, வானக்ச் சோலை மரகதச் சாயல் மாமணிக் கல்லதர் நிறைந்துமான் நுகர்சாரல் மாலிருஞ் சோலை, கதமிகு சினத்த கடதடக் களிற்றின் கவுள்வழிக் களிவண்டு பருக, மதமிகு சாரல் மாலிருஞ்சோலை" என்றெல்லாம் சோலை மலையின் சிறப்புகளைப்பற்றி பெரிய திருமொழியில் திருமங்கையாழ்வார் குறிப்பிடுகிறார்.

திருக்கோட்டியூரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "வண்டாடும் மல்லிகை, நாறு சண்பக மல்லிகை மலர், கொன்றையின் முல்லையின் வாசமும், குளிர் மல்லிகை மணமும், தூங்கு தண்பலவின் கனிதொகு தண்புனல் சூழ்திருக் கோட்டியூர்" என்று குறிப்பிடுகிறார்.

செம்போத்து, காக்கைப் பிள்ளாய், பூங்குயில், பல்லிக் குட்டி, பைங்கிளி, கோழி முதலிய பறவைகளையெல்லாம் அழைத்து ஆழ்வார்கள் திருமாலைப் பாடுகிறார்கள்.

திருக்குருகூரைப்பற்றி மலிந்து செந்நெல் கவரி வீசும் திருக்குருகூர் என்றும், சேற்றில் செந்நெல் கமலம் ஓங்கு திருக்குருகூர் என்றும், கொக்கலர் தடந்தாழை வேலித் திருக்குருகூர் என்றும், வளங்கொள் தண்பணை சூழ்ந்தழகாய திருக்குருகூர் என்றும், செருவில் செந்நெல் கரும்போடோங்கு திருக்குருகூர் என்றும் நம்மாழ்வார் பெருமான் அழகுபடப் பாடுகிறார்.

திருக்குடந்தையைப்பற்றிச் "சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த், திருக்குடந்தை, செம்மா கமலம் செழுநீர் மிசைக் கண்மலரும் திருக்குடந்தையென்றும், திருவல்லவாழ்பற்றி வானார் வண்கமுகும் மது மல்லிகையும் கமழும் தேனார்

சோலைகள் சூழ்திருவல்லவாழ், பச்சிலை நீள் கமுகும் பலவும், தெங்கும் வாழைகளும், மச்சணி மாடங்கள் மீதணவும் தண் திருவல்லவாழ், பண்குரல் வண்டினொடு பசுந்தென்றலும் ஆகியெங்கும் சேண்சினையோங்கு மரச்செழுங்கானல் திருவல்லவாழ், ஆடுறு தீங்கரும்பும் விளைசெந்நெலும் ஆகியெங்கும் மாடுறு பூந்தடஞ்சேர் வயல்சூழ் தண் திருவல்லவாழ், குழல் என்ன யாழுமென்னக் குளிர் சோலையுள் தேனருந்தி மழலைவரி வண்டுகள் இசைபாடும் திருவல்லவாழ்'' என்றெல்லாம் நம்மாழ்வாரின் திருவாய்மொழி குறிப்பிடுகிறது.

தூது செல்லும் பறவையினங்களைக் குறிப்பிட்டுக் குருகினங்கள், கருநாராய், மடவன்னங்கள், புன்னை மேலுறை பூங்குயில்கள், கிளிகள், வண்டினங்கள் முதலிய உயிரினங்களைக் குறிப்பிட்டு அவைகளைத் தங்கள் பக்திப் பரவசத்தோடும் பக்தி உள்ளத்தோடும் ஆழ்வார்கள் பாடுகிறார்கள்.

செழுநீர் வயல் குட்ட நாட்டுத் திருப்புலியூரைப்பற்றி, புன்னையம் பொழில்சூழ் திருப்புலியூர் என்றும், ஊர்வளம் கிளர் சோலையும் கரும்பும் பெருஞ்செந்நெலும் சூழ்ந்து ஏர்வளம் கிளர்தண் பணைக்குட்ட நாட்டுத் திருப்புலியூர் என்றும், சுனையினுள் தடந்தாமரை மலரும் தண்திருப்புலியூர் எனவும், மெல்லிலைச் செல்வ வண்கொடிப் புல்க வீங்கிளந்தாள் கமுகின் மல்லிலை மடல் வாழையீன் கனிசூழ்ந்து மணம் கமழ்ந்து புல்லிலைத் தெங்கின் ஊடுகால் உலவும் தண்திருப்புலியூர் என்றும், நம்மாழ்வார் மிகவும் சிறப்பாக அழகுபடப் பாடுகிறார்.

ஆழ்வார்கள் காலத்தில் பாரத தேசம் சிறப்பான உயர்ந்த நாகரிக வளர்ச்சியைப் பெற்றிருந்தது. சாகுபடித் தொழில் சிறந்து வளர்ச்சி பெற்றிருந்தது. ஏரிகுளங்கள் எண்ணற்ற நீர் நிலைகள் நிர்மாணிக்கப்பட்டு நிலவளம் மேலும் வளமாக்கப்பட்டிருந்தது. "ஏர் வளம் கிளர்" என்று நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். ஏர்வளம் சிறந்து விளங்கியது.

நெல், கரும்பு, வாழை, கமுகு, தென்னை, மா, பலா முதலிய எண்ணற்ற விளைபயிர்கள் ஏர்வளத்தால் சிறந்து

விளங்கின. கோவில் குளங்கள், கல்வி, கேள்வி, ஆடல் பாடல்கள் சிறந்து விளங்கி மக்கள் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள்.

சிற்றூர்கள், பேரூர்கள், நகரங்கள், மாட மாளிகைகள், கோவில்கள், கோபுரங்கள், கல்வி முறைகள் உருவாக்கப்பட்டு வளர்ச்சி பெற்றிருந்தன. பட்டு நூல், பருத்தி நூல் மூலம் ஆடை களும் உடைகளும் உற்பத்தியாகி மனித நாகரிக வளர்ச்சியை மேலும் உயர்த்தின. நந்தவனங்களும், தோப்பு துரவுகளும் நிர்மாணிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டன. பல வகை மலர்களும் விளைவிக்கப்பட்டு, மணம் பரப்பப் பட்டிருந்தது.

குறுநில மன்னர்களும், சிறுநில, பெருநில மன்னர்கள் பலரும் சிறந்த காவலர்களாக, அரசியல் நெறிமுறைகளோடு மக்களுடைய வாழ்க்கை முறைகளை ஒழுங்குபடுத்திச் செல்வதற்கு உதவியாக இருந்தார்கள்.

இயற்கைச் சீற்றங்களாலும், படையெடுப்புகளாலும், உள்நாட்டுச் சமூக விரோத சக்திகளினாலும், சமயச் சண்டைகளாலும் ஏற்பட்ட துன்ப துயரங்களையும் தாங்கிச் சமாளித்து மறுபக்கம் சீரான நாகரிகத்தையும் வளர்த்தார்கள். அதற்குப் பக்தி இயக்கம் பெரும் துணையாக இருந்தது.

எனவே, ஆழ்வார்கள் இயற்கை வளங்களுடன் நிலம், நீர், காற்று, கடல், நெருப்பு, வானம், சுடர்கள், சந்திர சூரியர்கள், கோளங்கள், மலை, ஆறு, காடுகள், வனங்கள், விலங்குகள், பறவைகள், இதர உயிரினங்களுடன் இணைந்து இசைவான ஒரு மனித வாழ்க்கையைச் சிறப்பித்துப் பாடினார்கள். அத்தகைய இயற்கையோடு இணைந்து, வயல்கள், தோப்புகள், சோலைகள், நந்தவனங்கள், கோவில்கள், குளங்கள், நீர்நிலைகள், ஆடல் பாடல், வாழ்க்கை இன்பங்கள் முதலியவற்றையும் சிறப்பித்துத் திருமாலிடம் மனிதனைச் சேர்த்தார்கள் என்பதைக் காண்கிறோம்.

இன்று சுற்றுச் சூழல்களுக்குப் பெரும் அளவிற்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. நீரும் நிலமும், ஆகாயமும்

அண்டவெளியும், காற்றும் கடலும், மலைகளும் ஆறுகளுங் கூட மாசுபட்டிருக்கின்றன. அதனால் பெரும் அழிவு ஏற்படும் அபாயம் வந்துள்ளது.

பெரும்போர்கள், இயற்கைச் சீற்றங்கள் முதலியவற்றால் ஏற்படும் சேதங்களைக்காட்டிலும், இன்று இயற்கைச் சூழல்களுக்கு ஏற்பட்டுள்ள மாசு அதிகமான சேதங்களை உண்டாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இயற்கையோடிணைந்த மனிதன் வாழ்க்கையைப்பற்றிச் சிறப்பித்துப் பாடும் ஆழ்வார்களின் பாடல்களும், சிலப்பதிகாரப் பாடல்களும் நமக்கு மிகுந்த அறிவும் இன்பமும் தருவனவாகும்.

ஆழ்வார்கள் பாடியுள்ள திவ்ய தேசங்கள் பலவும் வயல்வெளிகளும், கழனிகளும், நீர்வளமும் நிலவளமும் நிறைந்த பூமியாகும். நெல்லும் கரும்பும் கமுகும் மா, பலா, வாழையும், தென்னையும் மலர்ச்செடிகளும் கொடிகளும் நிறைந்த வயல்வெளிகளும் தோப்புகளுமாகும். அத்துடன் சோலைமலை, திருவேங்கடமலை, இமயமலை முதலிய மலைக்கோயில்களும் பிரசித்தமானவை. அம்மலைகளின் இயற்கை அழகையும் அனுபவித்து ஆழ்வார்கள் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

இளங்கோவடிகளாரும் ஆழ்வார்களும் காட்டிய வழியில் இயற்கையைப் பேணி இயற்கைச் சக்திகளைக் காத்து இன்பமடைவோமாக.

# 3. மனித முயற்சிகளும் வாழ்க்கை மேம்பாடுகளும்

இயற்கையில் கிடைக்கும் நிலவளம், நீர்வளம், கடல்வளம், மலைவளம், வனவளம், ஆற்றுவளம், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் முதலியனவற்றைப் பயன்படுத்தி மனிதன் தனியாகவும், கூட்டாகவும், குடும்பமாகவும் குழுக்களாகவும், கூட்டங்களாகவும் சேர்ந்து கடுமையான பல முயற்சிகளையும் மேற்கொண்டு, தொழில்கள் பல செய்து, உழைப்பைச் செலுத்தி எண்ணற்ற செல்வங்களைப் பெருக்கி மனித, வாழ்க்கையைப் படிப்படியாக மேம்படுத்தியிருக்கிறான்.

அரசுகள், அரசர்கள், ஆட்சி நிர்வாகங்களெல்லாம் அவ்வாறு வளப்படுத்தப்பட்ட மனித சமுதாய வாழ்வின் பாதுகாவலர்களாக இருந்து பாதுகாத்து வந்திருக்கிறார்கள். அதற்காக அவ்வரசுகளும் அரசர்களும் ஆட்சி நிர்வாகங்களும் மக்களிடமிருந்து பகுதியும் பாகமும் வரியும் திறையும் பரிசுப் பொருள்களும் பெற்றிருக்கிறார்கள். மக்கள் உயிராகவும், மன்னன் உடம்பாகவும் இருந்து நல்லாட்சி முறை பெற்றிருக்கிறது. இதில் மன்னனுடைய கடமையும், மந்திரிகளுடைய கடமைகளும், ஆட்சி அங்கங்களில் உள்ள மற்றவர்களின் கடமைகளும், மக்களுடைய கடமைகளும் நமது பாரத நாட்டின் அரசியல் சாத்திரங்களில் வகுத்தும் தொகுத்தும் கூறப்பட்டிருக்கின்றன.

மறுபக்கம், ஆட்சி அதிகாரத்தில் அதிகாரக் குவியல் ஏற்பட்டபோது பல அரசர்களும் தங்கள் படை பலத்தைப் பெருக்கியும், படைச்செலவுகளுக்குப் பகுதிப்பணங்களையும், வரிகளையும் அதிகரித்தும், தங்கள் ஆட்சியின் அதிகார எல்லையை விரிவுபடுத்திக்கொள்வதற்காகப் பல போர்களையும் நடத்தி, அதனால் பல கொலைகளும்

கொள்ளைகளும் நடந்து, பொருள் நாசங்களும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

இயற்கையாலும் செயற்கையாலும் ஏற்பட்ட பல கஷ்டங்களையும் இன்னல்களையும், துன்ப துயரங்களையும் தாங்கியும், சமாளித்தும், மனிதன் காடுகழனிகளையும், தோட்டம் துரவுகளையும், நீர்நிலைகளையும் தொழில் துறைகளையும், பாதைகளையும், சாலைகளையும். கோயில்களையும், குளங்களையும், ஆடல் பாடல்களையும் கவிதைகளையும், காவியங்களையும் இதர கலை இலக்கியங்களையும், ஆடை ஆபரணங்களையும், பொன்னையும் மணியையும் உலோகங்களையும் மற்றவைகளையும் உருவாக்கியும் நிர்மாணித்தும் மனித சமுதாயத்திற்குத் தேவையான உணவு, உடை, வீடு, கல்வி, ஆடை ஆபரணங்கள், வேலை, விளையாட்டு வசதிகள், ஆடல்பாடல் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் மனித வாழ்க்கைக்குத் தேவையான பொருள் செல்வங்களையும், அறிவுச் செல்வங்களையும், ஆன்மிகச் செல்வங்களையும் உருவாக்கி மனித சமுதாயம் நாகரிகமடைந்து வளர்ச்சி பெற்றிருக்கிறது.

மனிதனின் இத்தகைய சாதனைகளைப்பற்றியெல்லாம் இளங்கோவடிகள் தமது “நெஞ்சையள்ளும்” காப்பியத்திலும், ஆழ்வார்கள் தங்கள் தேனினும் இனிய பாசுரங்களிலும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் இலைமறைவு காயாகவும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இளங்கோவடிகள் தமது சிறப்பான காப்பியத்தில் பூம்புகார் நகரம், அதில் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கப் பகுதிகள், உறையூர், மதுரை, கொற்கை, வஞ்சி முதலிய நகரங்களையும் அந்த நகரங்களின் சிறப்புகள், வளம், வாணிபம், கோயில்கள், அறப்பள்ளிகள், ஊர்கள், விழாக்கள், வயல் வெளிகள், பசுமையான பயிர்கள், தோப்பு துரவுகள், நீர்நிலைகள், காய்கனிகள், மலர்களின் குவியல்கள், மக்களின் வாழ்க்கையின் சிறப்புகள், கல்வி கேள்விகள், ஆடை ஆபரணங்கள், ஆடல் பாடல்கள், இசை, நாடகங்கள் கூத்துகள், நடனம், சிற்பம் முதலிய கலைகள்பற்றியெல்லாம்

மிகவும் சிறப்பாக விளக்கிக் கூறுகிறார். இளங்கோவடிகளது [illegible] மிகச்சிறந்த காப்பியமாகும். தமிழக வரலாற்றுடன் இணைந்து தமிழ் மக்களின் உள்ளங்களில் ஆழப் பதிந்துவிட்ட உன்னதமான காப்பியமாகும். அது ஒரு தலைசிறந்த இலக்கியமாகும். அந்த உயர்ந்த காப்பியம் அன்றைய தமிழகத்தின் உண்மை நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. தமிழகம் அடைந்திருந்த நாகரிக வளர்ச்சியையும், தமிழ் மக்களின் பெருமைகளையும், அருமைகளையும், ஒற்றுமையையும் இக்காப்பியம் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

ஆழ்வார்களின் இனிய பாசுரங்கள் அன்றைய திருக்கோயில்களின், தெய்விகத் திருப்பதிகளின் சிறப்புகள் பற்றியும், வழிபாடுகளின் உயர்வுகள்பற்றியும், தத்துவ ஞான மெய்ப்பொருளுடன் தெய்விக மணம் கமழப் பக்திச் சுவையுடன் நமக்கு உணர்வூட்டுகின்றன. அத்துடன் அந்தத் தெய்விகப் பாசுரங்கள் அந்த திவ்யதேசங்களின் இதர சிறப்புகள், மக்களின் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை உயர்வுகள், கொண்டாட்ட மகிழ்ச்சிகரமான திருவிழாக்கள், செல்வச் செழிப்புகள், ஆடல் பாடல், கல்வி ஞானங்கள், அறிவுத்துறை மற்றும் ஆன்மிகத்துறைக்ளின் வளர்ச்சிபற்றியும் விரிவுபடக் கூறுகின்றன.

இளங்கோவடிகள் மனிதனின் பொருளியல் வாழ்க்கையையும், அரசர்களின் ஆட்சி மற்றும் நிர்வாக முறைகளைப்பற்றியும் நவரத்தின மாலையாக அழகுபடக் கோர்த்துத், தமிழ்த்தாய்க்கு அணிவித்துள்ளார். ஆழ்வார்கள் ஆன்மிகக் கருத்துகள் நிறைந்த அழகிய ஆழ்ந்த கருத்துச் செறிவுமிக்க பாசுரங்களைப் பாமாலைகளாகக் கோத்துத் தமிழ்த்தாய்க்குச் சூட்டியுள்ளார்கள்.

புகார் நகரின் செல்வச் செழிப்பையும் வளத்தையும் பற்றி அடிகளார் கூறுகிறார்கள் :

“ அரைசால் சிறப்பின் அரசுவிழை திருவின்
பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்
முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி

அரும்பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்
ஒருங்குதொக்கு அன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவன் ஈட்டக்
குலத்தில் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்"

ஆட்சி அதிகாரத்தில் உள்ள அரசர்களேகூட போற்றிப் புகழக்கூடிய அளவில் செல்வச் செழிப்புமிக்க வணிக மக்கள் புகார் நகரில் மிகுதியாக இருந்தனர் என்று இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார். இதில் புகார் நகர் வணிகர்களின் செல்வச் சிறப்பு குறிப்பிடப்படுகிறது. காப்பியம் முழுவதிலும் வணிகர்களின் செல்வமிகுதி, குலச் சிறப்பு, குல ஒழுக்கம், தீதில்லாத செல்வம், அரசருக்கு அடுத்த சமுதாய அந்தஸ்து, அரசரும் போற்றிப் புகழக்கூடிய செல்வச் செழிப்பு குறிப்பிடப்படுகின்றன. இக்கருத்து மிக முக்கியமாகக் கவனிக்கத்தக்கதாகும். இதுபற்றி இன்னும் விரிவாகப் பின்னர்க் காணலாம்.

அலைகடல் சூழ்ந்த உலகம் முழுவதும் திரண்டு வந்தாலும் அவர்களுக்கெல்லாம் வாரி வழங்குவதற்கும், உணவு கொடுத்து உபசரிப்பதற்கும் போதுமான பொருளும் செல்வமும் நிறைந்திருந்தது புகார் நகரத்தில். பல வேறு செல்வங்களும் சிறப்பும் மிக்க நாடுகளெல்லாம் ஒருசேர வந்து குவிந்திருப்பதைப் போல அவர்களின் செல்வங்கள் நிறைந்து புகார் நகரம் காட்சியளித்தது. கடல்வழியாகவும் தரை வழியாகவும் ஈட்டிய பொருள்கள் எல்லாம் அந்நகரில் நிறைந்து குவிந்திருந்தன.

மனிதன் குறிஞ்சிப்பகுதியான மலைகளில் வாழ்ந்து கொண்டிருந்த ஆதிகாலத்தில் உணவு சேகரிப்பது, வேட்டையாடுவது ஆகிய தொழில்களைச் செய்துகொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தான். அதன் பின்னர் ஆடுமாடுகளை மேய்க்கவும், கால்நடைகளைப் பராமரிக்கவும் கற்றுக்கொண்ட மனிதன் மேய்ச்சல் நிலங்களை நோக்கிக் காலப்பயணத்தை நடத்திக்கொண்டிருந்தான். அப்போது இயற்கையில் கிடைத்த கந்தமூலாதிகள், காய், கனி, கிழங்கு, தேன், தினை முதலியவைகளுடன் பால், தயிர், வெண்ணெய், நெய், மோர், மாமிசம் போன்றவைகளும்

தோல் ஆடைகளும், ஆசனங்களும், ரோமத்தினால் ஆன ஆடைகளும், தங்குவதற்கான பாடிகளும், குடியிருப்புகளும், படுக்கைகளும் உண்டாக்கிக்கொண்டான். ஆற்றங்கரைகளிலும் கடலோரங்களிலும் வாழ்ந்த மக்கள் மீன் பிடிக்கவும் கற்றுக்கொண்டனர். மக்கள் கூட்டங்கள் தங்களிடமுள்ள உபரிப் பொருள்களைத் தங்களுக்குள் பரிமாறிக்கொண்டன.

காலப்பயணத்தில் ஆற்றோரங்களிலும், கடலோரங்களிலும், மக்கள் குடியேறியும், சாகுபடி செய்வதற்கான விரிவான நிலப்பரப்புகளைப் பண்படுத்தி விளைச்சலைப் பெருக்கி உணவு தானியங்களையும், காய்கனி மலர்களையும் உற்பத்தி செய்து குவித்தான். கடலோரங்களில் தோணிகளையும் படகுகளையும் உண்டாக்கி மீன் பிடித்தும் சாகுபடிக்குத் துணையான பல வேறு தொழில்களையும் செய்து உற்பத்திப் பண்டங்களைப் பெருக்கினான். உபரிப் பண்டங்கள் சந்தைகளுக்குப் பண்டமாற்றுதலுக்கும் விற்பனைக்கும் வந்தன. வாணிபம் பெருகிற்று. உள்நாட்டு வாணிபத்துடன் நாவாய்களையும் துறைகளையும் கட்டுமானம் செய்து அயல்நாட்டு வாணிபமும் பெருகிற்று. விரிவான நிலப்பகுதிகள் சாகுபடி செய்யப்பட்டதை ஒட்டி ஊர்களும் பல கூட்டான மக்கள் குடியிருப்புகளும் வளர்ந்தன. ஊர்களின் நிர்வாகங்களுக்காக ஊர் அமைப்புகளும், பல ஊர்கள் சேர்ந்த கூட்டமைப்புகளுக்கான நிர்வாக அமைப்புகளும், குறுநில மன்னர்கள், சிறுநில மன்னர்களின் அமைப்புகளும் தோன்றி வளர்ந்து உறுதிப்பட்டன.

உபரியும், உற்பத்திப் பெருக்கமும் தொழில்களும் தோன்றி வளர்ந்து விரிவடைந்தபோது நகரங்களும் பெருநில மன்னர் அமைப்புகளும் நிர்வாகங்களும் அமைந்து ஆட்சி முறைகள் விரிவடைந்தன. பெருநில மன்னன் சோழனுடைய நிர்வாகத்தின்கீழ் ஆயிரத்தெட்டுச் சிறுநில மன்னர்கள் இருந்ததாகச் சிலப்பதிகாரச் செய்தி கூறுகிறது. பெருநில மன்னனைச் சுற்றிப் பெரும்படைகளும் கோட்டைகளும் உருவாயின. வாணிபம் பெருகிற்று. வணிகர்களுள் பலரும் பெரும் செல்வர்களாக வளர்ச்சி பெற்று அவர்கள் சமுதாயத்தில் அரசனுக்கு அடுத்தபடியாக முக்கிய இடத்தைப் பெற்றனர்.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பெருநில மன்னர்களாக நிலை பெற்றனர். வஞ்சி, பூம்புகார், உறையூர், மதுரை, கொற்கை முதலிய நகரங்களும், நகரங்களை மையமாகக் கொண்டு பல வேறு தொழில்களும் கடலோரத்துறைகளை மையமாகக்கொண்டு அயல்நாட்டு வாணிபமும் வளர்ச்சியடைந்தன.

தமிழகத்தின் சேர சோழ பாண்டிய நாடுகளின் நகரங்களின் வளர்ச்சியைப்பற்றி, அவைகளின் சிறப்புகளைப் பற்றி இளங்கோவடிகள் மிக விரிவாகவும் மிகவும் சிறப்பாகவும் எடுத்துக் கூறுகிறார். நகரங்களின் வளர்ச்சியை ஒட்டி, நகர மக்களின் வளர்ச்சியும் அவர்களின் தொழில்களும் ஆடல்பாடல்களும் இசைகளும் கூத்துகளும் கேளிக்கைகளும் விழாக்களும் வளர்ச்சி பெற்றிருந்ததையும் இளங்கோவடிகள் மிக அழகாக எடுத்துக் கூறுகிறார்.

கோயில் கொண்ட நகரங்களையும் ஊர்களையும், அந்த திவ்ய தேசங்களின் சிறப்புகளையும்பற்றி ஆழ்வார்கள் மிக விரிவாகத் தங்கள் பாசுரங்களில் அழகுபடக் கூறுகிறார்கள். பல வேறு துறைகளிலும் மக்கள் நாகரிகமடைந்து, சிறப்படைந்து மகிழ்ச்சியான வாழ்க்கை அமைத்துக் கொண்டுள்ளதையும், பசி, பட்டினி, பிணி நீங்கி மக்களின் நல்வாழ்வு மேலும் மேம்பட வேண்டும் எனவும் பாடுகிறார்கள்.

பூம்புகார் நகரின் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் ஆகிய இருபகுதிகளைப்பற்றியும் இளங்கோவடிகள் மிக விரிவாகக் குறிப்பிடுகிறார். வீதிகள், மாளிகைகள், பல வேறு தொழில்கள் செய்யும் மக்கள், விற்பனை செய்யப்படும் பண்டங்கள், அவைகளை விற்பனை செய்யும் மக்கள், நகரின் பொருள் வளம், பொருள் பெருக்கம் ஆகியவைகளைப் பற்றியெல்லாம் மிகவும் சிறப்பாக விவரித்துக் கூறுகிறார்.

மாளிகைகள், அவைகளின் நிலா முற்றங்கள், பெரிய அணிகலன்கள் வைக்கப்பட்டுள்ள அறைகள், அழகிய வட்ட வடிவமான சாளரங்களுடன் கூடிய மாடங்கள், யவனர் இருப்பிடங்கள் பலவும் விளங்கின என்று கூறுகிறார்.

"வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை யிடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

மரக்கலங்கள் மூலமாகக் கொண்டுசெல்லவும், கொண்டுவரவுமான செல்வத்திற்காகத் தங்கள் நாட்டை விட்டு வந்துள்ள வெளிநாட்டார் பலரும் ஒன்றுகலந்து வாழும் கடற்கரையோரக் குடியிருப்புகளைக் கொண்டிருந்த வீதிகள் இருந்தன.

"கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

பல வேறு வண்ணங்களினாலான குழம்புகளும் சுண்ணப் பொடிகளும், குளிர்ந்த மணம்மிக்க சந்தனமும் மலர்களும் அகில் முதலான வாசனைப் புகைப் பொருள்களும் விற்கப்படும் வீதிகள் இருந்தன.

"வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வளர் திரிதரு வீதியும்"

இருந்தனவென்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

பட்டு நூலினாலும் ரோமங்களாலும் பருத்தி நூலினாலும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் குடியிருப்புகளைக் கொண்ட வீதிகள் இருந்தன என்பதை,

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்"

என்றும், பட்டும் பவளமும், சந்தனமும் அகிலும் மாசில்லாத முத்துகளும், மணிகளும், இரத்தினங்களும், பொன்னும் குவிந்து கிடக்கும் செல்வம் நிறைந்த வீதிகள் இருந்தன என்பதை,

"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்துகடை யறியா
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகும்

என்றும், பகுதி பகுதியாகக் குவித்துப் பல வேறு வகையான நவதானியங்கள் விற்பனை செய்யப்படும் கூலவணிகர் வீதி இருந்தது என்பதை,

> " பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
> கூலம் குவித்த கூல வீதியும்"

என்றும் காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன. (கூலம் என்பது நவதானியங்கள் என்றும், நெல், புல், வரகு, தினை, சாமை, இருங்கு, துவரை முதலிய எண்வகைத் தானியங்கள் என்றும், பல சரக்குகள் என்றும் பொருள் கூறலாம். கூலவணிகர் என்பது பிரபலம்)

பிட்டு வணிகர், அப்ப வணிகர், கள் விற்கும் வலைச்சியர், மீன் விற்கும் பரதவர், வெள்ளை உப்பு விற்கும் உமணர், வெற்றிலை விற்போர், ஐவகை மணப்பொருள் (இலவங்கம், கற்பூரம் முதலியன) விற்பவர்கள், பல வகை மாமிசங்கள் விற்பனை செய்வோர், எண்ணெய் விற்போர் முதலிய பல பிரிவு மக்களும் வாழும் பல வேறு குடியிருப்புகளும் வீதிகளும் இருந்தன.

> " காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
> மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
> " பாசவர், வாசவர், பன்னிண விலைஞரோடு
> ஓசுநர், செறிந்த ஊன்மலி இருக்கையும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

வெண்கல வேலைகள் செய்யும் கன்னார், செம்பு வேலைகள் செய்யும் கொட்டியர், மரவேலைகள் செய்யும் தச்சர், வலிய கைகளை உடைய கொல்லர் (இரும்பு வேலை செய்பவர்), ஓவியக் கலைஞர்கள், பொற்கொல்லர்கள் (தட்டார்), சிப்பியர்கள், மண்கலம் செய்யும் குலாலர்கள், பொம்மைகள் செய்வோர், தோல் பொருள்கள் செய்வோர், துணியாலும், நெட்டியாலும் பல வகைப் பொருள்களைச் செய்யும் தொழில் முனைவோர் மற்றும் குற்றமற்ற பலவேறு தொழில்களைச் செய்யும் மக்கள் வாழும் குடியிருப்புகளும் இருந்தன.

"கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்
மரங்கொல் தச்சரும் கருங்கைக் கொல்லரும்
கண்ணுள் வினைஞரும் மண்ணீட் டாளரும்
பொன்செய் கொல்லரும் நன்கலந் தருநரும்
துன்ன காரரும் தோலின் துன்னரும்
கிழியினும் கிடையினும் தொழில்பல பெருக்கி
பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்களும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

"பழுதில் செய்வினைப் பால்கெழு மாக்கள்" என்று இளங்கோவடிகள் கூறியுள்ளது மிகச்சிறப்பான மேன்மையான செய்தியாகும். "தீதின்றி வந்த பொருள்" என்றும், "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்" என்றும் வள்ளுவப்பெருமான் குறிப்பிடுகிறார்.

பாரதியார் பல இடங்களிலும் "கோதகன்ற தொழில் உடைத்தாகி" என்றும், "வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு வாழும் மாந்தர்" என்றும், "திறமை கொண்ட தீமையற்ற தொழில்புரிந்து யாவரும்" என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். தொழிலோ வாணிபமோ அவை பழுதில்லாமல் யாருக்கும் தீங்கு பயப்பனவாக இல்லாமல் இருக்க வேண்டும் என்பது தமிழ் நீதியாகும், பாரத நீதியாகும். மேலும்,

"குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபிற் பெரும்பாண் இருக்கையும்
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறுவின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கம்"

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

குழல் முதலிய துளைக்கருவிகளாலும் யாழ் முதலிய நரம்புக் கருவிகளாலும் ஏழு குரல்களை வழுவில்லாமல் இசைகள் அமைத்து வழிகாட்டும் திறமைமிக்க இசை வாணர்கள் வாழுமிடங்களும், மற்றும் பல கைவினைஞர் களும், மற்றவர்களுக்கு ஏவல் புரியும் பணியாளர்களும் குற்றம் குறைவின்றி வாழும் குடியிருப்புகளையும் கொண்ட மருவூர்ப் பாக்கம் என்பது அடிகளார் குறிப்பிடுவதாகும்.

பட்டினப்பாக்கம் : இனிப் பட்டினப்பாக்க வீதிகளை இளங்கோவடிகளார் விவரித்துக் காட்டுவதைக் காணலாம்.

இங்கு ராஜ வீதி, தேர் ஓடும் ரத வீதிகள், பெரிய கடைத் தெருக்கள், பெரும் தன வணிகர்கள் வாழும் மாட மாளிகைகள் நிறைந்த வீதிகள், பார்ப்பனர் குடியிருப்புகள், அனைவரும் விரும்பும் உழவர் பெருமக்கள் வாழும் வீதிகள், ஆயுள் வேத வைத்தியர்களும், காலக் கணிதர்களும் (சோதிடர்கள்), தனித்தனியாக வாழும் வீதிகள், முத்துக் கோப்போர், சங்கு அறுத்து வளையல் செய்வோர் வாழும் அகன்ற வீதிகள், இன்னும் மற்றவர்களைப் போற்றிப் பாடும் சூதர், மாகதர், வேதாளிகர் ஆகியோர் வாழும் வீதிகள், நாழிகைக் கணக்கர், சாந்திக் கூத்தர், கணிகையர்கள், அகக் கூத்தர், வீட்டு வேலை செய்யும் பணியாளர்கள், தோல் கருவி பயிலுவோர், பல வகை வாத்தியங்கள் இசைப்போர், விதூடகர் முதலியோர் தனித்தனியாக வாழும் குடியிருப்பு களும் வீதிகளும், குதிரை செலுத்துவோர், யானைப்பாகர், தேர்ப்பாகர், காலாட்படையினர் ஆகியோர் மன்னனின் அரண்மனையைச் சூழ்ந்து இருக்குமாறு உள்ள இருப்பிடங்கள் முதலியவை நிறைந்த பெருமைக்குரிய பாடல் சிறப்புமிக்க பட்டினப்பாக்கமாகும் என இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறுகிறார்.

"கோவியல் வீதியும், கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்குடி வணிகர்
மாட மறுகும், மறையோர் இருக்கையும்
வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்
திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையொடு
அணிவளை போழுநர் அகன்பெரு வீதியும்
சூதர், மாகதர், வேதா ளிகரொடு
நாழிகைக் கணக்கர் நலம்பெறு கண்ணுளர்,
காவற் கணிகையர் ஆடற் கூத்தியர்
பூவிலை மடந்தையர் ஏவற் சிலதியர்
பயில்தொழிற் குயிலுவர் பன்முறைக் கருவியர்
நகைவே ழம்பரொடு வகைதெரி இருக்கையும்

கடும்பரி கடவுநர் களிற்றின் பாகர்
நெடுந்தேர் ஊருநர், கடுங்கண் மறவர்
இருந்துபுறம் சுற்றிய பெரும்பாய் இருக்கையும்
பீடுகெழு சிறப்பிற் பெரியோர் மல்கிய
பாடல்சால் சிறப்பிற் பட்டினப் பாக்கமும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

பூம்புகார் நகரம் இருபிரிவுகளாகக் காப்பியத்தில் விவரிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். பல வேறு கைத்தொழில்கள் நிறைந்ததும் வாணிபம் நிறைந்ததுமாக, வளமும் செல்வமும் நிறைந்த மக்கள் குவிந்துள்ள நகரமாக அதைக் காண்கிறோம்.

மேட்டுக்குடி மக்களும் கலையும் இசையும் கூத்தும் நிறைந்து மகிழ்ச்சியுடன் வாழும் மக்களை அங்கு காண்கிறோம்.

இந்திய சமுதாய வளர்ச்சியின் ஒரு புதிய கட்டத்தை இக்காட்சி காட்டுகிறது. நால்வகைப் படைகளைக்கொண்ட ஒரு வலுவான அரசு அமைந்துள்ளது. அவ்வரசு செங்கோல் அரசாகவும், மக்கள் பாராட்டும் அரசாகவும் அமைந்துள்ளது. வீதிகளில் அரச வீதிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் இடத்தில் வணிகர் வீதியும், மூன்றாவதாக அந்தணர் வீதியும், நான்காவதாக வீழ்குடி உழவர் வீதியும் இடம் பெற்றிருக்கிறது.

அந்தணர், அரசர், வைசியர், சூத்திரர் என்னும் முந்திய கால வரிசை இங்கு மாறி வந்துள்ளது. மனுநீதியில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வர்ணப் பிரிவுகளின் வரிசை சிலப்பதிகாரத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. இதை ஒரு முக்கியமான சமுதாய மாற்றமாக எடுத்துக்கொள்ளலாம்.

"குணத்தாலும் செய்கையாலும் நான்கு வர்ணங்களைப் படைத்தேன்" என்பது கீதையின் வாக்கு. மனுவுக்குப் பின்னர், பிறப்பால் வர்ணப் பிரிவினைகள் ஏற்படுகின்றன. சமுதாயத்தின் தலைமை யாருக்கு என்பதில் பிராமணர் களுக்கும் சத்திரியர்களுக்குமிடையில் வடக்கில் கடும்போர் நடந்திருக்கிறது. அதற்குப் பரசுராமனுக்கும் பல அரசர்

களுக்கும் இடையில் நடந்த போர்களும், விசுவாமித்திர னுக்கும் வசிட்டனுக்குமிடையில் நடந்த மோதல்களும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பின்னர் விசுவாமித்திரரை, "வாராய் பிரம்ம ரிஷி" என்று வசிட்டர் ஏற்றுக்கொண்ட பின்னர், பிராம்மணர்களுக்கும் அரசர்களுக்கும் சமரசமும் உடன்பாடு ஏற்படுகின்றன. பரசுராமன் தன் பலத்தையெல்லாம் இராமனிடம் கொடுத்துவிட்டுக் காட்டிற்குச் சென்று விடுகிறான்.

சத்திரியர்கள் அரசர்களாகவும், பிராம்மணர்கள் அமைச்சர்களாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசுகள் உறுதிப்படுகின்றன. சமுதாய வளர்ச்சியில் உற்பத்தி பெருகியும் உபரி அதிகப்பட்டும் வந்த காலத்தில் வாணிபம் தோன்றி வளர்ச்சி பெறுகிறது. வணிகர்கள் செல்வர்களாக வளர்ச்சி பெற்று, சமுதாயத்தில் அவர்களுடைய அந்தஸ்து உயருகிறது. அரசர்களுக்கு அடுத்த நிலையில் வணிகர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இதை வடமொழியில் பஞ்ச காவியங்களும், தமிழில் ஐம்பெரும் காப்பியங்களும் உறுதிப்படுத்துகின்றன. சிலப்பதிகாரக் காப்பியம் பல இடங்களிலும் அரசருக்கு அடுத்த வணிக குலம் என்னும் கருத்துக் குறிப்பிடப்படுகிறது.

"அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின்," என்றும் "அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்" என்றும், "செவ்வி பார்க்கும் செழுங்குடிச் செல்வரோடு, வையம் காவலர் மகிழ்தரு வீதியும்" என்றும், "அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்'' என்றெல்லாம், அரசரையும் வணிகரையும் இணையாக வைத்து இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் பல இடங்களிலும் குறிப்பிடுகிறார்.

அரசமைப்புபற்றிக் குறிப்பிடும்போது "ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும், அரச குமாரரும் பரத குமாரரும்" என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள். ஐம்பெருங் குழுவினர் என்பவர்கள் அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் ஆகியோராவர். இவர்கள் அரசின் அங்கங்களாவர். எண்பேராயர் என்போர் : கரணத்தியலவர்,

கருமகாரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், நளி படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் ஆகியோராவர். இவர்கள் ஆட்சிக்குரியோரும், ஆட்சிக்குத் துணைபுரிவோரும், அரசுப் பணியாளர்களுமாவர். இத்துடன் அரச குமாரர், வணிக குமாரர், குதிரைத் தொகுதியினர், யானைத் தொகுதியினர், தேர்த்தொகுதியினர் ஆகியோரும் சேர்ந்து ஆட்சி நிர்வாகத்தின் அங்கங்களாக அமைந்துள்ளதைக் காப்பியம் குறிப்பிடுகிறது. இவர்களுடன் பெருநில அரசின் அங்கங்களாகச் சிறுநில மன்னர்களும் குறுநில மன்னர்களும் சேருகிறார்கள்.

இங்கு மனித முயற்சியில் மனித வாழ்க்கையைச் சீரமைத்துக்கொள்வதற்கு அரசும் அரசின் அங்கங்களும் உருவாக்கப்பட்டுச் செயல்படுவதுபற்றியெல்லாம் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

மனித நாகரிகத்தின் வளர்ச்சியில் சமயங்களும், சமயங்கள் கூறும் நன்னெறிகளும் முக்கியமான பங்கை வகிக்கின்றன. தமிழகத்திலும் பாரதத்திலும் நமது சமயங்கள் தர்மம் என்றும், மக்களின் கடமையென்றும் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. சமயம் என்பது மனித வாழ்க்கையின் வழிமுறையின் பகுதியாக, நெறிமுறையின் பகுதியாக வகுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. நமது சமயங்களின் மையங்களாகக் கோவில்கள் நிர்மாணிக்கப்பட்டு, அவை நமது மக்களின் கூட்டு வாழ்க்கையின் ஒரு பகுதியாக விளங்கி வந்திருக்கின்றன.

நமது கோவில்கள் வெறும் வழிபாட்டு மையங்களாக மட்டும் இருக்கவில்லை. அரச சபை கூடுமிடங்களாகவும், மக்கள் சபைகள் கூடும் இடங்களாகவும், இசை, ஆடல் பாடல், நாட்டியம், சிற்பம், வான சாஸ்திரம், கணிதம், கலை, கவிதைகள், காவியங்கள், இலக்கியம் முதலிய பல கலைகளும் பயிலும் பல்கலைக் கழகங்களாகவும், பயிற்சி நிலையங்களாகவும், பாதுகாப்பு நிலையங்களாகவும், மக்கள் மகிழ்ச்சியாகக் கூடி நடத்தும் விழாக்களின் களங்களாகவும் விளங்கி வந்திருக்கின்றன. நமது கோவில்களில் நடைபெறும் விழாக்கள் என்பவை பல இலட்சக்கணக்கான மக்கள் சாதி

சமய ஊர் வேறுபாடுகளின்றிக் கூடி மகிழும் காட்சிகளாக இருந்து வந்திருக்கின்றன. இவையெல்லாம் மனித சமுதாயத்தின் நல்வாழ்க்கைக்கும் மேம்பாட்டிற்குமான மனித முயற்சிகளாகும்.

இந்திர விழாவையொட்டிப் பல வேறு விழாக்கள் நடைபெறும் காட்சியையும், பல வேறு கோவில்களைப் பற்றியும் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

“ விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டிப்
பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்
மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை யொருபால்
நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்”

என்று பல வகைக் கோயில்கள், பல வகைக் கடவுளர்கள், பல வகை வழிபாடுகள், வழிபாட்டு முறைகள், பல வேறு விழாக்காட்சிகள் முதலியவைபற்றியெல்லாம் இளங்கோ வடிகள் குறிப்பிடுகிறார்.

விழாக்களின் இசை நிகழ்ச்சிகளில் கூத்தர், தோல் கருவியாளர், யாழிசைப்புலவர், குழலிசைப் புலவர், வாய்ப் பாடகர்களான பாணர் முதலியோரும் கலந்து கொள்கிறார்கள் என்பதையும் காப்பிய அடிகள் விவரித்துக் கூறுகின்றன. மனித வாழ்க்கையில் இசைக்கும் இசைப் பயிற்சிக்கும் இசைக் கருவிகளுக்கும் இசை நிகழ்ச்சிகளுக்கும் உள்ள முக்கியத்துவத்தைச் சிலப்பதிகாரக் காப்பியம் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது.

**மதுரைப் பயணத்தில் :**

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் மதுரைக்குப் புறப்பட்டபோது,

"காவுந்தி ஐயைகைப் பீலியும் கொண்டு
மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை யாகென"

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள். இங்கு "மொழிப்பொருள் தெய்வம்" என்பது "அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள்" ஆகியோரை உணர்த்தும் ஐந்தெழுத்து வணக்கமாகும். இவ்வாறான ஐம்பெரும் பரமேஷ்டிகளே வழித்துணையாக அமைக எனத் துதித்துப் புறப்பட்டனர் என்று பொருளாகிறது. இது சமண சமயப் பண்பாட்டின் பகுதியாகும்.

கோவலனும் கண்ணகியும் புகார் நகரிலிருந்து புறப்பட்டுக் கவுந்தியடிகளுடன் காவிரியின் வடகரை வழியாகப் பயணம் செய்தபோது, வழிநெடுகிலும் கழனிகளில் நாற்று நடும் பெண்களின் பாட்டொலியும், பொன்னேர் பூட்டி நிற்கும் ஏர் மங்கலப் பாட்டொலியும், களங்களில் நெல்லைத் தூற்றும்போது பாடும் முகவைப் பாட்டொலியும் கேட்டுக்கொண்டே உழவர் வாழும் ஊர்களையும், வேத மந்திர ஒலிகள் கேட்கும் அந்தணர் வாழும் ஊர்களையும் கடந்து மூவரும் நடந்து சென்றனர் என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன. உழவர்களின் பாட்டொலிகளையும் அந்தணர்களின் வேதமந்திர ஒலிகளையும் இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறுவதை இங்கு காண்கிறோம்.

மதுரையில் வைகை ஆற்றைக் கடப்பதற்குக் குதிரை முக ஓடம், யானை முக ஓடம், சிங்க முக ஓடம் முதலிய பல வகை ஓடங்களில் ஆற்றைக் கடந்து அக்கரை செல்வதற்கு ஏறிப் பலரும் செல்லும் பல பெரிய துறைகள் இருந்தன எனவும் அத்துடன் சிறிய மரப்புணைகளும் ஆற்றைக் கடக்க உதவியாக இருந்தன என்றும் காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன. இந்தச் செய்திகள் மூலம் ஆற்றைக் கடப்பதற்கு அக்காலத்திய போக்குவரத்து வளர்ச்சி நிலையை அறிய முடிகிறது.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் அத்தகைய பெரிய ஓடங்களில் செல்லாமல் தனியாக ஒரு மரப்புணையில் ஏறி வைகையைக் கடந்து அதன் தென்கரைக்குச் சென்றதாக,

"பரிமுக அம்பியும் கரிமுக அம்பியும்
அரிமுக அம்பியும் அருந்துறை இயக்கும்
பெருந்துறை மருங்கில் பெயரா தாங்கண்
மாதவத் தாட்டியொடு மரப்புணை போகித்
தேமலர் நறும்பொழில் தென்கரை எய்தி"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

**மதுரை நகரம்**

மதுரை நகரின் செல்வச் செழிப்பையும் அங்கு வாழும் மக்களின் மகிழ்ச்சியையும் கோவலன் கண்டதாக ஊர் காண் காதை குறிப்பிடுகிறது.

"செவ்வி பார்க்கும் செழுங்குடிச் செல்வரொடு
வையம் காவலர் மகிழ்தரும் வீதியும்"

அந்நகரில், வளம்மிக்க குடிப்பிறந்த மக்கள் மட்டுமன்றி அரசரும் விரும்பும் காமக்கிழத்தியர் வாழும் வீதிகளும் இருந்தன.

"பண்ணும் கிளையும் பழித்த தீஞ்சொல்
எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்"

இனிமையான இசைப்பண்களையும் அவற்றின் திறங்களையும் மிஞ்சிய இன்சொல்லினர் என்று கூறும்படியாக உள்ள அறுபத்து நான்கு கலைகளிலும் வல்ல மகளிர் வாழும் இருபெரும் வீதிகளும்,

கம்மியரால் மிகுந்த தொழில் நுட்பத்துடன் திறமையாகச் செய்யப்பட்ட பல வகைப் பொருள்களும் கருவிகளும் ஆயுதங்களும் நிறைந்த கடைகளைக் கொண்ட அரசரும் விரும்பும் அங்காடி வீதிகளும்,

"வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்"

வயிரமணி வகைகள், மரகதமணி வகைகள், புருடராக மணி, நீலமணி, கோமேதகம், வைடூரியம் முதலிய பல வகை மணிகளும், வைரக்கற்களும் நிறைந்த நவரத்தின வீதிகளும்,

"வகைதெரி மாக்கள் தொகைபெற்று ஓங்கிப்
பகைதெறல் அறியாப் பயங்கெழு வீதியும்"

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் எனச் சாதி பிரித்துச் சிறந்து விளங்கும் இயல்பு கொண்ட, பொன்னின் வகைகளைத் தெளிவாகப் பிரித்து அறியும் ஆற்றல் கொண்ட பொன்வணிகர் நிறைந்த பொன் கடை வீதிகளும் நிறைந்திருந்தன.

> "சாத ரூபம் கிளிச்சிறை ஆடகம்
> சாம்பூ நதம்என ஓங்கிய கொள்கையின்
> பொலம்தெரி மாக்கள் கலங்களுர் ஒழித்தாங்கு
> இலங்குகொடி யெடுக்கும் நலங்கிளர் வீதியும்"

என்றெல்லாம் காப்பிய அடிகள் குறிப்பிட்டுக் கூறுகின்றன.

இன்னும் பல வகையான பட்டு, உரோமம், பஞ்சு நூல்களால் ஆன ஏராளமான துணிமணிகள் நிறைந்த துணிக்கடை வீதிகளும், பல வகைத் தானியங்களும் பயறு வகைகளும், வாசனைப் பொருள்களும் ஆன கூலங்கள் கூடை கூடையாய்க் குவித்து விற்பனையாகும் கூலவணிக வீதிகளும்,

மற்றும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலிய பல வேறு வகை மக்கள் வாழும் வீதிகளும் நிறைந்திருந்தன என்று காப்பியம் மிக விரிவாக எடுத்துக் கூறுவது சிறப்பாகும்.

> "நூலினும் மயிரினும் நுழைநூல் பட்டினும்
> பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
> நறுமடி செறிந்த அறுவை வீதியும்
> நிறைக்கோல் துலாத்தர் பறைக்கண் பராரையர்
>
> அம்பண வளவையர் எங்கணும் திரிதரக்
> கால மன்றியும் கருங்கறி மூடையொடு
> கூலம் குவித்த கூல வீதியும்
> பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
> அந்தியும் சதுக்கமும் ஆவண வீதியும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

> "நிலந்தரு திருவின் நிழல்வாய் நேமி
> கடம்பூண்டு உருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்
> கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
> வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
> பதியெழு அறியா பண்புமேம் பட்ட
> மதுரை மூதூர் மாநகர்"

என்று மதுரை மாநகரின் சிறப்புகளைப்பற்றி இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார்.

அடைக்கலக் காதையில் மாடல மறையோன் மதுரைப் புறநகரில் இருந்த அறப்பள்ளியில் கோவலனைச் சந்தித்தபோது அக்கோவலனுடைய பெருமைகள் பலவற்றையும் பேசி, அரசர்களுக்கு அடுத்த நிலையில் மதிக்கத் தக்க வணிகர் என்னும் கருத்தை “அரைசர் பின்னோர்” எனக் கூறுகிறார். இக்கருத்துகள், காப்பிய காலத்தில் சமுதாயத்தில் அரசர்களுக்கடுத்த நிலையில் வணிகர்கள் தகுதியும் புகழும் பெற்றிருந்தனர் என்பதை மேலும் தெளிவுபடுத்திக் காட்டுகின்றன.

ஆயர் குல மக்களைப்பற்றி இக்காதையில் ஒரு செய்தி வருகிறது.

“ ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பாடு இல்லை”

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

ஆநிரை காத்து, அவற்றைப் பராமரித்து, அவைகளால் பெறும் பலன்களான பால், தயிர், வெண்ணெய், நெய், மோர், சாணம், ரோமம், தோல் முதலியவைகளை மக்களுடைய நலனுக்காக அளிக்கும் ஆயர்குல மக்களின் சிறப்புச் சேவை பெருமைக்குரியது என்பது காப்பியம் தெரிவிக்கும் சிறந்த செய்தியாகும்.

மதுரைநகரின் கோட்டைச்சுவரின் சிறப்பான பாதுகாப்புப்பற்றியும், நுட்பமான தற்காப்பு நிலை ஏற்பாடுகள்பற்றியும் மிக விரிவாக இளங்கோவடிகள் எடுத்துக் கூறுகிறார்கள்.

“காவற்காடும் அகழியும், தானே வளைந்து அம்பெய்யும் விற்பொறியும், கரிய விரலையுடைய குரங்கு போலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் பொறியும், கல்லை உமிழ்கின்ற கவண்களும், காய்ந்து சூட்டுடன் சேர்ந்தார்மேல் இறைத்தலால் வருத்துகின்ற நெய்யையுடைய மிடாவும், செம்பு உலோகத்தை உருக்கிப் பகைவர்மேல் இறைக்கும் மிடாவும், இரும்பை உருகக் காய்ச்சி வீசும் உலைப்பொறியும்,

கற்கள் இட்டு வைக்கப்பட்டுள்ள கூடைகளும், தூண்டில் வடிவாக அமைக்கப்பட்ட கருவிகளும், கட்டு வைத்து அகழியை நீந்தி வந்து மதிலைப் பற்றுவாரைக் கோத்திழுக்கும் கருவிகளும், கழுக்கோல் போலக் கழுத்திற்பூட்டி முறுக்கும் சங்கிலியும், ஆண்டலைப்பறவை வடிவாகப் பண்ணிப் பறக்கவிடப் பகைவர் தலை உச்சியில் கொத்தி மூளையைக் குடிக்கும் பொறிகளும், அகழியினின்றும் ஏறினால் அவர்களைக் கீழே தள்ளிவிடும் இரும்பால் ஆன கவைக்கம்புகளும், கழுக்கோல்களும், அம்புக்கட்டுகளும், அம்பேவும் அறைகளும், பற்றாக்கைகள் (பற்றுக்குறடுகள் போல உள்ள கருவிகள்), தூக்கிப் போடும் விட்டங்களும் மதிலினைப் பற்றுவாரின் கைகளைத் துளைக்கும் ஊசிப் பொறிகளும், பகைவர்மேல் பாய்ந்து கண்ணைக் கொத்தும் மீன்கொத்தி போன்ற கிச்சிலிப் பொறிகளும், மதில் உச்சியில் ஏறினோர் உடல்களைக் கொம்பால் கிழிக்க இரும்பால் செய்து வைத்த பன்றிப் பொறிகளும், பகைவரை அடித்தற்கு மூங்கில் வடிவாகப் பண்ணிவைத்த பொறிகளும், கதவுக்கு வலிமையைக் கொடுக்கும் உள்வாசல் படியில் நிலத்திலே விழும்படி விடும் மரங்களும், கணைய மரமும், எறிகோல்களும், குந்தமும், ஈட்டிகளும், குருவித்தலைப் பொறிகளும் மற்றும் சதக்கென வெட்டித் தள்ளிவிடும் களிற்றுப்பொறி, பாம்புப்பொறி, கழுகுப்பொறி, புலிப்பொறி, அ[illegible]ப்பாம்பு சகடப்பொறி, தகர்ப்பொறி முதலிய பல வகைப் பொறிகளும் கொண்ட பாதுகாப்பு நிலைகள் நிறைந்த, கொடிகள் அசையும் கோட்டைச் சுவர்களைக் கொண்ட மதுரை மாநகரம் என்று இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறுகிறார்.

"மிளையும் கிடங்கும் வளைவில் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்
காய்பொன் உலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை அடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றுஎறி சிரலும் பன்றியும் பணையும்

எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாள்கொடி நுடங்கும்
வாயில்"

என்பன இளங்கோவடிகள் மிக அற்புதமாக விளக்கிக் கூறும் சிறந்த காப்பிய அடிகளாகும்.

ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கும் தற்காப்பிற்கும் கோட்டையும் அகழியும் கொண்ட அரண் மிகவும் அவசியமானதாகும். சமுதாயத்தில் அரசுகள் தோன்றி வலுவடைந்தபோது அவற்றின் தலைநகரங்களுக்கு அரண் அமைக்கப்படுவது என்பது பாதுகாப்பின் பகுதியாக இருந்துள்ளது.

" படை,குடி, கூழ்,அமைச்சு, நட்பு,அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்று வள்ளுவப்பெருமான் குறிப்பிட்டுள்ள அரசுக்குரிய சிறப்புகளுள் அரணும் ஒன்றாகும். அரண் என்பது பாதுகாப்பிற்கும் தற்காப்பிற்கும் அவசியமாகிறது. இன்னும் அரணைப்பற்றி ஒரு தனி அதிகாரமே வள்ளுவர் எழுதி யுள்ளது மேலும் அதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுவ தாகிறது.

உயரமும் அகலமும் உறுதியும் பகைவரால் அழிக்க முடியாத அருமை இந்நான்கையும் மிகுதியாக ஓர் அரண் என்பது கொண்டிருக்க வேண்டும் என்று வள்ளுவனார் அரணுக்கு நான்கு சிறப்புகளைக் கூறுகிறார்.

" உயர்வுஅகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"

என்று நூலோர் கூறுவதாக வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

மதுரையின் மதில் அரணின் சிறப்புகளை மிக விரிவாக இளங்கோவடிகள் எடுத்துக் கூறுகிறார். ஒரு வலுவான அரண் என்பது ஒரு வலுவான அரசுக்கு அவசியமானதாகும். உயர்வு, அகலம், திண்மை, அருமையுடன் மிகவும் சிறப்பான தற்காப்பு மற்றும் தாக்குதல் ஆயுதங்களையும், போர்க் கருவிகளையும் கொண்டிருந்தது மதுரையின் பாதுகாப்பு

அரண் என்பதையும் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இத்தகைய வலுவான அரண்கள் மனித முயற்சியால் உருவாக்கப்படுவனவாகும்.

ஒரு நாட்டின் பாதுகாப்பில் வெளிநாட்டுப் படையெடுப்புகளிலிருந்து பாதுகாப்புடன் உள்நாட்டுப் பாதுகாப்பும் ஒரு முக்கியமான அங்கமாகும். உள்நாட்டுப் பாதுகாப்பு என்பது, மக்களைச் சமூக விரோதக் குற்றவாளிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பதாகும்.

மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்விற்கும் மேம்பாட்டிற்கும் இத்தகைய பாதுகாப்பும் அமைதியும் அவசியமானவையாகும். சமூக விரோதக் குற்றங்களில் முக்கிய இடம் பெறுவன களவு, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, அபகரித்தல் முதலியவைகளாகும். களவு என்பதில் பொதுச் சொத்துகளைக் களவாடுவதும், தனியார் உடைமைகளைக் களவாடுவதும் சேருகின்றன.

மனிதனுடைய உழைப்பால், முயற்சியால் பொருளுற்பத்தியும் சொத்துகளும் என்று ஏற்பட்டனவோ அன்றுமுதல் அவைகளைத் தவறான, தீய வழிகளில் அபகரிப்பதைத் தடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. செல்வமும் சொத்துகளும் உருவானபோது, அவற்றைத் திருடுவது, களவாடுவது, கொள்ளையடிப்பது, அபகரிப்பது முதலிய செயல்களும் நிகழத் தொடங்கியிருப்பதை வரலாற்றில் காண்கிறோம். இவைபற்றியெல்லாம் நமது அரசியல் அறிவியல் இலக்கியங்களிலும் சாத்திரங்களிலும் விரிவாகக் காண்கிறோம்.

குற்றவியல், தண்டனை இயல், விசாரணை, சாட்சியம், ஆதாரங்கள் முதலியவைபற்றியெல்லாம், தொடர்ச்சியாக, அரசியல் துறையில் பல ஆய்வுகள் நடத்தப்பட்டு, பல சட்டங்களும் நெறிமுறைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் சில முக்கிய கருத்துகளையும், உளவியல் நுணுக்கங்களையும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இழிவான களவுத்தொழில் செய்யும் மக்களுடைய இயல்பையும், திறனையும் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள். சமுதாயத்தில் அக்காலத்திலும் களவு, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, அபகரித்தல், வஞ்சகச் செயல்கள் இருந்தன. காதல், கவறாடல், கள்ளுண்ணல், பொய்மொழிதல், ஈதல் மறுத்தல் முதலியவை பஞ்சமா பாதகங்கள் எனக் கருதப்பட்டிருக்கின்றன. எல்லாக் காலங்களிலும் களவு தொடர்பான குற்றங்கள் செய்பவர்களும் அவர்களிடமிருந்து மக்களைக் காப்பதற்கான காவலர் கடமைகளைப்பற்றியெல்லாம் பல வேறு சாத்திரங்களும், இலக்கியங்களும் சட்டங்களும் தண்டனை முறைகளும் நீதி நெறிமுறைகளும் வகுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

வஞ்சகப் பொற்கொல்லன், அரசனிடம் பொய் கூறி, கோள்மூட்டி, காவலரை அழைத்து வந்து கோவலனைக் காட்ட, "பார்வையில் கள்வன் போலக் காணப்படவில்லை" என்று காவலர்கள் கணித்த போது, அக்காவலர்களிடம் வஞ்சிப்பத்தன் கள்வர்களின் இலக்கணங்களைப்பற்றிக் கூறுவதாக உள்ள காப்பிய அடிகள்

" மந்திரம் தெய்வம் மருந்தே நிமித்தம்
தந்திரம் இடனே காலம் கருவியென்று
எட்டுடன் அன்றே இழுக்குடை மரபில்"

என்று எட்டு வகையான படைத்துணைகளைக் கள்வர்கள் கொண்டிருப்பதாகக் குறிப்பிடுகின்றன.

இங்கு கள்வர்களின் இயல்பு, திறமை, ஆற்றல், மந்திரம், தந்திரம், இடம், காலம், கருவி முதலியவைபற்றி மிக விரிவாகச் சில கதைச்சான்றுகளுடன் விளக்கிக் கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அதிலும் வஞ்சகக் கள்வனான வஞ்சிப்பத்தன் வாயிலாக அவைகளைப்பற்றி எடுத்துக் கூறுவது சிறந்த காப்பிய உத்தியாகும்.

ஆயர்பாடியில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருந்த போது ஓர் அருமையான காட்சியை இளங்கோவடிகள் காட்டுகிறார். கண்ணகி, புதுப்பானைகளில் சமையல் செய்து உணவு தயாரிக்கிறாள். கோவலன் சாப்பிடச் செல்லுமுன்

செய்ய வேண்டிய கை, கால், முகம் அலம்புதல் முதலிய கடன்களைச் செய்து முடித்து உணவு அருந்த முற்படுவதாகக் குறிப்பிடுகிறார்.

"கோளிப் பாகல் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பால் பயனொடு
கோல்வளை மாதே கொள்கென"

என்று ஆயர்குல மகளிர் கண்ணகியிடம் புதுப்பானைகளும் காய்கறி கனிகளும் அரிசியும் கொடுத்தனர். கண்ணகி அவைகளைச் சீராகச் சமைத்தாள். உணவு தயாரித்துப் பரிமாறினாள். இதைப்பற்றிக் கூறுமிடத்து இளங்கோ வடிகள், அரசர்க்கு அடுத்த குலத்தவர் வணிகர். அவர்கள் வேதமுறைகளை அனுசரித்துக் கடன்களைச் செய்து உணவு உண்ண முற்பட்டதாகக் கூறுகிறார்.

"அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்
உரிய எல்லாம் ஒருமுறை கழித்தாங்கு"

என்று குறிப்பிடுகிறார்.

கோப்பெரும் தேவியைச் சூழ்ந்து பணிப்பெண்கள் வருவதைக் குறிக்கும்போது, அவர்களுள் சிலர் கண்ணாடி ஏந்தி வந்தனர். சிலர் அணிகளை ஏந்தியும், சிலர் அழகிய கலன்களை ஏந்தியும், சிலர் நூலாடைகளையும் பட்டாடைகளையும் ஏந்தியும், சிலர் வெற்றிலைச் செம்பினை ஏந்தியும், சிலர் வண்ணமும் சுண்ணமும் கத்தூரியும் கலந்த சந்தனக் குழம்பும் ஏந்தியும், சிலர் தொடையல் மாலை, பிணையல், கவரி, தூபம் ஆகியவை ஏந்தியும், பலர் வாழ்த்துப் பாடியும் வந்தனர் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள். இவையெல்லாம் அன்று தமிழகமும் பாண்டிய நாடும் அடைந்திருந்த நாகரிக வளர்ச்சியையும் மனித மேம்பாடுகளையும் எடுத்துக் காட்டுகின்றன.

## மலைநாடுபற்றி

மலை வளத்தையும் மலைவாழ் மக்களின் செயல்பாடுகள்பற்றியும் அடிகளார் மிகவும் அழகாகக்

குறிப்பிடுகிறார். மலைவாழ் மக்கள் எழுப்பும் ஆடல், பாடல், செயற்கை மற்றும் இயற்கை ஓசைகளைப்பற்றிக் கூறுகிறார்.

“ குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்
தினைக்குறு வள்ளையும் புனத்தெழு விளியும்
நறவுக்கண் உடைத்த குறவர் ஓதையும்
கலிகெழு மீமிசைச் சேணோன் ஓதையும்
பயம்பில்வீழ் யானைப் பாக ரோதையும்
இயங்குபடை அரவமோடு யாங்கணும் ஒலிப்ப”

என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

மலைவாழ் மக்களின் பழக்கவழக்கங்கள், ஆடல் பாடல், வேலன் வழிபாடு, தினைப்புனங்களின் சிறப்பு முதலியவை பற்றிய விவரங்கள் இங்கு வெளிப்படுகின்றன.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எடுக்க, இமயத்தில் கல்லெடுக்கத் தனது படையுடன் வடக்கே செல்லக் காலத்தைக் கணிக்கும்படி நிமித்திகனிடம் கேட்கிறான். காலக்கணிதர் எழுந்து, உரிய காலத்தைக் கணித்து மன்னனிடம் எடுத்துக் கூறுகிறார்.

“ ஆறிரு மதியினும் காருக வடிப்பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து
வெந்திறல் வேந்தே வாழ்கநின் கொற்றம்
இருநில மருங்கின் மன்னர்எல் லாம்நின்
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை யாகென்று ஏத்த”

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

ஓர் ஆண்டின் பன்னிரண்டு மாதங்களிலும் கோள்கள் நிற்கும் நிலையை அறிந்து ஆராய்ந்து நன்கு பயின்று கணித நூலுக்குரிய ஐந்து உறுப்புகளின் (பஞ்சாங்கம்) இலக்கணங் களையும் வல்லவர் வாய்வழியாகக் கேட்டு முடித்த பெருங்கணிதன் தானே எழுந்து நின்று கூறினான் என்பது பொருளாகிறது. ஆறிரு மதி என்பது பன்னிரண்டு மாதங்களாகும். காருக அடி என்பது சூரிய சந்திரர்கள் இதர கிரகங்கள், நட்சத்திரங்களின் நிலை என்பதாகும். இந்தக்

கோள்கள் (கிரகங்கள்) ஒவ்வொன்றும், ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு திங்களிலும் எப்படி நிலை கொண்டிருக்கின்றன என்பதை, ஆய்வு செய்து அறிந்தோன் ஐந்து கேள்வியும் அறிந்தோனாகும்.

ஐந்து கேள்வி என்பது பஞ்சாங்கம் என்று வடமொழியில் கூறப்படுவதாகும். இன்று பஞ்சாங்கம் என்னும் சொல் தமிழிலும் நிலைபெற்றுவிட்டது. ஐந்து கேள்வி என்பது திதி, வாரம், நாள், யோகம், கரணம் என ஐந்து அங்கமாகும். இத்துடன் நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசம் என்னும் கோளின் தன்மையும் அதில் அடங்கும். காலக் கணிதர் சமுதாயத்தில் ஒரு முக்கிய அங்கமாக அன்று தமிழ்ச் சமுதாயத்திலும் பாரத சமுதாயத்திலும் இருந்தனர். கணிதத்தில் நமது நாடு சிறந்து விளங்கியிருந்தது. வானவியல், கோளியல், அவைகளின் இயக்கங்கள் முதலியவற்றைத் துல்லியமாகவும் விநாடி, நாழிகை, நாள், வாரம், திங்கள், திங்களின் வளர்பிறை, தேய்பிறை, அமாவாசை, பௌர்ணமி, ஆண்டு முதலியவைகளைச் சீராகவும், கோள்களின் நிலைகளையும் அட்சர சுத்தியாகவும் கணிப்பதே காலக்கணிதமாகும்.

பிற்காலத்தில் அந்நியப் படையெடுப்புகளாலும், அந்நிய ஆட்சிகளின் தாக்குதல்களாலும் நமது நாட்டின் கலாச்சாரத்தில் சேதங்களும் ஊனங்களும் ஏற்பட்டு நமது நாட்டுக் காலக் கணிதல் அறிவியல் புறக்கணிக்கப்பட்டும், மூட நம்பிக்கை என இழிவுபடுத்தப்பட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அதற்கு மீண்டும் ஒரு புது வாழ்வு நிலைக்கப் பல அறிஞர்களும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி வெற்றி பெறுவதாக.

இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் காலக் கணிதர்களுக்கு முக்கிய இடம் கொடுத்து, அவர்களுடைய அரும்பணிகளையும், சமுதாயத்திலும் அரசவையிலும் அவர்களுக்கிருந்த அந்தஸ்தையும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

சேர மன்னன் வடபுலப் படையெடுப்பில் நால்வகைப் படைகளுடன் செல்கிறான்.

"இரவிடங் கெடுத்த நிரைமணி விளக்கின்
விரவுக்கொடி யடுக்கத்து நிரையத் தானையோடு
ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
வெம்பரி யானை வேந்தற்கு ஓங்கிய
கரும வினைஞரும் கணக்கியல் வினைஞரும்
தரும வினைஞரும் தந்திர வினைஞரும்
மண்டிணி ஞாலம் ஆள்வோன் வாழ்கென"

என்று காப்பியக் கவிதை அடிகள் குறிப்பிடுகின்றன.

மன்னன் தனது பெரும்படையுடன் இரவின் இருளை ஓட்டும் மணி விளக்குகளின் ஒளியில் கொடிகள் ஆட, அமைச்சர் முதலான ஐம்பெருங்குழுவினரும் கரணத்தியலவர் முதலான எண்பேராயத்தினரும் வேகமாகச் செல்லும் யானைகளையுடைய மன்னனுக்கு மிகவும் அவசியமான சான்றோர்களும், காலத்தைக் கணிக்கும் கணிதரும், அரசியல் அறம் கூறுவோரும் தந்திரத் தொழிலோரும் மன்னன் நீடூழி வாழ்க என வாழ்த்திக்கொண்டு உடன் சென்றனர் என்பது பொருளாகும்.

இங்கு, பொதுவாக, அரசர்கள் படையெடுத்துச் செல்லும்போது எவ்வாறு செல்கிறார்கள் என்னும் பொதுச் செய்தியை நம்மால் அறியமுடிகிறது. ஐம்பெரும் குழுவினர், எண்பேராயத்தினர், சான்றோர், காலக்கணிதர், அரசியல் அறிஞர்கள், தந்திரத் தொழிலோர் முதலியோரும் அரசனுடன் நால்வகைப் படைகளுடன் சேர்ந்து செல்வது என்பது போர் முறையின் பகுதியாக இருப்பதை அறிய முடிகிறது.

சேரன் செங்குட்டுவன் பல போர்களை நடத்தி வெற்றி பெற்றவன். ஆனால், இந்த வடபுலப் படையெடுப்பு அந்நாடுகளைக் கைப்பற்றும் நோக்கத்துடன் எடுத்த படையெடுப்பன்று. கண்ணகி சிலைக்குக் கல்லெடுக்கப் புறப்பட்ட வடபயணமேயாகும். ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் ஆட்சியுடனும் ஆட்சி நிர்வாகத்துடனும் இணைந்த ஆட்சி அமைப்பின் பகுதியாகும் என்பதை ஏற்கனவே பார்த்தோம்.

வஞ்சிக்காண்டத்தின் முடிவுரையாக வடவேங்கடம் தென்குமரி ஆயிடைக் கிடந்த தமிழ்கூறும் நல்லுலகத்தை ஆளுகின்ற முடியுடை வேந்தர்களாகிய சோழர், பாண்டியர், சேரர் ஆகிய மூன்று மன்னர்களுள் வைத்து மேற்றிசைக் கண்ணதாகிய சேரநாட்டினை ஆளும் வெற்றி குறையாத மாலையாரம் அணிந்த மார்பினையுடைய சேரர் குலத்துப் பிறந்த வேந்தருடைய அறப்பண்பாடும் மறச்சிறப்பும் இவற்றில் அவர்களுக்குரிய ஆற்றலும், அச்சேரருடைய பழைய பல வெற்றிகளையுடைய பழைய நகரமாகிய வஞ்சி மாநகரத்தின் தலைமைப்பண்பு மேம்பட்டுத் திகழ்தலும் அம்மாநகரின் திருவிழாக்கள் நிறைந்த சிறப்புகளும், அவர் வாழுகின்ற நாட்டின்கண் வழிவழியாக வாழ்ந்து வருகின்ற நற்குடிமக்களின் செல்வச் சிறப்புகளும், கெடாத கேடில்லாத இன்பங்களும், உணவுப்பொருள்களின் பெருக்கமும் ஆகிய இவற்றுடன் பாடலும் ஆடலும், தம்முள் விரவியுள்ள வேறுபாடுகளையுடைய புறத்திணைக்குரிய துறைகளுக்கேற்ப அறத்தோடு கூடிய, போர்களைச் செய்து முடித்த, வாள் வெற்றி வாய்ந்த படைகளுடன் சென்று, பொங்குகின்ற பெரிய பரப்பினையுடைய கடலில் வருகின்ற பகைவரோடு போர் செய்து, அவர்களைப் புறங்கொடுத்து ஓடும்படி செய்து, பின்னரும் கங்கையாற்றின் கரைவழியாக இமய மலைவரை போய் மேல் சென்று வெற்றி கண்ட செங்குட்டுவன் என்னும் சிறந்த மன்னனின் வெற்றிகளைக் கூறும் இந்த வஞ்சிக் காண்டம் முற்றுப்பெறுகிறது என்பதாகும்.

இதில் சேரநாட்டின் சிறப்புகளும் செழிப்பும், அந்த நாட்டின் செல்வச் சிறப்பு, உணவுப்பொருள்களின் பெருக்கம், ஆடல் பாடல், திருவிழாக்கள், மக்களின் மகிழ்ச்சி, அவர்களின் வீரம், வெற்றிகள், மன்னனின் சிறப்புகள் ஆகியவற்றை மிகவும் சிறப்பாகவும் காவியச் சுவையுடனும் விளக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
குடதிசை யாளும் கொற்றம் குன்றா
ஆர மார்பின் சேரர்குலத்து தித்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்

பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா இன்பத் தவருறை நாட்டுக்
குடியின் செல்வமும் கூழின் பெருக்கமும்
வரியும் குரவையும் விரவிய கொள்கையின்
புறத்துறை மருங்கின் அறத்தொடு பொருந்திய
மறத்துறை முடித்த வாய்வாள் தானையொடு
பொங்கிவரும் பரப்பில் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப் பேர்யாற் றுக்கரை போகிய
செங்குட் டுவனோடு ஒருபரிசு நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்டமுற் றிற்று"

என்பது காப்பியத்தின் கவிதை அடிகளாகும்.

தமிழ் கூறும் நல்லுலகத்தில் மூன்று பெரு நிலமன்னர்கள் நல்லாட்சி நடத்தியதும், இந்தப் பெரு நிலங்களின் வளம், உற்பத்திப் பெருக்கம், உணவுப்பொருள் உற்பத்தியின் பெருக்கம், செல்வச் செழிப்பு, மக்களின் பெருமுயற்சிகளும் நல்வாழ்வும், ஆடல் பாடல், கலை இலக்கியம் கூத்து திருவிழாக்கள் முதலியனவற்றால் மக்களுடைய மகிழ்ச்சி, காவலர் (மன்னர்)களின் நீதியான ஆட்சி நிர்வாகம், நாட்டின் பாதுகாப்பு, படைபலம், அறவழியில் நின்ற ஆட்சிமுறை, வீரம், நாட்டின் தற்காப்பு முதலிய பலதுறை வளர்ச்சி நிலைமைகளை, மக்களின் வாழ்க்கை மேம்பாடுகளைப்பற்றிச் சிலப்பதிகாரப் பேரிலக்கியத்தின் மூலம் நாம் நன்கு அறிய முடிகிறது.

### ஆழ்வார்களின் பாசுரங்களில் பெரியாழ்வார்

" நாடும் நகரமும் நன்கறிய
நமோ நாராயணா வென்று
பாடும் மனமுடைப் பத்தர்"

என்று பெரியாழ்வார் நாட்டையும் நகரத்தையும் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

தனி மனிதனின் செழுமையான வாழ்க்கை அமைப்பைக் குறித்து, **"நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும், அத்தாணிச் சேவகமும் கையடைக் காயும், கழுத்துக்குப் பூணும், காதுக்குக் குண்டலமும் மெய்யிட நல்லதோர்**

சாந்தமும் தந்தென்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல" என்று, நெய்யும் பாலும் சேர்ந்த நல்ல உணவு, உடை, ஆடை ஆபரணங்கள், வேலை, கூலி, வருவாய் முதலியன ஒவ்வொருவருக்கும் கிடைக்கப் பட்டர்பிரான் பல்லாண்டு பாடுகிறார்.

திருக்கோட்டியூரைப்பற்றி வண்ணமாடங்கள் சூழ்திருக்கோட்டியூர் என்று குறிப்பிடுகிறார். முத்துமணி, வயிரம், நன்பொன், வெள்ளித்தளை, பவளம் ஆகியவற்றின் சிறப்புகளைப்பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

மாணிக்கங்கட்டி, வயிரம் இடைகட்டி ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறுதொட்டில், சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும் அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும் அழகிய ஐம்படையும், ஆரமும், ஓதக்கடலின் ஒளிமுத்தின் ஆரமும், சாதிப் பவளமும் சந்தச் சரிவளையும் என்றெல்லாம் அக்கால அணிகலன்களைப் பற்றியெல்லாம் விவரித்துக் கூறுகிறார்.

வைத்த நெய்யும், காய்ந்த பாலும், வடிதயிரும், நறு வெண்ணெயும் என்றும் அப்பம் கலந்த சிற்றுண்டி, அக்காரம் பாலில் கலந்து சொப்பட நான் சுட்டு வைத்தேன் என்றும், கறந்த நற்பாலும், தயிரும் கடைந்து உறிமேல் வைத்த வெண்ணெய் என்றும்,

"பாலைக் கறந்து அடுப்பேற வைத்துப் பல்வளையாள் என்மகள் இருப்ப" என்றும், "செந்நெல்லரிசி சிறுபருப்புச் செய்த அக்காரம் நறுநெய் பாலால் பன்னிரண்டு திருவோணம் அட்டேன்" என்றும், "கன்னல் இலட்டுவத்தோடு சீடை, கார் எள்ளின் உண்டை கலத்தில் இட்டு" என்றும், "அட்டுக்குவி சோற்றுப்பருப்பதமும் தயிர் வாவியும் நெய்யளறும் அடங்கப் பொட்டத்துற்றி" என்றும் மணம் நிறைந்த உணவுச் சிறப்புகளைப்பற்றி நாக்கில் எச்சிலூறப் பாடுகிறார்.

"காறை பூணும், கண்ணாடி காணும் தன்கையில் வளை குலுக்கும், கூறையுடுக்கும், அயர்க்கும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்" என்று தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த ஆயர் குலப்பெண்ணைப்பற்றிக் ...கிறார்.

கூட்டமாகக் கூடி வந்து பெண்ணைக் கொண்டு செல்லுதலும், நாடும் நகரமும் ஊரும் அறியக் கல்யாணம் செய்துகொண்டு செல்வதுமான சமுதாயப் பழக்கங்களைப் பற்றி ஆழ்வார்,

“வேடர் மறக்குலம் போலே
வேண்டிற்றுச் செய்துஎன் மகளைக்
கூடிய கூட்டமே யாகக்
கொண்டுகுடி வாழுங் கொல்லோ?
நாடும் நகரும் அறிய
நல்லதோர் கண்ணாலம் செய்து
சாடிறப் பாய்ந்த பெருமான்
தக்கவா கைப்பற்றுங் கொல்லோ?”

என்று பாடுகிறார்.

படைக்கலன்களையும் கருவிகளையும்பற்றி அவை களைத் திருமாலின் சின்னங்களாக,

“உழுவதோர் படையும் உலக்கையும் வில்லும்
ஒண்சுட ராழியும் சங்கும்
மழுவொடு வாளும் படைக்கல முடைய
மால்புரு டோத்தமன்”

என்று குறிப்பிட்டு அழகாகப் பாடுகிறார்.

## கோதை

கோவிந்தனைப் பாடினால் நமக்குக் கிடைக்கும் சன்மானம், நலவாழ்வு,

“நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே, தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பால்சோறு
மூட நெய்பெய்து முழங்கை வழிவார
கூடி யிருந்து குளிர்ந்தேலோ”

என்று குறிப்பிடுகிறார்.

பசுக்களும் அவை தரும் பாலும், பாலிலிருந்து கிடைக்கும் தயிரும் வெண்ணெயும் நெய்யும் மோரும் மக்களின் வாழ்க்கையின் பகுதியாக இருப்பதை ஆழ்வார்கள் கண்ணனையும் ஆயர்பாடியையும் நினைத்து மகிழ்ந்து பக்திப் பெ[illegible]ன் பாடுகிறார்கள்.

ஆயர்பாடிப் பெண்கள் தயிர் கடையும்போது தங்கள் கைகளில் அணிந்துள்ள அழகிய வளையல்கள் கலகலவென ஓசை ஏற்படும்படியாக இருந்ததைக் குறிப்பிட்டு,

**" காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து**
**வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்**
**ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையே"**

என்று பட்டர்பிரான் கோதை பாடுகிறார்.

நல்ல காய்ப்பருவத்திலுள்ள நெல்லை எடுத்து, அதை அரிசியாக்கி, அதனுடன் கரும்புச்சாற்றினைக் கலந்து, அத்துடன் கட்டியாக உள்ள அரிசியை அவலாக்கி அதனையும் கலந்தால் மிக்க ருசியுள்ள ஒரு பண்டமாகிறது. அத்தகைய படையலைப் படைத்து மறையவர்களுடைய மந்திரத்தால் உன்னை வணங்குகிறேன் என்று கண்ணனை நோக்கிக் கோதை நாச்சியார்

**" காயுடை நெல்லொடு கரும்பமைத்துக்**
**கட்டி யரிசி அவலமைத்து**
**வாயுடை மறையவர் மந்திரத்தால்**
**மன்மத னேஉன்னை வணங்குகின்றேன்"**

என்று திருமொழிப் பாடல் ஒன்றில் குறிப்பிடுகிறார்.

### திருமங்கையாழ்வார்

வைணவத் திருத்தலங்களுள் பிரசித்தி பெற்ற ஒன்று திருவல்லிக்கேணியாகும். இன்று அந்தத் திருவல்லிக்கேணி, தமிழகத்தின் தலைநகரமான சிங்காரச் சென்னையின் ஒரு பகுதியாக உள்ளது. சென்னைக்குச் சிறப்பளிப்பது திருவல்லிக்கேணி, திருமயிலை (மயிலாப்பூர்) ஆகியனவாகும்.

திருவல்லிக்கேணி பொழில்களும் வாவிகளும் உயர்ந்த மதில்களும், மாட மாளிகைகளும் நிறைந்த நகரமாக விளங்கியது. தொண்டை மண்டலத்தில் உள்ள இந்த திவ்ய தேசத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது திருமங்கையாழ்வார்,

**" மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்**
**மாடமா ளிகையும்மண் டபமும்**
**தென்னைதொண் டையர்கோன் செய்தநன் மயிலைத்**
**திருவல்லிக் கேணிநின் றானை"**

என்று சிறப்பாகப் பாடுகிறார்.

காஞ்சி மாநகரம், பாரதத்தின் பழம்பெரும் நகரங்களுள் ஒன்றாகும். பாடலிபுத்திரம், நாளாந்தா, உஜ்ஜைனி, தட்சசீலம், மதுரை ஆகியவைகளுடன் காஞ்சி மாநகரம் புகழ் பெற்ற பழம் பெரும் நகரமாகும். காஞ்சியில் சைவமும் வைணவமும், புத்தமும் சமணமும் தழைத்தோங்கியிருக்கின்றன. கலைகளும் வேதங்களும் நீதி நூல்களும் அவைகளின் விளக்க நூல்களும் பொருள் நூல்களும் அவை படித்து விளக்கும் சான்றோர்களும் நிறைந்த நகரமாக விளங்கியது. அத்தகைய புகழ்பெற்ற காஞ்சி மாநகரின் ஒரு பகுதி அட்டபுயகரம். காஞ்சியிலும் அதைச் சுற்றிலும் உள்ள பன்னிரண்டு திவ்ய தேசங்கள் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பட்டவை. அத்துடன் காஞ்சிக்கு அருகில் சற்றுத் தூரத்தில் உள்ள முக்கியமான பல பெரிய பெருமாள் கோயில்களும் பாடல் பெற்ற பிரபலமான கோயில்களாகும்.

இத்தனை பிரபலமான, புகழ்பெற்ற காஞ்சி மாநகரத்தின், சிறப்புகள்பற்றித் திருமங்கையாழ்வார் மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளார்.

**“ கலைகளும் வேதமும் நீதிநூலும்**
**கற்பமும் சொற்பொருள் தானும்மற்றை**
**நிலைகளும் வானவர்க் கும்பிறர்க்கும்**
**நீர்மையி னால்அருள் செய்துநீண்ட**
**மலைகளும் மாமணி யும்மலர்மேல்**
**மங்கையும் சங்கமும் தங்குகின்ற**
**அலைகடல் போன்றிவர் ஆர்கொல்என்ன**
**அட்ட புயகரத் தேன்என்றாரே”**

என்று அட்டபுயகரத்தானை நினைந்து பாடுகிறார்.

நமது பாரத பூமியின் சாத்திரங்களிலும் இலக்கியங்களிலும் ஏழு இசைகள், ஆறு அங்கங்கள், ஐந்து வேள்விகள், நான்கு மறைகள், முத்தீ, இரு பிறவி, ஒரு குறிக்கோள்பற்றிய பல குறிப்புகளும் விளக்கங்களும் காணப்படுகின்றன. இவையெல்லாம் நமது நாட்டு மக்களின் அறிவுத்துறை வளர்ச்சியின் உச்சங்களாகும்.

பெரிய திருமொழியில் திருக்கோவிலூர்பற்றிய பாடலில் திருமங்கையாழ்வார் மிகவும் சிறப்பாக,

"கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபங்கொண் டமரர்தொழப் பணங்கொள் பாம்பில்
சந்தணிமென் முலைமலராள் தரணி மங்கை
தாம்இருவர் அடிவருடும் தன்மை யானை
வந்தனைசெய்து இசைஏழு ஆறங்கம் ஐந்து
வளர்வேள்வி, நான்மறைகள் மூன்று தீயும்
சிந்தனைசெய் திருப்பொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே"

என்று மனமுருகப் பாடுகிறார்.

சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம் கட்டுரைக் காதையில் பராசரன் என்னும் வலவைப் பார்ப்பானை (அறிவில் வல்ல பராசரன் என்னும் அந்தணனை)ப்பற்றிக் கூறுகையில்

"வலவைப் பார்ப்பான் பராசரன் என்போன்
குலவுவேல் சேரன் கொடைத்திறம் கேட்டு
வண்டமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்த
திண்திறல் நெடுவேல் சேரலற் காண்கெனக்
காடும் நாடும் ஊரும் போகி
நீடுநிலை மலயம் பிற்படச் சென்றாங்கு
ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரும் வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர் பெறுமுறை வகுக்க"

என்று இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார்.

இங்கு ஏற்கனவே குறிப்பிட்ட ஒரு குறிக்கோள், இரு பிறப்பு, முத்தீ, நான்மறை, ஐம்பெரும் வேள்விகள், அறுதொழில் அந்தணர், இசை ஏழு என்னும் கருத்தியல் வைணவத் தமிழகத்தில் நிலை பெற்றிருந்ததைச் சிலப்பதிகார மும் திவ்யப்பிரபந்தமும் எடுத்துக்காட்டியிருப்பதைக் காண்கிறோம்.

திருநாங்கூரின் வளம், சிறப்பு வளர்ச்சியடைந்த மக்களின் கல்வி, அறிவுத்துறை வளர்ச்சி முதலிய அனைத்துச் சிறப்புகளையும் திருமங்கையாழ்வார் தம் பல பாட்டல்களிலும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேதர்
ஐவேள்வி, ஆறங்கர், ஏழினிசையோர்
மறையோர் வணங்கப் புகழ்எய்தும் நாங்கூர்"

என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

மறையவர்கள் (வேதியர்கள் - அந்தணர்கள்) முத்தீ, நான்கு வேதம், ஐந்து வேள்வி, ஆறு அங்கம், ஏழின் இசை ஆகியவற்றை முறையாக முழுமையாக வளர்க்க வேண்டும் என்பது நமது பாரத புண்ணிய பூமியின் சீரிய பண்பாட்டு நெறிமுறையாகும். இந்நெறிமுறைகள்பற்றி ஆழ்வார் பாசுரங்களில் பல இடங்களிலும் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கடமைகளைப்பற்றி இளங்கோவடிகளாரும் வலியுறுத்திக் காட்டுவதை ஏற்கனவே கண்டோம். சேரநாட்டின் சிறப்பைக் கேள்வியுற்று அங்குச் சென்ற பராசரன் என்னும் மறையோன் அங்கிருந்த அந்தணர்கள் தம்மின் சீரான நெறிமுறைகளில் குறைகள் கண்டு அவர்களிடம் வாதாடி பார்ப்பன வாகை சூடி அவர்களைத் திருத்தினான் என்னும் கருத்துப்படக் காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

அவ்வாறு பராசரன் சேர நாட்டில்,

"பார்ப்பன வாகை சூடி ஏற்புற
நன்கலம் கொண்டு தன்பதிப் பெயர்வோன்
செங்கோல் தென்னன் திருந்துதொழில் மறையவர்
தங்கால் என்பது ஊரே"

என்று காப்பியத்தின் செய்யுள் அடிகள் குறிப்பிடுகின்றன.

பராசரன் சேர நாட்டில் பரிசில்களைப் பெற்றுத் தமது ஊருக்குத் திரும்பும்போது செங்கோன்மை மிக்க பாண்டிய நாட்டில் திருந்திய முறையில் (சீரான முறையில்) தொழில் செய்துகொண்டிருந்த மறையவர்கள் வாழும் திருத்தங்கல் என்னும் ஊருக்கு வந்தார் என்றும், அங்கு விளையாடிக் கொண்டிருந்த பிராமணச் சிறுவர்களுள் ஒருவன், பராசரனுக்கு இணையாக வேதங்களை ஓதினான் என்றும், அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பராசரன், தான் சேரனிடம் பெற்று வந்த பரிசில் பொருள்களை அப்பிராமணச்

சிறுவனுக்குக் கொடுத்துவிட்டான் என்றும் சிலப்பதிகாரச் செய்தி கூறுகிறது. இங்கு பாண்டிய நாட்டில் மறையவர்கள் திருந்திய முறையில் சீர்படத் தங்கள் தொழில்களைச் செய்து வந்ததை இளங்கோவடிகள் குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளவேண்டியதாகும்.

பாரதி தமது பாஞ்சாலி சபதத்தில் "சிந்தையில் அறமுண்டாம் - எனிற் சேர்ந்திடும் கலிசெயும் மறமும் உண்டாம்" என்று குறிப்பிடும் அடிகளுக்குப் பொருள் விளக்கம் கூறும்போது, "ஒரு சங்கத்தின் - ஒரு ஜாதியின் - ஒரு தேசத்தின் - அறிவு மழுங்காதிருக்கும்வரை அதற்கு நாசமேற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாக மறை நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால், மற்றக் குலத்தவர்களும் நெறி தவறியிருக்க மாட்டார்கள்; மகாபாரதப் போர் நடந்திருக்காது. பாரத தேசத்தில் பெரியதோர் சத்திரிய நாசமும் கலியும் வந்திருக்கமாட்டா. ஒரு தேசத்தில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத்தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகளென மேலே குறித்திருப்பதை விளக்கும் பொருட்டு மகாபாரதப் போர் நடக்கும் முன்பாகவே முதற்படப் பாவம் பிராமணருக்குள் புகுந்ததென்பதை நூல் தெரிவிக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

இது ஒரு முக்கியமான - மிக முக்கியமான - கருத்தாகும். இக்கருத்து மிகவும் ஆழ்ந்து பரிசீலிக்கத்தக்கதாகும். இன்று அறிவுத்துறை என்பது நமது நாட்டில் பரவலாகியிருக்கிறது. யாரும் இது தங்களுக்கே உரியது என்று சொந்தம் பாராட்ட முடியாது. எனவே, அந்த அறிவுத்துறையே சமுதாயத்தின் சீரான வளர்ச்சிக்கும் செம்மையான நிலை நிற்பிற்கும் காரணமாகும் என்பதைச் சிலப்பதிகாரக் காப்பியத்திலும், திவ்யப்பிரபந்தப் பாசுரங்களிலும், பாரதியின் சிந்தனையிலும் வெளிப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதில் நமது பாரத தேசத்தின் சீரிய பண்பாட்டின் தொடர்ச்சியைக் காணலாம்.

திருமங்கையாழ்வாரின் பாசுரக் குறிப்புகளை மேலும் காணலாம்.

"எண்ணில்மிகு பெருஞ்செல்வத் தெழில்விளங்கு
மறையும்
ஏழிசையும் வேள்விகளும் இயன்றபெருங்
குணத்தோர்
மண்ணில்மிகு மறையவர்கள் மலிவெய்தும்
நாங்கூர்"

என்று பாடுகிறார். இன்னும். திருநாங்கூரை மையமாக வைத்துத் தமிழகத்தின் செழிப்பையும் செல்வமிகுதியையும், வளத்தையும், வண்ண மாடங்களையும் இசை மற்றும் ஆடல் பாடல்களையும் குறித்து மிக விரிவாக நெஞ்சுருகப் பாடுகிறார்.

"உண்மைமிகு மறையொடுநற் கலைகள்நிறை பொறைகள்
உதவுகொடை யென்றிவற்றின் ஒழிவில்லாப் பெரிய
வண்மைமிகு மறையவர்கள் மலிவெய்தும் நாங்கூர்"

என்றும்,

"மாறாத மலர்க்கமலம் செங்கழுநீர் ததும்பி
மதுவெள்ளம் ஒழுகவய லுழவர்மடை யடைப்ப
மாறாத பெருஞ்செல்வம் வளருமணி நாங்கூர்

என்றும்,

"திருமடந்தை, மண்மடந்தை யிருபாலும் திகழத்
தீவினைகள் போயகல அடியவர்கட் கென்றும்
அருள்நடந்துஇவ் வேழுலகத் தவர்பணிய வானோர்
அமர்ந்தேத்த இருந்தவிடம் பெரும்புகழ்வே தியர்வாழ்
.........................................நாங்கூர்"

என்றும்,

"என்றுமிகு பெருஞ்செல்வத் தெழில்விளங்கு மறையோர்
ஏழிசையும் கேள்விகளும் இயன்றபெருங் குணத்தோர்
அன்றுலகம் படைத்தவனே யனையவர்கள் நாங்கூர்"

என்றெல்லாம் ஆழ்வார் பாடுகிறார். இப்பாடல்களில் மனித முயற்சிகள் பாராட்டப்படுவதையும், வாழ்க்கை மேம்பாடுகள் வலியுறுத்தப்படுவதையும், ஆழ்வார்களின் உயர்ந்த மனிதாபிமானத்தையும் காணலாம்.

இன்னும் கடல்மல்லைத் தலைவனைப்பற்றி, வேதங்கள் நான்கையும் வேள்விகள் ஐந்தையும் அங்கங்கள் ஆறும் கண்டவன் என்றும், கடல்மல்லையின் செழிப்பைப்பற்றிக் கூறும்போது, "**செழுநீர் மலர்க்கமலம் திரையுந்து வன்பகட்டால் உழுநீர் வயலுழவர் உழப்பின்முன் பிழைத்தெழுந்த கழுநீர் கடிகமழும் கடல்மல்லை**" என்றும் ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

இன்னும் திருக்கச்சி (காஞ்சி)யின் மணிமாடங்களின் சிறப்புகள்பற்றியும், திருக்கோவிலூரின் வளத்தைப்பற்றியும், துஞ்சா நீர்வளம் சுரக்கும் பெண்ணையாற்றின் செழுமையைப்பற்றியும், படை மன்னவன் பல்லவர் கோன் பணிந்த செம்பொன் மணிமாடங்கள் சூழ்ந்த தில்லைத் திருச்சித்திரக்கூடம்பற்றியும் மற்றும் பொது வாழ்வின் பொது நெறியைப்பற்றியும் பக்தி நெறியைப்பற்றியும் ஆழ்வார் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

மக்களின் பெருமுயற்சியினால் தில்லை நகர் பெரும் சிறப்புகளைப் பெற்றிருக்கிறது; உலகளாவிய புகழைப் பெற்றிருக்கிறது. அதுபற்றியெல்லாம் ஆழ்வார்கள் மிகவும் அற்புதமாகப் பாடுகிறார்கள்.

சீராம விண்ணகரம் என்னும் சீர்காழி நகரின் கீர்த்தி, அதன் நெய்தல் நிலச் சிறப்புகள் ஆகியவற்றை இணைத்து அங்கு அருமறையோர் செம்மை ஓதும் வேதங்கள், நடத்தும் வேள்விகள் மற்றும் அங்கங்கள் இவைபற்றியெல்லாம் ஆழ்வார் மீண்டும் சிறப்புற எடுத்துக்கூறுவதைக் காண்கிறோம்.

திருவாலியைப்பற்றிப் பாடும்போது சந்தி, வேள்வி, சடங்கு, நான்மறை ஓதி, ஓதுவித்து ஆதியாய் வரும் அந்தணாளர் அறா அணி ஆலியம்மானே" என்று அழகாகக் குறிப்பிடுகிறார்.

திருநாங்கூர் வட்டாரத்தின் சிறப்புகள், செழிப்பு, மக்களுடைய நல்வாழ்வுபற்றியும் மறையோர்களின் தனிச் சிறப்புகள்பற்றியும், திருமங்கையாழ்வார் மிக விரிவாகப் பாடுகிறார். அங்கு வாழும் மறையோர்களைப்பற்றிச்

சிறப்புடை மறையோர், திடமொழி மறையோர், திசைமுகன் அனையோர், செல்வ நான்மறையோர், செஞ்சொல் நான்மறையோர், தென்திசைத் திலதம் அனையவர் தெளிந்த நான்மறையோர் என்றெல்லாம் பெருமைப்படுத்திப் பாடுகிறார். அதன் மூலம் அந்தப் பகுதி கல்வியும் செல்வமும் இணைந்து சிறப்பாக இருப்பது காணப்படுகிறது.

நாங்கூர் வட்டாரம் சோழ நாட்டின் புகார் நகரப் பகுதியைச் சேர்ந்த செழிப்புமிக்க 'தூங்கா விளையுள் நல்நாடு' என்று சிலப்பதிகாரச் செய்யுள் குறிப்பிடும்படியாக மிக்க விளைவுள்ள நாடாகும். மறைநூல் அறிவின்மிக்க, வல்லவனான மறையோன் பராசரனும் அப்பகுதியைச் சேர்ந்தவனேயாகும்.

திருவெள்ளியங்குடியைப்பற்றி அதன் வளம், செழுமை, நீர்வளம், மண்வளம், நெல், மணி, வாழை மற்றும் இதர கனிகள், கரும்பு ஆகியவைகளின் பெருக்கம், மக்களின் நல்வாழ்வு மகிழ்ச்சி இசை நாடகம் முதலியவற்றின் சிறப்புகளைப்பற்றி விரிவாகப் பாடுகிறார்.

இன்னும் திருப்புள்ளம் பூதங்குடி, திருப்பேர் நகர், திருநறையூர், திருச்சேறை, திருவழுந்தூர், திருக்கண்ணங்குடி, திருவல்லவாழ் மற்றும் திருக்கோட்டியூர் முதலிய பல திவ்ய தேசங்களின் சிறப்பு, செழிப்பு, கல்வி, செல்வம், மறையோர் களின் சீரான பணி முதலியவைகளைப்பற்றியெல்லாம் திருமங்கையாழ்வார் சிறப்பாகப் பாடுகிறார்.

### நம்மாழ்வார்

நம்மாழ்வார் தனிச்சிறப்புமிக்க ஆழ்வாராவார். அவர் ஆழ்வாராகவும் ஆச்சாரியாராகவும் வைணவர்களால் போற்றப்படுகிறார். நம்மாழ்வார் பாடியுள்ள திருவாய் மொழிப்பாசுரங்கள் வேதங்களின் சாரமாகும். அவருடைய பாசுரங்கள் மிக உயர்ந்த தத்துவஞானக் கருத்துகளைக் கொண்டனவாகும். அவைகளில் இப்பேருலகில் உள்ள ஆத்மாக்கள் அனைத்தும் கண்ணனே, கண்ணன் வடிவமே என்னும் கருத்தை மிகச்சிறந்த பாடல் அடிகளில் ஆழ்வார் குறிப்பிடுகிறார். "புகழும்நல் ஒருவன் என்கோ" என்று

தொடங்கும் பாசுரத்தில் இயற்கைச் சக்திகள் அனைத்தும் இயற்கையின் வடிவங்கள், அனைத்தும் அவன் வடிவம் என்று குறிப்பிடுவதுடன் மனிதன் தன்னுடைய முயற்சிகள் மூலம், தன்னுடைய கடும் உழைப்பின்மூலம் உருவாக்கியுள்ள அனைத்துப் பொருள்களிலும் கடவுளின் வடிவத்தை ஆழ்வார் காண்கிறார்.

சாதி மாணிக்கம், பொன், முத்து, வயிரம், சோதியனைத்தும், நச்சு மாமருந்து, நலங்கடல் அமுதம், அச்சுவைக்கட்டி, அறுசுவை அடிசில், நெய்ச்சுவைத் தேறல், கனி, பால், நான்கு வேதங்கள், அவைகளின் பலன்கள், சமய நீதி நூல்கள், கேள்விகள், இசை, வினைகள், அவைகளின் பயன்கள், ஊனமில்லாத செல்வம் முதலிய அனைத்தையும் ஆழ்வார் குறிப்பிட்டு மனிதனின் முயற்சிகளையும் மேன்மைகளையும் எடுத்துக்காட்டுகிறார். மனிதன் படிப்படியாக மேலும் சிறந்த நாகரிகத்தை எட்டி வருவதையும், முன்னேறி வந்துள்ளதையும் ஆழ்வார் தமது தத்துவ ஞான வெளிப்பாடுகள் மூலம் சுட்டிக்காட்டுவது சிறப்பாகும். வேதங்களையும் வினைகளையும் (மனித முயற்சிகளையும் செயல்பாடுகளையும்)பற்றிக் குறிப்பிடும் ஆழ்வார், அவைகளின் பயன்களைப்பற்றியும் குறிப்பிடுகிறார். செல்வத்தைப்பற்றிக் குறிப்பிடும் ஆழ்வார் அதை ஊனமில் செல்வம் என்று குறிப்பிடுவது தனிச் சிறப்புக் கொண்டதாகும்.

திருவாய்மொழியில் 4-இல் நம்மாழ்வார்,

" திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே !"

என்று கூறுகிறார். அக்காலக் கருத்துகளுக்கு இணையாக இவ்வரி அமைந்துள்ளது. நாட்டை ஆளும் மன்னன் திருமாலோடு ஒப்பிடப்பட்டுப் பழைய இலக்கியங்களில் போற்றப்பட்டுள்ளான். இதே கருத்தைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம்.

" மண்ணகம் கொண்டு செங்கோல் ஓச்சிக்
கொடுந்தொழில் கடிந்து கொற்றம் கொண்டு

நடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பின் நெடியோன் அன்ன
அரைச பூதத் தருந்திறல் கடவுளும்"

என்று மதுரைக்காண்டம் அழற்படுகாதையில் இளங்கோவடிகள் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

சிரிவரமங்கையின் சிறப்புகளைப்பற்றிக் கூறும் போது நம்மாழ்வார், சேற்றுத் தாமரை, செந்நெல், திங்கள்சேர் மணி மாடம், நான்மறைவல்லவர், தேறுஞானத்தர், வேத வேள்வியர், செந்தொழிலவர், சேறுகொள் கரும்பும் பெருஞ்செல்வமும் மலிந்த தண்சிரீவர மங்கை நகர் என்றெல்லாம் மனித முயற்சிகள் மூலம் சீரும் சிறப்பும் பெற்றுள்ள நகரக் காட்சியைக் காண்கிறோம்.

இன்னும் திருக்குடந்தை, திருவல்லவாழ், திருச் செங்குன்றூர் முதலிய கோயில் கொண்ட நகரங்களையும் சிறப்பித்துக் கூறுகிறார். குட்ட நாட்டுத் திருப்புலியூரின் செல்வ வளத்தையும் மக்களின் சிறப்புமிக்க வாழ்வினையும் பற்றி விரித்துக் கூறுகிறார். அதன் ஊர்வளத்தையும் ஏர் வளத்தையும் நீர்வளத்தையும் விளைபொருள்வளத்தையும் விரிவுபடக் கூறுகிறார்.

திருக்கண்ணபுரத்தைப்பற்றிப் பாடும் போது, உயர்ந்த வேலைப்பாடுகளைக்கொண்ட கற்களாலும், மணிகளாலும் பொன்னாலும் வேய்ந்த மதில்களைக் கொண்டதாக அக் கோயிலைப்பற்றிப் பாடுகிறார். நள்ளி சேரும் வயல்கள், வண்டு பாடும் பொழில்கள், வேலை மோதும் மதிள், வானை உந்தும் மதிள், அரண் அமைந்த மதிள், நன்பொன் ஏய்ந்த மதிள், மணிபொன் ஏய்ந்த மதிள், கல்லின் ஏய்ந்த மதிள் என்றெல்லாம் ஊரின் சிறப்பையும் கோயிலின் சிறப்பையும் விவரித்துக் கூறுகிறார். அம்மதிள்களின் காட்சியில் மனிதனின் அறிவாற்றலும் முயற்சிகளும் செயல்திறனும் நிறைந்திருக்கின்றன.

திருப்பேர் நகரத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, கொடிக் கோபுர மாடங்கள், கிளி தாவிய சோலைகள், வண்டு களிக்கும் பொழில்கள், வண்ண நன்மணி மாடங்கள்,

குன்றெனத் திகழ் மணிமாடங்கள் சூழ்ந்த கற்றார் மறைவாணர் வாழும் திருப்பேரூர் என்று நம்மாழ்வார் பெருமான் சிறப்பித்துப் பாடுவதைக் காண்கிறோம்.

மனிதன் தனது கர்ம பலத்தால், உழைப்பின் திறத்தால், அறிவின் மேன்மையால், நீண்ட வாழ்க்கைப் பயணத்தின் விரிவான அனுபவத்தால், மனிதர்களுக்குள் கூட்டான சமுதாயச் செயல்பாடுகள் மூலம் கலந்துரையாடல் மூலம், கூடிச் செயல்படுவதன் மூலம், சேரும் அனுபவத்தினால் தனது சிந்தனையை, அறிவை வளர்த்துத் தனது செயல்திறனை மேலும் மேம்படுத்துகிறான்.

நீண்ட அனுபவத்தின் மூலம் அறிவு வளர்ச்சி பெற்று, இயற்கைச் சக்திகளையும் வளத்தையும் மேலும் மேலும் அதிகமாகப் பயன்படுத்தி ஆய்வு செய்து நாட்டு வளத்தை ஒன்று பலவாகப் பெருக்குகிறான். விரிவான நிலப்பகுதிகள் விளைநிலங்களாயின. நெல்லும் கரும்பும் தென்னையும் கமுகும் மா பலா வாழையும் சந்தனமும் தேக்கும் இன்னும் எண்ணற்ற பொருள்களும் விளைந்து குவிகின்றன. மனிதனோடு சேர்ந்து பறவைகளும் ஆடுமாடுகளும், கால்நடைகளும் இதர பல விலங்குகளும் மற்றும் பல உயிரினங்களும் மனிதனுக்கு நண்பனாகி நாடு நகரங்களின், மக்கள் வாழ்க்கையின் வளத்தைப் பெருக்கின. ஏரிகளும் குளங்களும் கண்மாய்களும் கால்வாய்களும் அணைகளும் பொழில்களும் தடாகங்களும் இதர நீர்நிலைகளும் பெருகி நாட்டையும் சமுதாயத்தையும் வளப்படுத்தியிருக்கின்றன. கோவில்கள், குளங்கள், மாடங்கள், மாளிகைகள், கோட்டைகள், கொத்தளங்கள், நீண்ட மதில்கள், சுவர்கள், வீடுகள், ஊர்கள், நாடு நகரங்கள் பெருகி மனித நர்கரிகம் மலர்ந்துள்ளது. ஆடல் பாடல்கள், கூத்துகள், நாடகங்கள், கவிதைகள், காவியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், வேதங்கள், சாத்திரங்கள் பலவும் படைக்கப்படும் மனிதனுடைய மகிழ்ச்சியும் அறிவும் அதிகரித்து வந்துள்ளன.

மக்கள் சமுதாயத்தின் இந்த மகத்தான வளர்ச்சிப் பாதையில், அந்த வளர்ச்சிக்கு எதிரான தடைகள், போர்கள், நாசங்கள், இடையூறுகள் முதலிய பலவும் நிகழ்ந்து

சேதங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளைச் சமாளித்தும் தாண்டியும், மனிதனின் வளர்ச்சியை மேலும் முன் எடுத்துச் செல்ல நல்லவர்களும் அறிவாளிகளும் ஞானிகளும் சித்தர்களும் கற்றறிவாளர்கள் பலரும் சிந்தித்திருக்கிறார்கள்.

ஊழிதோறும், ஊழிதோறும் உலகம் உய்ய, மனிதர் உய்ய, நாடுய்ய, உலக நன்மைக்காக ஆழ்வார்கள் சிந்தித்திருக்கிறார்கள். அன்பு வழியை அருள் வழியைக் காட்டியுள்ளார்கள்.

ஒரு முறை, இரு சுடர், மும்மதிள், மூவடி, நானிலம், முப்புரி, ஈரடி, மூவுலகம், மூவேந்தர், முத்தமிழ், நாற்றிசை, நான்மறை, ஐவகை வேள்வி, ஐந்திலக்கணம், அறுதொழில், பஞ்ச பூதங்கள், ஐம்பொறி, ஐம்புலன், முக்குணம், முக்கண், நாற்றோள், நான்கு பயனீடுகள், ஐவாய், ஆறுபொதி, நாற்படை, ஏழுலகம், அறுசுவை, ஐம்படை, முந்நீர், நெறிமுறை நால்வகை, மேதகு ஐம்பெரும் பூதங்கள், அறுபதம், ஏழ்விடை, ஏழு சுரங்கள் (சப்தசுரம்), அறுவகைச் சமயம், ஐம்பால், அறமுதல் நான்காய், மூர்த்தி மூன்று, இருவகைப் பயன் என்றெல்லாம், இன்னும் பலவகையாய்ப் பலவாறாய் அறிவின் தத்துவத்தை வளர்த்து, பாரதத்தின் நாகரிகத்தை மேம்படச்செய்து உலகிற்கு வழிகாட்டியாகப் பாரதத்தை உயர்த்தப் பாடுபட்டுப் பாடிய உயர்ந்த மனிதர்களில் ஆழ்வார்கள் அங்கமாகி உயர்ந்துள்ளார்கள் என்பதை அவர்களுடைய இனிய பக்திப் பாசுரங்களில் காண்கிறோம்.

தீயோரை நீக்கி நல்லோரை வாழ வைக்கவும், பாவத்தை முரியடித்து அறத்தை நிலை நாட்டவும் திருமால் அவதாரம் எடுத்தார் என்பது ஆழ்வார்களின் தத்துவமாகும். அதை அவர்களுடைய அருமையான பக்திப் பாசுரங்களில் நாம் கண்டு அறிகிறோம். அவைகளைப் படித்தும் பாடியும் பாராயணம் செய்தும், அவைகளின் கருத்துகளைப் பரப்பியும் மெய்சிலிர்த்து அவற்றின் இன்பத்தை அனுபவிக்கிறோம். ஆழ்வார்களின் புகழ் வாழ்க, வளர்க.

# 4. வாழ்க்கை நெறிமுறைகளும் அறிவுரைகளும்

இளங்கோவடிகளார் தமது காப்பியத்தின் மூலமும், ஆழ்வார்கள் தங்களுடைய இனிய பாசுரங்கள் மூலமும் மக்களுக்கு மிகவும் அவசியமாகக் கருதும் நெறிமுறைகளை மற்றும் அறிவுரைகளையும் எடுத்துக் கூறி மக்களுக்கு வழி காட்டியுள்ளார்கள். நெஞ்சை அள்ளும் கவிதைகள், கதைகள், பாசுரங்கள், பாடல்கள் மூலம் மக்களுக்கு வழிகாட்டி அவர்களை நெறிமுறைப்படுத்தி வாழ்க்கையை முன்னேற்றி முன் எடுத்துச் செல்வதற்கு உதவுவதே இலக்கியங்களின் பொது நோக்கமாக இருந்து வந்திருக்கிறது. அந்தச் சீரிய நோக்கங்களை மனித நேயத்துடன் எடுத்துக் கூறுவதை நாம் சிலப்பதிகாரக் காப்பியத்திலும், திவ்யப்பிரபந்தப் பாசுரங்களிலும் நன்கு காணலாம்.

இல்வாழ்க்கையின் சிறப்புப்பற்றியும் இல்லறத்தாரின் சீரிய கடமைகள்பற்றியும் இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் பல இடங்களிலும் சிறப்பித்துக் கூறுகிறார்கள். தன் சுற்றத்தைப் போற்றுதல், அறவோரைப் போற்றி உபசரித்தல், விருந்தினரை உபசரித்தல் முதலியவை இல்வாழ்க்கையின் சிறந்த பண்புகளாகும் என்று காப்பிய அடிகள் விவரிக்கின்றன.

"மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்
விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கை
வேறுபடு திருவின் வீடுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க"

என்பன காப்பியத்தின் செய்யுள் அடிகளாகும். இவற்றின் பொருள் மறக்க முடியாத, ஒதுக்கிவிட முடியாத, மிகவும் நெருக்கமான உறவினர்கள் (அவர்களுள் குழந்தைகளும்

முதியோர்களும் முக்கிய இடம் பெறுவர்), அறவோர்கள் (அறவழியில் நின்று சமுதாயத்திற்குத் தொண்டுசெய்யும் துறவிகள் முதலானோர்), விருந்தினர்கள் முதலியோரைப் பராமரித்தல், பாதுகாத்தல், உபசரித்தல் முதலிய சிறப்பான பல அறக்கடமைகளைக் கொண்ட மிகவும் இனிமையான குளிர்ந்த இல்வாழ்க்கையை மிகவும் சிறப்பாக மேற்கொள்ளுதலாகும்.

இல்வாழ்க்கையில் உள்ளவர்களின் கடமைகளைப்பற்றி நமது அறநூல்களும் சாத்திரங்களும் இலக்கியங்களும் விரிவாக எடுத்துக் கூறுகின்றன. ஒரு தனி மனிதனின் வாழ்க்கைப் பருவத்தை நான்கு கட்டங்களாக நம் அறிஞர்களும் சாத்திரங்களும் பிரித்துக் கூறி, அவற்றிற்குரிய கடமைகளையும் வகுத்துக் கூறியுள்ளார்கள். இந்தக் கருத்துகள் எக்காலத்திற்கும் எல்லா நாடுகளுக்கும் பொருந்துவதான சமுதாயப் பொதுக்கருத்துகளாக அமைந்துள்ளன. இந்த நான்கு பருவங்களை வடமொழியில் பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் எனக் கூறுவர். பிரம்மச்சரியம் என்பது மாணாக்கப் பருவம். கிரகஸ்தம் என்பது இல்லறமாகும்.

பிரம்மச்சாரி என்றால் பொதுவாகத் திருமணம் ஆகாதவன் என்னும் குறுகிய பொருளில் இன்று நாம் புரிந்து கொள்கிறோம். அது சரியானதன்று. மனிதன் பிறந்தவுடன் குழந்தைப்பருவம் முடிந்தவுடன் கல்வி கற்கத் தொடங்க வேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வங்களை நினைந்து ஆசி பெற்றுத் தமது கல்வியை ஒவ்வொரு சிறுவர் சிறுமியரும் தொடங்கவேண்டும். ஆதி காலத்தில் குருக்களும் குருகுலங்களும் இருந்தனர். தொழிற்கல்வி குடும்ப அமைப்பிலும் பட்டறை அமைப்பிலும் நடைபெற்றது. சமுதாய வளர்ச்சியின் அடுத்தடுத்த கட்டங்களில் பள்ளிகளும், கலைக் கழகங்களும், பல்கலைக் கழகங்களும் உருவாகி வளர்ச்சி பெற்றன. இக்காலத்தில் தொடக்க நிலை. நடுநிலை - உயர்நிலை - மேல்நிலைப்பள்ளிகளும் கல்லூரி களும் பல்கலைக் கழகங்களும் பெருகி வளர்ந்து வருகின்றன. இக்காலத்திய கல்வி மிகவும் விரிவடைந்து வருகிறது. கடவுள்

கடமைப் பத்துடன், தாய் தந்தையரின் உதவியுடன், குடும்பத்தாரின் ஆதரவுடன், குருக்களின் போதனையுடன் மனிதன் தனது மாணாக்கப் பருவத்தில், உலகம் இதுவரை தோற்றுவித்துள்ள அறிவுச் செல்வங்கள் அனைத்தையும் இயன்றளவு கற்கவேண்டும். இப்பருவத்தில் மனிதன் தனது முழுக் கவனத்தையும் கல்விப்பயிற்சியில் செலுத்த வேண்டும். கல்விப்பயிற்சி மட்டுமல்லாமல் உடற்பயிற்சியிலும் இதர சாஸ்திரப்பயிற்சிகளிலும் மாணாக்கர் கவனம் செலுத்த வேண்டும். பிரம்மச்சரிய பருவத்தில் எளிய வாழ்க்கை வாழ வேண்டும். எவ்வளவு செல்வக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும் மாணாக்கப்பருவம் மாணாக்கப் பருவந்தான். எளிய தூய்மையான வாழ்க்கையே மாணாக்கப்பருவ வாழ்க்கையாக இருக்கவேண்டும். திடமான, ஆரோக்கியமான, நல்ல பழக்க வழக்கங்களைக்கொண்ட வாழ்க்கை நடத்தப் பழகிக்கொள்ள வேண்டும். ஒரு தனி மனிதனுடைய சொந்த எதிர்கால வாழ்க்கையில் குடும்ப வாழ்க்கையில் பொது வாழ்க்கையில் எத்தனை இன்பதுன்பங்கள், துயரங்கள், கஷ்டநஷ்டங்கள், ஏற்றஇறக்கங்கள் ஏற்பட்டாலும் அவைகளையெல்லாம் தாங்கி நின்று வாழ்க்கையைச் சிறப்பாக நடத்திச் செல்வதற்கான பக்குவத்தையும் அறிவுத்தெளிவையும் திடத்தையும் பெறவேண்டும். மற்றவர்களின் அனுபவங்களிலிருந்தும் அறிவைக் கற்றுக்கொள்ளவும் அவைகளைக் கடைபிடித்துக்கொள்ளவும் பயில வேண்டும். உரிய காலம் வரும்போது அந்த இளந்தலைமுறையினர் எந்தப் பொறுப்பையும் ஏற்கும் பக்குவநிலைக்கு வரவேண்டும். இன்று அறிவைப் பெருக்கிக்கொள்வதற்குக் கல்வி நிலையங்கள், நூல் நிலையங்களை மட்டுமல்லாது வளர்ந்துவரும் எல்லாச் சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்ளப் பயில வேண்டும். இவ்வாறு நமது மனித சமுதாயத்தின் இளந்தலைமுறையினர், சிறந்த எதிர்கால மனிதராவதற்கு, பிரஜையாவதற்கு இல்லறத்தாரும் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களும் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டும். இதுவே நமது முதலாவது அறமாகும்.

அடுத்த பருவம் இல்லறம். இல்லறத்தார் கடமைகளுள் முக்கியமானது பொருள் சேர்த்தலாகும், அது ஊனமில்லாத பொருளாக இருக்க வேண்டும். தொழில் செய்யவேண்டும். அது தீமையற்ற தொழிலாக இருக்க வேண்டும். குழந்தைகளைப் பெற்று வளர்த்துப் பராமரித்து அவர்களை அறிவாளிகளாக்க உதவி செய்ய வேண்டும். முதியோர்களைப் பராமரிக்க வேண்டும். தனது குடும்பத்தைப் பேணவேண்டும். சமுதாயத்திற்கு உதவி செய்ய வேண்டும். தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களுடன் பரஸ்பரம் துணையாக இருக்க வேண்டும். அரசுக்கு வரி செலுத்தி அரசும் ஆட்சி முறையும் செம்மையாக அமைய, நடைபெற உதவ வேண்டும்.

வள்ளுவப் பேராசான் அறத்துப்பாலில் இல்லறத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளார். "இல்வாழ்வான் என்பான், இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை" என்று தொடங்கி, இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்களைப் பெறுதல், அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்க முடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில்விழையாமை, பொறையுடைமை, பொறாமை இல்லாமை, பிறருடைய பொருளை அபகரிக்கக் கருதாமை, புறம் கூறாமை, பயனில் சொல்லாமை, தீவினையச்சம் (தீய செயல்களைச் செய்வதற்கு அஞ்சுதல்), உலகிற்குப் பயன்படும்படி இருத்தல், ஈகை, புகழ் முதலிய பண்புகளெல்லாம் இல்லறத்தானுக்கு இருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டுகிறார்.

இல்லறம் என்பது, இல்லத்தை, வீட்டை, குடும்பத்தை மையமாக வைத்து நடக்கும் அறமாகும், கடமையாகும். இந்திய சாத்திரங்களும் பாரம்பரியமும் நிலையான குடும்பத்தை அச்சாகக்கொண்ட சமுதாயத்தையே சமுதாய வாழ்வையே விளக்கிக் கூறுகிறது. இந்திய சமுதாயத்தில் குடும்பமே அடிப்படையான அடித்தளமான அங்கக் கூறாகும். அது சமுதாயத்தின் அச்சாணியைப் போன்றதாகும். இதை நமது நூல்கள் சாத்திரங்கள் அனைத்தும் வலியுறுத்திக் கூறுகின்றன.

இல்லறத்தின் அடுத்த கட்டமாக ஒவ்வொரு மனிதனுக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஓய்வுநிலை வருகிறது. அதுவே வானப்பிரத்தம் என்று குறிப்பிடப் படுகிறது. ஓய்வு என்பது இங்கு முற்றிலும் துறந்த நிலையன்று. முக்கியமான பொறுப்புகளிலிருந்து ஓய்வு பெற்று, தம் மக்களிடம் பொறுப்புகளை - குடும்பப் பொறுப்புகளை - கொடுத்து, குடும்பத்தின் அங்கமாகச் சேர்ந்து நீடித்துக் கொண்டும், அதே சமயத்தில் முதலிரண்டு பருவங்களில் உள்ள தங்கள் பேரன் பேத்திகளுக்கும் மக்களுக்கும் உதவி செய்தல், ஆலோசனை கூறுதல், அறிவுரை கூறுதல், அனுபவங்களைக் கூறுதல், வழி காட்டுதல் முதலிய முக்கிய கடமைகளைப் பலன் பாராது பணி செய்வதாகும், பொது வாழ்வில் ஈடுபட்டு பாடுபட்டுக் குழைத்தலுமாகும்.

நான்காவது நிலை சந்நியாசமாகும். அது துறவு நிலை. அதாவது மனிதன் தனது வாழ்க்கையின் நிறைவு காலத்தில் எல்லாப் பொறுப்புகளிலிருந்தும் படிப்படியாக முற்றிலுமாக விடுபட்டு, வேறு எந்தக் கவலையும் தலையீடும் இல்லாமல், யாருக்கும் இடையூறாக இல்லாமல், மன நிம்மதியுடன் அமைதியாக வாழ்க்கையைக் கடந்து முக்தி பெறுவதாகும்.

இத்தகைய சீரிய கடமைகளை மனிதக் கடமைகளாக, அறமாகத் தர்மமாக நமது நாட்டு இலக்கியங்களும் சாத்திரங்களும் அறநூல்களும் வலியுறுத்தி வந்துள்ளன.

இத்தகைய சீரிய கடமைகளை நன்குணர்ந்து செம்மையாகச் செயல்படுத்தாமல் தவறி, போதுமான அறிவுத் தெளிவில்லாமலும் சுயநலத்தாலும் சோம்பேறித் தனத்தாலும், ஆடம்பர ஆசைகளாலும், அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டும், கிடைத்ததைத் தர்மத்திற்கு விரோதமாகக் கைப்பற்றிக்கொண்டும், சூழ்ச்சிகளாலும் அநியாயமான செயல்களாலும் சமுதாயச் சொத்துகளை அபகரித்துக்கொண்டும், சாத்திரங்களைத் திரித்தும் மறைத்தும் போலியான பல விளக்கங்களைக் கொடுத்தும் மனித சமுதாயத்தைக் கெடுத்தும், கேடுகள் விளைவித்தும் பல சேதங்களை அத்தகைய கூட்டத்தார் உண்டாக்கி

விட்டனர். அத்தகைய கேடுகளிலிருந்து மக்களையும் சமுதாயத்தையும் நாட்டையும் உலகையும் மீட்பதற்கு மீண்டும் மீண்டும் நாம் நமது நல்ல சாத்திரங்களின், இலக்கியங்களின் நல்ல சாரத்தினைக் கிரகித்துக்கொள்ள முயல வேண்டும்.

புகார்க் காண்டம் மனையறம் படுத்த காதையின் வெண்பாவில்,

> "தொலையாத இன்பமெல்லாம் துன்னினர் மண்மேல்
> நிலையாமை கண்டவர்போல் நின்று"

என்று அடிகளார் முடிக்கிறார்.

பூமியில் மனித வாழ்க்கையில் இளமை, செல்வம், உயிர், உடம்பு (யாக்கை) ஆகியவை நிலையாதன. எனவே, அவை இருக்கும்போதே எல்லா இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் கோவலனும் கண்ணகியும் இணைந்து இன்புற்று இல்வாழ்க்கை நடத்தினர் என்று உரையாசிரியர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள்.

இளமை, செல்வம், யாக்கை என்பவை நிலையானவை அல்ல. அவை மாறிவிடும் என்பது பொது நியதியாகும் என்பதும் உண்மைதான். அந்த நிலையாமை என்னும் நிலையிலிருந்து அக்காலத்திற்குள்ளேயே வாழ்க்கையின் எல்லா இன்பங்களையும் அனுபவித்துவிட வேண்டும் என்னும் கருத்தும், அதற்கு நேர் எதிர்மறையாக இந்த நிலையா வாழ்க்கையை நம்புவது மடமை என்று கூறி வாழ்க்கையை வெறுத்துத் துறவு பூணத் தூண்டுவதும் உண்டு. அது மடமையாகும். இளமை, செல்வம், யாக்கை என்பவை தற்காலிகமானவை என்பதால் அக்காலத்திற்குள்ளேயே மனிதன் அறவழியில் நின்று தனது கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதும், பிறருக்குக் கேடில்லாத வகையில் இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்பதும் இங்கு அறிய வேண்டியவையாகும்.

உலகில் எல்லாமே மாறிக்கொண்டிருக்கின்றன. ஆற்றுநீர் ஓடிக்கொண்டேயிருக்கிறது. காற்று அசைந்து கொண்டேயிருக்கிறது. சூரிய சந்திர தோற்றங்கள் மாறிக்

கொண்டேயிருக்கின்றன. நேற்றிருந்த நிலை இன்றில்லை இன்றுள்ள நிலை நாளை இராது. உலகில் எதுவும் நிலையானதில்லை என்றெல்லாம் புத்தர் தமது தத்துவ நிலையை விளக்கியுள்ளார்.

பிரபஞ்சத்திலுள்ள சகல விதமான பொருள்களும் இடைவிடாமல் அசைந்துகொண்டிருக்கின்றன, மாறிக் கொண்டிருக்கின்றன, முன் சென்றுகொண்டிருக்கின்றன. பழைய நிலை நீங்கிப் புதிய தோற்றத்திற்கும் புதிய நிலைக்கும் வந்துகொண்டிருக்கின்றன என்பது இயக்கவியல் தத்துவ அடிப்படை நிலையாகும்.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும், நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா, அலகிலா விளையாட்டுடையான் தலைவன் என்பது கம்பனுடைய பாடலாகும்.

இளமை, செல்வம், யாக்கை எல்லாம் நிலையானவை அல்ல, தற்காலிகமானவை என்னும் தத்துவ நிலையிலிருந்து எப்படியும் வாழலாம் என்றும், இப்படித்தான் வாழ வேண்டும் என்றும் மாறுபட்ட நிலைகள் தோன்றியிருக்கின்றன. கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று சிலர் எதிர்நிலைக்குச் சென்றிருக்கும் காலத்தில், எல்லாவற்றையும் எப்படியும் அனுபவிக்கலாம் என்றும், இருக்கும் காலத்தில் புலன்களை அடக்கி, ஒரு நிலைப்படுத்தி, நன்னெறி முறையுடன் வாழ வேண்டும் என்றும் வேறுபட்ட நிலைகள் தோன்றியுள்ளன.

இவற்றுள் அறவழியில் நின்று ஒவ்வொருவரும் தமது கடமைகளைச் சீராகச் செம்மையாக நிறைவேற்ற வேண்டும் என்பதைச் சிலப்பதிகாரக் காப்பியமும் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களும் வலியுறுத்தியுள்ளன.

அறிவின்மை, அசுத்தம், சிறுமை, நோய், வறுமை, கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்னும் இராட்சசக் கூட்டங்களை அழித்து மனித சாதிக்கு விடுதலை தரும் பொருட்டாகக் கல்வி, அறிவு, தூய்மை, பெருமை, இனிமை, செல்வம், நேர்மை, ஒற்றுமை, நீதி, உண்மை என்ற ஒளிகள் எல்லாம் வெற்றியடையும்பொருட்டாக, நாம் அனைவரும்

அனைவரையும் அழைத்து, அவர்களைத் திரட்டி, அக்கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்று பாரதி தமது கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகிறார். செயலூக்கத்துடன் நாம் எதையும் செய்து முடிக்க முனைய வேண்டும், எதிர்நிலைக்கு இடம் கொடுத்துவிடலாகாது என்பது பாரதியின் கருத்தாகும்.

போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது, மோசடி, காமம், குடி, பொய், களவு முதலிய தீய செயல்களுக்கு முடிவு கட்டி, மற்றவர்களுக்குத் தீமை விளையாத செயல்களில் ஈடுபடுவது தான் மனிதனுடைய சீரிய முயற்சியாகும் உலக நன்மைக்காகவும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகவும் கடவுளை வேண்டிக்கொள்வதும், வேள்விகள் செய்வதும், அவற்றிற்கான முயற்சிகளில் ஈடுபடுவதும், பாரத நாட்டின் மனிதாபிமான, அனைத்து உயிர்களின்மீதும் அன்பு கொண்ட ஓர் உயர்ந்த மேலான சிந்தனையாகும்.

அரங்கேற்று காதையில் மாதவியின் நடன அரங்கேற்றம் நடைபெறும்போது அதன் தொடக்கமாக உள்ள கடவுள் வாழ்த்துப் பாடலில்,

"சீர்இயல் பொலிய நீர்அல நீங்க
வாரம் இரண்டும் வரிசையில் பாட"

என்று இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார். நன்மைகள் பொலியவும் நன்மையல்லாதன நீங்கவும் கடவுளை வேண்டிப் பாடுவதாகக் குறிப்பிடுவது சிறப்பாகும்.

அதே போல, நாளங்காடி பூதத்தின் முன் மறக் குல மங்கையர் தெய்வம் ஏறப்பெற்று,

"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"

எனப் பாடினர் என்று சிலப்பதிகாரச் செய்யுள் குறிக்கிறது.

நாட்டில் பசியும் பிணியும் பகையும் நீங்கி மழையும் வளமும் சுரந்து நாடு சிறப்புற அமைய வேண்டும் என்பது நமது விருப்பமாகும்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு"

என்பது வள்ளுவர் வாக்காகும்.

மக்களை நல்வழிப்படுத்தவும், துன்பங்கள் நிறைந்த மக்களுக்கு அத்துன்பங்கள் நீங்கவும், தீய ஒழுக்கங்கள் உடையவர்களைத் தண்டிக்கவும், அரச நீதி தவறும் போது அதை உயர்த்தும் முறையில் துன்பக் கண்ணீர் சொரிந்து மக்களை விழிப்படையச் செய்யவுமாக ஐவகை மன்றங்கள் புகார் நகரத்தில் இருந்தனவென்று சிலப்பதிகாரக் காப்பியம் தெரிவிக்கிறது.

அவை, வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பூதச் சதுக்க மன்றம், பாவை மன்றம் ஆகிய ஐந்துமாகும்.

"வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்
கடைமுக வாயிலும் கருந்தாழ் காவலும்
உடையோர் காவலும் ஒரீஇய வாகிக்
கட்போ ருளரெனிற் கடுப்பத் தலையேற்றிக்
கொட்பி னல்லது கொடுத்தல் ஈயாது
உள்ளுநர்ப் பனிக்கும் வெள்ளிடை மன்றமும்"

வெளிநாடுகளிலிருந்து வந்த பலரும் தங்களுடைய சரக்கு மூட்டைகள்மீது தங்கள் சரக்கு அடையாளங்களை முத்திரை பதித்து பண்டசாலைகளில் காவல் இன்றியே வைத்திருப்பார்கள். எந்தக் காவலும் இல்லாமல் அந்தப் பண்டப் பொதிகள் பாதுகாப்பாகப் புகார் நகரில் இருந்தன. அறியாதார் யாராவது அந்தச் சரக்கு மூட்டையைத் திருடிவிட்டால் அந்த மூட்டையை திருடியவன் தலையிலேயே வைத்து, அவன் கழுத்தொடியச் சுமக்க வைத்து, ஊரைச் சுற்றச்செய்வது அங்குள்ள பூதத்தின் வேலையாகும். அதுவே அத்திருடனுக்கு அளிக்கப்படும் தண்டனையுமாகும். அந்தப் பூதம் தங்கியிருக்கும் இடமே வெள்ளிடை மன்றம் என்று பெயர் பெற்றதாகும்.

"கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகுமெய் யாளரும் முழுகினர் ஆடிப்

பழுதில் காட்சி நன்னிறம் பெற்று
வலஞ்செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்"

உடல் ஊனமுற்றோருக்கும் தொழுநோய் முதலிய கொடிய நோய் பீடித்தவர்களுக்கும் உதவி செய்து அவர்களுடைய துயர் துடைப்பதற்கும் தணிப்பதற்கும் ஆவன செய்ய வேண்டியது சமுதாயத்தின் கடமை என்பதுபற்றி இன்றுங்கூட சிந்திக்கப்படுகிறது. சிலப்பதிகார காலத்தில் தமிழகத்தில் இத்தகைய சமுதாயச் சிந்தனை முன் வைக்கப் பட்டுள்ளதை நாம் காண்கிறோம்.

கூன், குருடு, குள்ளர், ஊமையர், செவிடர், தொழு நோயாளர் ஆகியோர் மூழ்கி, நீராடி, வலம் செய்தால், அவர்களுடைய குறைகளை நீக்கவல்ல பொய்கையினை யுடைய இலஞ்சி மன்றம் அப்புகாரில் இருந்தது.

"வஞ்சம் உண்டு மயற்பகை யுற்றோர்
நஞ்சம் உண்டு நடுங்குதுயர் உற்றோர்
அழல்வாய் நாகத் தாரெயி றழுந்தினர்
கழல்கண் கூனிக் கடுநவைப் பட்டோர்
சுழல வந்து தொழத்துயர் நீங்கும்
நிழல்கால் நெடுங்கல் நின்ற மன்றமும்"

வஞ்சனையால் சிலர் தங்களுக்கு வேண்டாதோருக்கு மருந்து கொடுத்து அதனால் பித்தேறி அவதிப்படுவோரும், நஞ்சை உண்டு அதனால் அவதிப்படுவோரும், நச்சுப் பாம்புகளினால் கடியுண்டு அவதிப்படுவோர்களும், பிதுங்கிய கண்களைக்கொண்ட பேய்கள் பிடித்து அல்லல் உற்றோர்களும் சுற்றி வந்து தொழுதால் அவர்களுடைய துயர்கள் நீங்கும்படியாக உள்ள நெடிய கல்லால் நாட்டப் பட்டுள்ள தீப ஒளியுடைய **நெடுங்கல் நின்ற மன்றமும்** புகார் நகரில் இருந்தது.

"தவமறைந் தொழுகும் தன்மை யிலாளர்
அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோகு அமைச்சர், பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காதம் நான்கும் கடுங்குர லெழுப்பிப்
பூதம் புடைத்துணும் பூதச் சதுக்கமும்"

பொய்யான தவ வேடத்தில் மறைந்துகொண்டு தீய ஒழுக்கங்களில் ஈடுபடும் போலி வேடதாரிகள், மறைவாகத் தீய வழிகளிலும் தவறான ஒழுக்கங்களிலும் ஈடுபடும் மகளிர், அரசனுக்குத் தீங்கு செய்யும் அமைச்சர், பிறன் மனை நயப்போர், பொய்ச்சாட்சி சொல்பவர்கள், புறங்கூறி மற்றவர்களுக்குக் கேடு செய்வோர் ஆகியோர் தனது பாசக்கயிற்றில் அகப்படுவாராயின் அவர்களைப் பற்றி இழுத்து, நிலத்தில் அறைந்து விழுங்கும் பூதமாக நிற்கும் **"பூதச் சதுக்க மன்றம்"** ஒன்றும் அப்புகார் நகரில் இருந்தது.

> **" அரைசுகோல் கோடினும் அறம்கூறு அவையத்து**
> **உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்**
> **நாவொடு நவிலாது நவைநீர் உகுத்துப்**
> **பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்"**

அரசனது செங்கோல் ஆட்சியில் சிறிது மாறுபாடு ஏற்பட்டாலும், அறம் கூறும் அவைகளில் நீதி நூல்களுக்கு மாறாக ஒருசிறிது கோணினாலும் நாவால் ஒன்றும் கூறாது துன்பக் கண்ணீர்விட்டு அழும் பாவை நிற்கும் **பாவை மன்றம்** ஒன்றும் புகார் நகரில் இருந்தது என்று சிலப்பதிகாரக் காப்பியம் குறிப்பிடுகிறது.

இப்பகுதியில் அக்காலத்தின் அரசியல், சமூகவியல், குற்றவியல், தண்டனைவியல், சமூகப் பாதுகாப்பு முதலியவை பற்றிய கருத்துகள் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். நீதி தவறாமல் அரசுக்கு இருக்க வேண்டிய குறிப்புகளையும் அதில் காணலாம்.

இந்த மன்றங்களின் அமைப்புகள் மக்களை ஒழுக்க நெறியில் இருக்கச் செய்யவும், குற்றங்களுக்குரிய தண்டனை பற்றியும், ஊனமுற்றோருக்கு உதவியும் பாதுகாப்பும் கொடுப்பதுபற்றியும், ஆட்சி முறையும் அரசும் நீதி தவறாமல் செங்கோல் சாயாமல் செம்மையாக நடைபெற வேண்டும் என்பதை நிலை நாட்டவும் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளாகும். இவற்றைப்பற்றி இலக்கிய நுட்பத்துடன் இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம்.

சமண ஆகம நெறிகளைப்பற்றி இளங்கோவடிகள் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். கோவலனும்

கண்ணகியும் இருள் இருக்கும் அதிகாலை நேரத்திலேயே புகார் நகரை விட்டு வெளியேறிவிடக் கருதிப் புறப்பட்டுச் சென்றுவிட்டனர். அவ்வாறு செல்லும்போது :

> "புலவூண் துறந்து பொய்யா விரதத்து
> அவலம் நீத்தறிந் தடங்கிய கொள்கை
> மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய
> ஐவகை நின்ற அருகத் தானத்துச்
> சந்தி ஐந்தும் தம்முடன் கூடி
> வந்துதலை மயங்கிய வான்பெரு மன்றத்து"

வந்து அதை வலம் வந்து வணங்கிச் சென்றனர் என்று, காப்பியக் கவிதை அடிகள் குறிப்பிடுகின்றன. இவ்வடிகளில் சமணம் போதிக்கும் புலால் உணவைத் துறத்தல், பொய்யாமை என்னும் விரதத்தை மேற்கொள்ளல், அழுக்காறு, அவா, வெகுளி ஆகியவற்றைக் கைவிடல் முதலிய ஒழுக்க நெறிகளை மிகவும் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார்.

> " அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா இயன்ற தறம்"

என்பது ஐயன் வள்ளுவர் வாக்காகும்.

சமணமும் புத்தமும் போதித்த பல ஒழுக்க நெறிமுறைகளும் இன்று பாரதம் முழுவதினுடைய பொதுப் பண்பாட்டின் பகுதியாக இணைந்து இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

அரசியலில் அரசனும், அவனுக்குத் துணையாக அமைச்சர் முதல் ஆட்சி நிர்வாகத்தின் பல வேறு பொறுப்பில் உள்ளவர்களும் இணைந்து கருத்தொற்றுமை யுடன் பணியாற்ற வேண்டும். இதில் மாறுபாடுகள் ஏற்பட்டு அவரவர்கள் விருப்பத்திற்கு இஷ்டம்போலத் தங்கள் தங்கள் போக்கில் செயல்படுவார்களானால் அந்த நாடு கெட்டு விடும். இந்தக் கருத்து இப்போதைய ஜனநாயக முறைகளுக்கும் பொருந்தும். ஆட்சியில் அரசியல் கட்சிகளில் பொறுப்பில் உள்ளவர்கள் நாட்டின் மொத்த நலன் கருதி இணைந்து இசைவாகச் செயல்பட வேண்டும். இல்லா விட்டால்,

"கோத்தொழி லாளரொடு கொற்றவன் கோடி
வேத்தியல் இழந்த வியனிலம் போல"

என்று அத்தகைய நாட்டைக் கோடை காலத்துச் சூரியன் நிலத்தைச் சுட்டெரிப்பது போலாகும் என்று இளங்கோ வடிகள் குறிப்பிடுகிறார்.

அந்தச் சூரிய வெப்பம் காரணமாக முல்லையும் குறிஞ்சியுங்கூடத் தமது இயல்பான வளம் கெட்டுப் பாலையாகிவிடுகின்றன என்னும் மிகவும் ஆழ்ந்த கருத்தை இங்கு அடிகளார் நமக்கு வெளிப்படுத்துகிறார்.

உயர்ந்த நற்குணங்களைக்கொண்ட மேலோராயினும், பல நூல்கள் கற்றறிந்த நூலறிவுடையோர்களாயினும், நல்லவை தீயவை என்னும் வேறுபாடுகளை நன்கு தெரிந்தவர்களாயினும் கணிகையருடன் சென்று வாழ்வதைப் பிணி எனக் கருதி விலகிச் செல்வார்கள் என்னும் கருத்தில்

"மேலோ ராயினும், நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட்டு ஒழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மென"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

கொடுங்கோல் மன்னன் ஆட்சி செய்யும் நாட்டில் வாழும் மக்கள், அம்மன்னனின் வீழ்ச்சியை எதிர்நோக்கிக் கொண்டிருப்பார்கள் என்னும் கருத்தில்,

"கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதிர் அமையப் பார்த்திருந் தோர்க்கு"

என்று குறிப்பிட்டு, அதைப் போலக் கொடிய வெயிலைக் கொளுத்தும் சூரியன் மறையும் மாலை நேரத்தைக் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர் என்று அடிகளார் கூறியிருப்பது சிறந்த உவமையாகும்.

பெண்டிரும் உண்டியுமே இன்பம் என்று கருதி வாழ்வோர்கள் முடிவில் துன்பத்தையே அடைவார்கள் என்னும் கருத்தை

"பெண்டிரும் உண்டியும் இன்பமென் றுலகில்
கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்"

என்னும் அடிகளில் காண்கிறோம்.

உண்டியும் இனப்பெருக்கமும் மட்டுமே வாழ்வு என்பது விலங்கு நிலையாகும். மனித நாகரிகம் அந்த நிலையிலிருந்து வெகு தொலைவு முன்னேற்றம் கண்டிருக்கிறது. மனிதன் ஐம்பொறிகள்மூலம் அடையும் அறிவை ஒருமுகப்படுத்தி முன்கூட்டிச் சிந்திக்கும் பகுத்தறிவையும் வளர்த்துள்ளான். இத்தகைய அறிவின் தத்துவம், மனிதனுடைய உழைப்பின் மூலமும், செயலாற்றல் மூலமும் அனுபவத்தின் மூலமும் பெரும் அளவில் வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. இவ்வறிவை மனித நலனுக்கும், மனித முன்னேற்றத்திற்குமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதற்காக நமது இலக்கியங்கள், சாத்திரங்கள், அறநூல்கள் பெரும்பங்கை ஆற்றி வந்துள்ளன.

பெண்டிரும் உண்டியும் மட்டுமே இன்பமென்று கருதி அதில் மூழ்குபவர்கள் துன்பமே அடைவார்கள் என்பதைக் கோவலன் வாயிலாக இளங்கோவடிகள் சிறப்பாக எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

கற்புடைப் பெண்டிர் உள்ள நாட்டில் வான மழை பொய்க்காது, நாட்டு வளம் குன்றாது, அரசர்களின் ஆட்சி சிதையாது என்னும் கருத்தில்

"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"

என்று காப்பியக் கவிதை அடிகள் குறிப்பிடுகின்றன.

கற்பு நிலை, புலனடக்கம்பற்றியெல்லாம் நமது நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. பாரத சமுதாயத்தின் பண்பாட்டுத் தளத்தில் குடும்ப அமைப்பு ஒரு முக்கியமான அடித் தளமாகும். இல்லறத்திற்கு நமது இலக்கியங்கள் மிகப்பெரிய அளவில் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். இல்லறத்திலும் குடும்ப அமைப்பிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் சமமான பொறுப்புகளையே நாம் கூறிவந்துள்ளோம். கற்பு நிலைக்கு இராமனும் சீதையும், புலனடக்கத்திற்குப் பரதனும்

இலக்குவனும், அனுமனும் சிறந்த உதாரணங்களாகும். கற்பு நிலை என்பது இருபாலாருக்கும் பொதுவாக வைப்போம் என்று பாரதி உறுதிபடக் கூறுவதைக் காண்கிறோம்.

குடும்ப அமைப்பும் இல்லற முறையும் சீராக அமைந்து சமுதாயத்தில் செயல்படுமானால் நாட்டின் வளமும் நலனும் ஆட்சியும் சீராக அமையும் என்னும் பொருளில் அடிகளார் பேசியுள்ளார்.

கண்ணகி மதுரை மாநகரை எரியூட்டியபோது பார்ப்பனர், அறவோர், பசு, பத்தினிப்பெண்டிர், முதியவர்கள், குழந்தைகள் ஆகியோர் விட்டு, தீயவர்கள் பக்கமே தீ செல்க என்னும் கருத்தில்

"பாயெரி இந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவ லுடையேனால் யார்பிழைப்பார் ஈங்கென்னப்
பார்ப்பார், அறவோர், பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய
பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன. இது ஒரு முக்கியமான சிறப்பான கருத்தாகப் போற்றப்படுகிறது.

பாண்டிய மன்னனின் சீரிய செங்கோலாட்சியைப் பற்றிக் குறிப்பிடும் காப்பிய அடிகள்

"மறைநா ஓசை யல்லது யாவதும்
மணிநா வோசை கேட்டது மிலனே
அடிதொழு திறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றும் கோலனும் அல்லன்"

என்று குறிப்பிடுகிறது.

மதுரை மாநகரை எரித்த கண்ணகியின் முன்பாக மதுராபதி தோன்றி, அவளுடைய மனத்தை ஆற்றி, அவளுடைய கோபத்தை ஒருவாறு தணிக்கச்செய்து, அவளுக்கு விளைந்த தீங்கு ஊழ்வினையாலானது எனக் கூறிப் பாண்டியர் ஆட்சியின் பெருமைகள் பலவற்றையும் எடுத்துக் கூறுகிறாள்.

சோழ நாட்டில் பிறந்த பராசரன் என்னும் அந்தணர், சேரநாடு சென்று, வேத பாராயணத்தில் மற்றவர்களை வென்று, பார்ப்பன வாகை சூடிப் பரிசுகள் பல பெற்றுப் பாண்டிய நாட்டில் உள்ள திருத்தண்கால் என்னும் ஊருக்கு வருகிறார். அங்குத் தமக்கு ஈடாக வேதம் ஓதிய தக்கிணாமூர்த்தி என்னும் அந்தணச் சிறுவனைக் கண்டு மகிழ்ச்சியடைந்து, அச்சிறுவனுக்குத் தாம் பெற்ற பரிசுப் பொருள்களைக் கொடுக்க, அச்சிறுவன் அப்பரிசுப் பொருள்களிலிருந்த ஆபரணங்களை அணிந்துகொண்டு தெருவில் உலவ, அவனிடம் உள்ள அந்த ஆபரணங்கள் புதையல் பொருள்கள் எனச் சந்தேகப்பட்டு, அரசின் காவலர்கள், 'அரசிற்குச் சேரவேண்டிய புதையல் பொருள்களை இந்தப் பிராமணச்சிறுவன் அபகரித்து விட்டான்' என்று கருதி அவனைச் சிறையிலிட, இந்த அநீதியைக் கண்டு அச்சிறுவனின் தாய் மதுரையில் இருந்த கொற்றவை கோவிலில் முறையிட, அக்கொற்றவை கோவிலின் கதவுகள் திறவாது மூடிக்கொள்ள, இச் செய்திகளைத் தன் ஒற்றர்கள் மூலம் அறிந்த பாண்டிய மன்னன் அந்த அந்தணச் சிறுவனுடைய பெற்றோர்களிடம் மன்னிப்புக் கேட்டு, அவர்களுடைய அந்த ஆபரணப் பொருள்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்து, அவர்களுக்கு மேலும் ஓர் ஊரைத் தானம் கொடுத்து, கடமை தவறிய பணியாளர்களால் தனது ஆட்சியில் தவறு நேர்ந்து விட்டதற்கு வருந்தக் கொற்றவை கோயிலின் கதவுகள் பேரொலியுடன் திறந்தன.

இந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியாகப் பாண்டிய மன்னன், "சிறைக்கோட்டங்களைத் திறந்துவிட்டு, இறை பொருள் கொடுக்காதவர்களையும் விடுதலை செய்து, இடுபொருளாயினும் (பிறர் கொடுத்த பரிசுப் பொருள்களானாலும்) படுபொருளாயினும் (புதையல் மூலம் கிடைத்த பொருள்களானாலும்) அவை உற்றவர்க்கே உரிமையாகும்" என அறிவித்தான் என்று மதுரை மாதேவி கண்ணகியிடம் கூறுகிறாள்.

"சிறைப்படு கோட்டஞ் சீமின் யாவதும்
கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின்
இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்
உற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென
யானை யெருத்தத் தணிமுரசு இரீஇக்
கோன்முறை யறைந்த கொற்ற வேந்தன்"

என்று காப்பியம் கூறுகிறது.

பரிசுப் பொருள்களும் புதையல் பொருள்களும் அரசைச் சேரும் என்னும் நியதியைப் பாண்டிய மன்னன் மாற்றி, அவை உற்றவர்க்கே உரியனவாகும் என்று புதிய நியதியை ஏற்படுத்தினான் என்று ஓர் அரிய அரசியல் செய்தியை இங்கு நாம் அறிகிறோம்.

வடபுலம் படையெடுத்து, வெற்றி வாகை சூடி, கண்ணகி சிலைக்குக் கல் எடுத்து வந்த சேரன் செங்குட்டுவன், சோழனும் பாண்டியனும் இகழ்ந்து பேசியதைக் கேட்டுச் சினம் கொண்டு பேசியபோது மாடல மறையோன் சேரனிடம் வணங்கி,

"வையம் காவல் பூண்டநின் நல்யாண்டு
ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

என்று கூறி அரசனுடைய சினத்தைத் தணித்துப் போர்க் குணத்தை நிறுத்தி அறவேள்வி செய்யுமாறு வேண்டுகிறான்.

யாக்கை நில்லாது, செல்வம் நில்லாது, இளமை நில்லாது என்பதைச் சேரமன்னர்களின் பாரம்பரியப் பெருமைகளையும், சேரன் செங்குட்டுவனின் அனுபவங்களை யும் நினைவுபடுத்தி,

"நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய
பெருநல் வேள்வி நீசெயல் வேண்டும்"

என்று எடுத்துக் கூறி, போர்க்கள வேள்வியை நிறுத்தி அறக்கள வேள்வியைச் செய்ய ஏவினான். அதன்படி சேரன் செங்குட்டுவனும் அறவேள்வி செய்து, சிறை வைக்கப்பட் டிருந்த அரசரை விடுவித்துக் கண்ணகி தெய்வத்திற்குக் கோவில் பிரதிஷ்டை செய்தான்.

இங்குப் போர்க்கள வேள்விகளை நிறுத்தச்செய்து சாந்தி வேள்வியைச் செய்யத் தூண்டுவது மிக முக்கியமான அரசியல் நெறிபற்றிய கருத்தாகும்.

மேலும், மாடல மறையோன் வாயிலாகப் பல நல்லுரைகள் எடுத்துக் கூறப்படுவதைக் காணலாம்.

"நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளம் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவது அன்றே தொன்றியல் வாழ்க்கை."

நல்லறம் செய்தோர் நற்கதியடைவார்கள் என்பதும், ஒருவரிடம் பற்றுவைத்தோர் அப்பற்றின் காரணமாக மீண்டும் அவர்கள் சேர்ந்து பிறத்தலும், மறுபிறப்பிலும் அவர்கள் சேர்ந்து அன்புடன் இருப்பதும், நல்வினைப் பயன்கள் அவர்களிடம் சேர்வதும், தீவினைப் பயன்களும் அவைகளைச் செய்தோரிடம் சேர்வதும், பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் புதியதன்று, தொன்று தொட்டே நடப்பதாகும் என்னும் தத்துவக் கருத்துகளை மாடல மறையோன் எடுத்துக் கூறுகிறார். அதன் மூலம், நல்லறங்களும் நல்வினைகளும் செய்ய வேண்டும் என்பதும் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பதும் இங்கு வலியுறுத்தப்படுகிறது, அறிவுறுத்தப்படுகிறது.

முடிவாக, இளங்கோவடிகளாரின் அறவுரைகளுடன் நூல் நிறைவு பெறுகிறது. இந்த அறவுரைகள் காப்பியத்தின் நோக்கமாகக் காண்கிறோம். அவை மிகச்சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளன. சமணத்தின் முக்கியமான கருத்துகள் அவற்றின் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. அத்துடன் அவை பாரதப் பண்பாட்டின் பொதுக் கருத்தாகச் சங்கமமாகிவிட்டன.

"என்திறம் உரைத்த இமையோர் இளங்கொடி
தன்திறம் உரைத்த தகைசால் நன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்

பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லும் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லல்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென்."

என்று தமது காப்பியத்தில் இளங்கோவடிகளார் சிறப்புறக் கூறுகிறார்.

பொருள் முதலிய செல்வங்களை இழக்க நேரிடும் போது வருந்த வேண்டா. துன்பங்களைக் கண்டு கலங்க வேண்டா. உண்மையான தெய்வத்தைத் தெளிந்து கொள்ளுங்கள். அவ்வாறு தெளிந்தோரின் உறவுகளைப் பேணுங்கள். பொய் சொல்லாதீர்கள். புறம் கூறாதீர்கள். ஊன் உணவை விலக்குங்கள். உயிர்க்கொலை செய்யாதீர்கள். தானம் செய்யுங்கள். தவங்கள் பல செய்யுங்கள். பிறர் செய்த உதவியை நன்றி மறக்காதீர்கள். தீயோர் நட்பை விலக்குங்கள். பொய்ச்சாட்சி சொல்லாதீர்கள். உண்மை நிலையிலிருந்து நீங்காதீர்கள். அறவோர் அவையிலிருந்து அகலாதீர்கள். தீவினையாளர் அவையிலிருந்து நீங்குங்கள். பிறர்மனையை விரும்பாதீர்கள். துன்புற்ற உயிர்களுக்கு உதவி செய்யுங்கள். இல்லறத்தைப் போற்றுங்கள். பாவச் செயல்களை நீக்குங்கள். கள்ளையும் களவையும் காமத்தையும் பொய்யையும் வெட்டிப் பேச்சுகளையும் ஒழியுங்கள். இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையற்றவை. நமது வாழ்நாள் வரையறுக்கப்பட்டது. மரணத்திலிருந்து நாம் தப்பமுடியாது. அதனால், வாழும் நாள்களை வீணாக்காமல் நல்லறங்களைச்

தேடி அவைகளை நிறைவேற்றுங்கள். செல்வ வளம் மிக்க இந்த உலகில் வாழும் மக்களே, நல்வாழ்வுடன் வாழ்வீர்களாக என்னும் கருத்துகளை இளங்கோவடிகளார் சிறப்பாக எடுத்துக் கூறிக் காப்பியத்தை நிறைவு செய்கிறார்.

இந்தச் சிறப்பான நூலின் நோக்கமாக, **"அரைசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினிக்குயர்ந் தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதும்"** எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல் பிழையைப் பாரத சமுதாயம் எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை; அதற்கு அடிபணிந்தும் போனதில்லை. உரிய காலத்தை நோக்கியே காத்திருக்கிறது. இந்த வழியில் பாரதி :

**"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி**
**நயம்புரி வாள்எங்கள்தாய் - அவர்**
**அல்லவ ராயின் அவரை விழுங்கிப்பின்**
**ஆனந்தக் கூத்திடுவாள்."**

என்று பாடுகிறார்.

## ஆழ்வார்களின் அறிவுரைகள்

ஆழ்வார்களின் பாசுரங்கள் இனியவை; பக்தி தத்துவமும் பிரபத்தி தத்துவமும் கொண்டவை : வேதாந்த தத்துவ ஞானம் நிறைந்தவை. அவை கதையோ காப்பியமோ அல்ல; திருமாலின் திருவவதாரச் சிறப்புகளை, அபாரமான பக்தியோடும், தாங்கள் அனுபவித்தும் தங்களை அர்ப்பணித்தும் மெய்மறந்தும் பாடும் பாசுரங்களாகும். அத்துடன் அப்பாசுரங்கள் மிகுந்த மனிதாபிமானமும் லோகாபிமானமும் சமுதாய உணர்வும் கொண்டவைகளாகும்.

அதே சமயத்தில், திருமாலின் அவதாரச் சிறப்பு என்பது சிறந்த அரசியல், சமுதாய, தத்துவக் கருத்து நிறைந்ததாகும். திருமாலின் அவதார நோக்கம் தீயோரை நீக்கி, நல்லோரைக் காப்பதாகும்; பாவத்தை முறியடித்து அறத்தைக் காப்பதாகும்; அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்னும் சிறந்த தத்துவத்தை உலகில் நிலை நிறுத்துவதாகும். கம்ப நாடர் இராமபிரானின் அவதாரச் சிறப்புபற்றி மிகவும் அற்புதமாக

இவ்வாறு கவிதையில் குறிப்பிடுகிறார். அனுமனை இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தால் கட்டி, இராவணனுடைய சபைக்கு இழுத்துக்கொண்டு போய் நிறுத்துகிறான். இராவணன் அனுமனிடம், "யார் நீ, இலங்கைக்கு நீ வந்த காரணம் என்ன, உன்னை யார் இங்கு அனுப்பியது, ஒளிவுமறைவில்லாமல் சொல்" என்று கேட்கிறான். அப்போது அனுமான், தான் வில்லியின் தூதன் என்று குறிப்பிட்டு இராமபிரானுடைய அவதாரச் சிறப்பைக் குறிப்பிடுகிறான் :

> **"மூலமும் நடுவும் ஈறும் இல்லதுஓர் மும்மைத்து ஆய**
> **காலமும் கணக்கும் நீத்த காரணன், கைவில் ஏந்திச்**
> **சூலமும் திகிரிச் சங்கும் கரகமும் துறந்து தொல்லை**
> **ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும்விட்டு அயோத்தி**
> **வந்தான்."**

மூலத்தோற்றமும் நடுவும் முடிவும் இல்லாத மூன்றாகியவன்; காலத்தையும் எல்லையையும் கடந்தவன்; உலகில் அனைத்திற்கும் காரணமானவன்; சங்கு சக்கராயுதங்களையும் கமண்டலத்தையும் துறந்து, ஆலிலையும் தாமரை மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டுக் கையில் வில் ஏந்திக்கொண்டு, அயோத்தி வந்து சேர்ந்துள்ளான் என்று அனுமன் கூறுகிறான்.

அயோத்தியில் இராமனாக அவதரித்த திருமாலின் அவதாரப் பெருமையைப்பற்றி மேலும் அனுமன்,

> **"அறம்தலை நிறுத்தி, வேதம் அருள்சுரந்து அறைந்த நீதித்**
> **திறம்தெரிந்து உலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்**
> **இறந்துஉக நூறித் தக்கோர் இடர்துடைத்து ஏக, ஈண்டுப்**
> **பிறந்தனன்"**

என்றான்.

கண்ணபிரான் தனது கீதையில், **''பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்து போய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்.**

**நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்.**

இந்த வாசகங்களில் தெய்வநிலையுடன் மனித சமுதாயத்தையும் இவ்வுலகையும் காத்தல் கடமையும் சேர்ந்து ஒரு பெரிய சமுதாயத் தத்துவம் வெளிப்பட்டு நிற்கிறது. மனித வாழ்க்கையின் அத்தனை பிரச்சினைகளும் இந்தத் தத்துவத்தில் நிரம்பி நிற்கின்றன; மனிதனுக்கு நம்பிக்கையூட்டி நிமிர்ந்து நிற்கச்செய்கின்றன; அதர்மத்தையும் தீயோரையும் எதிர்த்து நிற்க நம்மைத் தூண்டுகின்றன. இந்த நம்பிக்கை ஒளி ஆழ்வார்களின் பாசுரங்கள் அனைத்திலும் அடிநாதமாக அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

திருப்பாவைப் பாசுரங்கள் என்பவை அணிபுதுவைப் பட்டர்பிரான் கோதை பாடிய சங்கத்தமிழ் மாலை முப்பதாகக் கோக்கப்பட்டவையாகும். திருப்பாவைப் பாசுரங்கள், பக்திச் சுவையும் இனிமையும் ஈடுபாடும், உயர்ந்த மனிதாபிமான உணர்வும் உயர்வும் கொண்டவைகளாகும். கோதைப்பிராட்டியார் உலகத்தோருக்கெல்லாம் வழிகாட்டியாகத் தமது பக்திப்பாடல்களில் மிக அரிய கருத்துகளைப் பதித்துள்ளார்கள். அவ்வினிய பாசுரங்கள் மார்கழித் திங்களில் மட்டுமல்லாமல் எல்லாக் காலங்களிலும் பாடுவதற்கும் பாடி மகிழ்வதற்கும் இனிய பாசுரங்களாகும்.

அபூர்வமான இசையும் ராகமும் தாளமும் இணைந்த, மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும், உள்ளத்தை நெகிழ வைக்கும் பாசுரங்களாகும்.

> **"வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்**
> **செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
> **பையத் துயின்ற பரம னடிபாடி**
> **நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
> **மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்**
> **செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்**
> **ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி**
> **உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்"**

என்று ஆண்டாள் பாடுகிறார்.

உலகத்தில் வாழும் மக்களையெல்லாம் "வையத்து வாழ்வீர்காள்" என்று அறைகூவி அழைத்து, நாள்தோறும் அதிகாலையில் நீராடி, நெய்யும் பாலும் உண்பதைத்

தவிர்த்து, மையிடுவது மலரிடுவது போன்ற அலங்காரங்களைத் தவிர்த்து, நல்லனவற்றையே செய்தும், நல்ல நூல்களையே படித்தும் விரதம் இருந்தும் உலகில் உள்ள . அனைவரும் உய்யப் பாற்கடலில் துயிலும் பரமனைப் பாடுவோம் என்று மிக அழகாகப் பந்துவராளி ராகத்தில் அமைந்துள்ள இந்தப் பாசுரத்தைப் பலமுறை படித்தாலும் பாடினாலும் தெவிட்டாத சுவையைத் தருகின்றது.

அதே போல, ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடினால், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து நீங்காத, செல்வம் நிறையும் என்று கோதைப்பிராட்டியார் அறிவுரை கூறி அழைக்கிறார். இன்னும் "**போய பிழையும், புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்**" என்றும், "**திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி வருத்தமும் தீர்ந்து மகிழ்வோம்**" என்றும் பாடுகிறார்.

குலசேகரப்பெருமாள் தமது பெருமாள் திருமொழியில் எல்லோரும் வாழவேண்டும், சுகமும் மகிழ்ச்சியும் வளர வேண்டும், இந்த வானமும் வானரரும், இந்த மண்ணும் இந்த மண்ணுலகில் உள்ள மனிதரும், வாழவேண்டும், துன்ப துயரங்களெல்லாம் அகல வேண்டும், சோர்வு அகல வேண்டும், சுகம் வளரவேண்டும், எல்லா உள்ளங்களும் மகிழ்ச்சியடைய வேண்டும், தொண்டர்கள் வாழவேண்டும், எல்லோரும் திருவரங்கன் கோயில் வாயில்முன் அன்புடன் கூட வேண்டும் என்றெல்லாம் கூறிப் பாடுகிறார்.

**"வன்பெ ருவா னகமுய்ய அமர ருய்ய**
**மண்ணுய்ய மண்ணுலகில் மனிச ருய்ய**
**துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்**
**சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ**
**அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்**
**அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்**
**இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்**
**இசைந்துடனே என்றுகொலோ விருக்கும் நாளே?"**

என்பது . அவரது அருமையான பாடல்.

குலசேகரப்பெருமான் வித்துவக்கோட்டம்மானை வேண்டி மிக அற்புதமான பாடல்களைப் பாடியுள்ளார்.

மிகவும் அருமையான கருத்துகளைக் கொண்ட பாசுர அடிகளை அவைகளில் நாம் காண முடிகிறது. சமுதாயக் கருத்துகளைக் கொண்ட அந்த அடிகள் உருக்கம் நிறைந்தனவாகக் காணப்படுகின்றன.

பெற்ற தாய் கோபத்துடன் குழந்தையை அடித்தாலும் அந்தக் குழந்தை, தாயின் அன்பிற்கும் அருளுக்குமாக அழுதுகொண்டே தன் தாயின் பின் செல்லும்.

**"அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன் அருள்நினைந்தே யழும்குழவி"**

என்று பாடுகிறார்.

கொண்டவன் தன்னை எவ்வளவுதான் குறை கூறி மற்றவர் இகழும்படி செய்தாலும், குலமகள் தனது கொண்டவனை யல்லாமல் வேறு யாரையும் அறியாள் என்று **"கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல்"** என ஆழ்வார் பாடுகிறார்.

அரசன் பல கொடுமைகளைத் தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்டாலும் அவ்வரசனை நம்பியே குடிமக்கள் வாழ்வதைப் போல என்னும் பொருளில் **"தான் நோக்கா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் குடிபோல்"** என்று ஆழ்வார் பாடுகிறார்.

தனது புண்களை வாளால் அறுத்துச் சுட்டாலும் நோயாளன் மருத்துவன்மீது மீளாத காதலும் மதிப்பும் கொண்டிருப்பதைப் போல என்னும் பொருளில் **"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன் போல"** என்று ஆழ்வார் பாடுகிறார்.

கரை காண முடியாத பறவை, கடலில் காணும் கப்பலின் பாய்மரத்தின்மீது வந்து அமர்வதைப் போல என்னும் பொருளில், **"எங்கும்போய் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும் வங்கத்தின் கூம்பேறும் மாம்பறவை போல்"** என்று ஆழ்வார் பாடுகிறார்.

சூரியன் எத்தனைதான் தனது கொடுங்கதிரால் சுட்டெரித்தாலும், அச்சூரிய ஒளி பட்டுத்தான் தாமரை மலர் மலர்வதைப் போல என்னும் பொருளில், "**செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம் அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலரா**" என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

எத்தனை வறட்சிகள் ஏற்பட்டுப் பயிர்கள் வாட்டமடைந்தாலும் கடைசியில் அம்மழையை நம்பியே காத்திருக்கும் பயிர்களைப்போல என்னும் பொருளில் "**எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவை போல்**" என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

எத்தனை தூரம் சுற்றி ஓடினாலும் ஆறுகள் கடைசியில் கடலையே போய்ச் சேர்கின்றன என்னும் கருத்தில் "**தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாத மற்றவைபோல்**" என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

உள்ளத்தை உருக்கும் இப்பாசுரங்களில், தாயை நோக்கிச் செல்லும் குழந்தை, காதலனை நோக்கி நிற்கும் குலமகள், அரசனை நோக்கி நிற்கும் குடிமக்கள், மருத்துவனை நோக்கிச் செல்லும் நோயாளி, பாய்மரத்தை நோக்கிச் செல்லும் பறவை, சூரிய ஒளியைக் கண்டவுடன் மலரும் தாமரை மலர், மழையை எதிர்நோக்கும் பயிர், கடலை நோக்கிச் செல்லும் ஆறுகள் போல வித்துவக்கோட்டம்மானை நோக்கித் தாம் செல்வதாக ஆழ்வார் மிக அருமையாகப் பாடுகிறார். இப்பாசுரங்களில் குலசேகராழ்வார் சிறந்த சமுதாயக் கருத்துகளை, சிறந்த ஆழ்ந்த கருத்துகளைக் கொண்ட உவமைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

உலகில் பல வகையான சாதாரண மக்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள், வாழ்கிறார்கள். அத்தகைய மக்களை நாம் எல்லா நாடுகளிலும் காணமுடிகிறது. அவ்வாறான பல கோடிக்கணக்கான மக்கள் பெரும்பாலும் சமுதாயத்திற்குத்

தேவையான அவசியமான பல வேறு வேலைகளையும், பணிகளையும், தொழில்களையும் செய்யும் உழைக்கும் மக்களாகப் பல வேறு துறைகளிலும், இடங்களிலும் பாடுபடும் மக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய குறைகள், கஷ்டங்கள், துன்ப துயரங்களைத் தணிக்கவும் போக்கவும் இந்த உலகிலேயே அவர்களுடைய வாழ்க்கையிலேயே வழிகாண வேண்டும். அவர்களுடைய நலன்களைக் காக்க அவர்கள் அனைவருக்கும் நல்வாழ்வளிக்க அவர்களுக்குப் போதுமான உணவு, உடை, உறைவிடம், கல்வி அறிவு, விளையாட்டு வசதி, மனமகிழ்ச்சிக்கான ஆடல்பாடல் முதலியன கிடைக்கவே உலகில் ஏற்பட்ட அத்தனை அமைப்புகளும் பாடுபட்டிருக்கின்றன; மேலும் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றன.

இதையே, "நான் எந்தக் குலத்திலும் பிறக்கவில்லை. எந்தக் கலையும் பயிலவில்லை. என் புலன்களை வென்று வாழும் சக்தி எனக்கில்லை. பொறியில்லாத சாதாரண மனிதனாகவே நான் உள்ளேன். எனக்கு உன்னையன்றி, எனது நல்வாழ்விற்கு உனது பாதங்களன்றி வேறு வழியொன்று மில்லை என்னும் பரந்த பொருளில் திருமழிசையாழ்வார் மிகவும் உருக்கமான தத்துவஞானப் பொருள்மிக்க பாசுரங்களைத் திருச்சந்த விருத்தத்தில் பாடுகிறார் :

**"குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன்,**
**நலங்களாய நற்கலைகள் நாலிலும் நவின்றிலேன்**
**புலன்களைந்தும் வென்றிலேன் பொறியிலேன் புனிதநின்**
**இலங்குபாத மன்றிமற்றொர் பற்றிலேன்எம் ஈசனே"**

என்று ஆழ்வார் பாடுவதைக் காணலாம்.

மேலும் அச்சம், நோய், அல்லல், பல்பிறப்பு, மூப்பு ஆகியவைபற்றிய சிந்தையும் கவலையும் நீங்க வேண்டும் என்று தங்கள் பாசுரங்களில் குறிப்பிடுகிறார்கள்.

ஆழ்வார்களுள் தொண்டரடிப்பொடியாழ்வார் தனிச் சிறப்புமிக்க ஆழ்வாராவார். அவர் தமது பெயரையே தொண்டரடிப்பொடி என்று மாற்றிக்கொண்டவர். அவருடைய திருமாலைப் பாசுரங்களும் தனித் தன்மையும் தனிச் சிறப்பும் சமூகத் தன்மையும் கொண்டவைகளாகும்.

மனிதனுக்குப் பசி, பிணி, துன்பம், மூப்பு நீங்கவேண்டும் என்று பாடுகிறார்.

"வேதநூல் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேலும்
பாதியும் உறங்கிப் போகும்
நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்
பிணிபசி மூப்புத் துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே !"

என்று பாடுகிறார்.

திருவரங்கத்தானை வழிபடுவோர் யாவராயினும் அவர்கள் அனைவரும் ஓர் குலம், அவர்களுக்கிடையில் எந்த வேறுபாடும் கிடையாது என்று சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் எடுத்துக் கூறியும், அத்திருவரங்கத்தானை வழிபட்டால் நமது தீவினைகள் போகும், எல்லா நலன்களும் கிட்டும் என்றெல்லாம் பாடுகிறார்.

"பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனும்
எம்மடி யார்க ளாகில்
தொழுமின்நீர் கொடுமின் கொள்மின்"

என்றும்,

"திருமடந்தை மண்மடந்தை யிருபாலும் திகழத்
தீவினைகள் போயகல அடியவர்கட் கென்றும்
அருள்நடந்துஇவ் வேழுலகத் தவர்பணிய வானோர்
அமர்ந்தேத்த இருந்தவிடம்"

என்றும் உளமுருகப் பாடி மக்களுக்கெல்லாம் அறிவுரை கூறுகிறார்.

பொய்க்கருத்துகளை மனத்திலிருந்து அகற்றவேண்டும் என்றும், ஐந்து புலன்களையும் நெறிப்படுத்தி மெய்யான நிலையிலே தன்னை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் மெய்ஞ்ஞானக் கருத்தில்,

"பொய்வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்ந்நின்ற வித்தகனை"

என்று ஆழ்வார் பாடுகிறார்.

**"தந்தையும், தாயும் மக்களும் மிக்க சுற்றமும், சுற்றி நின் றகலா பந்தமும், பந்த மறுப்பதோர் மருந்தும், பான்மையும், பல்லுயிர்க் கெல்லாம் அந்தமும் வாழ்வும் ஆயவெம் பெருமான்"** என்று ஆழ்வார் திருவரங்கனை நினைத்து, அவ்வரங்கனை நமது வாழ்வோடிணைத்து அதில் நம்மையும் இணைத்துப் பாடி மகிழ்கிறார்.

இராமன் குகனைத் தோழனாக, உடன்பிறந்தோனாக ஏற்று உரையாடியதைக் கம்பன் தமது இராமாவதாரக் கதையில் குகப்படலத்திலும் வேறு சில இடங்களிலும் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். அது இராமனுடைய சகோதரத்துவக் கொள்கையை வெளிப்படுத்துகிறது. "குகனோடு ஐவர் ஆனோம்" என்னும் கம்பனது காவிய அடிகள் மிகவும் பிரபலமானவைகளாகும்.

இக்கருத்தை ஆழ்வார்களும் பல இடங்களிலும் பால பாசுரங்களிலும் மிகவும் சிறப்பாகக் குறிப்பிட்டுப் பாடுகிறார்கள். அப்பாசுரங்களின் உட்கருத்தைச் சகோதரத்துவக் கருத்தை நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

"ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
திரங்கி மற்றவர்க் கின்னருள் சுரந்து
மாழை மான நோக்கியுன் தோழி
உம்பி எம்பிஎன் றொழிந்திலை உகந்து
தோழன் நீயெனக் கிங்கொழி என்ற
சொற்கள் வந்துஅடி யேன்மனத் திருந்திட"

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

"வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய்தக வினுக்கில்லை கைம்மா றென்று
கோதில் வாய்மையி னாயொடு முடனே
உண்பன்நான் என்றஒண் பொருள் எனக்கும்
ஆதல் வேண்டும்"

என்று ஆழ்வார் பாடுவது அவருடைய ஆசை மட்டுமல்ல, அக்கருத்து மற்றவர்களுக்கும் செல்ல வேண்டும் என்பதுமாகும். இன்னும்,

**"நின்ற வினையும் துயரும் கெட, மாமல ரேந்தி சென்று பணிமின், எழுமின், தொழுமின், தொண்டர்காள்"** என்று திருமால் தொண்டிற்கு அனைவரையும் அழைக்கிறார்.

திருமங்கையாழ்வார் உலக வாழ்க்கையை நன்கு அனுபவித்தவர். அவருடைய கள்ளமில்லாத திருமால் சேவை காரணமாக எம்பெருமானின் அருளால் உயர்வான பெருமையுண்டாகிறது. திவ்யமான நாராயண நாமத்தைக் கண்டு கொள்கிறார். அதனால் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறார்.

**"வாடினேன் வாடி, வருந்தினேன் மனத்தால்**
**பெரும்துயர் இடும்பையிற் பிறந்து,**
**கூடினேன் கூடி, இளையவர் தம்மொடு**
**அவர்தரும் கலவியே கருதி,**
**ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்,**
**உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து,**
**நாடினேன் நாடி, நான்கண்டு கொண்டேன்,**
**நாரா யணாவென்னும் நாமம்"**

என்று மனமுருகப் பாடித் திருமால் சேவையில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டவர். தமது சொந்த வாழ்க்கை அனுபவங்களின் மூலம் உண்மைகளைக் கண்டு தெளிந்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசுரங்களைப் பாடியவர். உண்டியும் பெண்டிருமே பெருவாழ்வு என்றிருந்த நிலை மாறி, திருமால் சேவையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். தமது அனுபவத்தின்மூலம் கண்டறிந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி மகிழ்கிறார். அவர் திருவெவ்வுள் பிரானைப்பற்றிய பாசுரங்களில்,

**"தந்தைதாய் மக்களே சுற்றமென்று**
**உற்றவர் பற்றிநின்ற**
**பந்தமார் வாழ்க்கையை நொந்துநீ**
**பழியெனக் கருதினாயேல்"**

என்றார்,

"மின்னுமா வல்லியும் வஞ்சியும்
வென்றநுண் இடைநு டங்கும்
அன்னமென் னடையினார் கலவியை
அருவருத் தஞ்சி னாயேல்"

*என்றும்,*

"பூணுலா மென்முலைப் பாவைமார்
பொய்யினை மெய்யிதென்று
பேணுவார் பேசுமப் பேச்சைநீ
பிழையெனக் கருதினாயேல்"

*என்றும்,*

"பண்ணுலாம் மென்மொழிப் பாவைமார்
பணைமுலை அணைதும்நாம் என்று
எண்ணுவார் எண்ணம தொழித்துநீ
பிழைத்துய்யக் கருதி னாயேல்"

*என்றும்,*

"மஞ்சுதோய் வெண்குடை மன்னராய்
வாரணம் சூழ வாழ்ந்தார்
துஞ்சினார் என்பதோர் சொல்லைநீ
துயரெனக் கருதி னாயேல்"

*என்றும்,*

"உருவினார் பிறவிசேர் ஊன்பொதி
நரம்புதோல் குரம்பை யுள்புக்கு
அருவிநோய் செய்துநின் றைவர்தாம்
வாழ்வதற் கஞ்சி னாயேல்"

*என்றும்,*

"நோயெலாம் பெய்ததோர் ஆக்கையை
மெய்யெனக் கொண்டு வாளா
பேயர்தாம் பேசும்அப் பேச்சைநீ
பிழையெனக் கருதி னாயேல்"

*என்றும்,*

"மஞ்சுசேர் ஆக்கையை நீர்நிலம்
காலியை மயங்கி நின்ற
அச்சுசேர் ஆக்கையை அரணம்அன்று
என்றுய்யக் கருதி னாயேல்"

*என்றும்,*

"வெள்ளியார், பிண்டியார், போதியார்
என்றிவர் ஓது கின்ற
கள்ளநூல் தன்னையும் கருமமன்று
என்றுய்யக் கருதி னாயேல்"

என்றெல்லாம் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே என்று நெஞ்சுருகப் பாடி அனைவருக்கும் அறிவுரை கூறி வழி காட்டுகிறார்.

நம்மாழ்வார் மிகவும் புகழ்மிக்க ஆழ்வாராவார். அவரும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாசுரங்கள் பாடியுள்ளார்.

"களிப்பும் கவர்வும் மற்றுப் பிறப்புப் பிணிமூப்பு இறப்பற்று
ஒளிக்கொண்ட சோதியமாய் உடன்கூடுவது என்றுகொலோ?"

என்று அவர் பாடுகிறார். மேலும் அவர்,

"கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
தளவில ராகில் சார்வது சதிரே"

என்று தொடங்கி, **"சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது"** என்றும், **"பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே"** என்றும், **"கருமவன் பாசம் கழிந்துழன்று உய்யவே, திறமுடை வலத்தால் தீவினை பெருக்காது"** என்றும், **"கிறியென நினைமின், கீழ்மை செய்யாதே"** எனவும், **"நலமென நினைமின்"** என்றும், **"வலம்செய்து வைகல், வலங்கழியாதே"** என்றும், **"வழக்கென நினைமின் வல்வினை மூழ்காது"** எனவும், **"சூதென்று களவும் சூதும் செய்யாதே"** என்றெல்லாம் பாடி, திருமாலிருஞ்சோலை மலையில் எழுந்தருளியுள்ள எம்பிரானை வணங்கி ஆராதிக்குமாறு நம்மாழ்வார் பெருமான் கூறுகிறார்.

இளமை, செல்வம், யாக்கை ஆகியவற்றின் நிலையாமை பற்றிச் சிலப்பதிகாரக் காப்பியம் மிக வலுவான கருத்துகளை முன்வைத்திருப்பதைக் காண்கிறோம். இக்கருத்துகள் புத்த சமணத் தத்துவஞானக் கருத்துகளைச் சார்ந்தவை. இந்தப் பிரபஞ்சத்திலிருக்கும் சகல விதமான பொருள்களும் அவைகளின் காட்சிகளும் நிலையானவையல்ல; அவை இடைவிடாமல் மாறிக்கொண்டிருக்கின்றன என்னும் தத்துவ

ஞான நிலையிலிருந்து இளமை செல்வம் யாக்கை ஆகியவைகளின் நிலையாமைக் கருத்து முடிவுகளைச் சமணமும் புத்தமும் வலியுறுத்தியுள்ளன.

அந்த நிலையிலிருந்து சில புத்த சமணப் பிரிவினர், இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் பொய்யானவை, எல்லாக் காட்சிகளும் மாயத் தோற்றங்களேயாகும் என்னும் முடிவுக்கு வந்து, வாழ்க்கையை வெறுத்துத் துறவு பூண்டு, அத்துறவுக்கு முதலிடம் கொடுத்தனர். அடுத்த காலத்தில் புத்தமும் சமணமும் துறவுக்கும், துறவிகளின் மடங்களுக்கும் அளவுக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்து விட்டன.

ஆழ்வார்களும் நிலையாமைபற்றிப் பல பாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள சகல விதமான பொருள்களும் இடைவிடாமல் செயல்பட்டுக் கொண்டும், மாறிக்கொண்டும், பழைய நிலை நீங்கிப் புதிய நிலை அடைந்துகொண்டும் இருக்கின்றன என்னும் தத்துவ நிலையிலிருந்து நிலையாமைக் கொள்கை உருவாகிப் பல வடிவம் பெற்றது.

ஆழ்வார்களும் இந்தக் கொள்கையைப் பயன்படுத்தி உலகை நல்வழிப்படுத்துவதற்கு முயற்சி செய்துள்ளார்கள்; அரசர்களையும் ஆட்சிமுறைகளையும் நல்வழிப்படுத்தவும் முயன்றிருக்கிறார்கள். நம்மாழ்வார் தமது திருவாய் மொழியில் "ஒரு நாயகம்" என்று தொடங்கும் பாசுரங்களில் இக்கருத்துகளை முன்வைத்திருப்பதைக் காணலாம்.

"ஒருநா யகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்"

"உய்ம்மின் திறைகொணர்ந் தென்றுஉல காண்டவர் இம்மையே
தம்மின் சுவைமட வாரைப் பிறர்கொள்ளத் தாம்விட்டு
வெம்மின் ஒளிவெயில் கானகம் போய்க்குமை தின்பார்கள்"

என்றும்,

"அடிசேர் முடியின ராகி யரசர்கள் தாம்தொழ
இடிசேர் முரசங்கள் முற்றத் தியம்ப இருந்தவர்
பொடிசேர் துகளாய்ப் போவார்கள்"

என்றும்,

"நினைப்பான் புகில்கடல் எக்கலின் நுண்மண லிற்பலர்
எனைத்தோ ருகங்களும் இவ்வுல காண்டு கழிந்தவர்,
மனைப்பால் மருங்கற மாய்தலல் லால்மற்றுக் கண்டிலம்"

என்றும்,

"பணிமின் திருவருள் என்னும்அஞ் சீதப்பைம் பூம்பள்ளி
அணிமென் குழலார் இன்பக் கலவி அமுதுண்டார்
துணிமுன்பு நாலப்பல் லேழையர் தாமிழிப்பச் செல்வர்"

என்றும்,

"வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்குளின் மாய்ந்துமாய்ந்து
ஆழ்ந்தாரென் றல்லால் அன்றுமுதலின் றறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை"

என்றும்,

"ஆமின் சுவையவை ஆறோடு அடிசில்உண்
டார்ந்தபின்
தூமென் மொழிமட வார்இரக் கப்பின்னும்
துற்றுவார்
ஈமின் எமக்கொரு துற்றென் றிடறுவர்"

என்றும்,

"குளங்கொள் நிறைபுகழ் மன்னர்
கொடைக்கடன் பூண்டிருந்து
இளங்கி உலகுட னாக்கிலும்
ஆங்கவ னையில்லார்
வளங்கொண்ட போகத்து மன்னியும்
மீள்வார்கள் மீளவில்லை"

என்றெல்லாம் நம்மாழ்வார் பெருமான் ஆழ்ந்த சிறப்பான கருத்துகளை மக்களின் மேன்மைக்காக முன்வைத்துப் பாடுகிறார்.

"கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்று வள்ளுவப்பேராசான் குறிப்பிடுகிறார்.

"கண்டுகேட் டுற்றுமோந் துண்டுழலும் ஐங்கருவி
கண்ட இன்பம் தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்
ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்ப
கண்ட சதிர் கண்டொழிந்தேன் அடைந்தேன்உன் திருவடியே"

என்று ஆழ்வார் பாடுகிறார்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்புலன்கள். இவைபற்றியும், இவைகளினால் உணரப்படும் புலனறிவு பற்றியும், வள்ளுவரும் இளங்கோவடிகளும் பல இடங்களிலும் குறிப்பிடுகிறார்கள்; ஆழ்வார்களும் நாயன்மார்களும் குறிப்பிடுகிறார்கள். ஐம்புலனறிவே அறிவு வளர்ச்சியின் ஆதாரம்; அறிவுத் தத்துவத்தின் அடிப்படை. ஐம்புலன்கள் மூலம் மனிதனுக்கு அறிவும், அதன்மூலம் இன்பமும் கிடைக்கின்றன. அவ்வின்பங்களின் நுகர்வு ஓர் அளவுக்குள் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அவை அளவை மீறினால் மனிதனைக் கெடுத்துவிடும். அவ்வின்பங்களைக் கட்டுப்படுத்த மனிதன் தனது ஆறாவது அறிவைப் பயன்படுத்த வேண்டும். மனிதன் தனது வாழ்வில் மனித மேம்பாட்டிற்காகத் தனது குறிக்கோள்களை உருவாக்கிக் கொண்டு செயல்பட வேண்டும். ஆழ்வார்கள் அதற்காகப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தினார்கள். பெருமாளுக்குச் சகலவிதமான கல்யாண குணங்களையும் காணிக்கையாகச் செலுத்திப் பரவசப்பட்டார்கள்; உலக நன்மையை வேண்டினார்கள்.

மக்களிடத்தில் பக்தி எழுச்சி ஏற்பட்டுத் தொண்டர் கூட்டம் பெருகும்போது, உலகில் துன்பங்கள் நீங்கித் தொல்லைகள் தொலைந்து இன்பங்கள் பெருகுவதாக ஆழ்வார்கள் கணித்து, மகிழ்ச்சிப் பொங்கப் பாடி நம்மையும் அம்மகிழ்ச்சியில் ஈடுபடுத்துகிறார்கள்.

"பொலிக, பொலிக, பொலிக,
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கிங் கியாதொன்று மில்லை
கலியும் கெடும்கண்டு கொள்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடி
யாடி யுழிதரக் கண்டோம்"

என்றும்,

"திரியும் கலியுகம் நீங்கித்
தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிருத யுகம்பற்றிப்
பேரின்ப வெள்ளம் பெருகக்
கரிய முகில்வண்ணன் எம்மான்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்திசை பாடி
எங்கும் இடம்கொண் டனவே"

என்றும்,

"இடங்கொள் சமயத்தை யெல்லாம்
எடுத்துக் களைவன போல
தடங்கடல் பள்ளிப் பெருமான்
தன்னுடைப் பூதங்க ளேயாய்
கிடந்தும் இருந்தும் எழுந்தும்
கீதம் பலபல பாடி
நடந்தும் பரந்தும் குனித்தும்
நாடகம் செய்கின் றனவே"

என்றும்,

"கொன்றுஉயிர் உண்ணும் விசாதி
பகைபசி தீயன வெல்லாம்
நின்றிவ் வுலகில் கடிவான்
நேமிப் பிரான்தமர் போந்தார்
நன்றிசை பாடியும் துள்ளி
யாடியும் ஞாலம் பறந்தார்
சென்றுதொழு துய்ம்மின் தொண்டீர்
சிந்தை யைச்செந் நிறுத்தியே"

என்றும் பெருமகிழ்ச்சியுடன் பாடி நம்மாழ்வார் நம்மையும் மகிழ்விக்கிறார்.

திருக்கண்ணபுரம் சேர்ந்தால், வினைகள் கெடும், துயர்கள் போகும், பிணிகள் சாரா, பிறவித்துன்பம் போகும், ஏதம் சாராது என்றும்,

"இல்லை யல்லல் எனக்கேல் இனியென்குறை,
அல்லி மாதர் அமரும் திருமார்பினன்,
கல்லில் ஏய்ந்த மதில்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல நாளும் துயர்பாடு சாராவே"

என்றும் பாடுகிறார்.

திருமோகூர்ப்பெருமானைச் சரணடைந்தால்,

"இடர்கெட எம்மைப் போந்தளி யாய்என் றேத்தி
சுடர்கொள் சோதியைத் தேவரும் முனிவரும் தொடர
படர்கொள் பாம்பணைப் பள்ளிகொள் வான்திரு மோகூர்
இடர்கெட அடிபரவுதும் தொண்டீர் வம்மினே"

என்றும்,

"துயர்கெ டும்கடிது, அடைந்துவந் தடியவர் தொழுமின்
உயர்கொள் சோலையொண் தடமணி யொளிதிரு மோகூர்
பெயர்கள் ஆயிரம் உடையவல் லரக்கர்புக் கழுந்த
தயர தன்பெற்ற மரகத மணித்தடத் தினையே"

என்றும் திருமோகூர்ப்பிரானை யடைந்தால் இடர்கள் கெடும், துயர்கள் கெடும் என்று ஆழ்வார் பாடுகிறார்.

திருவனந்தபுரம் சேர்ந்தால்,

"கெடும்இட ராய வெல்லாம் கேசவா என்ன நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுக கில்லார்
விடமுடை யரவில் பள்ளி விரும்பினான் சுரும்ப லற்றும்
தடமுடை வயல்அ னந்த புரநகர் புகுதும் இன்றே"

என்று தொடங்கி, **"தீரும் நோய்வினைகள் எல்லாம் திண்ணம் நாம் அறியச் சொன்னோம்"** என்றும், **"கடுவினை களையலாகும் காமனைப் பயந்த காளை"** என்றும் **"மாய்ந்தறும் வினைகள் தாமே மாதவா"** என்றும் நம்மாழ்வார் பாடுகிறார்.

"பணிநெஞ்சே, நாளும் பரமபரம் பரனை
பிணியொன்றும் சாரா, பிறவிகெடுத் தாளும்
மணிநின்ற சோதி மதுசூதன் என்னம்மான்
அணிநின்ற செம்பொன் அடலாழி யானே"

என்றும் மனமுருகப் பாடுகிறார்.

திருநாடு செல்வோருக்கு நடைபெறும் உபசாரங்கள் பற்றி,

"விதிவகை புகுந்தனர் என்றுநல் வேதியர்
பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்
நிதியும்நற் சுண்ணமும் நிறைகுட விளக்கமும்
மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே"

என்றும் நம்மாழ்வார் பாடுகிறார்.

ஆழ்வார் தமது பரம பக்திமூலம் திருமாலை முன்னிறுத்துவதாக அருளி,

"சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும்பா ழேயோ
சூழ்ந்தத னில்பெரிய பரநன் மலர்ச்சோ தீயோ !
சூழ்ந்தத னில்பெரிய சுடர்ஞான இன்ப மேயோ !
சூழ்ந்த தனில்பெரிய என்அவா அறச்சூழ்ந் தாயே !"

என்று உளம் கனிந்து பாடுகிறார்.

**பொய்கையாழ்வார்**

பொய்கையாழ்வார் அருளிச்செய்த திருவந்தாதிப் பாடல்கள் முழுவதும், பக்திச் சுவையும், தத்துவ ஞான ஒளியும், வாழ்க்கை நெறிமுறைகளும் மனிதாபிமானப் பற்றும் நிறைந்த மிக அருமையான பாடல்களாகும்.

"வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யான்அடிக்கே சூட்டினென்சொன் மாலை
இடராழி நீங்குகவே என்று"

உலகத்தையே திரியாகவும், பெருங்கடல் நீரையே நெய்யாகவும், வெம்மை மிக்க கதிரோனையே விளக்காகவும் வைத்து உலகின் இடர்கள், துன்ப துயரங்கள் நீங்குவதற்காக ஒளிமிக்க ஆழியானின் திருமாலின் அடிகளுக்குப் பாமாலை சூட்டினேன் என்று ஆழ்வார் பாடுகிறார்.

இயற்கையோடிணைந்து உலகையும் கடலையும் ஞாயிற்றையும் இணைத்து உலகின் உயிர்களெல்லாம் இடரின்றி வாழ, வளர ஆழ்வார் மனம் நிறைந்து விசாலமான உள்ளத்துடன் தமது இனிய பாடல்களைத் தொடங்கு வதைக் காண்கிறோம்.

"இயல்வாக ஈன்துழா யான்அடிக்கே செல்ல
முயல்வார் இயல்அமரர் முன்னம் - இயல்வாக
நீதியால் ஓதி நியமங்க ளால்பரவ
ஆதியாய் நின்றார் அவர்"

என்று நீதியையும் நியமங்களையும் சுட்டிக்காட்டுகிறார். நீதியால் ஓதி, நியமங்களால் பரவி, ஆதியாக நிற்கிறான் துழாயான் என்று ஆழ்வார் மிக நுட்பமான ஆழ்ந்த கருத்துகளைத் தமது பாடலில் குறிப்பிடுகிறார்.

ஆண்டவனை - கடவுளை - எந்த வடிவத்திலும் எந்த முறையிலும் தொழலாம் என்னும் கருத்தில்

"அவரவர் தாம்தாம் அறிந்தவா றேத்தி
இவரிவர் எம்பெருமான் என்று - அவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல்"

என்று ஒரு முடிவும் கூறுகிறார்,

"குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக என்நெஞ்சே - என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு"

என்றும்,

"மனமாசு தீரும், அருவினையும் சாரா
தனமாய தானேகை கூடும் - புனமேய
பூந்துழா யான்அடிக்கே போதொடு நீரேந்தி
தாம்தொழா நிற்பார் தமர்"

என்றும்,

"அடைந்த அருவினையோ டல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் - நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரண்அழிய முன்னொருநாள்
தன்வில்அங்கை வைத்தான் சரண்"

குன்றனைய குற்றங்கள் நிறைந்திருந்தாலும் அவை தீர்ந்துவிடும், நல்ல குணங்கள் சேரும், மனமாசுகள் தீரும், தீவினைகள் சாரா, அனைத்துச் செல்வங்களும் சேரும், ஏற்கனவே நாம் அடைந்திருந்த தீவினைகளும் அல்லல்களும் நோய்களும் பாவங்களும் இதர தொல்லைகளும் நீங்கும், நாம் நாராயணனைச் சரணடைந்தால் என்று ஆழ்வார் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

"நயவேன் பிறர்பொருளை, நள்ளேன்கீ ழாரோடு
உயவேன் உயர்ந்தவரோ டல்லால் - வியவேன்
திருமாலை யல்லது தெய்வம்என் றேத்தேன்
வருமாறென் நம்மேல் வினை"

பிறர் பொருள்களை விரும்பேன், கீழோரோடு சேர மாட்டேன், உயர்ந்தவரோடு மட்டுமே சேர்ந்து இருப்பேன் என்று கூறுகிறார்.

"வினையால் அடர்ப்படார், வெந்நரகில் சேரார்,
தினையேனும் தீக்கதிக்கட் செல்லார் - நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர்ச் செங்கட்
கரியானைக் கைதொழு தக்கால்"

தீவினைகளால் தொல்லைகள் படமாட்டோம், நரகத்தில் விழமாட்டோம், தினையளவும் தீய வழிகளில் செல்ல மாட்டோம் என்றெல்லாம் ஆழ்வார் தமது பக்திப் பாடல்மூலம் மக்களுக்கு நல்ல அறிவுரைகள் கூறுகிறார்.

"காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த
மேலைத் தலைமறையோர் வேட்பனவும் - வேலைக்கண்
ஓராழி யான்அடியே, ஓதுவதும் ஓர்ப்பனவும்
பேராழி கொண்டான் பெயர்"

என்று பாடுகிறார். இன்னும்,

"பெயரும் கருங்கடலே நோக்கும்ஆறு, ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்
தருமனையே நோக்கும்ஒண் டாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு"

கருங்கடலை நோக்கியே ஓடுகிறது, ஆறு. கதிரவனின் ஒளியை நோக்கிப் பூக்கள் மலர்கின்றன. அதுபோல, உயிர் தருமத்தை நோக்கிச் செல்கிறது. உணர்வு திருமாலை மட்டுமே நோக்கிச் செல்கிறது என்று சிறந்த உவமைகளோடு ஆழ்வார் குறிப்பிடுகிறார். இதே போன்ற சிறந்த உவமைகளைக் குலசேகராழ்வார் பாடல்களிலும் பார்த்தோம்.

"நன்று பிணிமூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலமுழுதும் ஆண்டாலும் - என்றும்
விடல்ஆழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடல்ஆழி கொண்டான்மாட் டன்பு"

என்று, பிணிமூப்பு ஆகியவை இன்றி ஊழிக் காலம் உலகத்தை ஆள்வதற்கு எனக்கு வாய்ப்பு ஏற்பட்டாலும் நான் அதை விரும்பேன்; திருமால்பால் உள்ள அன்பை விடமாட்டேன் என்று பக்திச் சுவைமிகுந்து ஆழ்வார் பாடுகிறார்.

பிணிமூப்பு இல்லாமை, ஆட்சி அதிகாரம், அதற்கான வாய்ப்புகள் ஆகியவைகளெல்லாம் ஆழ்வாருடைய பாடல்களில் வெளிப்படுகின்றன.

**பூதத்தாழ்வார்**

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நாள்"

என்று ஆழ்வார் தமது உணர்வு உயிருடன் இணைந்து அன்பையே தகளியாகவும், ஆர்வத்தையே நெய்யாகவும், எண்ணங்களையே திரியாகவும் ஞானச்சுடர் விளக்கை நாராயணப்பெருமாளுக்கு எனது ஞானத்தமிழ்ப் பாடல்களால் ஏற்றிப் போற்றினேன் என்று கூறுகிறார். பக்தி வழியில் இங்கு பூதத்தாழ்வார் மிகச்சிறந்த முன்னுதாரண மாகத் திகழ்கிறார்.

"பழிபாவம் கையகற்றிப் பல்காலும் நின்னை
வழிவாழ்வார் வாழ்வராம் மாதோ - வழுவின்றி
நாரணன்றன் நாமங்கள் நன்குணர்ந்து நன்கேத்தும்
காரணங்கள் தாமுடையார் தாம்"

என்றும்,

"அரிய தெளிதாகும் ஆற்றலால் மாற்றிப்
பெருக முயல்வாரைப் பெற்றால் - கரியதோர்
வெண்கோட்டு மால்யானை வென்றி முடித்தன்றே
தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து"

என்றும், இன்னும்,

"தாழ்ந்து வரங்கொண்டு தக்க வகைகளால்
வாழ்ந்து கழிவாரை வாழ்விக்கும்"

என்றும்,

"பதியமைந்து நாடிப் பருத்தெழுந்த சிந்தை
மதியுரிஞ்சி வான்முகடு நோக்கி - கதிமிகுத்துஅம்
கோல்தேடி யோடும் கொழுந்ததே போன்றதே
மால்தேடி யோடும் மனம்"

என்றும்,

"மகிழ்ந்தது சிந்தை திருமாலே"

என்றும்,

"துணிந்தது சிந்தை துழாயலங்கல் அங்கம்
அணிந்தவன்பேர்"

என்றும்,

"சிறியார் பெருமை சிறிதின்கண் எய்தும்
அறியாரும் தாம்அறியா ராவர்"

என்றும்,

"ஓத்தின் பொருள்முடிவும் இத்தனையே உத்தமன்பேர்
ஏத்தும் திறம்அறிமின் ஏழைகாள்"

என்றும்,

"பொருளால் அமருலகம் புக்கியல லாகாது
அருளால் அறம்அருளும் அன்றே"

என்றும் ஆழ்வார் பாடுகிறார்.

"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லை யாங்கு"

என்பது வள்ளுவர் வாக்காகும்.

"அருள்புரிந்த சிந்தை அடியார்மேல் வைத்து
பொருள்தெரிந்து காண்குற்றஅப் போது - இருள்திரிந்து
நோக்கினேன்"

என்று ஆழ்வார் மனமுருகிப் பாடுகிறார்.

**பேயாழ்வார்**

"திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று"

என்று பேயாழ்வார் தமது திருவந்தாதியைத் தொடங்குகிறார்.

"மருந்தும் பொருளும் அமுதமும் தானே
திருந்திய செங்கண்மால் ஆங்கே"

என்று பாடுகிறார்.

"தேசும் திறலும், திருவும் உருவமும்,
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும் - பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான்பேர் ஓத
நலம்புரிந்து சென்றடையும் நன்கு"

என்றும் பாடுகிறார்.

இந்த நலன்களெல்லாம் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது ஆழ்வாரின் விருப்பமாகும்.

"அறிவென்னும் தாள்கொளுவி ஐம்புலனும் தம்மில்
செறிவென்னும் திண்கதவம் செம்மி - மறையென்றும்
நன்கோதி நன்குணர்வார் காண்பரே நாடோறும்
பைங்கோத வண்ணன் படி"

இங்கு அறிவு, ஐம்புலன், செறிவு - அஃதாவது கருத்துச் செறிவு - நான்மறைகள் மற்றும் இதர அறிவுச் செல்வங்கள், அவைகளைப் படிப்பது, புரிந்துகொள்வது ஆகிய பணிகளைப்பற்றி மிகவும் சிறப்பாகச் சிறந்த உவமைகளுடன் இணைத்து ஆழ்வார் மிகவும் நன்றாக எடுத்துக் கூறுகிறார்.

"ஓர்த்த மனத்தராய் ஐந்தடக்கி ஆராய்ந்து
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம்"

என மனத்தை ஒருமுகப்படுத்தி, ஐம்பொறிகளையும் அடக்கி ஆராய்ந்து பேர்த்தால் பிறப்பையும் தவிர்க்கலாம் என்று ஆழ்வார் கூறுவதைக் காணலாம்.

"உய்த்துணர் வென்னும் ஒளிகொள் விளக்கேற்றி
வைத்தவனை நாடி வலைப்படுத்தேன் - மெத்தெனவே
நின்றான் இருந்தான் கிடந்தான் என்நெஞ்சத்துப்
பொன்றாமை மாயன் புகுந்து"

என்று ஆழ்வார் பாடுகிறார்.

**"அவர், இவர் என்றில்லை அனங்கவேள் தாதைக்கு, எவரும் எதிரில்லை கண்டீர்"** என்றும், **"ஒருங்கிருந்த நல்வினையும் தீவினையும் ஆவான்"** என்றும், **"அன்பாவாய் ஆரமுதம் ஆவாய் அடியேனுக்கின்பாவாய் எல்லாமும் நீயாவாய்"** என்றும், **"இல்லறம் இல்லேல் துறவறம்இல் என்னும் சொல்லறம் அல்லனவும் சொல்லல்ல - நல்லறம் ஆவனவும், நால்வேத மாத்தவமும்**

நாரணனே யாவது ஈது அன்றென்பா ரார்?" என்றும் அரிய பல கருத்துகளை ஆழ்வார் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இல்லறம் அல்லது நல்லறம் அன்று என்பது தமிழ்த்தாயின் சொல்லாகும். அதை ஆழ்வார் தெளிவாகக் கூறுவதைக் காணலாம். இன்னும்,

"பாட்டும் முறையும் படுகதையும் பல்பொருளும்,
ஈட்டிய தீயும் இருவிசும்பும் - கேட்ட
மனுவும் சுருதி மறைநான்கும் மாயன்
றனமாயை யிற்பட்ட தற்பு"

என்று ஆழ்வார் உறுதிப்படப் பாடுவதைக் காண்கிறோம்.

"வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி அவையவைதோ
றணங்கும் பலபல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்கும்நின் னோரைஇல் லாய்நின்கண் வேட்கை எழுவிப்பனே"

என்று நம்மாழ்வார் தமது திருவிருத்தத்தில் குறிப்பிடுகிறார்.

பலவேறு வழிபாடுகளையும் அவற்றினால் ஏற்படும் மனவிகற்பங்களைப்பற்றியும், பல வேறு சமயங்களையும் அவைகளுக்குள் ஏற்படும் பிணக்குகளையும் ஆழ்வார் இங்கு குறிப்பிடுகிறார்.

திருமங்கையாழ்வார் "திருவெழு கூற்றிருக்கை" என்னும் அருமையான பாடலைப் பாடியுள்ளார். அதுபற்றி எம்பெருமானார் கீழ்க்கண்ட தனியன் பாடியுள்ளார்.

"சீரார் திருவெழு கூற்றிருக் கையென்னும் செந்தமிழால்
ஆரா வமுதன் குடந்தைப் பிரான்றன் அடியிணைக்கீழ்
ஏரார் மறைப்பொரு ளெல்லா மெடுத்திவ் வுலகுய்யவே
சோராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே"

என்று மிக அருமையாகச் சுட்டிக்காட்டிப் பாடியுள்ளார்.

இந்த உலகம் உய்வதற்காகத் திருமங்கைப்பிரான், குடந்தையில் எழுந்தருளியுள்ள ஆராவமுதன் அடிகளிலிருந்துகொண்டு சீர் மிகுந்த திருஎழுகூற்றிருக்கை என்னும் செந்தமிழ்ப் பாடல்களில் வேதப்பொருள்களையெல்லாம் சோர்வின்றிச் சொன்னதைக் குறிப்பிட்டு அவனுடைய அருந்துணை நமக்குண்டு என்று எம்பெருமானார் கூறுகிறார்.

ஆசிரியப்பாவில் பாடியுள்ள பாடல் அடிகளில் ஆழ்வார்,

ஒரு பேருந்தி (திருமாலின் உந்திக் கமலம்) இருசுடர், மும்மதிள், இருகால், ஒரு சிலை, ஈரெயிறு, மூவடி நிலம், நானிலம், முப்புரிநூல், இருபிறப்பு, ஒரு முறை, ஈரடி, மூவுலகம், நாற்றிசை, நால்வாய், மும்மதம், இருநீர்மடு, முத்தீ, நான்மறை, ஐவகை வேள்வி, அறுதொழில், ஐம்புலன் அகத்தினுள்ள செறுத்து, நான்குடன் அடக்கி, முக்குணத் திரண்டவை யகற்றி, ஒன்றின் ஒன்றி நின்று, இரு பிறப்பறுப்போர் அறியும் தன்மை, முக்கண், நாற்றோள், ஐவாய் அரவு, ஆறு பொதி சடையோன், ஏழுலகம், அறுசுவை, ஐம்படை, நாற்றோள், முந்நீர், ஈரடி, ஒன்றிய மனம், ஒரு மதிமுகம், மங்கையர் இருவர், முப்பொழுது, நால்வகை வருணம், ஐம்பெரும்பூதம், அறுபதம், ஏழ்விடை, அறுவகைச் சமயம், ஐம்பால், அறமுதல் நான்கவை, மூர்த்தி மூன்று, இருவகைப் பயன் என்றெல்லாம் தொகுத்து, வகுத்து அறிதுயில் அமர்ந்த பிரானைக் குறிப்பிட்டுப் பாடுகிறார். இப்பாடல்களில் சிறந்த பல சமுதாயக் கருத்துகளையும் தத்துவ ஞானக் கருத்துகளையும் பக்திச் சுவையுடன் சிறப்பான தமிழ்ச்சொற்களில் குறிப்பிட்டு ஆழ்வார் அழகாகப் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

அறுசுவைப் பயனும் ஆண்டவனே என்று ஆழ்வார் கூறுகிறார். நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை என்று கூறுகிறார். இங்கு நால்வகை வருணத்தில் ஆழ்வார் பேதம் கற்பிக்கவில்லை, உயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை. அவைகளை ஒன்றாகவே கருதி ஆண்டவன் வடிவாகக் காண்கிறார்.

அறமுதல் நான்கவையாய் என்று, அறம் பொருள் இன்பம் வீடு என்று நான்கு புருடார்த்தங்களையும் ஆக்கல் நிலைபெறுத்தல் நீக்கல் ஆகிய படைத்தல் காத்தல் நீக்கல் இணைந்த முத்தொழில்களைக் குறிக்கும் மூர்த்திகள் மூன்றையும் இருவகைப் பயன்களையும் ஒன்றாக விரிந்து நிற்கும் ஆண்டவனை அடையாளப்படுத்தி ஆழ்வார் பாடுகிறார்.

இன்னும், "**அம்மூன்றும் ஆராயில் தானே அறம் பொருள் இன்பமென்று ஆரார், இவற்றின் இடையதனை எய்துவார் சீரார் இருகலையும் எய்துவர்**" என்று அறம் பொருள் இன்பம் என்பதில் இடையில் உள்ள பொருட் செல்வத்தைப் பெற்றால் மற்ற இரண்டும் பெறுவர் என்று ஆழ்வார் கூறுவதைக் காணலாம்.

திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமடல் பாடல்களில்,

> **"முன்னம் திசைமுகனைத் தான்படைக்க மற்றவனும்**
> **முன்னம் படைத்தனன் நான்மறைகள் - அம்மறைதான்**
> **மன்னும் அறம்பொருள் இன்பம்வீ டென்றுலகில்**
> **நன்னெறிமேம் பட்டன நான்கன்றே!"**

என்று குறிப்பிடுகிறார்.

வாழ்க்கைப் பயனீடுகளை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருடார்த்தங்களாக வகுத்துக் கூறியுள்ள சிறப்பு இந்தியச் சிந்தனையின் அறிவுத்துறையின் தலைசிறந்த படைப்பாகும். உலகச் சிந்தனையின் ஒப்புயர்வற்ற படைப்பாகும்.

**உடையவர்**

உடையவர் என்று அன்பாக வழங்கப்படும் ஸ்ரீமத் இராமானுஜாச்சாரியார் பெருமான் தலைசிறந்த தத்துவ ஞானியாக வைணவத்தைப் பிரபலப்படுத்தியும் உறுதிப் படுத்தியும் நிறுவிய கர்ம யோகியாக, பக்தி மார்க்கத்தின் வழிகாட்டியாக இந்திய வரலாற்றில் முக்கிய இடம் பெற்றவர்; வைணவ வரலாற்றில் மிக உயர்வான தனி இடம் பெற்றுள்ளவர். இராமானுஜருடைய வரலாறு ஒரு தனி சகாப்தம். அவர் மிகப்பெரிய சமூகப் புரட்சியாளர். இராமானுஜருக்குப் பெருமாள் கோயில்கள் பலவற்றிலும் தனிச் சந்நிதிகளும் உள்ளன. அவர் மக்களுடைய உள்ளங்களில் தனி இடம் பெற்றுள்ளார்.

திருவரங்கத்தமுதனார், இராமானுஜர்மீது அந்தாதி பாடியுள்ளார். அவர் அருளிச்செய்துள்ள இராமானுச நூற்றந்தாதி நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தின் பகுதியாகப் பாராட்டிப் போற்றப்படுகிறது.

"உறுபெறும் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர்,
நெறிதரும் செந்தமிழ் ஆரண மேயன்றிந் நீள்நிலத்தோர்
அரிதர நின்ற இராமா னுசன்எனக் காரமுதே"

என்று பாடுகிறார். இன்னும்,

"பொருந்திய தேசும் பொறையும் திறலும் புகழும்நல்ல
திருந்திய ஞானமும் செல்வமும் சேரும் செறுகலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையி னால்வந் தெடுத்தளித்த
அருந்தவன் எங்கள் இராமா னுசனை அடைபவர்க்கே.

என்று பாடுகிறார்.

இராமானுசர்தாம் பெரும் செல்வமும் தந்தையும் தாயும் குருவும் பூமகள் நாதனும் ஆவார் என்றும், அந்த இராமானுசரை அடைந்தால் தேசும், பொறையும், திறலும், புகழும், திருந்திய ஞானமும், செல்வமும் சேரும் என்றும் தமது பாடல்களில் குறிப்பிடுகிறார். இவையெல்லாவற் றிற்கும் மேலாகச் **"செருகலியால் வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து எடுத்து அளித்த அருந்தவப் பெருமான்"** என்று குறிப்பிடுவது சிறப்பாகும். அத்துடன் திருந்திய ஞானமும் செல்வமும் என்று குறிப்பிடப் பட்டிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

மேலும், இராமானுசரைப்பற்றிக் குறிப்பிடும்போது முத்தமிழும், நான்கு வேதங்களும் எல்லையில்லா அறநெறி அனைத்தையும் தெரிந்தவன் என்று பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

"சொல்ஆர் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும்எல்லை
இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன் எண்ணருஞ்சீர்
நல்லார் பரவும் இராமா னுசன்திரு நாமம்நம்பிக்
கல்லார் அகலிடத் தோர்எது பேறென்று காமிப்பரே"

என்று பாடுகிறார்.

அன்று மாயக் கண்ணன் ஐவருக்குத் தெய்வத் தேரினில் இருந்துகொண்டு செப்பிய கீதையின் உண்மைப் பொருளை உலகறியச் சொன்ன இராமானுசனுக்கு நிகர் யாருமில்லை என்பதை

"ஆரெனக் கின்று நிகர்சொல்லின் மாயன்அன் றைவர்தெய்வத்
தேரினிற் செப்பிய கீதையின் செம்மைப் பொருள்தெரியப்
பாரினிற் சொன்ன இராமா னுசனைப் பணியும்நல்லோர்
சீரினிற் சென்று பணிந்ததுஎன் ஆவியும் சிந்தையுமே"

என்று பாடுகிறார்.

"சீர்கொண்டு பேரறம் செய்துநல் வீடு செறிதும்என்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல் லேன்உன் பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன் உன்னுடைய
கார்கொண்ட வண்மை இராமா னுச!இது கண்டுகொள்ளே"

என்று **"எந்த மோட்ச வீட்டையும் நான் விரும்பவில்லை. இராமானுசரே உன் காலடி வீடு எனக்குப் போதும். அதை நான் எளிதில் அடையமுடியும்"** என்று குறிப்பிடுகிறார்.

"கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டுதன் உள்ளம் தடித்துஅதனால்
வலிமிக்க சீயம் இராமா னுசன்மறை வாதியராம்
புலிமிக்க தென்றுஇப் புவனத்தில் வந்தமை போற்றுவனே"

என்றும்,

"இன்புற்ற சீலத்தி ராமா னுச!என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோயுடல் தோறும் பிறந்திறந்து எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவதொன் றுண்டுஉன்
தொண்டர்கட்கே
அன்புற் றிருக்கும் படிஎன்னை யாக்கியங் காட்படுத்தே!"

என்றும் போற்றித் தம்மை ஆட்படுத்தும்படி வேண்டுகிறார்.

ஆழ்வார்கள் தங்கள் அரிய நெறிதரும் செந்தமிழ்ப் பாசுரங்கள் மூலம் மனித வாழ்க்கைக்குரிய சீரிய அற நெறி முறைகளை வகுத்துக் கூறியுள்ளனர். சிறந்த அறிவுரைகளை எடுத்துக் கூறியுள்ளனர்.

ஆழ்வார்கள் தங்கள் சொந்த வாழ்க்கையிலும் ஏற்பட்ட சில தவறுகளையும் குறைபாடுகளையும் களைந்து, சிறந்த பக்தியும் ஞானமும் பெற்று, மனித வாழ்க்கைக்குச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்துள்ளனர்.

பக்தி மார்க்கத்தில் அனைத்து மக்களையும் ஒன்று சேர்த்து, இலட்சோபலட்சம் மக்கள் திரளும் பெரும்

திருவிழாக்களுக்கு வித்திட்டனர். இன்னும் ஆண்டவனுக்கே பல்லாண்டு பாடிய பெருமை நமது பெரியாழ்வாருக்குண்டு.

ஆண்டவனை வழிபடும் மையங்களாகக் கோவில்களையும் குளங்களையும் கட்டி, வளர்த்து, வளப்படுத்தி, பெருந்திரளாக மக்கள் கூடும் பெரும் விழாக்களை வகுத்து, கல்வியும் ஞானமும் செயல்திறனும் கலைத்திறனும் மிக்கவர்களாக நாட்டு மக்களை உலக மக்களை உருவாக்கவும் ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும் சிந்தித்திருக்கிறார்கள். தங்களது சிறந்த அறிவுரைகளைத் தங்களது இனிய பாடல்களின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

உலக மக்கள் அனைவரும் நன்னெறியில் நேர்நெறியில் உயர் நெறியில் செல்ல ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள், வழிகாட்டியிருக்கிறார்கள்.

வெள்ளமும் பறவைகளும் விலங்குகளும் வேசையர் உள்ளமும் ஒரு வழியில் நேர்வழியில் சென்றன தசரதனுடைய நல்லாட்சியில் என்று கம்ப நாட்டாழ்வார் மிகச்சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

“வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர்
உள்ளமும் ஒருவழி ஓட நின்றவன்
தள்ளரும் பெரும்புகழ்த் தயர தப்பெயர்
வள்ளல் வள்உறை அயில்மன்னர் மன்னனே !”

என்பது அவருடைய அற்புதமான பாடல் அடிகளாகும்.

ஆழ்வார்கள் தங்கள் அருளாட்சிமூலம் உலகம் முழுவதையும் ஒருவழிப்படுத்த, உயர்வழிப்படுத்தத் தெய்வத் தொண்டு செய்துள்ளதை அவர்களுடைய திவ்யமான பாசுரங்களில் காண்கிறோம். உலகம் வாழ, உலகம் உய்ய, உலகிலுள்ள அனைத்து உயிர்ப்பொருள்களும் உய்ய மனித குலம் உய்ய ஆழ்வார்கள் பாடி மகிழ்ந்தார்கள்.

“நன்றுந் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும்
ஒன்றும் குறையில்லை ஓதினோம்”

என்று தொடங்கி,

"ஊழிதோறும், ஊழிதோறும் உலக முய்ய
உம்பர்களும் கேட்டுள்ள அன்பி னாலே
வாழியெனும் பூதம்பேய் பொய்கை மாறன்
மழிசையர்கோன் பட்டர்பிரான் மங்கை வேந்தன்
கோழியர்கோன் தொண்டர்துகள் பாணன் கோதை
குலமுனிவன் கூறியநூல் ஓதி வீதி
வாழியென வருந்திரளை வாழ்த்து வார்தம்
மலரடிஎன் சென்னிக்கு மலர்ந்த பூவே"

*என்று உலகமுய்ய ஆழ்வார் பெருமக்கள் பாடிய பாசுரங்களைப் பாடியும் பாடக் கேட்டும் நாமும் நலம் பெற்று பல்லாண்டு வாழ்வோமாக !*

## 5. திருமால் வழிபாடும் திருவிழாக்களும்

திருமால் வழிபாட்டைப்பற்றிச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளார் தமது காப்பியத்தில் பல இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். திருமால் வழிபாட்டு முறைகளில் இசை, நடனம், உற்சவங்கள், தீர்த்தங்கள், தீர்த்தாடனங்கள், பூசைகள், பொங்கல் விழாக்கள், தெப்ப விழாக்கள், தேர்த் திருவிழாக்கள் முதலியன முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. திருமால் கோயில்கள், பெருமாள் கோயில்கள் தமிழகத்தில் பல இடங்களிலும் முக்கியமாக நிலைபெற்றிருக்கின்றன. திருமால் கோயில்கள், பலதேவன் கோயில்களைப்பற்றிச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் பல இடங்களிலும் குறிப்புகள் உள்ளன. இவையெல்லாம் திருமால் வழிபாடு மக்களுடைய உள்ளங்களில் அக்காலத்தில் வலுவாகப் பதிந்து நிலைபெற்றிருந்ததையே காட்டுகின்றன. மிகவும் புகழ் பெற்ற வைணவத் திருத்தலங்களுள் திருவரங்கம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை, திருவனந்தபுரம் முதலியவைபற்றிய முக்கிய குறிப்புகளைச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் காண்கிறோம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் சிறப்பாக இடம் பெற்றுள்ள ஆய்ச்சியர் குரவைப் பாடல்கள் ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுக்கு ஈடாகக் கருத்தாழமும் இசை, நடனக் கலைகளின் ஆடல் பாடல்களின் இணைப்பும் பக்திச்சுவையும் நிரம்பியிருக்கின்றன. அப்பாடல்களை ஆழ்வார்களின் பாசுரங்களைப் படிப்பதைப் போலவே படித்துப் படித்துப் பாடி ஆடி இன்புறலாம். ஆய்ச்சியர் குரவைப் பாடல்களைப் பாடினால் நமக்கு ஏற்படும் கஷ்டங்களும் துன்பங்களும் தீரும் என்றும், தங்கள் ஆடுமாடுகளுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படும் நோய்கள்

நீரும் என்றும், பால்வளம் பெருகும் என்றும் ஆயர்பாடி மக்கள் மிகவும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

கோதை நாச்சியாரின் பாவைப் பாசுரங்களும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் ஆய்ச்சியர் குரவைப் பாடல்களும் நமது நாட்டுப் பெண்களின் பக்திச் சிறப்பையும் தெய்வ வெறியாட்டுடன் இணைந்த கூட்டான ஆடல் பாடல் குரவை நடனம் மற்றும் இதர விழாக்களில் உள்ள மரபுகளையும் காட்டுகின்றன.

திருமாலின் உள்ளத்தில் உறைபவள், திருமகள். ஆதலால் திருமாலைத் திருஉறை மார்பன் என்றும், திருஅமர் மார்பன் என்றும் வழங்குகிறோம். ஆழ்வார்கள் பல இடங்களிலும் தங்கள் பாசுரங்களில் அவ்வாறு குறிப்பிடுவதைக் காணலாம்.

**“வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு”** என்று பெரியாழ்வார் பாடுகிறார். **“செங்கதிர் முடியன் என்கோ திருமறு மார்பன் என்கோ?”** என்று நம்மாழ்வார் பாடுகிறார். **“திருவாழ் மார்பன் தன்னைத் திசைமண் நீரெரி முதலா, உருவாய் நின்றவனை”** என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

நமது வீடுதோறும் திருமகள் - இலக்குமி - வாழ்வதை விரும்புகிறோம்; லட்சுமி கடாட்சம் பெற வேண்டும் என்று விழைகிறோம். பெண் மக்களாகிய நமது தாயை, சகோதரிகளை நாம் இலக்குமியாகக் கருதி அழைக்கிறோம். திருமகளின் வடிவம் உலகளாவிய அழகிய வடிவமாகும். நாம் நமது பெண்களை இலக்குமிக்கு ஒப்பிடுவது நமது மரபாகும். அந்த வழியில் இளங்கோவடிகள் கண்ணகியைப்பற்றிக் குறிப்பிடும் போது செந்தாமரை மலரில் உறையும் திருமகளின் புகழுடைய வடிவைப் போன்ற வடிவழகைக் கொண்டவள் என்பதைப் **“போதிலார் திருவினாள் புகழுடை வடிவு என்றும்”** என்று குறிப்பிடுகிறார்.

அது போலத் திருமணத்திற்குப் பின்னர்க் கோவலன், கண்ணகியைப் பாராட்டும்போது அவளைத் திருமகளுக்கு ஒப்பிட்டுப் புகழ்ந்து பேசுகிறான்.

புகார் நகரில் இந்திர விழா மிகச்சிறப்பாக நடைபெறுகிறது. விழாவின்போது நகரில் அலங்காரங்கள் செய்யப்படுகின்றன. வீடுகள் மெழுகப்பட்டுக் கோலமிட்டு அலங்காரம் செய்யப்படுகின்றது. ஆடல் பாடல்கள், ஆட்டபாட்டங்கள் நடைபெறுகின்றன. மக்கள் புத்தாடைகள் உடுத்தித் தங்களை ஒப்பனை செய்துகொள்கின்றனர்.

கோயில்களில் மக்கள் ஒன்றுகூடிப் பொங்கலிட்டுக் குதூகலமாக ஆடிப்பாடி மகிழ்கின்றனர். இந்திர விழாவின்போது எல்லாக் கோயில்களிலும் விழாக்கள் நடைபெறுகின்றன என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள். அவ்வாறு விழாக்கள் நடைபெறும் கோயில்களில் பலதேவன் கோயிலையும் திருமால் கோயிலையும் குறிப்பிடுகிறார்.

"வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

ஒரு விஞ்சையன் தனது காதலியை அழைத்துக் கொண்டு இந்திர விழாவைக் காண்பதற்காகப் புகார் நகருக்கு வந்தான். வரும் வழியில் அந்த விஞ்சையன் தன் காதலிக்கு இமய மலையையும், வளம் மிகுந்த நீர் பொங்கும் கங்கை நதியையும், அழகிய உஞ்சை நகரையும், விந்திய மலையையும், அதன் அடர்ந்த காடுகளையும், **வேங்கட மலையையும்,** நிலம் தாங்க முடியாதபடி நிறைந்த விளைச்சலைக் கொண்ட காவிரி நாட்டையும் காட்டிப் பின்னர்ப் பூம்புகார் நகரை அடைந்தான் என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

"துவரிதழ்ச் செவ்வாய்த் துடியிடை யோயே
அமரர் தலைவனை வணங்குதும் யாம்எனச்
சிமையத் திமயமும் செழுநீர்க் கங்கையும்
உஞ்சையம் பதியும் விஞ்சத் தடவியும்
வேங்கட மலையும் தாங்கா விளையுள்
காவிரி நாடும் காட்டிப் பின்னர்ப்
பூவிரி படப்பைப் புகார்மருங் கெய்தி"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

இங்கு திருவேங்கடத்தைக் குறிப்பிடுவது சிறப்பாகும். திருமால் திருஉறை மார்பனாக எழுந்தருளியுள்ள வைணவத்

திருத்தலங்களுள் திருவேங்கடம் முக்கியமான ஒன்றாகும். திருவேங்கடத்தின் பெருமைகளைப்பற்றி ஆழ்வார்கள் ஏராளமான பாசுரங்களைப் பாடியுள்ளார்கள். சிலப்பதிகாரத் திலும் மாங்காட்டு மறையோன் மூலமாக அடுத்த ஓர் இடத்திலும் திருவேங்கடத்தைப்பற்றிய குறிப்பைப் பின்னர்க் காண்போம்.

திருவேங்கடத்தைப்பற்றிக் கம்பன் மிக அற்புதமான கவிதைகளில் பெருமைப்படக் கூறுகிறார். சீதையைத் தேடுவதற்கு அனுமன் தலைமையில் தெற்கு நோக்கிச் செல்லும் படைப்பிரிவிடம் எந்த வழியில் செல்லவேண்டும் என்று சுக்கிரீவன் கூறுகிறான்.

அப்போது, "அருந்ததி மலையைத் தாண்டித் திருவேங்கடமலை வழியாகச் செல்லுங்கள். ஆனால், அந்த மலையை நெருங்கிப் போக வேண்டா. அங்கு போய்த் தங்கிவிட்டால் உங்கள் பாவங்கள் நீங்கி வீட்டுலகம் சென்று விடுவீர்கள். சீதையைத் தேடும் பணி தடைப்பட்டுவிடும். எனவே, அதை விலக்கிவிட்டு மேலும் தெற்கே செல்லுங்கள்" என்று கூறுகிறான். இங்கு திருவேங்கடத்தைக் குறித்துக் கூறும் கம்பனுடைய பாடல்கள் மிகவும் சிறப்பானவை.

**"வடசொற்கும் தென்சொற்கும் வரம்பாகி**
**நான்மறையும் மற்றை நூலும்**
**இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையாய்**
**நல்லறிவுக்கு ஈறாய், வேறு**
**புடைசுற்றும் துணையின்றிப் புகழ்பொதிந்த**
**மெய்யேபோல் பூத்து நின்ற**
**உடைசுற்றும் தண்சாரல் ஓங்கியவேங்**
**கடத்தில்சென்று ஊர்தின் மாதோ !"**

என்று குறிப்பிட்டு, மேலும் விரிவாகத் திருவேங்கடத்தின் பெருமைகளைப்பற்றிக் கம்பன் பேசுகிறார்.

அனுமன் தலைமையில் வானரப் படைப்பிரிவு சீதையைத் தேடிச் சுக்கிரீவன் குறித்தபடி தெற்கு நோக்கிச் செல்லும்போதும் அனுமன் படை திருவேங்கடத்தைக் கடக்கும்போதும் அம்மலையின் பெருமைகளைப்பற்றிக் கம்பன் கூறுகிறார்.

"வலங்கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாள்இணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறு கின்றன, மெய்ந்நெறிப்
புலங்கொள் வார்கட்கு அனையது பொய்க்குமோ?"

என்றும்,

"ஆய குன்றினை எய்தி, அருந்தவம்
மேய செல்வரை மேவினர் மெய்ந்நெறி
நாய கன்தனை நாளும் வணங்கிய
தூய நற்றவர் பாதங்கள் சூடினார்"

என்றும் கம்பன் கவிதைகள் குறிப்பிடுகின்றன.

திருவேங்கடமலை வடமொழிக்கும் தென்மொழிக்கும் எல்லையாக அமைந்துள்ளது. நான்மறைகளுக்கும் மற்ற இதர நூல்களுக்கும், அவைகளில் சொல்லப்பட்டிருக்கும் சிறந்த பொருள்களுக்கெல்லாம் எல்லையாக நல்லறிவுக்கு முடிவாக அமைந்து ஈடு இணையற்றதாகப் புகழ்மிக்கதாகச் சத்திய நிலைகொண்ட மெய்ப்பொருளாக, மேகக் கூட்டமும் சாரலும் பொங்கியதாக விளங்குகிறது.

நீல வண்ணனைத் தாங்கி நிற்கும் அம்மலைக்குச் செல்லும் விலங்குகளும் வீடுபேற்றைப் பெற்றுவிடுகின்றன. மெய்நெறியாளர்கள் நற்கதியடைவதற்குச் சொல்லவும் வேண்டுமா? அத்தகைய புண்ணிய மலையை அடைந்து, அங்கு எழுந்தருளியுள்ள மெய்ந்நெறி நாயகனைத் தினமும் வணங்கிவரும் அடியார்களை வணங்கிவிட்டு அனுமன் படை மேலும் தெற்கு நோக்கித் தொண்டை நாட்டிற்குச் சென்றது என்று கம்பர் விவரிக்கிறார்.

இந்திர விழாவில் மாதவி ஆடிய பாடிய ஆடல் பாடல்களைப்பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடும்போது "**மாயோன்பாணி**" பற்றியும்,

"கஞ்சன் வஞ்சம் கடத்தற் காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும் அவுணன் கடந்த
மல்லின் ஆடலும்"

என்றும்,

"வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணிலம் அளந்தோன் ஆடிய குடமும்"

என்றும்,

"பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்"

என்று பல வகை ஆடல்களையும் குறிப்பிட்டு, அவற்றுள் மாயோன் பாணியை மிகவும் சிறப்பித்துக் கூறுகிறார்.

மாயோன்பாணி என்பது திருமாலை வாழ்த்துகின்ற தேவபாணியாகும். இந்த பாணி, பதினோராடலில் முக நிலையாக ஆடுவதும் பாடுவதுமாகும். தொடக்கப் பாடல் இதுவேயாகும். அது வருமாறு :

"மலர்மிசைத் திருவினை வலத்தினில் அமைத்தவன்
மறிதிரைக் கடலினை மதித்திட அடைந்தவன்,
இலகொளித் தடவரை கரத்தினில் எடுத்தவன்
இளநிரைத் தொகைகளை இசைத்தலில் அழைத்தவன்
முலையுணத் தருமவள் நலத்தினை முடித்தவன்
முடிகள்பத் துடையவன் உரத்தினை அறுத்தவன்
உலகனைத் தையும்ஒரு பதத்தினில் ஒடுக்கினன்
ஒளிமலர்க் கழல்தரு வதற்கினி யழைத்துமே !"

என்று பாடலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்பாடல், திருமாலின் சிறப்பினைப் பாடும் அழகிய அருமையானதொன்றாகும்.

திருமகளைத் தனது உள்ளத்தில் வைத்திருப்பவன், பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பவன், கோவர்த்தன கிரியைக் கையிலே எடுத்துக் குடையாகப் பிடித்தவன், தனது குழலிசை மூலம் ஆநிரைகளை அழைத்தவன், விஷப்பால் கொடுத்துக் கொல்லவந்த பூதகியின் உயிரைக் குடித்தவன், பத்துத் தலைகளைக் கொண்ட இராவணனுடைய தலைகளை அறுத்தவன், உலகமனைத்தையும் ஒரு பதத்தில் ஒன்றிணைத்தவன், அவனுடைய மலர்ப்பதங்களைப் பணிவோம் என்று கூறுகிறது, அப்பாடல்.

கரிய திருமேனியையுடைய கண்ணன் ஆடிய பத்து வகை ஆடல்களையும் அவைகளின் பிரிவுகளையும், கஞ்சன் செய்த வஞ்சனைகளிலிருந்து நீங்குவதற்காக ஆடப்பட்ட

ஆடல்களையும் அல்லியத்தொகுதி என்று இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் குறிப்பிடுகிறார். கஞ்சன் செய்த வஞ்சனைகளையும், அவைகளை முறியடித்த கண்ணனுடைய லீலைகளையும் சாகசங்களையும் வீரச் செயல்களையும்பற்றி ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் பல இடங்களிலும் மிக விரிவாகக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்கள்.

இவைபற்றிக் குறிக்கும் ஆடல்கள் பாடல்கள், அபிநயங்கள், கூத்துகள் முதலியன நமது நாட்டுமக்களின் உள்ளங்களில் பதிந்துள்ள நிகழ்ச்சிகளாகும்.

இவைபற்றிச் சிலப்பதிகாரக் காப்பியத்தில் மாதவியின் ஆடல் பாடல்களில், அவைபற்றிய குறிப்புகளில் நாம் விரிவாக அறிகிறோம்.

கோவலனும் கண்ணகியும் மதுரைப் பயணத்தைத் தொடங்கப் புகாரைவிட்டு நீங்கினர். புகார் நகரைவிட்டு நீங்கியதும், "**அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த மணிவண்ணன் கோட்டம் வலம்செயாக் கழிந்து** என்று - அஃதாவது, அழகுமிக்க ஆதிசேடன்மீது அறிதுயில் கொண்டுள்ள மணிவண்ணனான திருமால் திருக்கோயிலை வலம் வந்துவிட்டு - அதற்கப்பால் சென்றனர்" என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் காவிரிக்கரை வழியாக ஒரு நாளுக்குக் காத தூரம் வீதம் நடந்து மதுரையை நோக்கிச் சென்றனர். செல்லும் வழியில் "**ஆற்றுவீ யரங்கத்து வீற்றுவீற் றாகி**" என்று ஆற்றிடைப் பட்ட அழகுமிக்க திருவரங்கத்தை அடைந்தனர். திருவரங்கத்தைப்பற்றி அடிகளார் குறிப்பிடும்போது அது அழகுமிக்கது, சிறப்புமிக்கது, சோலைகள் சூழ்ந்தது, தங்குவதற்கு அனைவரும் விரும்பும் மலர் மணம்மிக்கது என்றெல்லாம் குறிப்பிடுகிறார்.

பின்னர், மூவரும் உறையூரைக் கடந்து, நீர்வளம்மிக்க வயல்வெளிகளும் குளங்களும் நிறைந்த ஒரு சோலையில் உள்ள மண்டபத்தை அடைந்து, அங்கு அமர்ந்திருந்தனர். அங்கு ஒரு முதிய மறையோனைக் கண்டனர். அவன்

மதுரையின் சிறப்புகளைப்பற்றியும், பாண்டிய மன்னனின் மாண்புகளைப்பற்றியும் பெருமைகளைப்பற்றியும் கூறிக் கொண்டிருந்தான். அவனை யாரென வினவ,

"மாமறை யாளன் வருபொருள் உரைப்போன்
நீல மேகம் நெடும்பொன் குன்றத்துப்
பால்விரிந் தகலாது படிந்தது போல
ஆயிரம் விரிந்தெழு தலையுடை அருந்திறல்
பாயல் பள்ளிப் பலர்தொழு தேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்
திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்
வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி உடுத்து விளங்குவில் பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம்கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ வாடையின் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்
என்கண் காட்டென்று என்னுளம் கவற்ற
வந்தேன் குடமலை மாங்காட் டுள்ளேன்"

என்று அந்த மாங்காட்டு மறையோன் கூறியதை இளங்கோவடிகள் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குச் செல்வதற்காகப் புகார் நகரத்திலிருந்து புறப்பட்டுத் திருமால் திருக்கோயிலை வலம் வந்துவிட்டு, கவுந்தி அடிகளின் துணை கொண்டு, திருவரங்கம் அடைந்து, காவிரியைக் கடந்து உறையூரைத் தாண்டிச் சோலை மண்டபத்தில் தங்கியிருந்தனர். மதுரை செல்வதற்கு யாரிடமாவது வழி கேட்க வேண்டும். இளங்கோவடிகளார் மிகவும் சிறப்பான முறையில் தமது காப்பியத்தின் கதையைக் கொண்டுசெல்வதைக் காண்கிறோம்.

கோவலனுக்கு மதுரை செல்வதற்கு வழி விவரம் கூறுவதற்கு மாங்காட்டு மறையோன் வருகிறார். அந்த மாங்காட்டு மறையோனோ திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த வண்ணத்தையும், திருவேங்கடத்தில் நின்ற வண்ணத்தையும் காண்பதற்கு யாத்திரைப் பயணம் வந்தவர். இளங்கோவடிகளார் அக்காலத்தில் கோயில்களுக்கு மக்கள் யாத்திரை செல்வதைப்பற்றியும் மிக நுட்பமாக மாடல மறையோன் மூலமாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

மக்களிடம் அக்காலத்தில் பழக்கத்தில் இருந்த திருமால் வழிபாட்டு முறைகளைக் கம்பனும் ஆழ்வார்களும் தங்கள் கவி வண்ணங்களில் குறிப்பிடுவதைப் போலவே இளங்கோவடிகளும் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுவதைக் காணலாம்.

கல்லாய்ச் சபிக்கப்பட்டுக் கிடந்த அகலிகை இராமனது கழல் துகள் பட்டவுடன் உயிர் பெற்றுத் தனது பழைய வடிவத்தைப் பெறுகிறாள். ஏற்கனவே இராமபிரானது கணைபட்டுத் தாடகி வீழ்ந்தாள். இக்காட்சிகளை,

**"இவ்வண்ணம் நிக்ழ்ந்த வண்ணம்,**
**இனிஇந்த உலகுக் கெல்லாம்**
**உய்வண்ணம் அன்றி மற்றோர்**
**துயர்வண்ணம் உறுவ துண்டோ?**
**மைவண்ணத்து அரக்கி போரில்**
**மழைவண்ணத்து அண்ண லேஉன்**
**கைவண்ணம் அங்கு கண்டேன்,**
**கால்வண்ணம் இங்கு கண்டேன்"**

என்று கம்பநாட்டாழ்வார் மிகவும் அழகாகக் குறிப்பிடுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம்.

**"பொய்வண்ணம் மனத்தகற்றிப் புலன்ஐந்தும் செலவைத்து**
**மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்ந்நின்ற வித்தகனை**
**மைவண்ணம் கருமுகில்போல் திகழ்வண்ண மரகதத்தின்**
**அவ்வண்ண வண்ணனையான் கண்டதுதென் னரங்கத்தே!"**

என்று திருமங்கையாழ்வார் பெருமான் பாடுவதையும் காண்கிறோம்.

திருவரங்கத்தில் திருமால் கிடந்த வண்ணத்தையும், திருவேங்கடத்தில் நின்ற வண்ணத்தையும் மாங்காட்டு

மறையோன் மூலம் குறிப்பிடும் இளங்கோவடிகள், திருவரங்கத்தையும் திருவேங்கடத்தையும் அவற்றின் அழகிய காட்சியையும் வளத்தையும்பற்றி மிகவும் சிறப்பாக விளக்கிக் கூறுவதையும் காண்கிறோம்.

நீண்ட நெடிய பொன்மயமான மலைமீது நீல நிறமான கருமேகம் விரிந்து படர்ந்து படிந்திருப்பதைப்போல, ஆயிரம் தலைகளைக்கொண்ட ஆதிசேடன் படம் விரித்துள்ள பாம்பணைமீது, பலரும் கூடி வணங்கித் தொழுது போற்றிப் புகழும்வண்ணம், விரிவான அலைகள் நிரம்பிய காவிரியாற்றின் இடைப்பட்டுள்ள இடமாகிய திருவரங்கப் பெரிய கோயிலில், திருமகள் விரும்பி உறைகின்ற திருமார்பினையுடைய திருமால் கிடந்தருளியுள்ள திருக்கோலம் என்று திருவரங்கத்தில் திருவமர்மார்பன் கிடந்தவண்ணம் என்று மிகவும் சிறப்பித்துக் கூறுகிறார், இளங்கோவடிகளார்.

இனி, வேங்கட மலையைப்பற்றி, மிகுந்த அருவி நீரினையுடைய வேங்கடம் எனப்படும் மிக உயர்ந்த மலையின் உச்சியின்மீது இருமருங்கிலும் விரிந்த கதிர்களை வீசிக்கொண்டிருக்கிற ஞாயிறும் திங்களும் விளங்குகின்ற உயர்ந்த இடைப்பட்ட நிலத்தில், நல்ல நீல நிறத்தினையுடைய மேகம், மின்னலாகிய ஒளிமிகுந்த ஆடையை உடுத்தி, அழகு விளங்கும் இந்திரவில்லாகிய அணி அணிந்து நின்றாற்போல் பகைவரை அடக்கி ஒடுக்கும் சக்கராயுதத்தையும், பால் போலும் வெண்மையான சங்கினையும் அழகிய தாமரை மலர் போன்ற தம் கைகளிலே ஏந்தி, அழகு விளங்கும் ஆரத்தை மார்பிலே அணிந்து, பொன்னிறப் பூக்களாகிய ஆடையுடன் விளங்கித் தோன்றும் சிவந்த அழகிய கண்களையுடைய திருமாலின் நின்ற கோலத்தையும் - **செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்** - என்று சிறப்பித்துக் கூறுவதையும் காண்கிறோம்.* இவ்வாறு "**நெடியோன் கிடந்த வண்ணத்தையும் நின்ற வண்ணத்தையும்**" எனக்குக் காட்டு என்று என் கண்கள் உள்ளத்தை வற்புறுத்தி வேண்டிக்கொண்டதால் நான் இங்கு வந்தேன் என்று மாங்காட்டு மறையோன் தனது பக்தி

உணர்வுடன் கூடிய கருத்துகளைக் குறிப்பிடுவது காப்பியத்தின் சிறப்பான பகுதியாகும்.

இனி, அம்மாங்காட்டு மறையோனிடம் மதுரைக்குச் செல்லும் வழியைப்பற்றிய விவரங்களைக் கோவலன் கேட்டபோது அம்மறையோன் மூன்று வழிகளைப்பற்றிக் குறிப்பிடுகிறான். அவற்றுள் ஒன்று திருமாலிருஞ்சோலை மலை வழியாக மதுரைக்குச் செல்லும் வழியாகும்.

இங்கு திருமாலிருஞ்சோலை மலையைப்பற்றியும், அக்கோயில் மற்றும் அதன் தீர்த்தங்கள்பற்றிய சிறப்புகளைப் பற்றியும் மாங்காட்டு மறையோன் மிக விரிவாகக் குறிப்பிடுவதை இங்கு இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் சிறப்பித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

சோலை மலைப்பகுதியின் வளம், குளங்கள் மற்றும் இதர நீர்நிலைகள், ஊற்றுகள், வயல்கள், பூஞ்சோலைகள், மருத நிலச் சிறப்புகள்பற்றியெல்லாம் காப்பியம் குறிப்பிடுகிறது.

**"செவ்வழிப் பண்ணிற் சிறைவண்டு அரற்றும்**
**தடந்தாழ் வயலொடு தண்பூங் காவொடு**
**கடம்பல கிடந்த காடுடன் கழிந்து**
**திருமால் குன்றத்துச் செல்குவி ராயின்"**

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

பண் இசைத்துப் பாடும்போது காலை, மாலை, பகல், இரவு ஆகிய சூழல்களுக்கேற்ற பண் இசைத்துப் பாடுவது பாடுவோர் மரபும் சிறப்புமாகும். சிறகுகளுடன் கூடிய வண்டுகள் மலர்களைச் சுற்றிச் சுற்றி வந்து தேன் எடுக்கும் நோக்குடன் காலைப்பண் - அதாவது செவ்வழிப்பண் - பாடிப் பறந்துகொண்டிருந்த ஏரி குளம் முதலிய நீர்நிலைகள், அவைகளில் நிறைந்திருந்த தாமரை மற்றும் நீரில் படர்ந்துள்ள இதர மலர்கள், ஏரி குளங்களிலிருந்து நீர் பாயும் தாழ்ந்த வயல்கள், அவ்வயல்களைச் சூழ்ந்த சோலை வனங்கள், குளிர்ந்த பூஞ்சோலைகள் நிறைந்த மருத நிலச் சிறப்புகள், பின்னர் இடையிடையே உள்ள அடர்த்தியான மரங்கள் நிறைந்த காடுகள் முதலியன கடந்து

திருமாலிருஞ்சோலை மலை அடைவீர் என்று மாங்காட்டு மறையோன் குறிப்பிடுகிறார். இந்தக் கவிதை அடிகளைப் படிக்கும்போது திருமாலிருஞ்சோலை மலையின் அழகையும் சிறப்பையும் செழிப்பையும் அனுபவித்து மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறோம்.

ஆழ்வார்களும் திருமாலிருஞ்சோலை மலையின் சிறப்புகளை மிகவும் விரிவாகப் பாடியுள்ளார்கள்.

"அந்தச் சிறப்புமிக்க திருமாலிருஞ்சோலை மலையை அடைந்தால் காமம், வெகுளி முதலிய பெரும்மயக்கங்களைப் போக்கும் பிலத்தைக் காணலாம். பல புண்ணிய தீர்த்தங்களைக் காணலாம். திருமால் மலையை மும்முறை வலம் வந்தால் ஓர் இயக்க மாது தோன்றி உங்களுக்கு வழிகாட்டுவாள். ஐந்தெழுத்து, எட்டெழுத்து மந்திரங்களை ஓதி, உங்களுக்குப் பிறவித்துன்பம் தீரும் வழி பிறந்து மதுரை செல்வீர்'' என்று அந்த மாங்காட்டு மறையோன், அக்காலத்தில் நடப்பில் இருந்த வைணவ மரபின் சில கருத்துகளை எடுத்துக் கூறுகிறார்.

இளங்கோவடிகள் சமண சமய மரபுகளைச் சார்ந்தோராயினும், அன்று மக்களிடையில் நிலை கொண்டிருந்த சமயப் பழக்கவழக்கங்கள், கோயில்களுக்குச் சென்று வழிபடுதல், கோயில் மலையை வலம் வருதல், பொய்கைகளில் தீர்த்தங்களில் நீராடுதல், எட்டெழுத்து மந்திரமான "ஓம் நமோ நாராயணா" என்னும் மந்திரத்தையும் "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்து மந்திரங்களையும் கூறி மனத்தை ஒருமுகப்படுத்தும் வழிபாட்டு முறைகளையும் விரித்துக் கூறுவதைக் காண்கிறோம்.

"பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபின்
புண்ணிய சரவணம் பவகா ரணியோடு
இட்ட சித்தி எனும்பெயர் போகி
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்றுஉள ஆங்குப்
புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்

பவகா ரணிபடிந்து ஆடுவிர் ஆயின்
பவகா ரணத்தின் பழம்பிறப் பெய்துவிர்
இட்ட சித்தி எய்துவி ராயின்
இட்ட சித்தி எய்துவிர் நீரே"

என்று காப்பியம் குறிப்பிடுகிறது.

"பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு" என்னும் காப்பிய அடிக்குப் "பெரும் மயக்கங்களைப் போக்கும் மலைக்குகை" என்று பொருளாகும்.

மனிதனுடைய அறிவை மயக்கும் சில கேடுகளை நமது அறநூல்கள் குறிப்பிடுகின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று குற்றங்களுள் மயக்கத்திற்குக் கள், காமம், வெகுளி ஆகியவை காரணமாகின்றன.

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்"

என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

திருமாலிருஞ்சோலையிலுள்ள மலைக்குகைக்கருகில் செல்லும்போது மனத்தில் நிம்மதியும், ஒருமுகத்தன்மையும் ஏற்பட்டு, பெரும் மயக்கங்கள் தீர்ந்து அறிவுத்தெளிவு ஏற்படுகிறது என்னும் பொருளில் "பெருமால் கெடுக்கும் பிலம் உண்டாங்கு'' என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம்.

அப்பிலத்தினுள்ளே மூன்று புண்ணிய தீர்த்தங்கள் இருப்பதை மாங்காட்டு மறையோன் குறிப்பிடுகிறார். புண்ணிய தீர்த்தங்கள்பற்றி மாறுபட்ட கருத்துகள் இருப்பதைச் சிலப்பதிகாரக் காப்பியம் வெளிப்படுத்தி யுள்ளது.

இருப்பினும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவது, அதனால் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்படும் தூய்மையும் மனமகிழ்ச்சியும், மற்றும் மனத்தை ஒருநிலைப்படுத்தி அறிவுத் துறையில் உள்ளத்தைச் செலுத்துவதற்கும் புண்ணிய நதிகளில், குளங்களில், கடல்களில், ஊற்றுகளில், அருவிகளில் இதர பல நீர்நிலைகளில் நீராடுவது நல்ல பலன் தரத்தக்கது என்பதை நமது சமயச் சான்றோர்கள்

குறிப்பிடுவதையும், மக்களுடைய வாழ்க்கை அனுபவத்தின் [illegible]த்தில் இருப்பதையும் காண்கிறோம்.

திருமாலிருஞ்சோலையில் உள்ள புண்ணிய தீர்த்தங்களில், புண்ணிய சரவணம் என்னும் பொய்கையில் நீராடினால் இந்திரன் போன்றோர் கூறியுள்ள ஐந்திரங்களின் தத்துவங்களையும் இலக்கணங்களையும் அறிந்தவராவீர் என்றும், பவகாரணி என்னும் பொய்கையில் நீராடினால் பிறப்பின் காரணங்களை அறிந்துகொள்வீர் என்றும், இட்ட சித்தி என்னும் தடாகத்தில் நீராடினால் உங்களுடைய நல்ல விருப்பங்கள் நிறைவேறும் என்றும் மாங்காட்டு மறையோன் விவரித்துக் கூறுவதைச் சிலப்பதிகாரக் காப்பியம் குறிப்பிடுகிறது.

"அந்த மலைக்குகைக்குள்ளே நீங்கள் செல்ல வேண்டுமாயின் ஓங்கி உயர்ந்துள்ள அம்மலையில் எழுந்தருளியுள்ள திருமாலை வணங்கி, அவனது திருவடிகளை உங்கள் சிந்தையில் வைத்து, அம்மலையை மும்முறை வலம் வந்தால், நிலத்தைப் பிளந்து செல்லும் ஆழமான சிலம்பாற்றின் அகலமான கரையில் நறுமண மலர்கள் நிறைந்த வேங்கை மரத்தின்கீழ் கரிய மேகத்தைப் போன்ற கூந்தலையுடைய, வளைந்த வளையல்களை அணிந்து ஓர் இயக்க மாது தோன்றுவாள்.

"ஆங்குப் பிலம்புக வேண்டுதிர் ஆயின்
ஓங்குயர் மலையத் துயர்ந்தோற் றொழுது
சிந்தையில் அவன்தன் சேவடி வைத்து
வந்தனை மும்முறை மலைவலஞ் செய்தால்
நிலம்பக வீழ்ந்த சிலம்பாற்று அகன்தலைப்
பொலங்கொடி மின்னிற் புயலைங் கூந்தல்
கடிமலர் அவிழ்ந்த கன்னிகா ரத்துத்
தொடிவளைத் தோளி ஒருத்தி தோன்றி"

என்று சிலப்பதிகாரக் காப்பியம் குறிப்பிடுகிறது.

அவ்வாறு தோன்றிய மலைமாது,

"இம்மைக் கின்பமும் மறுமைக் கின்பமும்
இம்மையும் மறுமையும் இரண்டும் இன்றியோர்
செம்மையில் நிற்பதும் செப்புமின் நீயிர்இவ்
வரைத்தாள் வாழ்வேன் வரோத்தமை என்பேன்"

என்று காப்பியம் குறிப்பிடுகிறது.

இங்கு ஒரு முக்கியமான தத்துவப் பிரச்சினை முன் வைக்கப்படுகிறது. அதுபற்றிச் சமயக் கணக்கர் பலரும் விடை காண முயன்றுள்ளனர்.

"இம்மைக்கு இன்பமும் மறுமைக்கு இன்பமும் இரண்டும் இன்றி எப்போதும் தூயதாய்ச் செம்மையாய் நிற்கும் இன்பமும் என்னவென்று கூறுங்களென்று" குறிப்பிடுகிறார்.

இந்தக் கேள்விக்குச் சரியான விடை கூறினால், கதவுகள் திறக்கப்படும். நெடுகிலும் சென்றால் இடைப்பட்ட கதவுகளும் திறந்து, அதன்பின் மூன்று புண்ணிய தீர்த்தங்களின் கரைகளை அடையலாம். அப்புண்ணிய தீர்த்தங்களில் விரும்பிய ஒன்றில் நீராடலாம்.

அரிய வேதங்களில் உணர்த்தப்பட்டுள்ள ஐந்தெழுத்து, எட்டெழுத்து மந்திரங்களை உச்சரித்து, மனத்தில் இருத்தி, அப்புண்ணிய தீர்த்தத்தில் நீராடுங்கள். மலர்மிசை நின்ற திருமாலின் அழகிய தாமரை மலர் போன்ற திருவடிகளை உங்கள் உள்ளத்தில் ஒன்றி நினையுங்கள். அவ்வாறு உள்ளத்தை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்தால் அத்திருமாலின் கருடக்கொடி பறக்கும் நீண்ட கொடிமரம் தெரியும். அவனது மலர் போன்ற திருவடிகள் உங்களை ஏற்றுக்கொள்ளும். உங்கள் துயரங்கள் தீரும். எல்லா இன்பங்களும் பெறுவீர்கள்.

"உரைத்தார்க் குரியேன் உரைத்தீ ராயின்
திருத்தக் கீர்க்குத் திறந்தேன் கதவுஎனும்
கதவம் திறந்தவள் காட்டிய நன்னெறிப்
புதவம் பலஉள போகிடை கழியன
ஒட்டுப் புதவமொன்று உண்டதன் உம்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி
இறுதியில் இன்பம் எனக்கீங்கு உரைத்தால்

பெறுதிர் போலும்நீர் பேணிய பொருளெனும்
உரையீ ராயினும் உறுகண் செய்யேன்
நெடுவழிப் புறத்து நீக்குவல் நும்எனும்
உரைத்தார் உளரெனின் உரைத்த மூன்றின்
கரைப்படுத் தாங்குக் காட்டினள் பெயரும்
அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒருமுறை யாக உளங்கொண்டு ஓதி
வேண்டிய தொன்றின் விரும்பினி ராடின்
காண்டகு மரபின அல்ல மற்றவை
மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றா மரைத்தாள் உள்ளம் பொருந்துமின்
உள்ளம் பொருந்துவிர் ஆயின் மற்றவன்
புள்அணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்
தோன்றிய பின்னவன் துணைமலர்த் தாளிணை
ஏன்றுதுயர் கெடுக்கும் இன்பம் எய்தி
மாண்புடை மரபின் மதுரைக்கு ஏகுமின்"

என்று மாங்காட்டு மறையோன் கூறுவதைக் காப்பியம் மிகச் சிறப்பாக விவரிக்கிறது.

இங்கு மாங்காட்டு மறையோன் வாயிலாகச் சிறந்த வைணவக் கருத்துகளையும் வழிபாட்டு முறைகளையும் இளங்கோவடிகள் சிறப்பாகக் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

திருமாலிருஞ்சோலை, அதன் அழகிய தோற்றம், வளமான சூழல்கள், வயல்வெளிகள், குளங்கள், ஏரிகள், புண்ணிய தீர்த்தங்கள், மலைக்குகைகள் முதலியவைபற்றியும் அப்புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதன் பலன்கள்பற்றியும், இம்மையில் இன்பம், மறுமையில் இன்பம் இரண்டும் இன்றி எப்போதும் செம்மையாய் நிற்கும் உயர்நிலைபற்றியும், அரிய வேதங்களில் உணர்த்தப்பட்டுள்ள ஐந்தெழுத்து எட்டெழுத்து மந்திரங்கள்பற்றியும், மனத்தை ஒருநிலைப் படுத்தித் தியானித்தல்பற்றியும், திருமாலை உள்ளத்தில் நிலைநிறுத்தல்பற்றியும், கருடக்கொடி தோன்றித் திருமால் தனது திருவடிகளில் நம்மை இணைத்துக்கொண்டு அதன்மூலம் எல்லாத் துயர்களும் நீங்கி இன்பம் எய்தும்

உன்னத நிலையை அடைவதுபற்றியும் கூறப்படும் வை
தத்துவம் மிகவும் சிறப்பாக இங்கு எடுத்துக்
பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் மதுரைக் காண்
விறுவிறுப்பானது. கதை நிகழ்ச்சிப் போக்குகள் நிறை
காணப்படுவது. அவை நாடகக் காட்சிகள் போ
ஒவ்வொன்றும் வேகமாகச் செல்கின்றன. சிலப்பதி
காப்பியத்தின் கதைக்கருக்கள் மதுரைக் காண்டத்தில் நி
பெறுகின்றன.

ஊழ்வினை விளைவால் கோவலன் கொல்லப்படு
அரசியல் பிழைத்த காரணத்தால் பாண்டிய மன்ன
அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினியின் கற்பின் திறத்
மதுரை தீக்கிரையாவதும் இக்காண்டத்தின் அ
காட்சிகளாகும்.

கோவலன் கொலையுண்டபோது ஆயர்பாடியில்
தீ நிமித்தங்கள் தோன்றுகின்றன. தீயனவற்றிலிரு
மக்களையும் ஆநிரைகளையும் காப்பாற்றுமாறு கண்ண
வேண்டுவது ஆயர்பாடி மக்களின் ஆடல்பாடல்
வழிபாடுகளுமாகும்.

பெருமழை, புயல்காற்று, கடும்வெப்பம், நோ
நொடிகள், கொடிய மிருகங்களின் தாக்குதல்கள் மு
பல வேறு இயற்கைச் சீற்றங்கள், தீமைகள் முதலியவ
லிருந்து மக்களையும், தங்கள் கால்நடைச் செல்வங்களை
காப்பதற்குக் காத்தல் கடவுளான கண்ணனை வழிபடு
யாதவ குல மக்களின் இயல்பான வாழ்க்கை முறை
பகுதியாகும். அத்துடன் கண்ணன் காட்சி விரிவுபட்டு அ
பாரத பூமியின் குலதெய்வமாக உலகப் பெருவடிவ
நமக்குக் காட்சியளிக்கிறான். இதை ஆழ்வார்கள் மே
சிறப்பாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார்கள்.

பாரத பூமியின் இந்தக் குலதெய்வத்தை வழிபட்டு
பாடப்படும் பாடல்களாகச் சிலப்பதிகாரக் காப்பியத்தி
மதுரைக் காண்டத்தில் ஆய்ச்சியர் குரவைப் பாடல்
அமைந்துள்ளன.

[illegible] பாடல்கள் மதுரைக் காண்டத்தின் [illegible] சிக்கு ஆறுதல் அளிக்கும் [illegible] ல்கள். அவை பக்திச் சுவைமிக்க தனி [illegible] காப்பியத்தின் இந்த ஆய்ச்சியர் [illegible] ஆழ்வார்களின் பேரருள் நிறைந்த [illegible] பக்திச்சுவைமிக்க பாசுரங்களுக்கு [illegible] த்திற்கு இதமளிக்கின்றன.

[illegible] இமயநெற்றியின்
[illegible] புலியும்வில்லும்
[illegible] பொழில்மன்னர்
[illegible] பார்அர சாண்ட
[illegible] குடைப் பாண்டியன் கோயிலில்
[illegible] கனைகுர லியம்பு மாகலின்
[illegible] நமக்கின்றா மென்று
[illegible] மகளைக் கூஉய்க்
[illegible] மத்தும் கொண்டு
[illegible] முதுமகள் வந்து தோன்றுமன்"

[illegible] குரவைக்காதை மிகவும் சிறப்பாகத் [illegible]

[illegible] டு தென்னாட்டில் ஆண்டுவந்த சேர, [illegible] தமிழ் மன்னர்கள் பாரதம் முழுவதையு [illegible] தென்கடல் வரையிலான நாவலந்தீவினை [illegible] பூமண்டலப் பகுதியாகவே கருதிப் [illegible] ற்றியும் வந்துள்ளார்கள்.

[illegible] ல் பாண்டிய மன்னனின் மீன் சின்னம் [illegible] டும், அதனருகில் சோழ மன்னனின் [illegible] சேர மன்னனின் வில் சின்னமும் [illegible] டு, அந்தச் சோழ, சேர மன்னர்களும் இந்த [illegible] உள்ள இதர சிறுநில, பெருநில மன்னர்களும், [illegible] உலகம் முழுவதையும் ஆண்டு வந்த முத்து [illegible] வெண்கொற்றக் குடையுடைய பாண்டிய [illegible] அரண்மனையில் காலை முரசு ஒலி முழங்கியது. [illegible] கேட்ட ஆயர் முதுமகள், அரண்மனைக்கு [illegible] வேண்டிய முறை தங்களுக்கு வந்துள்ளது

என்று தன் மகளைக் கூவியழைத்துத் தயிர் கடை
கயிற்றையும் மத்தையும் எடுத்துக்கொண்டு வரு
கூறிவிட்டுத் தயிர்ப்பானையருகில் வந்தாள். அப்போ
நிமித்தங்கள் தோன்றின எனக் காப்பியம் குறிப்பிடு
அவை :

1. குடப்பால் உறையா குவியிமில் ஏற்றின்
   மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு
2. உறிநறு வெண்ணெய் உருகா உருகும்,
   மறிதெறித்து ஆடா வருவதொன் றுண்டு
3. நான்முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கும்
   மான்மணி வீழும் வருவதொன் றுண்டு

நேற்று உறையிட்ட பால் இன்னும் தயிராகவில்
காளைகளின் கண்களிலே நீர் வழிகிறது. உறிகளிலே
நாள் வைத்த மணம்மிக்க வெண்ணெய் உருக்கின
உருகவில்லை. ஆட்டுக்குட்டிகளெல்லாம் து
விளையாடாமல் சோர்ந்து படுத்துக் கிடக்கின்றன. நா
முலைக்காம்புகளைக்கொண்ட பசுக்கள் உடல் நடுங்
கொண்டு அலறிக் கத்திக்கொண்டிருக்கின்றன. அ
களின் கழுத்திலே கட்டியிருக்கும் மணிகள் அறுந்து
விழுகின்றன. இவையெல்லாம் ஏதோ ஒரு துன்பம் நட
ஏற்படுவதற்குத் தீய நிமித்தங்களாகத் தென்படுகின்
ஆயினும், அத்தீமைகள் நமக்குக் கேடு விளைவிக்காவண்
அதற்கான பரிகாரம் காணும் வண்ணம், ஆயர்பா
எருமன்றத்தில் கண்ணனும் அவனுடைய அண்
பலராமனும் சேர்ந்து முன்பு விளையாடிய பாலசரி
நாடகங்களுள், வேல் போன்ற நீண்ட கூர்மைய
கண்களுடைய நப்பின்னையோடு ஆடிய குரவைக் கூத்தி
ஆடுவோம். கறவைப் பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் ஏற்
துயர்கள் நீங்குக என்று ஆடுவோம். நமது குரவைக் கூ
ஆட்டத்தைக் கண்ணகியும் கண்ணாரக் கண்டு களிக்க
என்று மாதரி தன் மகளிடம் கூறுகிறாள்.

“குடத்துப்பால் உறையாமையும் குவியிமி லேற்றின்
கண்ணீர் சோர்தலும் உறியில் வெண்ணெய் உருகாமை
மறிமுடங்கி ஆடாமையும் மான்மணி நிலத்தற்று வீழ்

[illegible] முண்டென மகளை நோக்கி [illegible] மின் மாதர்க்கு அணியாகிய [illegible] ஆயர்பாடியில் எருமன்றத்து [illegible] ஆடிய வாலசரிதை நாடகங்களில் [illegible] யோடாடிய குரவையாடுதும் யாம் [illegible] துயர்நீங்குக வெனவே" என்று [illegible] குறிப்பிடுகிறது.

[illegible] பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் [illegible] வேண்டும் என்று கண்ணனையும் [illegible] டுப் பாடல்கள் பாடியும் ஆடல்கள் [illegible] செய்வது ஆயர்பாடி மக்களின் வழி [illegible] சேர்ந்தது என்பதை இளங்கோவடி [illegible] சிறப்பாக எடுத்துக் கூறுகிறார். உலக [illegible] பறப்பனவும், நடப்பனவும் மற்று உலக [illegible] நன்மைக்காக அவைகளுக்குத் தீங்கு [illegible] இருக்கக் கடவுளை வழிபடுவதும் [illegible] பாரத பூமியின் தலைசிறந்த தர்மமாகும்.

[illegible] கள் காளைகளை வளர்ப்பதும் [illegible] க்கும் ஆண்மக்களைத் தம் கணவராக [illegible] கிராமப் பெண்களிடத்தில் - குறிப்பாக [illegible] யில் - பழக்கத்தில் இருந்த வீரமரபாகும்.

[illegible] மதுரையில் ஆயர்பாடியில் ஏழு காளை [illegible] யர், தாம் வளர்க்கும் காளைகளை [illegible] மணப்போம் என்று கூறி அக்காளைகளை [illegible]. அந்த ஏழு கன்னியரைக் குறித்து,

> [illegible] அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும்இவ்
> [illegible] மலர்க்கோதை யாள்."

[illegible] முள்ள காளையின் சீற்றத்தைக் கண்டு [illegible] மீது பாய்ந்து அதனைத் தழுவி அடக்கிய [illegible] மலர்க்கோதையாள்.

> [illegible] செகிலை யடர்த்தாற் குரியவிப்
> [illegible] மாதராள் தோள்."

நெற்றியில் சிவந்த சுட்டினையுடைய காளையை அடக்கியவனுக்கே இப்பொன்வளையல் அணிந்த பெண்ணின் தோள்கள் உரியனவாகும்.

3. "மல்லல் மழவிடை யூர்ந்தாற் குரியளிம்
முல்லையம் பூங்குழல் தான்"

வலுமிக்க இந்த இளைய காளையை அடக்கி அதன்மீது ஏறி ஓட்டுபவனுக்கே இம்முல்லை மலரைச் சூடிய பூங்குழலாள் உரியவளாவாள்.

4. "நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகும்இப்
பெண்கொடி மாதர்தன் தோள்"

நுண்ணிய புள்ளிகளைக்கொண்ட இந்த வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கே இப்பெண் கொடியின் தோள்கள் உரியனவாகும்.

5. "பொற்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகும்இந்
நற்கொடி மென்முலை தான்"

அழகிய பொன் போன்ற மஞ்சள் நிறப் புள்ளிகளை யுடைய இந்த வெள்ளைக் காளையை அடக்கியவனுக்கே இவ்வழகிய நல்ல கொடி போன்றவளின் மென்முலைகள் உரியனவாகும்.

6. "வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியள்இக்
கொன்றையம் பூங்குழ லாள்"

வெற்றிமிக்க இவ்விளங்காளையை அடக்கிச் செலுத்துபவனுக்கே இக்கொன்றைப் பழம் போன்ற அழகிய நிறத்தையுடையவள் உரியவளாவாள்.

7. "தூநிற வெள்ளை அடர்த்தாற் குரியளிப்
பூவை புதுமல ராள்"

தூய வெள்ளை நிறம் கொண்ட இக்காளையை அடக்கியவனுக்கே இக்காயாம்பு மலரைப் போன்ற நிறத்தையுடையவள் உரியவள் ஆவாள் என்றெல்லாம் விவரித்துச் சிலப்பதிகாரக் காப்பியம் அழகுபடக் குறிப்பிடுகிறது.

ஆடல், பாடல், இசை, இசைக்கருவிகள், இசைப் பெயர்கள், தாளம், அரங்கம், களம் முதலியவைபற்றிக்

கூத்தும் ஆடல் பாடல்களும் நடைபெறும்போது இளங்கோவடிகள் மிகவும் நுணுக்கமாகவும் விளக்கமாகவும் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

"ஆங்கு
தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்
எழுவர் இளங்கோதையார்
என்றுதன் மகளை நோக்கித்
தொன்றுபடு முறையால் நிறுத்தி
இடைமுது மகளி வர்க்குப்
படைத்துக்கோள் பெயரிடுவாள்
குடமுதல் இடமுறை யாக்குரல் துத்தம்
கைக்கிளை உழையிளி விளரி தாரம்என
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே
மாயவள் என்றாள் குரலை விறல் வெள்ளை
ஆயவள் என்றாள் இளிதன்னை ஆய்மகள்
பின்னையாம் என்றாளோர் துத்தத்தை மற்றையார்
முன்னையாம் என்றாள் முறை
மாயவள் சீருளார் பிஞ்ஞையும் தாரமும்
வால்வெள்ளை சீரார் உழையும் விளரியும்
கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள் வலத்துளாள்
முத்தைக்கு நல்விளரிதான்;
அவருள்,
வண்டுழாய் மாலையை மாயவன் மேலிட்டுத்
தண்டாக் குரவைதான் உள்படுவாள் கொண்டசீர்
வையம் அளந்தான் தன்மார்பின் திருநோக்காப்
பெய்வளைக் கையாள் நப்பின்னை தானாம் என்றே
ஐயென்றாள் ஆயர்மகள்"

என்று இளங்கோவடிகளார் தமது இனிய காப்பியத்தில் குறிப்பிடுகிறார்.

குரவைக் கூத்து ஆடத் தொடங்குவதற்குத் தயாரிப்பாக அந்த ஏழு மகளிருக்கும் அவர்களுடைய உரிய பெயர்களுக்குப் பதிலாக அவர்களுக்கு இசைப்பெயர்களைச் சூட்டி, வேடம் கட்டி ஆடத் தொடங்குவர். இதுபற்றி இளங்கோவடிகள் மிகவும் விரிவாகச் சிறப்பித்துக் கூறுவதைக் காணலாம்.

அந்த ஏழு பெண்களுக்கும் **குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்** என்று புனைபெயர் சூட்டினாள் மாதரி. இந்த ஏழு பெயர்களும் யாழிசை நரம்புகளின் பெயர்களாகும்.

இவற்றுள் குரல் நரம்பின் பெயரைக் கொண்டவள் மாயவன். இளி நரம்பின் பெயரைக் கொண்டவள் பலராமன். துத்த நரம்பின் பெயரைக் கொண்டவள் நப்பின்னை நங்கை. மற்றவர்களும் அவரவர்களுக்குரிய இடத்தில் வரிசைப்படி நின்று கைகோத்துக்கொண்டனர்.

அந்த எழுவருள் மாயவன் வேடத்தில் உள்ளவளின் கழுத்திலே வளமான துளசி மாலையை நப்பின்னை வேடம் கொண்டவள் சூட்டினாள். அதன் பின்னர், அவர்கள் அனைவரும் கை கோத்துக்கொண்டு ஆடத் தொடங்கினர். இந்தக் காட்சி ஓர் அற்புதமான காட்சியாகும். இந்த அழகிய காட்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது **"கொண்டசீர் வையம் அளந்தான் தன் மார்பின் திருநோக்காப் பெய்வளைக் கையாள் நப்பின்னை தானம் என்றே ஐயென்றாள் ஆயர் மகளிர்''** என்று மிகுந்த சிறப்பினைக் கொண்ட இவ்வுலகையே ஈரடியால் அளந்த திருமால் தனது மார்பிலே இருக்கும் இலக்குமியைக்கூட நோக்காமல் இருப்பதற்குக் காரணம் நமது அழகுமிக்க நப்பின்னைதான் போலும்" என்று ஐயை வியப்படைந்து கூறியதாக மிக அழகாகக் காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

**ஆடத் தொடங்குதல்**

"அவர்தாம்
செந்நிலை மண்டிலத்தால் கற்கடகக் கைகோஒத்து
அந்நிலையே யாடல்சீர் ஆய்ந்துளார் முன்னைக்
குரற்கொடி தன்கிளையை நோக்கிப் பரப்புற்ற
கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தாற் பாடுதும்
முல்லைத்தீம் பாணியென்றாள்
எனாக்

"குரல்மந்த மாக இளிசம னாக
வரன்முறையே துத்தம் வலியா - உரன்இலா
மந்தம் விளரி பிடிப்பாள் அவள்நட்பின்
பின்றையைப் பாட்டெடுப் பாள்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு ஆடத் தொடங்கினர் என்பதாகும்.

முதலில் சமநிலையாக வரிசையில் நின்று, பின் கை கோத்துக்கொண்டு வட்ட வடிவமாகச் சுற்றி நின்றுகொண்டு தாளத்திற்கேற்ப அடிவைத்து அதில் மாயவன் வேடத்தில் இருப்பவள் தனது துணையை நோக்கி, "விரிவான கொல்லைப் புனத்தில் வஞ்சகமாக வந்து நின்ற குருந்த மரத்தினை முரித்த மாயவனை முல்லைப் பண்ணால் பாடுவோம்" என்று கூற, அனைவரும் அவ்வாறே பாடத் தொடங்கினர். அப்போது 'குரல்' தானத்தில் இருந்தவள் மெல்லிய குரலிலும் 'இளி' தானத்தில் இருந்தவள் சற்று சமநிலையான குரலிலும், 'துத்த' தானத்தில் இருந்தவள் சற்று வலிய சுரத்திலும் ஒலி கிளப்பியும், 'விளரி' தானத்தில் இருந்தவள் மந்தமான சுரத்திலும் பாட நப்பின்னை வேடத்தில் இருந்தவள் தொடர்ந்து பாடினாள் என்று இளங்கோவடிகள் மிக நுட்பமாகக் கூத்தில் கலந்துகொண்ட பெண்களின் ஆடல் பாடல் முறைகளை மிக அழகாக வர்ணித்தும் விவரித்தும் கூறுவதைக் காணலாம்.

பாட்டு தொடங்குகிறது. 'முதலில் மாயவனின் குழலிசையைக் கேட்போம்' என்று பாடத் தொடங்கு கிறார்கள். இந்த இசையின் இனிமை தனித்தன்மையானதாக நம்மை மகிழ்விக்கிறது.

**1. "கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்**
**இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்**
**கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ"**

பசுக்கூட்டத்திற்குள் கஞ்சன் ஏவிய அரக்கன் வஞ்சனையாகக் கன்று வடிவத்தில் நுழைந்தபோது அக்கன்றினையே பிடித்து, அதையே குறுந்தடியாகக் கொண்டு அவ்வாறே நின்ற விளவின் கனியை உதிர்த்த கண்ணன், இன்று நமது வழிபாட்டால் நமது பசுக் கூட்டத்திற்குள் வருவானாகில் அவனது இனிய வாயினால் ஊதும் கொன்றைக் குழலிசையைக் காதாரக் கேட்போம், தோழி.

2. “ பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழீ”

மேருமலையை மத்தாக, வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றிப் பாற்கடலைக் கடைந்த மாயவன் - கண்ணன், இன்று நமது வழிபாட்டால் நமது பசுக்கூட்டத்திடையில் வருவானாகில் அவன் வாயினால் ஊதும் அழகிய ஆம்பல் குழலின் இன்னிசையைக் கேட்போமே, தோழி !

3. “கொல்லையம் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ
தொழுனைத் துறைவனோடு ஆடிய பின்னை
அணிநிறம் பாடுகேம் யாம்”

கொல்லையைச் சார்ந்த இடத்திலே கஞ்சன் ஏவலால் வஞ்சகமாக வந்து நின்ற குருந்த மரங்களைச் சாய்த்து முரித்த மாயவன் - கண்ணன், நமது வழிபாடு காரணமாக இசைந்து நமது பசுக் கூட்டத்திற்குள் வருவானாகில் அவன் வாயினால் ஊதும் முல்லைக் குழலிசையைக் கேட்போம், தோழி !

இனி, அந்த யமுனைத் துறைவனான கண்ணன், அவனோடு ஆடிய நங்கை நப்பின்னை ஆகிய இருவரின் அழகினையும் பாடுவோம் என்றும் பாடுகிறார்கள்.

யமுனையாற்றில் நீராடிக்கொண்டிருந்த ஆயர்பாடிப் பெண்களின் ஆடைகளையும் அப்பெண்களின் வளையல்களையும் விளையாட்டாக எடுத்து ஒளித்து வைத்தான், கண்ணன். அதனால் தளர்வடைந்து தங்கள் கைகளால் உடலை மறைத்துக்கொண்டு தங்கள் ஆடைகளைத் தரும்படி கண்ணனிடம் ஆயர் பெண்கள் வேண்டினர். அந்த லீலைகள் புரிந்த கண்ணனின் வடிவழகைப் பாடுவோமா, அந்த அழகிய ஆயர் மகளிரின் வடிவழகைப் பாடுவோமா என்றும் உள்ளம் நெகிழ்ந்து பக்தி உணர்வோடு குரவைக்கூத்தில் அந்த இளம் பெண்கள் பாடுகிறார்கள்.

1. "இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவுஎன் கோயாம்
அறுவை ஒளித்தான் அயர அயரும்
நறுமென் சாயல் முகம்என் கோயாம்."

ஒடிந்து விழுந்துவிடுமோ எனக் கூறத் தக்க வகையில் இடை துவளும்வண்ணம் அசைந்து வரும் ஆயர் மகளின் ஆடைகளை ஒளித்து வைத்த கண்ணனது வடிவழகை நாம் புகழ்ந்து பாடி மகிழ்வோமா அல்லது அந்த ஆடைகளை ஒளித்தவன் அவள் தனது துகிலின்மையைக் கண்டு அயர்வுற அதைக் கண்டு நெகிழும் அந்த ஆயர் மகளின் அழகினைப் புகழ்ந்து பாடுவோமா?

2. "வஞ்சம் செய்தான் தொழுனைப் புனலுள்
நெஞ்சம் கவர்ந்தாள் நிறைஎன் கோயாம்
நெஞ்சம் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சம் செய்தான் வடிவுஎன் கோயாம்"

யமுனையாற்றில் நீராடும்போது தன்னை வஞ்சித்தவனது உள்ளம் கவர்ந்தவளது அழகை நாம் பாடுவோமா அல்லது அவ்வாறு தனது உள்ளம் கவர்ந்தவளது அழகையும் ஆடைகளையும் வளையல்களையும் கவர்ந்துகொண்டவனது வடிவழகை நாம் புகழ்ந்து பாடுவோமா?

3. "தையல் கலையும் வளையும் இழந்தே
கையில் ஒளித்தாள் முகம்என் கோயாம்
கையில் ஒளித்தாள் முகம்கண் டழுங்கி
மையல் உழந்தான் வடிவென் கோயாம்.

''ஆடைகளையும் வளையல்களையும் இழந்து நாணத்துடன் தமது உடலைக் கைகளால் மறைத்துக் கொண்டிருக்கும் அந்த அழகிய பெண்களின் முகத்தழகைப் பாடுவோமா அல்லது கைகளினால் தனது உடலை மறைத்துக்கொண்டிருப்பவளது முக அழகைக் கண்டு இரக்கமுற்று அவள்மீது மையல் கொண்டுள்ள அக் கண்ணனது வடிவழகையே நாம் புகழ்ந்து பாடுவோமா?" என்று மனம் கசிந்து பக்திச் சுவையுடன் பாடுகின்றனர். மேலும் ஆடல் பாடல் தொடர்கிறது.

1. "கதிர்திகிரி யான்மறைந்த கடல்வண்ணன் இடத்துளாள்
மதுபுரையும் நறுமேனித் தம்முனோன் வலத்துளாள்
பொதியவிழ் மலர்க்கூந்தல் பிஞ்ஞைசீர் புறங்காப்பார்
முதுமறைதேர் நாரதனார் முந்தைமுறை நரம்புளர்வார்

2. "மயில்எருத்து உறழ்மேனி மாயவன் வலத்துளாள்
பயில்இதழ் மலர்மேனித் தம்முனோன் இடத்துளாள்
கயில்எருத்தம் கோட்டியநம் பின்னைசீர் புறங்காப்பார்
குயிலுவருள் நாரதனார் கொளைபுணர்சீர் நரம்புளர்வார்"

என்று பாடி ஆடுகின்றனர்.

கதிர் வீசும் சூரிய மண்டலத்தைத் தனது சக்கரத்தால் மறைத்த கடல் போன்ற நீல நிறத்தையுடைய கண்ண பெருமானுடைய இடப்பக்கத்தே உள்ளவளும், சந்திரனைப் போன்ற தூய வெண்மை நிறம் கொண்ட, கண்ணனுக்கு மூத்தவனான பலதேவனுக்கு வலப்பக்கத்தே உள்ளவளும், கட்டவிழ்ந்து மலர்கின்ற மாலையை அணிந்த கருங் கூந்தலையுடையவளுமான நப்பின்னையின் ஆடல் பாடல்களுக்கேற்றவாறு பழைய மறைகளின் பொருளை முழுதும் உணர்ந்தவரும் இசை ஞானத்தில் சிறந்தவரும் குரல் நரம்பை முறையாக வாசிப்பவருமான நாரதனார் இசையமைத்து பக்கவாத்தியம் இசைத்தார் என்னும் பொருள்பட இங்குக் கூறியிருப்பது மிகச் சிறப்பான கருத்தாகும்.

இன்னும், மயிலினது நீண்ட புறக்கழுத்தின் நிறத்தைப் போன்ற திருமேனிகொண்ட கண்ணபெருமானின் வலப்பக்கத்திலே உள்ளவளும், நெருக்கமான இதழ்களைக் கொண்ட மல்லிகை மலர் போன்ற வெண்ணிறத்தையுடைய அவனுடைய முன்னோனான பலதேவனுடைய இடப்பக்கத்தே உள்ளவளும், புறக்கழுத்தாகிய பிடரியை வளைத்து நின்று ஆடுபவளுமான நப்பின்னையின் ஆடல் பாடல்களுக்கு ஏற்றவாறு அதை உறுதிப்படுத்தும் முறையில் காத்து நிற்பவர், இசைக்கருவிகளை வாசிப்பவர்களுள் மிகச் சிறந்தவருள் சிறந்தவரும், பண்ணோடு கூடிய தாளத்திற்கும் ஏற்றவாறு தமது யாழ் நரம்பினை உருவி வாசிப்பவருமாகிய நாரதனார் ஆகும் என்று இங்கு அடிகளார் குறிப்பிடுகிறார்.

கண்ணன், பலதேவன், நப்பின்னை ஆகியோர்களின் வேடங்களில் உள்ளவர்களும் இதர மகளிரும் வட்டமாக நின்று சுற்றிச்சுற்றி இடப்புறத்தும் வலப்புறத்தும் மாறி மாறிச் சுற்றி ஆடினர், பாடினர். இதைச் சரியாக இசைத்துத் தாள நயத்துடன் ஆடிப்பாடியதை இசையில் வல்ல நாரதனாரே முறைப்படுத்திக்கொண்டு சென்றார் என்று இங்குக் குறிப்பிட்டிருப்பது சிறப்பாகும். இந்தக் கருத்தையும் காட்சியையும் ஆழ்வார்களின் பாடல்களிலும் காணலாம்.

இந்த அழகிய ஆய்ச்சியர் குரவைக் கூத்தின் ஆடல் பாடல்களைப் புகழ்ந்து ஆயர் முதுமகளான மாதரி சிறப்பித்துக் கூறுகிறார்.

"மாயவன்தம் முன்னினொடும் வரிவளைக்கைப் பின்னையொடும்
கோவலர்தம் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சோர
ஆய்வளைச்சீர்க்கு அடிபெயர்த்திட்டு அசோதையார் தொழுதேத்தத்
தாதெருமன் றத்துஆடும் குரவையோ தகவுடைத்தே
எல்லாநாம்
புள்ளூர்க் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணியொன்று உற்று."

என்று ஆயர்முதுமகள் மாதரி கூறுகிறாள்.

கண்ணபெருமான் தனது முன்னோனான பலதேவனோடும் ஓவியம் பொறித்த வளையல்களையணிந்த கைகளையுடைய நப்பின்னைப் பிராட்டியோடும் ஆயர்குல இளமங்கையர்கள் தங்கள் கூந்தலும் மலர்மாலையும் கட்டவிழ்ந்து விழும்படி, ஆராய்ந்து அணிந்துள்ள வளையல்களின் ஒலியாகிய தாளத்திற்கேற்பத் தமது காலடிகளைப் பெயர்த்து மிதித்து, அசோதைப் பிராட்டியார், அக்காட்சியைக் கடவுள் காட்சியாகக் கண்டு தம்மை மறந்து கைகளைத் தலைமேல் வைத்துக் கூப்பித் தொழுது புகழும்படி முன்பு கோகுலத்தின் ஆயர்பாடியில் பூந்தாதுகளாகிய எருவை மன்றத்தில் ஆடியருளிய குரவைக் கூத்தேயாகும்; இப்போது நீங்கள் ஆடிய கூத்தும் என்றும் புகழ்ந்து இது பெருமைமிக்கது என்றும் பாராட்டிப் பேசினாள். மேலும் தோழியர்களே! இனி நாமெல்லாம்

இக்குரவைக் கூத்தினுள் உள்வரியாகிய பாட்டினால் கருடப்பறவையில் ஊர்ந்து வருகின்ற செங்கண் நெடுமாலாகிய நமது கடவுளைப் பாடி மகிழ்வோம் என்று கூறுகிறாள்.

அடுத்து உள்வரிப் பாட்டுகளாகப் பாண்டிய, சோழ, சேர மன்னர்களைத் திருமாலுடன் இணைத்துச் சிறந்த பாடல்களைப் பாடி ஆடுகிறார்கள்.

1. “கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்.

2. பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரிப் பொருபடையான் என்பரால்.

3. முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்
கன்னவில்தோள் ஓச்சிக் கடல்கடைந்தான் என்பரால்”

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

கோக்கப்படாத பொதிகை மலையின் ஆரமாகிய சந்தன மாலையும் கோக்கப்பட்ட கடல் ஆரமாகிய முத்து மாலையும், தேவேந்திரன் கொடுத்திட்ட மணியாரமும் செந்தமிழ் நாட்டினுள் தென்னாட்டை ஆளுகின்ற பாண்டிய மன்னனுடைய மார்பில் கிடந்து திகழ்வனவாம். அவ்வாரம் தேவேந்திரன் பூணாரம் உள்ளிட்ட மூவகை ஆரங்களையும் பூண்டு திகழும் அப்பாண்டிய மன்னன்தான் யாவனோ வெனில் அவன்தான் வளம் மிகுந்த கோகுலத்தில் ஆனிரைகளை மேய்த்துக் குருந்த மரத்தை முரித்தொழித்த கண்ணபிரானே என்று அறிந்தவர்கள் கூறுவர்.

பொன்னைப் போன்ற இமயமலையின் கொடுமுடியிலே தனது புலிப்பொறியைத் தனது வெற்றிக்கு அறிகுறியாகப் பொறித்து இந்நிலவுலகத்தை ஆட்சி செய்தான், மதில்கள்

சூழ்ந்த பூம்புகார் நகரின்கண் செங்கோன்மை செலுத்தி வாழ்கின்ற வேந்தனாகிய சோழ மன்னன். அத்தகைய சோழ மன்னன் யாவனோவெனில் பொன்னாலான ஆழியாகிய சொற்படையையுடைய கண்ணபெருமானே என்று கூறுவர்.

கடலினுள் சென்று, அங்கு மூவாமையையுடைய கடம்பினை வெட்டியவன், வளம் நிறைந்த வஞ்சி நகரத்திலிருந்து செங்கோன்மை செலுத்தி வருகின்ற மன்னர் மன்னன் சேரன் என்பான். அக்கோச்சேரன் யாரெனில் மலையை ஒத்த தனது தோள்களைச் செலுத்தித் திருப்பாற் கடலைக் கடைந்த திருமால் கடவுள் என்றே சிறந்தோர் கூறுவர் என்று ஆயர் முதுமகள் கூறியதைக் காப்பியம் விவரிக்கிறது.

திருமாலை முன்னிலையாக வைத்து வாழ்த்திப் பாடும் முன்னிலைப் பரவல் பாடல்கள் வருமாறு :

1. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை அசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே.

2. அறுபொருள் இவன்என்றே அமரர்கணம் தொழுதேத்த
உறுபசிஒன் றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினான் உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே !

3. திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்நின் செங்கமல
இரண்டடியான் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய்! மாறட்டாய்! மாயமோ மருட்கைத்தே!

*1. கடல் போன்ற நீல நிறமுடைய எம் இறைவனாகிய திருமாலே, நீ வடகோடியிலுள்ள பெரிய மலையாகிய மேரு மலையென்னும் மந்தர மலையை மத்தாகக்கொண்டு, வாசுகி என்னும் பெரும்பாம்பினை, அம்மத்தினைச் சுற்றி வலிக்கும் கயிறாகக்கொண்டு முன்னொரு காலத்தில் திருப்பாற் கடலைக் கடைந்து கலக்கினாய்! நான்முகனை ஈன்ற தாமரை மலரைத் தனது கொப்பூழாகக் கொண்டுள்ள எம்பெருமானே, நீ அவ்வாறு கடல் வயிறு கலக்குவதற்குக் காரணமாக இருந்த*

உனது நீண்ட பெரிய கைகள்தாமே அசோதைப் பிராட்டியாரின் தயிர் கடையும் சிறிய கயிற்றினாலே கட்டுண்ட கை என்பர். இது என்ன மாயமோ ! இச்செய்தி எமக்கு மிக்க வியப்பை அளிக்கிறதே !

2. வளமான துளபமாலையை அணிந்த திருமாலே, நின்னைப் பொருளாகக் கண்ட பொருள் அனைத்திற்கும் முதற்பொருள் இத்திருமாலேயாவான் என ஐயமறத் தெளிந்து அமரர்கள் கூட்டமெல்லாம் கை கூப்பித் தொழுது நிற்ப, மிக்க பசிப்பிணியொன்றும் இல்லாமலேயே உலகம் முழுவதையும் உண்டாயல்லையோ! அவ்வாறு உலகம் உண்ட பெருவாய்தானோ, எளிய ஆய்ச்சியர்களின் வீடுகளிலே களவு செய்து, அவர்களுடைய உறிகளில் வைத்திருந்த வெண்ணெயை உண்ட வாய் என்று கூறுவது என்ன மாயமோ? அச்செயல் நமக்கு மிக்க வியப்பை யளிக்கிறது.

இப்பாடலில் "அறுபொருள் இவன் என்றே அமரர்கள் தொழுதேத்த" என்று திருமாலைப்பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடுவது ஒரு தனிச் சிறப்பான கருத்தாகும். "**அறுபொருள்**" என்பதற்கு "**முடிவான பொருள்**" என்றும், "**தீர்ந்த பொருள்**" என்றும், "**அறுதியிட்ட பொருள்**" என்றும் "**ஐயமற்ற பொருள்**" என்றும், "**அறுவகைச் சமயத்தாரும் துணிந்த பொருள்**" என்றும் "**முழுமுதற் பொருள் இவனே**" என்றும் உரையாசிரியர்கள் கூறுகிறார்கள்.

கம்பன் தனது சிறப்புமிக்க இராமாவதாரப் பெருங்காவியத்தில் இராமநாமத்தின் சிறப்புப்பற்றி,

"மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்"

என்றும், இன்னும்,

"மூவர்நீ, முதல்வன்நீ, முற்றும்நீ, மற்றும்நீ
பாவம்நீ, தருமம்நீ, பகையும்நீ, உறவும்நீ"

என்று வாலி வதைப் படலத்திலும்,

"மூலமும் நடுவும் ஈறும் இல்லதுஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன்"

என்று சுந்தர காண்டம் பிணி வீட்டுப் படலத்திலும்,

"நல்லறமும் மெய்ம்மையும் நான்மறையும் நல்லருளும்
எல்லையில் ஞானமும் ஈறுஇலா எப்பொருளும்
தொல்லைசால் எண்குணனும் நின்சொல் தொழில்செய்க"

என்று இரணியன் வதைப்படலத்திலும்,

"நெற்றியின் நின்றுஒளி நெடிது இமைப்பன்
கொற்றவன் சரம்எனக் குறிப்பின் உன்னினான்,
சுற்றுற நோக்கினன் தொழுது வாழ்த்தினான்
முற்றிய பொருட்கெலாம் முடிவு ளான்தனை"

என்று கும்பகருணன் வதைப்படலத்திலும் கம்பன் குறிப்பிடுகிறார்.

கம்பனது முயற்சியைப்பற்றி,

"எல்லையொன் றின்மை எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும்"

என்று பாரதி குறிப்பிடுகிறார்.

"எவரும் யாவையும் எல்லாப் பொருளும்
கவர்வின்றித் தன்னுள் ஒடுங்க நின்ற
பவர்கொள் ஞான வெள்ளச் சுடர்மூர்த்தி
அவரெம் ஆழியம் பள்ளி யாரே"

என்றும்,

"உருவாகிய ஆறு சமயங்கட் கெல்லாம்
பொருவாகி நின்றான் அவன் - எல்லாப் பொருட்கும்
அருவாகிய ஆதியைத் தேவர்கட் கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டுகொண் டேனே"

என்றும் நம்மாழ்வார் பாடுகிறார்.

3. அமரர்களான தேவர்களெல்லாம் ஒன்று திரண்டு கூடிக் கை குவித்து வணங்கி வாழ்த்துகின்ற திருமாலே உன்னுடைய செந்தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளாலே மூன்று உலகங்களையும் அளந்து முடித்தாயே, அந்தத் திருவடிகள்தாமே அன்று

பாண்டவர்களுக்காகத் தூது நடந்த திருவடிகளாம். நரசிம்மமாகித் தூணினின்றும் வெளிப்பட்டுப் பகைவனான இரணியனைக் கொன்றொழித்த இறைவனே, இது என்ன மாயமோ, இந்தச் செய்தியும் நமக்குப் பெரிதும் வியப்பை அளிக்கிறது; நமது அச்சத்தைப் போக்குகிறது.

"திரண்டமரர் தொழுதேத்தும் திருமால்" என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவதற்கொப்பாக ஆழ்வார்களும் பல பாடல்களில் பாடுகிறார்கள்.

"இந்திர னோடு பிரமன்
ஈசன் இமையவ ரெல்லாம்
மந்திர மாமலர் கொண்டு
மறைந்துஉவ ராய்வந்து நின்றார்"

என்று பெரியாழ்வார் பாடுகிறார்.

"வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர்"

என்றும்,

"அலங்கலந் தொடையல்கொண் டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர்"

என்றும்,

"அந்தரத் தமரர்கள் கூட்டங்க ளிவையோ
அருந்தவ முனிவரும் மருதரு மிவரோ
இந்திர னானையும் தானும்வந் திவனோ
எம்பெரு மான்உன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்!"

என்று தொண்டரடிப்பொடியாழ்வார் மிக அழகாகப் பாடுகிறார்கள். இன்னும்,

"ஏதமில் தண்ணுமை யெக்கம்மத் தளியே
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்
கந்தரு வர்அவர் கங்குலு ளெல்லாம்
மாதவர் வானவர் சாரண ரியக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்"

என்றும் தொண்டரடிப்பொடியாழ்வார் அரங்கத் தம்மானைப் பள்ளியெழுந்தருளும்படி பாடுகிறார்.

"இந்திரனும் இமையவரும் முனிவர்களும் எழிலமைந்த
சந்தமலர்ச் சதுமுகனும் கதிரவனும் சந்திரனும்
எந்தைஎமக் குள்எனநின் றருளும்இடம்"

என்று திருமங்கையாழ்வார் பாடுகிறார்.

"குடிகுடி யாகக் கூடிநின் றமரர்நின்
குணங்களே பிதற்றிநின் றேத்த"

என்றும் திருமங்கையாழ்வார் பாடுவதைக் காண்கிறோம்.

"அன்றியாம் ஒருபுக லிடம்இலம் என்றென் றரற்றி
நின்று நான்முகன் அரனொடு தேவர்கள் நாட"

என்று திருமோகூர்ப் பெருமானைக் குறித்து நம்மாழ்வார் பாடுகிறார்.

"அருளை யீயென் அம்மானே
என்னும் முக்கண் அம்மானும்
தெருள்கொள் பிரமன் அம்மானும்
தேவர் கோனும் தேவரும்
இருள்கள் கடியும் முனிவரும்
ஏத்தும் அம்மான் திருமலை
மருள்கள் கடியும் மணிமலை
திருமா லிருஞ்சோ லைமலையே"

என்றும் நம்மாழ்வார் பாடுகிறார்.

ஆய்ச்சியர் குரவையில் அடுத்தபடியாகத் திருமாலைப் படர்க்கையில் முன்வைத்து அழகான பாடல்கள் வருகின்றன. அவை :

1. மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

2. பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியிடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே!

திருமாலின் அழகான அங்க வடிவங்கள் அனைத்தையும் கண் இமைக்காமல் கண்டுகளித்து ஆனந்தப்படவேண்டும் என்று ஆயர்பாடி மகளிர் பாடுகிறார்கள்.

3. மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்துஆ ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே !

என்றுயாம்,

கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம்நம்
ஆத்தலைப் பட்ட துயர்தீர்க்க வேத்தர்
மருள வைகல் வைகல் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடித்தோள் தென்னவன் கடிப்பிகு முரசே"

என்று காப்பிய அடிகள் ஆய்ச்சியர் குரவைக் காதையில் குறிப்பிடுகின்றன.

1. மாவலி கூறியபடி நீ நிலத்தை அளக்கும்போது உன்னுடைய இரண்டடிகளுக்கும் முறையாக நிரம்பா வண்ணம் மூன்று உலகங்களும் முடிந்து போகும்படி முன்பு அளந்தருளினாய். அந்தத் திருவடிகள் இயற்கையிலேயே சிவந்தவை. அந்தச் சிவந்த அடிகளில் கல்லும் முள்ளும் பட்டுக் கொப்புளங்கள் ஏற்பட்டு, மேலும் சிவப்பாகி, உனது தம்பியான இலக்குவனோடு பதினான்கு ஆண்டுகள் காடுகளிலே திரிந்து, இலங்கையின் சோவென்னும் வலுவான மதிலரணும் அதனுள்ளேயிருந்த அரக்கர் கூட்டமும் போர்க் களத்திலே அழிந்தொழியும்படி அவ்விலங்கையின் காவலை அழித்துத் தன் அன்பர்களுக்குத் தொண்டுசெய்த இராமனுடைய புகழினைக் கேட்காத செவிகளும் செவிகளாகுமோ? அந்தத் திருமாலாகிய இறைவனுடைய புகழைக் கேட்காத செவிகள் செவிகளாகுமோ?" என்றும்,

2. கடவுள்களுள் வைத்து முழு முதலான பெரிய கடவுளாக விளங்கும் திருமாலை நாமெல்லாம் சிறிதளவும்

அறியவொண்ணாத அருஞ்செயல்கள் பலவும் மாயங்கள் பலவும் செய்வதற்கு வல்லவனான மாயவன் என்னும் பெயர் படைத்த திருமாலை, ஐம்பெரும் பூதங்களும் எண்ணற்ற உயிர்ப்பொருள்களும் இதர உலகப்பொருள்களனைத்தும் அடங்கிய இப்பேருலகையெல்லாம் தோற்றுவித்து அவைகளை விரிவடையச் செய்வதற்குக் காரணமான பொற்றாமரை பூத்த உந்தியைக்கொண்ட விண்ணவனான திருமாலை, அவனுடைய பெரும் உருவத்தில் உள்ள கண்களும் திருவடிகளும் கைகளும் திருவாயும் சிவந்தனவாகவும் ஏனைய உறுப்புகளெல்லாம் கரிய நிறம் கொண்டனவாகவுள்ள நமது இறைவனான திருமாலின் திருவுருவத்தைக் காணப்பெறாத கண்கள் என்ன கண்களோ? அத்திருமாலின் பெருவடிவத்தைக் காணும்போது இமைகள் கொட்டாமல் காணவேண்டும். அவ்வாறு இமை கொட்டாமல் காணாத கண்கள் கண்களல்லவென்று ஆய்ச்சியர்கள் பாடுவதை இளங்கோவடிகளார் மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

இங்கு திருமாலை, **"பெரியவனை, மாயவனை, பேருலகம் எல்லாம் விரிகமல உந்தியிடை விண்ணவனை"** என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டிருப்பது ஆழ்வார்கள் திருமாலைப் பெருமையுடன் குறிப்பிடுவதற்கு ஒப்பாக விளங்குவதைக் காணலாம். திருமாலை இப்பேருலகின் வடிவமாகக் காணும் ஆழ்வார்களின் தத்துவ நிலைக்கு ஒப்பதாகவும் அடிகளாரின் காப்பிய அடிகள் அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

"முற்ற உலகெலாம் நீயே யாகி
மூன்றெழுத் தாய முதல்வ னேயோ"

என்றும்,

"உய்ய உலகு படைக்க வேண்டி
உந்தியில் தோற்றினாய் நான்முகனை"

என்றும்,

"மண்ணொடு நீரும் எரியும் காலும்
மற்றும்ஆ காசமு மாகி நின்றாய்"

என்றும் பெரியாழ்வார் பாடுகிறார்.

"கலைகளும், வேதமும் நீதி நூலும்
கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை
நிலைகளும் வான வர்க்கும் பிறர்க்கும்
நீர்மையி னால்அருள் செய்து நீண்ட
மலைக ளும்மா மணியும் மலர்மேல்
மங்கையும் சங்கமும் தங்கு கின்ற
அலைகடல் போன்றவர் ஆர்கொல்?"

*என்று அட்ட புய கரத்துத் திருமாலைத் திருமங்கையாழ்வார் சிறப்பித்துப் பாடுகிறார்.*

"யாவருமாய், யாவையுமாய் எழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தி"

*என்றும்,*

"வானாடும், மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும்
தானாய எம்பெருமான் தலைவன்"

*என்றும்,*

"அண்டமும் இவ்வலைவாய்க் கடலும்
அவனிகளும் குலவரையும் உண்ட பிரான்"

*என்றும் திருமங்கையாழ்வார் பாடுகிறார்.*

"நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்
சீரார் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாய் அயனாய்
கூரார் ஆழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்
வாராய்"

*என்றும்,*

"மண்ணும் விண்ணும் மகிழக் குறளாய் வலங்காட்டி
மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மானே!"

*என்றும்,*

"ஞாலத் தூடே நடந்தும் நின்றும் கிடந்திருந்தும்
சாலப் பலநாள் உகந்தோ றுயிர்கள் காப்பானே"

*என்றும் நம்மாழ்வார் பெரியவனை மாயவனைப் பாடுகிறார்.*

"பிறந்த மாயா! பாரதம்
பொருத மாயா! நீயின்னே
சிறந்த கால்தீ நீர்வான்மண்
பிறவு மாய பெருமானே

கறந்த பாலுள் நெய்யேபோல்
இவற்றுள் எங்குங் கண்டுகொள்
இறந்து நின்ற பெருமாயா
உன்னே எங்கு காண்கேனே?"

என்று மாயவனைப்பற்றி நம்மாழ்வார் உள்ளம் கசிந்து பாடுகிறார்.

"ஊழி முதல்வன் ஒருவனே
என்னும் ஒருவன் உலகெல்லாம்
ஊழி தோறும் தன்னுள்ளே
படைத்துக் காத்துக் கெடுத்துழலும்
ஆழி வண்ணன் என்னம்மான்
அந்தண் திருமா லிருஞ்சோலை
வாழி மனமே கைவிடேல்
உடலும் உயிரும் மங்கவொட்டே"

என்று நம்மாழ்வார் மிகவும் அற்புதமாகப் பாடுகிறார்.

3. அறியாமை யென்னும் மடமையிருள் தங்குவதற்கு உறைவிடமாகத் தன் நெஞ்சத்தைக் கொண்டிருக்கின்ற கஞ்சன் (கம்சன்), தன்னைக் கொல்லுவதற்குச் செய்த பல வேறு வஞ்சகச் செயல்களைக் கடந்து, கடைசியில் அவனைக் கொன்று வென்றவனும், நான்கு திசைகளிலும் முனிவர்களும் தேவர்களும் கண்டு மகிழ்வதற்கு வழிபாடுகள் செய்தும் மறைகளைத் தொடர்ந்து முழங்கி அவைகளின் உட்பொருளை அறிந்துகொள்ளவும், தனிப்பெரும் பொருளாக நிற்பவனும், தன்பால் அன்பும் பக்தியும் கொண்டுள்ள பஞ்சபாண்டவர்களுக்காகத் துரியோதனன் முதலிய நூற்றுவர்பால் போர் நடத்திய அந்தக் கண்ண பெருமானைப் புகழாத நாக்குதான் ஒரு நாக்காகுமா? அக்கண்ணனுடைய மூலப் பெயரான நாராயணா என்னும் பெயரைத் தொடர்ந்து கூறாத நாக்குதான் ஒரு நாக்காகுமா? என்று ஆய்ச்சியர் தங்கள் ஆடல் பாடல்களில் குரவைப் பாட்டாகப் பாடுகிறார்கள்.

இங்கு, திருமால் சீர் கேளாத செவி செவியன்று, கரியவனைக் காணாத கண் கண்ணன்று, நாராயணா என்று கூறாத நாவு நாவன்று என்று குரவைப்பாட்டில் மிகவும்

அற்புதமான முறையில் ஆயர் மகளிர் பாடுவதை இளங்கோவடிகளார் எடுத்துக் கூறியுள்ள சிறந்த காட்சியைக் காண்கிறோம்.

ஆழ்வார்கள் மிகுந்த பக்திப் பரவசத்துடன் திருமாலைப் பல வடிவங்களிலும், பல நாமங்களிலும், பல உருவங்களிலும், பல பரிமாணங்களிலும் அவனுடைய அற்புதச் செயல்களையும் அரிய லீலைகளையும் பாடுவதைக் கேட்டுப் பரவசமடைகிறோம்.

**"அன்புஆழி யானை யணுகென்னும் நாஅவன்றன்**
**பண்புஆழித் தோள்பரவி யேத்தென்னும் - முன்பூழி**
**காணானைக் காண்என்னும் கண்செவி கேள்என்னும்**
**பூணாரம் பூண்டான் புகழ்"**

என்று பொய்கையாழ்வார் தமது இயற்பாவில் மிக அழகாகப் பாடுகிறார்.

இனி, கஞ்சனது வஞ்சத்தை எதிர்த்துக் கண்ணன் வெற்றி கண்டதுபற்றியும், பஞ்சவர்க்குத் தூதாக நடந்தது பற்றியும் ஆழ்வார்கள் பல பாடல்களிலும் குறிப் பிட்டுள்ளதைக் காண்கிறோம்.

ஆய்ச்சியர் குரவைக் கூத்தின் அந்த ஆடல்பாடல்களின் நிறைவாக "நாம் தொகுத்துப் பாடி ஆடிய குரவைக் கூத்துள் போற்றிய கடவுள் நமது பசுக்களுக்கு நேர்ந்த துன்பங்களை நீக்கிடுக, வெற்றி தரும் இடியைப் படையாகக் கொண்டுள்ள இந்திரனுடைய முடியைத் தகர்த்த தொடி பொருந்திய தோள்களைக் கொண்ட பாண்டிய மன்னனுடைய குறுந்தடியால் எறியப்படும் முரசு, வேற்று அரசர்கள் பயம் கொள்ளும்படி நாள்தோறும் பகைவர்களை வென்று தென்னவனுக்கு வெற்றியை அளித்து முழங்குவதாக" என்று பாடி முடித்துக் குரவைக் கூத்து நிறைவுபெறுகிறது.

சேரன் செங்குட்டுவன் கண்ணகி சிலைக்காகக் கல்லெடுக்கத் தனது படைகளுடன் இமயத்தை நோக்கிப் புறப்பட்டான். போருக்குப் புறப்படும் மன்னனுக்குக் கோயில் களிலிருந்து பூசை செய்யப்பட்ட வாழ்த்துகள், மலர் மாலைகள் இதர பிரசாதங்கள் வருகின்றன. சேரன் செங்குட்டுவன் யாருக்கும் தலை வணங்காதவன்.

சிவபெருமான் கோயிலை வலம் வந்து வணங்கினான். "இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலம்கொண்டு" என்று காப்பிய அடி குறிப்பிடுகிறது. பின்னர்த் திருமாலின் சேடம் வந்து சேருகிறது.

> "குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்கென,
> ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
> சேடம் கொண்டு சிலர்நின் றேத்த"

சேரநாட்டு வேந்தனான செங்குட்டுவன் ஆட்சி நீடூழி வாழ்கவென, அவன் வெற்றி பெறுவானாகவென, திருவனந்தபுரத்துத் திருக்கோயில் பாம்பணைமீது பள்ளிகொண்டு யோக நித்திரையில் அமர்ந்துள்ள திருமாலின் சேடத்தை மன்னனுக்குக் கொடுத்து வாழ்த்தினர். அச்சேடத்தை மன்னன் தனது தோள்களிலே அணிந்துகொண்டான்.

ஆயர் முதுமகளான மாதரி, கண்ணகிமீதும் கோவலன் மீதும் மிகுந்த அன்பு செலுத்தியதாலும், ஆய்ச்சியர் குரவை ஆடிய புண்ணியத்தாலும், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை எழுப்பி விழாவெடுத்தபோது அதைக் காணும் பாக்கியத்தைப் பெற மறுபிறவி எடுத்து, அரவணையில் அறிதுயில் கொள்ளும் திருமாலுக்குத் தொண்டு செய்யும் சேடக்குடுமியின் மகளாகத் திருவனந்தபுரத்தில் பிறந்தாள் என்று சிலப்பதிகாரக்கதை குறிப்பிடுகிறது.

> "ஆயர் முதுமகள் ஆயிழை தன்மேல்
> போய பிறப்பில் பொருந்திய காதலின்
> ஆடிய குரவையின் அரவணைக் கிடந்தோன்
> சேடக் குடும்பியின் சிறுமக ளாயினள்"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

சிலப்பதிகாரக் காப்பியத்தின்மூலம் திருமால் வழிபாடும் திருவிழாக்களும் அக்காலத் தமிழ் மக்களுடைய வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாக இருந்திருக்கிறது என்பதை அறிகிறோம்.

இன்னும் ஆழ்வார்கள் காலத்திற்கு முன்பே அதற்கு முன் வெகுகாலமாகவே தமிழ்நாட்டில் திருமால்

வழிபாடுகளும் திருவிழாக்களும், திருமால் அவதாரச் சிறப்புச் செய்திகளும் இராமாயணம், மகாபாரதக் கதைகளும் பரவியிருந்தன.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் பல்லவ மன்னர்களும் பின்னர் பிற்காலச் சோழ மன்னர்களும் விஜய நகர மன்னர்களும் மற்றும் பல குறுநில மன்னர்களும் சிறுநில மன்னர்களும் பல திருமால் கோயில்கள் கட்டுவதற்கும், விரிவு படுத்துவதற்கும் புதுப்பிப்பதற்கும் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். அத்துடன் ஆழ்வார்களும், வைணவ ஆச்சாரியார்களும், ஜீயர்களும் வேறு பல திருமாலடியார்களும், மேலும் பல பிரமுகர்களும் ஆர்வலர்களும் சமுதாய அமைப்புகளும் பொதுமக்களும் திருமால் திருக்கோயில் திருப்பணிகள் பலவற்றை நிறைவேற்றியும், திருமால் வழிபாடுகளைப் பரப்பியும், நிலை நிறுத்தியும், மேம்படுத்தியும் வளர்த்தும் பெருமாள் சேவை செய்திருக்கிறார்கள்.

ஆழ்வார்களால் பாடப்பட்ட திருமால் திருக்கோயில்கள், திருத்தலங்கள் திவ்ய தேசங்கள் தவிர, மேலும் பல சிறிய பெரிய பெருமாள் கோயில்களும் தமிழ்நாட்டில் பல ஊர்களிலும் இருப்பதைக் காண்கிறோம். இருப்பினும், ஆழ்வார்கள் பாடி மங்களாசாசனம் செய்துள்ள ஆலயங்களும் திருமால் வழிபாடுகளும் திருவிழாக்களும் தனிச்சிறப்பு மிக்கவை.

ஆழ்வார்கள் மிகுந்த பக்திப் பரவசத்துடனும், தத்துவ ஞானச் சிறப்புடனும் தமிழ்ச்சுவையுடனும் திருமால் வழிபாட்டைச் செய்தார்கள். அதை ஒரு வாழ்க்கை நெறிமுறையாகப் பரப்பி நிலைநிறுத்தி வளர்த்தார்கள். அத்துடன் அவர்கள் திருமால் வழிபாட்டை உலக இயற்கையுடன் இணைத்து ஒரு மேலான தத்துவ நிலைக்கு உயர்த்தினார்கள். நாராயண மந்திரத்தை மக்கள் மனத்தில் நிலைநிறுத்தி வளர்த்தார்கள்.

பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டுப் பாடல்கள் தனிச்சிறப்பு மிக்கவையாகும்; சாத்துமுறைக்கான காப்புச் செய்யுள்களாக அனைவராலும் பாடப்படும் பாடல்களாகும்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறா யிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணா,உன்
செவ்வடி செவ்வித் திருக்காப்பு"

என்று திருப்பல்லாண்டுக் காப்புப் பாடல் தொடங்குகிறது.

திருமாலுக்குப் பல்லாண்டு கூறி வாழ்த்தும் இந்த அரிய பாடல் தொகுப்பு

"அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுடர்
ஆழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும்அப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே"

என்று பட்டர்பிரான் பெரியாழ்வார் பாடியுள்ள இந்த அரிய வழிபாட்டுப் பாடல் பல்லாயிரம் பல்லாயிரம் பல கோடி நூறாயிரம் முறை திருமால் பக்தர்களால் விரும்பிப் பாடப்படுகிறது.

பக்தர் குழுக்களும் தொண்டர் குழுக்களும் கூட்டாகச் சேர்ந்து திருமாலுக்கு வழிபாடு செலுத்துவதும், பெருமாள் சேவை செய்வதும் பழக்கத்தில் இருந்ததைப் பெரியாழ்வார் பெருமான் தமது திருப்பல்லாண்டு பாடல்களில் குறிப்பிடுகிறார்.

"நாடும் நகரமும் நன்கறி யநமோ
நாராய ணாயவென்று
பாடும் மனமுடைப் பத்தருள் ளீர்வந்து
பல்லாண்டு கூறுமினே"

என்று பக்தர் குழுவினரைக் கூவியழைக்கிறார்.

"தொண்டக் குலத்தி லுள்ளீர் வந்தடி தொழுது
ஆயிரம் நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்ந்துபல் லாண்டுபல்
லாயிரத் தாண்டென்மினே"

என்று, சாதிகுல வேறுபாடின்றி, அனைவரும் திரண்டு ஒன்றுகூடி பெருமாளுக்குப் பல்லாண்டு பாட வரும்படி ஆழ்வார் அனைவரையும் வேண்டுகிறார்

திருவோணத் திருவிழாவைப்பற்றிப் பெரியாழ்வார் குறிப்பிடுகிறார்.

"விடுத்த திசைக்கரு மம்திருத் தித்திரு
வோணத் திருவிழாவில்
படுத்தபைந் நாகணைப் பள்ளிகொண் டானுக்குப்
பல்லாண்டு கூறுதுமே !"

என்று பாடுகிறார்.

கண்ணன் திருவவதாரச் சிறப்புப்பற்றி மக்கள் திருவிழாக்கோலம் கொண்டு கொண்டாடுவதைப் பெரியாழ்வார் பெருமான் மிகச்சிறப்பாகத் தமது பாடல்களில் குறிப்பிடுகிறார்.

மக்கள் ஓடியாடுவார்கள், பாடுவார்கள், பல்பறை கொட்ட நின்று ஆடுவார்கள். ஆயர்பாடி மக்கள் உறியை முற்றத்துருட்டி நின்றாடுவார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டு

"பத்து நாளும் கடந்த இரண்டாம்நாள்
எத்தி சையும் சயமரம் கோடித்து
மத்த மாமலை தாங்கிய மைந்தனை
உத்தா னம்செய் துகந்தனர் ஆயரே"

என்று ஆயர் பாடி மக்கள் கண்ணனின் அவதாரச் சிறப்புகளைப்பற்றி விழாவெடுத்துக் கொண்டாடுவதைப் பாடுகிறார்.

**மக்கட்பேறு**

மக்கட்பேறு ஒரு பேரின்பமாகும். குழந்தை பிறப்பது தாய்க்கு ஒரு தனி நிலை; ஒரு தனித் தன்மையான உணர்வு நிலை; ஒரு தனி மகிழ்ச்சி; ஒரு தனி ஆனந்தம்; ஒரு தனிப் பெருமை. பிள்ளையில்லாதவளை மலடி என்று கூறும் நாடு பாரத நாடு என்று பாரதி குறிப்பிடுகிறார். எனவே, பிள்ளைப் பேறு பெறுவதை ஒரு பெருமையாக, ஒரு சமுதாய அந்தஸ்தாக இந்தியப் பெண்மை கருதுகிறது. மற்றவர்களுக்கு இளம் தலைமுறையினருக்கு, புதுமணத் தம்பதிகளுக்கு வாழ்த்துக் கூறுவதற்கு, குழந்தை பெற்றுள்ள தாயைத்தான் அனைவரும் விரும்புவர். குழந்தை பெற்ற பின்னர்தான் அப்பெண், தாய் என வழங்கப்படுகிறாள். தாய் தனது

குழந்தையைப்பற்றி, அதன் அழகைப்பற்றி, அதன் அங்கச் சிறப்புகளைப்பற்றி மற்றவர்களுக்கு எடுத்துக் கூறி ஆனந்தப் படுகிறாள். தனது குழந்தையைப்பற்றி மற்றவர்கள் புகழ்ந்து கூறும்போது அத்தாய் பெருமகிழ்ச்சியடைகிறாள்.

பாரத நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்தில் குடும்பம், இல்லறம், பெண்ணின் பெருமை, தாய்மை, தாயின் தலைமை ஆகியவை மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன. வள்ளுவப் பேராசான் இல்லறத்திற்கு முதலிடம் கொடுத்திருப்பதை அறிவோம். கம்பன் பெண்ணின் பெருமையை மனைமாட்சி என்று உயர்த்திக் காட்டுகிறார். இளங்கோவடிகள் இல்லறத்தின் பெருமையைப் பெருமைப்படுத்திக் கூறுகிறார்.

ஆழ்வார்கள் திருமாலைக் கண்ணபிரானைக் குழந்தையாகக் காதலனாகப் பாவித்து மிக அருமையாகப் பக்திப் பெருமிதத்துடன் பாடுகிறார்கள்.

பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து அவனுடைய பல வேறு பருவங்களையும் குழந்தைகளுக்கு நாம் நடத்தும் விழாக்கள்பற்றியும் பெருமையுடன் பாடுகிறார்.

கண்ணனைக் குழந்தையாகப் பெற்ற அசோதைப் பெருமாட்டி பெருமகிழ்ச்சியடைகிறாள். கண்ணனின் வடிவழகை, அடிமுதல் முடிவரை கண்ணனின் அங்க அழகை, மணிவண்ணனின் பாத கமலங்கள், அவற்றில் அமைந்துள்ள பத்து விரல்கள், கணைக்கால், முழந்தாள், தொடைகள், உந்தி, வயிறு, மார்பு, தோள்கள், நேமியும் சக்கரமும் நிலவும் கைத்தலங்கள், அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய கண்டம், வாய், நம்பியின் வாக்கு, நயனம், வாயின் முறுவலும் மூக்குமுள்ள முகம், கண்கள், புருவம், செவிகள், நுதல், முடி முதலிய ஒவ்வொன்றைப்பற்றியும், கண்ணனின் அனைத்து அங்கங்களைப்பற்றியும் அசோதைப் பிராட்டி கண்டு, கண்டு அவனுடைய அழகைப் பருகுவது, ஒவ்வொரு தாயும் தனது குழந்தையின் அழகைக் கண்டு, அக்குழந்தையைக் கண்ணனாகவே பாவித்து மகிழ்வது பெரியாழ்வார் பெருமானின் பாட்டமுதமாகும். இது குழந்தையின்பத்தை

வாழ்க்கையின்பத்தின் பகுதியாக அனுபவித்து மகிழ்வதாகும். இதில் நமது இலக்கியம் தனித் தன்மை பெற்றுத் திகழ்கிறது.

**தாலாட்டு**

குழந்தைகளைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவதும், தாலாட்டுப் பாடுவதும் நமது தனிமரபு. பாரத நாட்டில் தாலாட்டுப் பாடல் ஒரு தனி இலக்கியம். இதில் வயல் வெளிகளில் பணிபுரியும் பெண்கள், ஆலைகளில் பணியாற்றும் தாய்மார்கள், ஆடுமாடுகளைப் பராமரிக்கும் ஆயர்குலப்பெண்கள்முதல், அரண்மனையில் வளரும் குழந்தைகள்வரை அனைவருக்கும் தாலாட்டுப் பாடல்கள் மக்களை ஈர்க்கும் தனிப்பாடல்களாகும். தாலாட்டுப் பாடல்களைக் கேட்டு மயங்காத குழந்தைகளில்லை, பெரியோர்களில்லை. "பட்டுண்டோ செட்டி, பவளமுண்டோ வியாபாரி" என்று தாய்பாடும் தாலாட்டைத் தந்தையும் கேட்டு மகிழ்வது நமது குடும்பப் பிணைப்பாகும்.

கண்ணனை அசோதை தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகிறாள். இதைப் பெரியாழ்வார் கண்ணனின் உலகப் பெருவடிவத்துடன் இணைத்துவிட்டார். இதில் ஆழ்வார் பெருமானின் பக்திப்பெருக்கு அதன் உயர்வு அனந்தத்தை எட்டிவிட்டது. இங்குப் பெரியாழ்வார் காட்டும் அசோதைப் பிராட்டியின் உள்ளம் பாரதத்தாயின் உள்ளமாகும்.

குழந்தைகளின் தாலாட்டுப் பருவத்தில் உற்றார், உறவினர், மாமன்மார், அத்தைமார், தாய்வழி உறவினர், தந்தைவழி உறவினர், நண்பர்கள், வேண்டியவர்கள் பரிசுப் பொருள்கள் கொண்டுவந்து கொடுப்பது நமது நாட்டுப் பண்பாடும் பாரம்பரியப் பழக்கமுமாகும். இங்கு கண்ணனுக்கு யார்யார் என்னென்ன பொருள்களைக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள் என்று பாருங்கள்.

பிரம்மா - படைப்புக் கடவுள் - தொட்டில் கொண்டு வந்து கொடுக்கிறார். "**மாணிக்கக்கட்டி, வயிரமிடைக் கட்டி, ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறு தொட்டில் பேணியுனக்குப் பிரமன் விடு தந்தான்**" என்று பெரியாழ்வார் பாடுகிறார். மாணிக்கம், வயிரம், ஆணிப்

பொன் நிறைந்த செல்வ வளம், அவைமூலம் தொட்டில் செய்யும் தொழில்வளம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் நமது நாடு அடைந்துள்ள உயர்வை இந்தச் சிந்தனைகள் வெளிப்படுத்துகின்றன.

இனி, கபாலி ஈசன் அரை வட்டம் கொண்டுவந்து கொடுத்தார் என்றும், இந்திரன் கிண்கிணி கொண்டுவந்து கொடுத்தான் என்றும், அமரர்கள் அரைஞாண் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்றும் ஆழ்வார் கூறுகிறார்.

**"சங்கின் வலம்புரியும், சேவடிக் கிண்கிணியும், அங்கைச் சரிவளையும், நாணு மரைத்தொடரும், அங்கண் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்"** என்பது ஆழ்வார் பாடல்.

அழகிய ஐம்படையும் ஆரமும் குபேரன் கொண்டு வந்தான். ஒளிமுத்தின் ஆரமும் சாதிப்பவளமும், சந்தச் சரிவளையும் வருணன் கொண்டுவந்து கொடுத்தான். திருமங்கை திருத்துழாய் மாலை அனுப்பி வைத்தாள். பொற்சுரிகை, காம்பு கனகவளை, உச்சிமணிச் சுட்டி, ஒண்தாள் நிரைபொற்பூ ஆகியவைகளைப் பூதேவி கொடுத்து அனுப்பிவைத்தாள். இனி, மெய் திமிரும் நானப் பொடியோடு மஞ்சளும், செய்ய தடங்கண்ணுக்கு அஞ்சனமும் சிந்தூரமும் கலந்து துர்க்கை கொண்டுவந்து கொடுத்தாள் என்றெல்லாம் ஆழ்வார் விவரித்துக் கூறுகிறார்.

"வஞ்சனையால் வந்த பேய்ச்சி முலையுண்ட அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய செஞ்சொல்லை"ப் புதுவைப் பட்டர்பிரான் எடுத்துக் கூறியுள்ளதை இல்லந்தோறும் கண்ணனை நினைந்து நமது குழந்தைகளை நினைத்துத் தாலாட்டும் பாடலாக அமைந்துள்ளது.

கண்ணனின் அம்புலிப் பருவத்தை, செங்கீரைப் பருவத்தை, சப்பாணிப் பருவத்தை, தளர்நடைப் பருவத்தை, அச்சோப் பருவத்தை, பூச்சி காட்டி விளையாடும் பருவத்தை, இன்னும் பால் உண்ணுவதை, சோறு உண்ணுவதைப்பற்றியெல்லாம் ஆழ்வார் பாடுகிறார். இவ்வாறு நமது குழந்தைகளின் ஒவ்வொரு பருவத்தையும்

வளர்ச்சியையும் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதைக் குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து கூடி மகிழ்ந்து கொண்டாடுகிறோம். அது குடும்பத்தின் விழாவைப்போலச் சிறப்பாக நடைபெறுகிறது. இன்றுங்கூட கேரளம் முதலிய பகுதிகளில் குழந்தைகள் பாலுண்ணும் பருவத்திற்கடுத்து சோறுண்ணத் தொடங்கும் நிகழ்ச்சியைக் குடும்ப விழாவாக நடத்துகிறார்கள். உற்றாரைச் சுற்றத்தாரை அழைத்து அவ்விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள்.

கண்ணனுக்குக் காது குத்துதல், நீராட்டுதல், குழல் வாருதல், காப்பிடல் போன்ற நிகழ்ச்சிகளுடன் ஊராரை அழைத்துச் சிறப்புச் செய்தல்பற்றி ஆழ்வார் அழகாகப் பாடுகிறார். குழந்தைகளுக்குக் காதணி விழா நடத்துவது, கோவிலுக்குச் சென்று மொட்டையடிப்பது, பெண் குழந்தை களுக்குத் தாவணி போடுவது, பூப்பெய்தபோது நீராட்டுவிழா நடத்துவது முதலிய குடும்ப விழாக்கள் நமது நாட்டு மக்களின் சீரிய பண்பாட்டு மரபாகும்.

குழந்தைகளுக்கு நடத்தும் விழாக்களை ஆழ்வார்கள் கண்ணனோடு திருமால் வழிபாட்டோடு இணைத்து மிகவும் அழகாக விரிவாக நிலைநாட்டியுள்ளார்கள்.

**திருப்பாவைத் திருவிழா**

ஆண்டாள், ஆழ்வார்களுள் பெண்பாற்புலவர். தனிச் சிறப்புமிக்கவர். பட்டர்பிரான் - விட்டுணுசித்தர் - பெரியாழ்வார் வளர்த்த கோதை நாச்சியார் ஆண்டாளாகி, திருவரங்கநாதனுடன் இரண்டறக் கலந்து, தனிக் கோயில் கொண்டவர்.

ஆழ்வார்களுள் வேறு யாருக்கும் தனிச் சிறப்புமிக்க தனிக் கோயில்கள் இல்லை. திருமால் திருக்கோயில்களில் அவர்களுக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன. ஆண்டாளுக்கும் அநேகமாகப் பெரும்பாலான பெருமாள் கோயில்களில் தனிச் சந்நிதிகள் இருப்பதையும் காண்கிறோம்.

ஆண்டாள் கோயில் திருவில்லிபுத்தூரில் வடபத்ரசாயி கோயிலுக்கு அருகிலேயே தனியாக அமைந்திருக்கிறது.

அத்துடன் நாச்சியார் தேவஸ்தானம் என்னும் பெயரில்தான் சுற்றிலும் உள்ள இதர திருமால் திருத்தலங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டாள் கோயில் திருவிழா மிகவும் சிறப்புமிக்கது. ஆண்டாள் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில்) நள ஆண்டு ஆடி மாதம் வளர்பிறையில் சதுர்த்தசி திதியில் செவ்வாய்க்கிழமை பூர நட்சத்திரத்தில் அவதரித்தார் என ஆழ்வார்கள் வரலாறு குறிப்பிடுகிறது.

"திருவாடிப் பூரத்து செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே"

என்று ஆண்டாள்வழித் திருநாமப்பாடல் குறிப்பிடுகிறது.

ஆண்டாள் பிறந்த நாளான ஆடிப் பூரத்தன்று ஆண்டுதோறும் திருவில்லிபுத்தூரில் நடைபெறும் திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள், ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கூடுவர். சாதி, சமய, இனம், மொழி, பால் வேறுபாடின்றி இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடுவர். திருவில்லிபுத்தூர் தேர் நமது நாட்டிலுள்ள மிகப் பெரிய தேர்களுள் ஒன்று. முன்பெல்லாம் தேர் புறப்படத் தொடங்கி நிலைக்குவரப் பல மாதங்களாகும். தேர் இழுக்கும் சேவையில் எந்த வேறுபாடுமின்றிப் பல்லாயிரம் மக்கள் பங்கு கொள்வர்.

ஆண்டாள் அரங்கனோடு இரண்டறக் கலந்ததாக ஐதீகம். ஆண்டாள் பாடியுள்ள திருப்பாவைப் பாடல்கள் உலகப் பிரசித்தம். மார்கழி மாதம் அநேகமாக எல்லாத் திருமால் திருத்தலங்களிலும் திருப்பாவைப் பாடல்கள் பாடப் படுகின்றன. திருப்பாவைப் பாடல்கள் என்பவை தனி மனிதன் தனியாகச் சென்று, ஓரிடத்தில் அமர்ந்துகொண்டு ஆண்டவனை நினைத்துப் பாடப்படுபவையல்ல. தனியாகப் பூசையறையில் அமர்ந்துகொண்டு ஆண்டவன் புகழைப் பாடப்படுபவை அல்ல.

ஆண்டாள், ஆண்டவன் புகழ் பாட - கண்ணன் புகழ் பாட - அனைவரையும் - ஊரில் உள்ள அனைவரையும் -

அழைக்கிறாள்; நாட்டில் உள்ள அனைவரையும் உலகில் உள்ள அனைவரையும் அழைக்கிறாள். தூங்குபவர்களை எழுப்புகிறாள். நீராடி உடலையும் உள்ளத்தையும் சுத்தம் செய்துகொண்டு, உடம்பை அலங்கரித்துக்கொண்டு பூச்சூடி வருமாறு பாவையர் அனைவரையும் அழைக்கிறார். எல்லோரும் சேர்ந்து கண்ணனைப் பாடுவோம், கண்ணன் புகழைப் பாடுவோம் என்று எல்லோரையும் அழைக்கிறாள்.

"**மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்**" என்று பாவையரை அழைக்கிறாள்.

"**வையத்து வாழ்வீர்காள் ! நாமும்நம் பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீரோ**" என உலகில் உள்ள அனைவரையும் அழைத்து, "**பாற்கடலுள் பையத் துயின்ற பரம னடிபாடி, நெய்யுண்ணோம் பாலுண்ணோம், நாட்காலே நீராடி, மையிட் டெழுதோம், மலரிட்டு நாம் முடியோம், செய்யாதன செய்யோம், தீக்குறளைச் சென்றோதோம்**" என்றெல்லாம் கூறி, கூவியழைத்து கூட்டாகவே நோன்பிருந்து அனைவரும் உய்யுமாறு பாடுவோம் என்று பன்மையில் பாடுகிறார்.

"**ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி, நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து, ..... நீங்காத செல்வம் நிறைந்தேலோ**" என்று, நாடெல்லாம் செழிக்க, நாட்டு மக்கள் எல்லாம் அனைத்துச் செல்வங்களும் பெறப் பன்மையில் பாடுகிறார்.

தூங்குபவர்களை எழுப்பப் பாடுகிறார். பறவைகள் எழுந்து பாடத் தொடங்கிவிட்டன. வெள்ளை விளிசங்கின் ஒலி கேட்கிறது. "பிள்ளாய் எழுந்திராய் !" என்று கூவி அனைவரையும் எழுப்புகிறார். "**கீசுகீசென்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம் கேட்டிலையோ? காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப் படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ**" என்றும், "**கீழ்வானம்**

**வெள்ளென்று எருமைச் சிறுவீடு மேய்வான் பரந்தன காண், மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்**" என்றும், "**கோதுகல முடைய பாவாய் எழுந்திராய்**" என்றும், "**மாமன் மகளே மணிக்கதவம் தாழ்திறவாய், மாமீர்! அவளை எழுப்பீரோ**" என்று பாடி ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த தோழியரை எழுப்புகிறாள். "**சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்து நின் முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர்பாட**, நீ ஏன் இன்னும் உறங்குகிறாய்" என்று தோழியரை எழுப்புகிறாள். "**எல்லே, இளங்கிளியே இன்னம் உறங்குதியோ**" என்று தன் தோழிமாரை எழுப்புவதாக நாட்டு மக்கள் அனைவரையும் எழுப்பி, திருமால் வழிபாட்டிற்கு - கண்ணன் வழிபாட்டிற்கு - மக்களைத் திரட்டுவதை இப்பாடல்களின் உட்கருத்தாகக் காண்கிறோம்.

ஆழ்வார்களின் பக்தி இயக்கம் மக்களியக்கமாகத் திரட்டப்படுகிறது. இனி, தூங்கிக்கொண்டிருக்கும் திருமாலையும் எழுப்பி, கண்ணனை எழுப்புமாறு நப்பின்னைப் பிராட்டியிடமும் கூறி, போற்றிப் புகழ்ந்து வந்தோம் எழுந்திராய் என்று கண்ணனை அழைத்து உலகில் உள்ள அனைவரும் திருத்தக்க செல்வமும் சேவகமும் கிடைக்கப்பெற்று வருத்தமும் தீர்ந்து மகிழ்வெய்தப் பறை தருவாய் என்றும் "**செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்**" என்று ஆண்டாள் பாடுகிறார்.

### சிற்றில் விளையாட்டு

ஆற்றுப்படுகை, கடற்கரை முதலிய மணல் நிறைந்த பகுதிகளில் மணலில் வீடுகள் கட்டி விளையாடுவது நமது நாட்டுக் குழந்தைகளின் விளையாட்டுகளுள் ஒன்றாகும். அதையே சிற்றில் என இலக்கியங்களில் குறிப்பிடுகிறோம். சில சிறுவர் சிறுமியர் அவ்வாறு ஈரமணலில் சிற்றில் கட்டி விளையாடுவதை, விளையாட்டுப் பிள்ளைகளுள் வலுவுள்ள ஒருவன் சிதைப்பதும் அந்த விளையாட்டின் ஒரு பகுதியாகும். ஆயர்பாடியில் உள்ள சிறுமியர்கள் கட்டும் சிற்றில்களைச்

சிதையாதிருக்கும்படி கண்ணனை அவர்கள் வேண்டுவதைக் கோதை நாச்சியார் தமது திருமொழிப் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

"சீதைவா யமுதுண்டாய் ! எங்கள்
சிற்றில்நீ சிதையேல்" என்று
வீதி வாய்விளை யாடு மாயர்
சிறுமியர் மழலைச் சொல்லை
வேத வாய்த்தொழி லார்கள் வாழ்வில்லி
புத்தூர் மன்விட்டு. சித்தன்தன்
கோதை வாய்த்தமிழ் வல்ல வர்குறை
வின்றி வைகுந்தம் சேர்வரே !"

என்று கோதை நாச்சியார் தமது திருமொழி நாமமாயிரம் பாடல்கள் பத்தின் கடைசியில் குறிப்பிடுகிறார்.

இதில் திருமால் வழிபாட்டை எவ்வாறு சிறுவர் சிறுமியரின் சிற்றில் விளையாட்டு நிகழ்ச்சியுடன் இணைத்து அத்தனை அற்புதமாகப் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

ஆயர்பாடிக் கன்னியர்களுடன் கண்ணன் விளையாடியதைப் பாடல்களில் இசைத்துக் கோதை பாடுகிறாள். திருமால் வழிபாட்டை வாழ்க்கையோடு இணைத்துப் பாடுவது ஆழ்வார்களின் மரபாகும். அதில் ஊடல், கூடல், உணர்தல், புணர்தல் முதலிய இன்பச்சுவைகளை அழகியலுடன் மிக நுட்பமாக இணைத்துத் திருமால் வழிபாட்டை ஆழ்வார்களும் - குறிப்பாக ஆண்டாளும் - வெளிப்படுத்துவது தனிச் சிறப்பாகும்.

காதல் நிகழ்ச்சிகளில் காதலி காதலனுக்கும், காதலன் காதலிக்கும் சிறப்பான பறவைகளைத் தூது அனுப்புவது என்பது நமது சிறந்த இலக்கிய மரபாகும். கிளியும் குயிலும், அன்னமும் புறாவும் மற்றச் சில பறவைகளும் காதல் தூதுக்குரியவை. காற்றும் மேகமும் காதல் தூது செல்வதும் இலக்கிய மரபேயாகும். தெய்விகக் காதலுக்கும் இவை பொருந்துவனவாக உள்ளன. இங்கு ஆண்டாள் திருமாலிடம் குயிலைத் தூது அனுப்புவதாக வரும் பாடல்கள் சிறப்பு மிகுந்தவையாகும்.

"மென்னடை யன்னம் பரந்துவிளை யாடும்
வில்லிபுத் தூருறை வான்தன்
பொன்னடி காண்பதோ ராசையி னால்என்
பொருகயற் கண்ணிணை துஞ்சா
இன்னடி சிலோடு பாலமு தூட்டி
எடுத்தவென் கோலக் கிளியை
உன்னொடு தோழமை கொள்ளுவன் குயிலே
உலகளந் தான்வரக் கூவுவாய்"

என்று ஆண்டாள் பிராட்டியார் மிகவும் அழகாகத் தமது திருமொழி 'மன்னுபெரும் புகழ்' பாடல்களுள் ஒன்றாகப் பாடுவதைக் காண்கிறோம். இப்பாடலில் அன்னமும் கிளியும் குயிலும் வருகின்றன. அத்துடன் அடிசிலோடு பாலும் இசைந்து அமுதாக வருவதையும் காண்கிறோம். வாழ்க்கை ரசனை இன்பத்துடன் இணைத்துத் திருமால் வழிபாட்டை ஆழ்வார் பெருமாட்டி வெளிப்படுத்துவதைக் காண்கிறோம்.

நமது நாட்டில் ஓர் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்வது என்பது வெறும் தனி நபர் நிகழ்ச்சியன்று, அது ஒரு குடும்ப நிகழ்ச்சி மட்டுமன்று, அது ஒரு சமுதாய நிகழ்ச்சியும் சமுதாய விழாவுமாகும். திருமண நிகழ்ச்சியைத் திருமண விழா என்றே குறிப்பிடுகிறோம். திருமண விழா ஏற்பாடுகள், பந்தல், தோரணங்கள், அலங்காரங்கள், மேளதாளங்கள், மணமாலை சூட்டுதல், அந்தணர் மந்திரம் கூறல், தீ வலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், மஞ்சன நீராட்டுதல், நலங்குப் பாடல், ஊர்வலம் வருதல், சீர் செய்தல், மொய் செய்தல், ஊராரும் சுற்றமும் சூழவிருத்தல், விருந்தளித்தல் முதலிய பல நிகழ்ச்சிகளும், பல குடும்ப நிகழ்ச்சிகளும் சமூக நிகழ்ச்சிகளும் இணைந்தவை, நிறைந்தவை.

நாராயணன் நம்பி தம்மைக் கைத்தலம் பற்றி, மணம் புரிந்துகொள்வதாகக் கனாக் கண்டதாக அற்புதமான பாடல்களைக் கோதைப் பிராட்டியார் பாடியுள்ளார். அவற்றில் நமது நாட்டில் பிறந்த மக்கள் அனைவரின் குடும்பங்களிலும் நிகழும் திருமண விழா நிகழ்ச்சியாகத்

திருமால் வழிபாட்டை இணைத்துப் பாடியிருப்பதைக் காண்கிறோம். இந்த அற்புதமான பாடல்கள் நாம் திரும்பத் திரும்பப் பாடிப் பாடி இன்புறத்தக்கவையாகும். இத்தகைய அபூர்வமான பாடல் தொகுதியை வேறு எந்த நாட்டு இலக்கியத்திலும் காணமுடியாது. அது பாரத நாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் உள்ள தனிச் சிறப்பாகும்.

"வாரண மாயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றுஎதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்"

"நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான்ஓர்
காளை புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்"

"இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம்எல்லாம்,
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து,
மந்திரக் கோடி யுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீநான்"

"நாற்றிசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கிப்,
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்திப்
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்றன்னைக்
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீநான்"

"கதிராளி தீபம் கலச முடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள,
மதுரையார் மன்னன், அடிநிலை தொட்டுஎங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்"

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத,
முத்துடைத் தாம நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்"

"வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்து
காய்சின மாகளி றன்னான்என் கைப்பற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான்"

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை யுடையவன் நாரா யணன்நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான்"

"வரிசிலை வாள்முகத் தென்னைமார் தாம்வந்திட்டு
எரிமுகம் பாரித்துஎன்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேலென் கைவைத்துப்
பொரிமுகம் தட்டக் கனாக்கண்டேன் தோழீநான்"

"குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம்செய்து மணநீர்
அங்கவ னோடும் உடன்சென்றங் கானைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன் தோழீநான்"

என்றெல்லாம், தாம் கண்ட கனாவின் விவரத்தைத் தம் தோழியிடம் கூறிய கோதையின் பாடல்கள் திருமால் வழிபாட்டின் உச்சமாகும். ஆண்டாளின் இப்பாடல்கள் தலைசிறந்த, இணையில்லாத பக்தி இலக்கியமாகும். இந்தப் பாடல்களை வாய் நிறையப் பாடும்போது அவற்றிற்குச் சிறந்த பயன்பாடுகள் இருப்பதையும் ஆண்டாள் கூறுகிறார். இந்தத் தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர் "வாயு நன்மக்களைப் பெற்று மகிழ்வரே" என்று குறிப்பிடுகிறார்.

திருமணத்தின் பயன்பாடு சிறந்த இல்லறம். இல்லறம் அல்லது நல்லறமன்று என்பது தமிழ்வாக்கு. வள்ளுவப் பெருமான் இல்லறத்தைப்பற்றி மிக நுட்பமாகப் பல கருத்துகளையும் சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளதை உலகம் அறியும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று இல்லறத்தின் சிறப்பைத் தெய்விகத் தன்மைக்கு உயர்த்துகிறார், வள்ளுவப் பேராசான்.

சிறந்த இல்லறத்தின் பயன்பாடு, செல்வமும் அறிவும் மிக்க, சிறந்த செயல் திறனும் பக்தியும் மிக்க அச்சிறந்த செயல்பாடுகளில் ஈடுபாடும் ஞானமும் மிக்க நன்மக்களைப் பெற்று உலகிற்கு அளிப்பதாகும். இத்தகைய சீரிய சமுதாயக் கருத்துகளைச் சமுதாய விழாக்களுடனும் திருமால்

வழிபாடுகளுடனும் இணைத்து அற்புதமாக ஆழ்வார்கள் தங்கள் பக்திப் பாடல்களில் எடுத்துக் காட்டுகிறார்கள்.

**குலசேகரப் பெருமான்**

குலசேகராழ்வார் சேரமன்னர். அரச குலத்தில் பிறந்தவர். திருமாலிடம் அளவற்ற பக்தி கொண்டு தமது அரச பதவியைத் துறந்து பெருமாள் சேவையில் ஈடுபட்டவர். அவர் திருவரங்கத்தில் உள்ள அரங்கனைப்பற்றி உள்ளம் உருகிப் பாடுகிறார். மற்ற அடியார்களுடன் அமர்ந்து அரங்கனை வழிபட முனைகிறார். வானகமும் தேவர்களும் மண்ணும் மண்ணுலகில் உள்ள மனிதரும் உய்ய வேண்டும் என்று பாடுகிறார். உலகில் துன்பமும் துயரமும் அகல வேண்டும் என்றும், மக்களுக்கு எல்லாச் சுகங்களும் ஏற்பட வேண்டும் என்றும், திருமால் தொண்டர்கள் வாழ வேண்டும் என்றும், அவர்களுடன் சேர்ந்து அணியரங்கன் திருமுற்றத்தில் வாசலில் தாமும் வாழ வேண்டும் என்றும் பாடுகிறார். கூடி வாழ்ந்து அரங்கனைத் தொழ வேண்டும் என்பது குலசேகரப் பெருமானின் தணியாத விருப்பமாகும். அதையே தமது பாடல்களில் குறிப்பிடுகிறார்.

"வன்பெரு வானக முய்ய அமர ருய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிச ருய்ய
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே யென்றுகொலோ விருக்கு நாளே!

என்று ஆழ்வார் பாடுகிறார்.

அடியார்களின் பெருங்கூட்டத்தோடு தாமும் நின்று திருமாலை வழிபட ஆழ்வார் விரும்புகிறார். இங்கு பக்தி இயக்கம் மக்களியக்கமாகக் காட்சி தருகிறது.

**திருமாலையும் திருப்பள்ளியெழுச்சியும்**

திருமால் வழிபாட்டில் ஆழ்வார்களின் துதிப்பாடல்கள் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன. அப்பாடல்களில்

ஒவ்வோர் ஆழ்வாரின் பாடல்களும் தனித் தன்மைகளும் தனிச் சிறப்புகளும் கொண்டவைகளாகும். அந்த வகையில் தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலைப் பாடல்களும் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களும் தனிச் சிறப்பு மிக்கவைகளாகும். இவ்விரண்டு பாடல் தொகுதிகளும் அரங்கனைப்பற்றியனவாகும். அப்பாடல்கள் திருமால் திருக்கோயில்கள் அனைத்திலும் பாடப்படுபவைகளாகும். திருமாலைப் பாடல்கள் நாற்பதையும் பாடினால் நாலாயிரம் பாடல்களையும் பாடின பயன்பாடு கிடைக்கும் என்பது திருமால் அடியார்களின் நம்பிக்கையாகும். இப்பாடல்கள் சுவை மிக்கவை, உள்ளத்தை உருக்குபவை.

"பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்,
அச்சுதா, அமர ரேறே !
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்,
அரங்கமா நகரு ளானே"

என்றும்,

"வேதநூல் பிராயம் நூறு
மனிசர்தாம் புகுவ ரேனும்,
பாதியும் உறங்கிப் போகும்,
நின்றதில் பதினை யாண்டு
பேதைபா லகன தாகும்,
பிணி,பசி, மூப்புத் துப
ஆதலால் பிறவி வேண்டேன்
அரங்கமா நகரு ளானே"

என்றும் உள்ளம் உருகிப் பாடுகிறார்.

"சூதனாய்க் கள்வ னாகித்
தூர்த்தரோ டிசைந்த காலம்
மாதரார் கயற்க ணென்னும்
வலையுள்பட் டழுந்து வேனை

போதரே யென்று சொல்லிப்
புந்தியில் புகுந்து தன்பால்
ஆதரம் பெருக வைத்த
அழகனூர் அரங்க மன்றே"

என்றும் மனம் கசிந்து பாடுகிறார்.

"ஊரிலேன் காணி யில்லை,
உறவுமற் றொருவ ரில்லை,
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன் பரம மூர்த்தி,
காரொளி வண்ண னேஎன்
கண்ணனே ! கதறு கின்றேன்
ஆருளர் களைக ணம்மா !
அரங்கமா நகரு ளானே."

என்றும்,

"மனத்திலோர் தூய்மை யில்லை,
வாயிலோர் இன்சொ லில்லை,
சினத்தினால் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா
புனத்துழாய் மாலை யானே,
பொன்னிசூழ் திருவ ரங்கா,
எனக்கினிக் கதியென் சொல்லாய்
என்னையா ளுடைய கோவே !"

என்றும் பரவசத்துடன் பாடுகிறார்.

"பழுதிலா ஒழுக லாற்றுப்
பலசதுப் பேதி மார்கள்
இழிகுலத் தவர்க ளேனும்
எம்மடி யார்க ளாகில்,
தொழுமினீர், கொடுமின் கொள்மின்
என்றுநின் னோடு மொக்க,
வழிபட அருளி னாய்போன்ம்
மதிள்திரு வரங்கத் தானே"

என்றும்,

"அமரவோ ரங்க மாறும்,
வேதமோர் நான்கு மோதி
தமர்களில் தலைவ ராய
சாதியந் தணர்க ளேனும்

நுமர்களைப் பழிப்ப ராகில்
நொடிப்பதோ ரளவில் ஆங்கே
அவர்கள்தாம் புலையர் போலும்
அரங்கமா நகரு ளானே !"

என்றும் திருமாலடியார் குலமனைத்தையும் ஒரு குலமாகக் கொண்டு அருமையாகப் பாடுகிறார்.

இவ்வாறு தொண்டரடிப்பொடியாழ்வார், சாதிக் கட்டமைப்பின் ஏற்றதாழ்வுகளையும் பாகுபாடுகளையும் எடுத்துக் கூறும் போலிச் சாத்திரங்களைத் தகர்த்தெறிகிறார்.

தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பள்ளி யெழுச்சிப்பாடல் அறிதுயிலில் ஆழ்ந்துள்ள அரங்கனை - பள்ளிகொண்ட பெருமாளை - எழுப்பி உலகை ஆட்கொள்வதற்கான வேண்டுகோளாகும். இப்பாடல்கள் எல்லாப் பெருமாள் கோவில்களிலும் அதிகாலையில் பாடப்படுகின்றன.

"கதிரவன் குணதிசைச் சிகரம்வந் தடைந்தான்,
கனைவிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந் தொழுகின மாமல ரெல்லாம்
வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
அரங்கத்தம் மா!பள்ளி யெழுந்தரு ளாயே"

என்று ஆழ்வார் தமது திருப்பள்ளி யெழுச்சிப் பாடலைத் தொடங்குகிறார்.

கதிரவன் உதிக்கும்போது, உலகில் ஏற்படும் அற்புதமான மாற்றங்கள், இயற்கைச் சக்திகள் அனைத்திலும் ஏற்படும் பேரெழுச்சி, மக்கள் கூட்டத்தின் அசைவுகள், செயல்பாட்டு ஓட்டங்கள், மற்றும் ஆலயங்களில் தொடங்கும் முரசொலி இவையெல்லாம் அலை கடலொலியென எங்கும் எழுச்சி ஏற்படுவதுபற்றியெல்லாம் ஆழ்வார் மிகவும் அருமையாகத் தமது பாடல்களில் எடுத்துக் கூறுகிறார். இங்கும் திரள் திரளாக மக்கள் கூட்டம் பக்தி இயக்கத்தில் சேர்வதை ஆழ்வார் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

இன்னும் "சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்" என்றும், "தோன்றினன் இரவியும் துலங்கொளி பரப்பி" என்றும் "பாயிரு ளகன்றது" என்றும், "அம்பர தலத்தில் நின்ற கல்கின்ற திருள்போய்" என்றும், ஒளி பரவி இருள் அகலுவதையும் அதனால் உயிரினங்களில் ஏற்படும் எழுச்சிபற்றியும் ஆழ்வார் மிக அற்புதமாக எடுத்துக் கூறுகிறார்.

கடைசியாக,

"கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ?
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ?
துடியிடை யார்சுரி குழல்பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும்
அடியனை அளியனென் றருளியுன் அடியார்க்கு
ஆட்படுத் தாய்பள்ளி யெழுந்தரு ளாயே"

என்று ஆழ்வார் தமது திருமால் வழிபாட்டை திருப்பள்ளியெழுச்சிப் பாடலில் நிறைவு செய்கிறார்.

**திருப்பாணாழ்வார்**

திருப்பாணாழ்வார், திருமாலைப்பற்றிப் பண் இசைத்துப் பாடுவதில் சிறப்பு மிக்கவர். அவர் பாடியுள்ள அமலாதிபிரான் பாடல்கள் திருமால் அடியார்களுக் கிடையிலும் பக்தர்களுக்கிடையிலும் மிகுந்த புகழ் பெற்றவை; விரும்பிப் பாடப்படுபவை. திருமலை நம்பிகள் திருப்பாணாழ்வாரின் "அமலனாதிபிரான்" பாடல்களைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். அவருடைய தனியனில்,

"காட்டவே கண்ட பாத
கமலம்நல் லாடை உந்தி
தேட்டரும் உதர பந்தம்
திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி
முனியேறித் தனிப்பு குந்து
பாட்டினால் கண்டு வாழும்
பாணர்தாள் பரவி னோமே"

என்று பாடியுள்ளார்.

"அமல னாதிபிரான் அடியார்க்
கென்னை ஆட்படுத்த
விமலன், விண்ணவர் கோன்விரை
யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதி வானவன்
நீள்மதி ளரங்கத் தம்மான் திருக்
கமல பாதம் வந்தென் கண்ணின்
உள்ளன வொக்கின்றதே!"

என்று தொடங்கி, அரங்கனின் சிவந்த ஆடைமீது எனது சிந்தனை சென்றது என்றும், அயனைப் படைத்த உந்தி அடியேனுடைய உள்ளத்தின்னுயிர் என்றும், அரங்கனுடைய திருவயிறு எனது உள்ளத்தில் உலவுகிறது என்றும், அவனுடைய திருவார மார்பு அடியேனை ஆட்கொண்டது என்றும், உலகை உண்ட அவனுடைய கண்டம் என்னை உய்வித்தது என்றும், அவனுடைய பவழச் செவ்வாய் எனது சிந்தையைக் கவர்ந்தது என்றும், அவனுடைய கண்கள் என்னையே மயக்கினவென்றும், அவனது நீல மேனி எனது நெஞ்சினை நிறைத்தது என்றும் பாடி,

**"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை, அண்டர் கோன்அணி அரங்கன்என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"** என்று தமது அற்புதமான திருமால் வழிபாட்டுத் திவ்யப் பாசுரங்களைப் பாடி முடிக்கிறார்.

வைணவ மரபில் அடியார்களுக்கும் தொண்டர்களுக்கும் மிகுந்த மரியாதையுண்டு. அதனால்தான் விப்பிரநாராயணர் தமது பெயரையே "தொண்டரடிப்பொடி" என்று மாற்றிக்கொண்டார். வைணவ குலத்தில் ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள், ஜீயர்கள் ஆகியோரும் அவர்களுடைய சேவைகளும் பாராட்டப்படுகின்றனர். அவர்களுக்கு நாம் செய்யும் சேவை திருமாலுக்கு நாம் செய்யும் சேவைக்கு ஈடாகக் கருதப்படுகிறது. அந்த வகையில் மதுரகவியாழ்வாரின் பாடல்கள் நம்மாழ்வாரின் பெருமைகளை எடுத்துக்கூறும் பாடல்களாகவே அமைந்துள்ளன.

"வேறொன்றும் நானறியேன், வேதம் தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் - ஏறுளங்கள்
வாழ்வாம்என் றேத்தும் மதுரகவி யார்எம்மை
ஆள்வார் அவரே யரண்"

என்று நாதமுனிகள் தமது வெண்பாவில் குறிப்பிடுகிறார்.

மதுரகவியாழ்வார், **"கண்ணி நுண்சிறு தாம்பினால் கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன், என்னப்பனில், நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால், அண்ணிக்கும் அமுதூறு மென் நாவுக்கே"** என்று தொடங்கி நம்மாழ்வார் நம்பியைப் புகழ்ந்து போற்றி, **"அன்பன் தன்னை யடைந்தவர் கட்கெல்லாம் அன்பன் தென்குரு கூர்நகர் நம்பிக்கு அன்பனாய் மதுரகவி சொன்ன சொல் நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே"** என்று தமது வழிபாட்டை முடிக்கிறார்.

## பெரிய திருமொழி

திருமங்கையாழ்வார் பாடியுள்ள பெரிய திருமொழிப் பாடல்கள் வேதாந்தத்தின் சாரமாகும். ஆழ்வார்களுள் திருமங்கையாழ்வார் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளார். அவர் பாடியுள்ள பாடல்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டனவாகும். அவர் தமது பாடல்கள்மூலம் உலகின் அஞ்ஞானத்தை அகற்றுகிறார் என்பது ஐதீகம். அவர் தமது சொந்த அனுபவத்தின்மூலம் நாராயண மந்திரத்தின் மகிமையை, பெருமையை உணர்ந்து ஏற்றுத் திருமால் வழிபாட்டில் தீவிரமாக ஈடுபடுகிறார். அவருடைய பாடல்கள் எளிய இனிய தமிழில் நம்மைக் கவர்கின்றன. நாராயண மந்திரத்தின் மெய்ப்பொருளைப்பற்றிய அவருடைய பாடல்கள் மிகச் சிறப்புமிக்கவை.

"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையிற் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோடு
அவர்தரும் கலவியே கருதி

ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்"

என்று தொடங்கி,

"குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்"

என்று தொடர்ந்து,

"மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி
செஞ்சொலா லெடுத்த தெய்வநன் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்
துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லினும் நன்றாம்
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராய ணாவென்னும் நாமம்"

என்று நாராயண மந்திரத்தையும் அதன் பெருமைகளையும் நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறுகிறார்.

திருமங்கையாழ்வார், திருப்பிருதி பதரிகாசிரமம், சாளக்கிராமம், நைமிசாரண்யம், சிங்கவேள் குன்றம் (அகோபிலம்), திருவேங்கடம், திருவள்ளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல்மல்லை (மாமல்லபுரம்), திருவிட வெந்தை (திருவிடந்தை), அட்டபுயகரம் (சின்னக் காஞ்சிபுரம்), பரமேஸ்வர விண்ணகரம் (பெரிய காஞ்சிபுரத்தில் உள்ள வைகுண்டப் பெருமாள் சந்நிதி), திருக்கோவலூர், திருவயிந்திரபுரம், திருச்சித்திரக்கூடம் (சிதம்பரம்), காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி), திருவாலி, திருநாங்கூர், திருவைகுந்த விண்ணகரம், திரு அரிமேய விண்ணகரம், திருத்தேவனார் தொகை

(கீழச்சாலை), திருவண் புருடோத்தமம், செம்பொன் செய்கோவில் (செம்பொன்னரங்கர் கோவில்), திருத்தெற்றியம்பலம், திருமணிக்கூடம், திருக்காவளம்பாடி, திருவெள்ளக்குளம், திருப்பார்த்தன் பள்ளி, திருவந்தளூர் (திருவழுந்தூர்), திருவெள்ளியங்குடி, திருப்புள்ளம் பூதங்குடி, திருக்கூடலூர், திருவெள்ளறை, திருவரங்கம், திருப்பேர்நகர், திருநந்திபுரவிண்ணகரம் (நாதன் கோவில்), திருவிண்ணகர் (உப்பிலியப்பன் கோவில்), திருநறையூர் (நாச்சியர் கோவில்), திருச்சேறை, திருவழுந்தூர், திருச்சிறுபுலியூர், திருக்கண்ணமங்கை, திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருநாகை (நாகபட்டினம்), திருப்புல்லாணி (தர்ப்பசயனம்), திருக்குறுங்குடி, திருவல்லவாழ் (திருவல்லா), திருமாலிருஞ் சோலை (அழகர் கோவில்), திருக்கோட்டியூர் முதலிய பல திவ்ய தேசங்களிலும் எழுந்தருளியுள்ள திருமாலைப் பல அவதார வடிவங்களிலும் புகழ்ந்து பாராட்டி மங்களசாசனம் செய்து வழிபட்டுள்ளார். அவருடைய திருமால் வழிபாட்டு முறை அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

பெரியாழ்வாரைப் போலவே திருமங்கையாழ்வாரும் கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைக் கண்ணனின் தாயாகவும் கற்பித்துத் தாய்ப்பால் உண்ண வரும்படி அழைத்துப் பாடுகிறார்; கை கொட்டி விளையாடும்படி அழைத்துப் பாடுகிறார்.

**"சந்த மலர்க்குழல் தாழத்**
**தானுகந் தோடித் தனியே**
**வந்துஎன் முலைத்தடந் தன்னை**
**வாங்கிநின் வாயில் மடுத்து**
**நந்தன் பெறப்பெற்ற நம்பீ**
**நானுகந் துண்ணும் அமுதே**
**எந்தை பெருமானே ! உண்ணாய்**
**என்னம்மம் சேமமுண் ணாயே"**

என்று மெய்மறந்து பாடி மகிழ்கிறார்.

ஆழ்வார் தம்மை நாயகியாகக் கற்பித்துப் பகவான் தம்மிடம் வந்து சேருமாறு பறவைகளைத் தூது

அழைப்பதாகப் பாடும் பாடல்கள், நமது வழிபாட்டு முறைகளுள் ஒன்றாகும்.

"திருத்தாய் செம்போத்தே
திருமா மகள்தன் கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவனைவரத்
திருத்தாய் செம்போத்தே!"

"கரையாய் காக்கைப் பிள்ளாய்
கருமா முகில்போல் நிறத்தன்
உரையார் தொல்புகழ் உத்தமனைவரக்
கரையாய் காக்கைப் பிள்ளாய்"

"கூவாய் பூங்குயிலே,
குளிர்மாரித் தடுத்துகந்த
மாவாய்க் கீண்ட மணிவண்ணனைவரக்
கூவாய் பூங்குயிலே"

என்றெல்லாம் பாடுகிறார்.

ஆழ்வார் தம்மைப் பிராட்டியாகக் கற்பித்துக் கொண்டு, தென்றல் வந்து தீ வீசுவதாகவும், வாடைக் காற்று தம்மை வந்து வாட்டுவதாகவும், திங்கள் வெங்கதிர் (நிலவொளி) தம்மீது வந்து சீறுவதாகவும், பொங்கு மாகடல் ஒலி தம்மைத் துன்புறுத்துவதாகவும், மன்மதன் தம்மீது கணைகளை ஏவுகிறான் என்றும், தம்மைக் காக்க வரும்படி திருமாலை வேண்டிப் பாடுகிறார். இன்பச் சுவையுடன் சிருங்கார ரசத்துடன் ஆண்டவனை வழிபடும் முறையில் ஆழ்வார் மிகவும் சிறப்பாகப் பாடுகிறார்.

திருமாலின் அவதாரப் பெருமைகளை மீனாக, ஆமையாக, வராகமாக, நரசிம்மமாக, குறளாக (வாமனன்), பரசுராமனாக, இராமனாக, அன்னமாக, கண்ணனாக அவதரித்து உலகைக் காத்ததை ஆழ்வார் பாராட்டி வழிபடுகிறார்.

"முன்னுல கங்கள்ஏழும் இருள்மண்டி யுண்ண
முதலோடு வீடுமறி யாது
என்னிது வந்ததென்ன இமையோர் திகைப்ப
எழில்வேத மின்றி மறைய

பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி
யிருள்தீர்ந் திவ்வைய மகிழ
அன்னமதா யிருந்தங் கறநூல் உரைத்த
அதுநம்மை யாளும் அரசே"

என்னும் ஓர் அபூர்வமான கவிதை மூலம் திருமங்கை யாழ்வார், . அன்னமாகி அறநூல் மறைகளை உரைத்த ஆண்டவனை வழிபடுகிறார்.

"கொலைகெழு செம்முகத்த களிறொன்று கொன்று
கொடியோன் இலங்கை பொடியா
சிலைகெழு செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள்
திருமாலை வேலைபுடை சூழ
கலிகெழு மாடவீதி வயல்மங்கை மன்னு
கலிகன்றி சொன்ன பனுவல்
ஒலிகெழு பாடல்பாடி யுழல்கின்ற தொண்ட
ரவர்ஆள்வார் உம்பர் உலகே"

என்று திருமாலை வழிபட ஆழ்வார் அனைவரையும் அழைக்கின்றார்.

திருநெடுந்தாண்டகம் என்னும் பிரபந்தத்தைப் பாடித் திருமங்கையாழ்வார் திருமால் வழிபாட்டைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

"மின்னுமா மழைதவழும் மேக வண்ணா!
விண்ணவர்தம் பெருமானே! அருளாய் என்று
அன்னமாய் முனிவரோடு அமரர் ஏத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை
மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்
மானவேல் பரகாலன் கலியன் சொன்ன
பன்னியநூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார் தாமே"

என்று பாடி முடிக்கிறார்.

ஆழ்வார்களுள் ஒருவர் பொய்கையாழ்வார். அவர் மூவருள் ஒருவர். அவர் காஞ்சிபுரத்தில் ஒரு பொய்கையில் இருந்த தாமரை மலரில் தோன்றினார் என்பது ஐதீகம். அவர் பாடிய இயற்பா முதல் திருவந்தாதி எனப் பெயர் பெற்று அது பாசுரமாகப் பாடப்படுகின்றது. அவரைப்பற்றிக்

தனியன் "வையத்து அடியவர்கள் வாழ அருந்தமிழ் அந்தாதிபாடி படிவிளங்கச் செய்தான்'' எனக் குறிப்பிடுகிறது. ஆழ்வார்கள் பெரும்பாலும் தங்களுக்காக மட்டுமல்லாமல் அடியார்கள் வாழவும், உலகம் உய்யவும், திருமாலை வழிபட்டுப் பாடியுள்ளார்கள். அதனால் அவர்களுடைய பாடல்கள் மக்கள் மனத்தில் பதிந்து பரவியிருக்கின்றன என்பதைக் காண்கிறோம்.

"வையம் தகழியா, வார்கடலே நெய்யாக,
வெய்ய கதிரோன் விளக்காக - செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று"

பொய்கையாழ்வார் தமது திருவந்தாதிப் பாடல் வரிசையைத் தொடங்குகிறார்.

சூரியனை விளக்காகவும், இந்த உலகத்தைத் திரியாகவும், கடல் நீரை நெய்யாகவும் வைத்து உலகத்தின் துன்பங்கள் தீர்வதற்காகச் சுடராழியானான திருமாலுக்குப் பாமாலை சூட்டியதாக ஆழ்வார் குறிப்பிடுவதைக் காணலாம்.

இன்னும், பொய்கையார் திருமால் வழிபாட்டுடன் இணைத்து ஐம்புலன்களையும் அடக்கி ஒருமுகப்படுத்தும் ஆற்றலைப்பற்றியும், அரியும் அரனும் ஒன்றேயென்றும், ஐம்பூதமும் ஐம்புலனும் அவியாத ஞானமும் வேள்வியும் (கடும் முயற்சியும்) நல்லறமும் திருமாலின் இயல்பு என்றும், நீதியால் ஓதி நியமங்களால் பரவி ஆதியாய் நின்ற திருமால் என்றும், குன்றனைய குற்றம் செய்தாலும், அவைகளைக் குணமாகக்கொண்டு ஆண்டருளும் ஆழியான் - அதாவது, குற்றம் செய்வோரைத் திருத்தி அவரை நல்லவராக்கி அருளும் ஆழியான் - திருமால் எனவும், மனத்தின் மாசுகள் தீரும், தீவினைகள் சாரா, செல்வங்கள் கூடும் திருத்துழாய் மாலை வழிபட்டால் என்றும், தீவினைகள், அல்லல், நோய், பாவம் ஆகியவை தீரும், திருமால் அடிசேர்ந்தால் என்றும், பிறர் பொருளை விரும்பேன், கீழோரோடு உறவு கொள்ளேன், உயர்ந்தவரோடுதான் சேர்வேன், அதற்கு வழிகாட்டும் திருமாலே எனது தெய்வம் எனவும், உல

வழக்கையும் உலக வாழ்க்கையையும் இணைத்து ஆழ்வார் பெருமான் மிகச்சிறப்பாகப் பாடியுள்ளார்.

முதலாழ்வார்கள் மூவருள் பூதத்தாழ்வார் நடுநாயகமானவர். இவர் மாமல்லபுரம் என்னும் திருக்கடல் மல்லையில் மாதவிப் பந்தரில் பூத்த குருக்கத்தி மலரில் அவதரித்தவர்.

பூதத்தாழ்வார், அன்பைத் தகழியாகவும், ஆர்வத்தை நெய்யாகவும், இன்பம் உருகும் சிந்தனையை இடுதிரியாகவும் வைத்து ஞானச்சுடர் விளக்கை ஞானத் தமிழால் திருமாலுக்கு ஏற்றி வைத்துள்ளதாகத் தமது திருவந்தாதியைத் தொடங்கிப் பாடுகிறார்.

**"அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக**
**இன்புருகு சிந்தை இடுதிரியா - நன்புருகி**
**ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு**
**ஞானத் தமிழ்புரிந்த நான்"**

என்பது அவருடைய முதலாவது பாடல்.

பூதத்தாழ்வார் ஞானத்தமிழ் புரிந்தவர். அந்த ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன் பேர் சாற்றுகிறார். மற்றவர்களையும் அதற்காக அழைக்கிறார். எல்லோரையும் திருமால் புகழ் பாடும்படி வேண்டுகிறார். பாற்கடலான் பாதம்புரிவார் புகழ் பெறுவார் என்றும், எண்டிசையும் பேர்த்த கரம் நான்குடையான் பெயரை மக்கள் அனைவரும் ஓதவேண்டும் என்றும், வழுவின்றி நாரணன் நாமங்களை நன்குணர்ந்து நன்கேத்தி நல்வாழ்வு பெருக என்றும், தாழ்ந்து வரம் கொண்டு தக்க வகைகளாய் வாழ்ந்து கழிவாரை ஞானம் அளந்த திருமால் வாழ்விப்பார் என்றும், திருமால் பெருமையை விரும்பினால் அனைவருக்கும் சேமம் உண்டாகும் என்றும், திருமங்கை நின்றருளும் தெய்வத்தை உங்கள் நாவால் வாழ்த்தும் கடமையைக் கடைப்பிடியுங்கள் என்றும் பூதத்தாழ்வார் பாடுகிறார்.

பேயாழ்வார் சென்னையிலுள்ள மயிலையில் ஒரு கிணற்றிலிருந்த செவ்வல்லிப்பூவில் அவதரித்ததாக ஐதீகம்.

அவர் பாடியுள்ள அந்தாதி மூன்றாம் திருவந்தாதி என்று முதலாயிரத் திவ்யப்பிரபந்தப் பாசுரத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது.

பேயாழ்வார் திருமாலை வழிபட்டுத் “திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், அருக்கன் அணிநிறமும் கண்டேன். செருக்கிளரும் பொன்னாழி கண்டேன். புரிசங்கம் கண்டேன். ஆழி வண்ணன்பால் இவையெல்லாம் கண்டேன்” என்று வணங்கித் திருமால்தான் மருந்தும் பொருளும் அமுதமும் என்றும், வலம்புரிந்த வான் சங்கம் கொண்டானை ஓதினால், தேவர் திறலும் திருவும் உருவமும், மாசில்லாத குடிப்பிறப்பும் பல்ப நலன்கள் அனைத்தும் கிடைக்கும் என்றும் பாடுகிறார்.

இம்மூன்று ஆழ்வார்களும் திருமால் பெருமைகளையும் திருமால் உறையும் திருப்பதிகளைக் குறித்தும் திருமாலின் அருஞ்செயல்களை வியந்து பாராட்டியும் பாடியுள்ளார்கள்.

திருமழிசையாழ்வார் சென்னைக்கருகில், உடையவர் அவதரித்த திருப்பெரும்புதூருக்குச் சமீபமாக உள்ள திருமழிசை யென்னும் ஊரில் பிறந்தவர். இவர் சுதர்சன சக்கரத்தின் அமிசம் என்பது ஐதீகம்.

இவ்வாழ்வார், ஆழியானே அனைத்தும் என்றும், ஆழியானே ஆதியும் அந்தமும் ஆனவன், பொருள் முடிவும், அருள் முடிவும் ஆனவன் என்றும், திருமாலை நினைத்து நீயே உலகெலாம், நின்னருளே நிற்பன, நீயே தவத்தேவ தேவனும், நீயே எரிசுடரும் மால்வரையும், எண்டிசையும் அண்டத் திருச்சுடரும் என்றும், வானுலவு, தீவளி, மாகடல், மாபொருப்பு, வெங்கதிர், தண்மதி, கொண்டல் பெயரும் திசைகள் எட்டும், சூழ்ச்சியும், ஆறு சமயம் அனைத்தும் திருமாலே என்றும், பாட்டும் முறையும், படுகதையும், பல்பொருளும், ஈட்டிய தீயும் இருவிசும்பும், கேட்ட மனுவும், சுருதியும், மறை நான்கும் அனைத்திற்கும் தலைவன் என்றும் பாடுகிறார்.

ஆழ்வார்கள் அனைவருமே இல்லறத்தையே சிறப்பித்துக் கூறுகிறார்கள்; துறவறத்தை வற்புறுத்தவில்லை.

அது வைணவத்தின் தனிச்சிறப்புகளுள் ஒன்றாகும் திருமாலைப் பாடும் ஆழ்வார்கள் திருமகளையும் உயர்த்திப் பாடுகிறார்கள் என்பதைக் காண்கிறோம்.

> "இல்லறம் இல்லேல் துறவறம் இல்என்னும்
> சொல்லற மல்லனவும் சொல்லல்ல - நல்லறம்
> ஆவனவும் நால்வேத மாத்தவமும் நாரணனே
> யாவதீ தன்றென்பா ரார்?"

இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் மேலான நல்லறமும் வேதமும் தவமும் நாராயணனே என்று திருமழிசைப்பிரான் கூறுகிறார்.

## நம்மாழ்வார்

ஆழ்வார்களுள் நம்மாழ்வார் தனிச்சிறப்பும் தனித்தன்மையும் கொண்டவர். இவர் ஆழ்வார் நிலையும் ஆச்சாரியார் நிலையும் இணைந்து நிற்பவர். இவருடைய பாடல்கள் வேதங்களின் சாரம் கொண்டவை. நம்மாழ்வார் மொத்தம் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்று ஆறு பாடல்கள் பாடியுள்ளார். அவை முறையே, திருவிருத்தம் நூறு பாசுரங்களும், திருவாசிரியம் ஏழு பாசுரங்களும், பெரிய திருவந்தாதி எண்பத்து ஏழு பாசுரங்களும், திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்களும் கொண்டவை என்று நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்தைத் தொகுத்த அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். நம்மாழ்வாரின் பாசுரங்கள் தமிழ் வேதம் என்று கருதப்படுகிறது. அவர் பாடியுள்ள திருவாய்மொழி ஒரு தனிப்பேரிலக்கியமாகும்; பக்தி நிலையும், பிரபத்தி நிலையும் தத்துவ நிலையும் இணைந்ததாகும். நம்மாழ்வாரின் பாடல்களில் சமய நல்லிணக்க கருத்துகளும், திருமால் வழிபாடும் இணைந்து உச்சநிலை பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.

நம்மாழ்வாரின் திருமால் வழிபாடு தனிச்சிறப்புக் கொண்டதாகும். அவர் தமது திருவிருத்தத்தில் எம்பெருமான்மீதுள்ள அன்பை எடுத்துக் கூறித் தமது முறையீட்டை ஒரு விண்ணப்பமாகவே குறிப்பிடுகிறார்.

"பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா
வொழுக்கும் அழுக்குடம்பும்
இந்நின்ற நீர்மை இனியா
முறாமை, உயிரளிப்பான்
எந்நின்ற யோனியு மாய்ப்பிறந்
தாயிமை யோர்தலைவா
மெய்ந்நின்று கேட்டரு ளாய்,அடி
யேன்செய்யும் விண்ணப்பமே"

இந்த விண்ணப்பத்தைத் தொடர்ந்து தம்மைத் தலைவியாகப் பாவித்து எம்பெருமானாரைத் தலைவராகக் கருதி உள்ளமுருகப் பாடுகிறார். பெண்மையின் அகப் பொருளை விளக்கும் அருமையான பாடல்களாக அவை அமைந்திருக்கின்றன. தலைவனின் பெருமைகளைத் தலைவி எடுத்துக் கூறும் தலைசிறந்த பாடல்களாக இப்பாசுரங்கள் அமைந்துள்ளன.

"நிறமுயர் கோலமும் பேரும்
உருவும் இவையிவையென்று
அறமுயல் ஞானச் சமயிகள்
பேசிலும் அங்கங்கெல்லாம்
உறவுயர் ஞானச் சுடர்விளக்
காய்நின்ற தன்றியொன்றும்
பெறமுயன் றாரில்லை யால்எம்பி
ரான்றன் பெருமையையே"

என்று தலைவனது பெருமையைத் தலைவி கூறுகிறாள்.

ஆழ்வாரின் இந்த உள்ளம் கனிவான பாசுரங்களின் பயனை, இந்த நுட்பமான விண்ணப்பத்தின் பயனைக் கூறுவதாக,

"நல்லார் நவில்குரு கூர்நக
ரான்திரு மால்திருப்பேர்
வல்லார் அடிக்கண்ணி சூடிய
மாறன்விண் ணப்பஞ்செய்த
சொல்லார் தொடையல் இந்நூறும்வல்
லார்அழுந் தார்பிறப்பாம்
பொல்லா அருவினை, மாயவன்
சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே"

என்னும் நிறைவான பாசுரம் அமைந்துள்ளது.

நம்மாழ்வார் தமது திருவாசிரியப் பாசுரத்தில் திருமாலே மாபெரும் தெய்வம் என்று கூறி வழிபடுகிறார்.

"நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும்
தளிரொளி யிமையவர் தலைவனும் முதலா
யாவகை யுலகமும் யாவரும் அகப்பட
நிலநீர் தீகால் சுடர்இரு விசும்பும்
மலர்சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க
ஒருபொருள் புறப்பா டின்றி முழுவதும்
அகப்படக் கரந்துஓர் ஆலைச் சேர்ந்தவெம்
பெருமா மாயனை யல்லது
ஒருமா தெய்வம்மற் றுடையமோ யாமே?"

என்று பாடுகிறார்.

ஒரு தடவை காளமேகப்புலவர் நாகபட்டினத்தில் தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தார். மத்தியான நேரமாகிவிட்டது. கடுமையான பசியும் வந்துவிட்டது. அருகில் ஒரு பெருமாள் கோவில். கோவிலுக்குள் சென்று பெருமாளிடம் புளியோதரைப் பிரசாதம் கேட்டுப் பெற்றுப் பசியாறலாம் என்று கருதிப் பெருமாளிடம் விண்ணப்பித்தாராம். அக்காலத்தில் காளமேகப்புலவர் சிவ பக்தர். சிவனைப்பற்றித்தான் கவி பாடுவார். எனவே, பெருமாள் தோன்றித் தம்மைப்பற்றிப் பாடும்படி கேட்டாராம். கடும்பசி காரணமாகக் காளமேகப்புலவரும் அதற்கிசைந்து, "பெருமாளே நீயதிகம்" என்று பாடினாராம். பிரசாதம் கிடைத்தது. நன்றாகச் சாப்பிட்டுப் பசியாறினார் புலவர். அதன் பின்னர் பெருமாளைப் பார்த்து, "உன்னிலும் நான் அதிகம்" என்று கூறினாராம். "அதெப்படி?" என்று பெருமாள் கேட்க, "சிவனுக்கு ஓர் பிறப்பு, உன் பிறப்போ பத்து, என் பிறப்போ எண்ணிலடங்காது. எனவே, நான்தான் பெரியவன்" என்று விளக்கம் கூறியதாக ஒரு கதை உண்டு.

அது போல, நம்மாழ்வார், "பகவான் தமது உள்ளத்தில் அடக்கம், அந்த உலகப்பெரியவர் தமது உள்ளத்தில் அடக்கமாதலால் அந்தப் பகவானைவிடத் தாமே பெரியவர் என்று இப்பாசுரங்களைப் பாடினார். அப்பாசுரங்கள் பெரிய திருவந்தாதி எனப் பெயர் பெற்றன என்று கூறுவர்.

"எண்மணின் மிகுபுகழார் யாவரே பின்னையும்மற்
றெண்ணில் மிகுபுகழேன் யானல்லால் - என்ன
கருந்சோதிக் கண்ணன் கடல்புரையும் சீலப்
பெருஞ்சோதிக் கென்னெஞ்சாட் பெற்று?"

என்று பாடுகிறார்.

அத்துடன் "திருமாலே, நீயே தாயும் தந்தையும்" என்றும், "மனமே திருமாலையே சிந்திப்பாய்" என்றும், "திருமாலே ஐம்பெரும்பூதங்களும் நீயே" என்றும், "திருமால் என்மனதில் குடிபுகுந்துள்ளார்" எனவும், "திருமால் அருளால் தீவினைகள் நீக்கினோம்" என்றும், "திருமாலைச் சிந்தித்தால் வல்வினைகள் நில்லாது ஓடிவிடும்" என்றும், "திருமால் அருளால் இவ்வுலகம் நன்றாயிருக்கும்" என்றும், "எங்கும் நிறைந்திருப்பவர் திருமால்" எனவும், "திருமால் காட்டும் வழியே இனிய வழி" என்றும், "மண்ணளந்த மாலே எப்பிணிக்கும் மருந்து" என்றும், "திருமாலை நினைப்பவரின் சூழ்வினைத் துயர் நீங்கும்" என்றெல்லாம் ஆழ்வார் பாடுகிறார்.

"கார்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான்,
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான் - சீர்கலந்த
சொல்நினைந்து போக்காரேல், சூழ்வினையின் ஆழ்துயரை
என்நினைந்து போக்குவரிப் போது?"

என்று பாடுகிறார்.

எப்போதும் திருமாலையே நினைத்துப் போற்றுக. தீவினைகள் தீரும். உலகம் நன்மை பெறும் என்று தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பாடுகிறார்.

**திருவாய்மொழி**

திருவாய்மொழி நம்மாழ்வார் பாடிய ஆயிரத்து நூற்றிரண்டு பாசுரங்களைக் கொண்டது. அப்பாசுரங்கள் சாம வேதத்தின் சாரமெனக் கருதப்படுகிறது. பகவான் கண்ணன் தனது பகவத் கீதை விபூதி யோகத்தில் "வேதங்களில் நான் சாமவேதம்" - "வேதானாம் சாமவேதோஸ்மி" என்று கூறுகிறார்.

திருவாய்மொழிப் பாசுரங்கள் பக்திச் சுவையும், தமிழ்ச் சுவையும் இசையின்பமும் மிக்கவையாகும். திருமால் வழிபாட்டில் திருவாய்மொழிப் பாசுரங்கள் தனித்தன்மை கொண்டவைகளாகும்.

**"உயர்வற வுயர்நல முடையவன் எவனவன்**
**மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்,**
**அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்,**
**துயரறு சுடரடி தொழுதெழன் மனனே!"**

என்று அற்புதமான ஒரு பாசுரத்தை முதல் பாடலாகக் கொண்டு திருவாய்மொழியின் முதல் பத்துப் பாசுரங்கள் தொடங்குகின்றன.

திருமாலே அனைத்து உயிர்களும், திருமாலே எல்லா நலன்களும் உடையவன், எல்லாமாய் நிற்பவன், எங்கும் நிறைந்தவன், எல்லாக் காலங்களிலும் எல்லாப் பொருள்களிலும் இருப்பவன் என்று நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.

பத்துடையடியவர்க்கெளியவன், பிறருக்கரிய வித்தகன், மலர் மகள் விரும்பும் நம் அரும் பெறல் அடிகள் என்றும், பிணக்கற அறுவகைச் சமயமும் நெறியுள்ளி யுரைத்த கணக்கறு நலத்தனன் அந்தமில் லாதியம் பகவன் என்றும், ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற நன்றெழில் நாரணன் என்றும், துயக்கறு மதியில் நல்ஞா னத்துள் அமரரைத் துயக்கும் மயக்குடை மாயைகள் வானிலும் பெரியன வல்லன் எனவும் திருமாலை வழிபட்டுப் பாடுகிறார்.

திருமாலிடம் தூது செல்லும்படி நாரைகளையும், குயில்களையும், அன்னங்களையும், நன்னீலப்பட்சிகளையும், வண்டுகளையும், கிளிகளையும், நாகணவாய்ப் பறவைகளையும் வேண்டுகிறார். தம்மைத் துன்புறுத்தாதிருக்குமாறு குளிர் காற்றை வேண்டுகிறார்.

கண்ணன் என்னைச் சுற்றியுள்ளான், அருகில் வந்தான், என்னுடன் கூடிநின்றான், எனது இடுப்பில் அமர்ந்தான், உள்ளத்தில் புகுந்தான், தோளில் தங்கினான், நாவில் வந்து அமர்ந்தான், கண்ணுக்குள் நின்றான், நெற்றியில் இருந்தான்,

என் மனத்தில் நிலையாக வந்து நின்றான் என்றெல்லாம் ஆழ்வார் மனமுருகிப் பாடுகிறார்.

மனதில் தாம் மட்டுமல்லாமல் இதர மககளும் பறவைகளும் கடல்களும் மேகங்களும் சந்திரனும் [illegible]ழியும் நந்தா விளக்கும் மற்றவையும் திருமாலின் பிரிவால் வருந்துகின்றன, துன்புற்றுத் துடிக்கின்றன என்று ஆழ்வார் குறிப்பிட்டுப் பாடுவது கேட்டு அந்தப் பாசுரங்களைப் படிக்கும்போது, பாடும்போது நமது உள்ளம் உருகி வாடுகிறது.

திருமாலை முழுமையாக என்னால் வர்ணிக்க முடியாது என்னும் கருத்தில்

"பொன்முடியம் போரேற்றை
யெம்மானை நால்தடந்தோள்
தன்முடிவொன் றில்லாத
தண்டுழாய் மாலையனை
என்முடிவு காணாதே
என்னுள் கலந்தானைச்
சொல்முடிவு காணேன்நான்
சொல்லுவதென் சொல்லீரே"

என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

பகவானைத் தம்மைவிட்டுப் போகாதபடி சிக்கெனப் பிடித்துக்கொண்டதாகவும், இனி தம்மைவிட்டு அவர் போகமுடியாது எனவும் பாடி மகிழ்கிறார்.

"வைகுந்தா, மணிவண்ணனே! என்பொல்லாத்
திருக்குறளா! என்னுள் மன்னி
வைகும் வைகல் தோறும் அமுதாய வானேறே
செய்குந் தாஅரும் தீமையுன் னடியார்க்கும்
தீர்த்த சுரர்க்குத் தீமைகள்
செய்குந்தா, உன்னைநான் பிடித்தேன்கொள் சிக்கெனவே!"

என்று பாடுகிறார்.

"நாரணன் மூவே ழுலகுக்கும்
நாதன் வேதமயன்
காரணம் கிரிசை கரும
மிவைமுதல்வ னெந்தை

சீரணங் கமரர் பிறர்பல
 ரும்தொழு தேத்தநின்று
வாரணத் தைமருப் பொசித்த
 பிரான்என் மாதவனே !"

என்று அனைவரும் தொழும் ஆண்டவன் ஏழு உலகங்களுக்கும் நாதன் வேதமயன் காரணம், கிரிசை, கருமம் இவைகளுக்கு முதல்வன், கோவர்த்தன கிரியை குடையாகப் பிடித்த பிரான் எந்தை நாரணனே என்று திருமாலை வழிபடுகிறார்.

திருமால் புகழையே பாடும்படி ஆழ்வார் அனைவரையும் அழைக்கிறார்.

ஐந்து புலன்களும், ஐந்து பொறிகளும் கட்டுப்பட்டு எல்லா நலன்களும் நிறைந்த நாட்டிற்குச் செல்வதற்கு, அத்தகைய உயர்ந்த நிலையை அடைவதற்குத் திருமால் புகழைப் பாடுக என்று அனைவரையும் அழைக்கிறார்.

"புலனைந்து மேயும் பொறியைந்தும் நீங்கி
நலமந்த மில்லதோர் நாடு புகுவீர்
அலமந்து வீய அசுரரைச் செற்றான்
பலமுந்து சீரில் படிமின்ஓ வாதே !"

என்று பாடுகிறார்.

எனக்கு என்ன நிலை ஏற்பட்டாலும், சுவர்க்கம் கிடைத்தாலும் சரி, நரகம் கிடைத்தாலும் சரி, எனக்கு எத்தகைய நற்பிறவியோ வேறு பிறவியோ கிடைத்தாலும் எனக்கு என்ன கதி கிடைத்தாலும் உன்னை மறவேன் என்று கண்ணனை நினைந்து பாடுகிறார். தன்னலத்தினால் தமக்கு நல்லது கிடைக்க வேண்டும் என்று விரும்பி ஆண்டவனை ஆழ்வார் வழிபடவில்லை. அந்தப் பெருமாளை வழிபடுவதே தமது வாழ்க்கையின் கடமையாகப் பக்தியை ஆழ்வார் கருதுகிறார். இது ஓர் அடிப்படையான கொள்கை நிலையாகும். இதுவே பக்தி இயக்கத்தின் அடிப்படையான நிலைப்பாடாகும். உலக நன்மைக்காக ஆண்டவனை வழிபடுவது தங்கள் கடமையாக ஆழ்வார்கள் கருதினார்கள்.

"சிறப்பில் வீடு சுவர்க்கம் நரகம்
இறப்பில் எய்துக எய்தற்க, யானும்
பிறப்பில் பல்பிற விப்பெரு மானை
மறப்பொன் றின்றியென் றும்மகிழ் வேனே"

என்று நம்மாழ்வார் பாடியிருப்பதைக் காண்கிறோம்.

திருமால் திருத்தலங்களுள் திருமாலிருஞ்சோலையும் திருவேங்கடமும் முக்கிய இடம் பெறுகின்றன. இந்த இரு திவ்ய தேசங்களையும் நம்மாழ்வார் பெருமான் சிறப்பித்துப் பாடுகிறார். இப்பாசுரங்கள் மிகவும் பிரபலமானவைகளாகும்.

"கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலை
தளர்வில ராகில் சார்வது சதிரே !"

என்று, உங்கள் இளமை தீர்வதற்கு முன்பாகச் சோலை மலைக்குச் சென்று, அத்திருமாலை வழிபடும்படி ஆழ்வார் அனைவரையும் வேண்டுகிறார்.

திருவேங்கடமுடையானுக்கு அடிமை செய்து சேவிக்கும்படி, தலைதலைமுறையாக நின்று அனைவரும் பணிந்து வணங்கி மகிழுமாறு ஆழ்வார் வேண்டுகிறார். நம் வாழ்நாளெல்லாம், அப்பெருமானை வணங்கி வழிபாடு செய்து மகிழ வேண்டுமென்று உலகோரனைவரையும் வேண்டுகிறார்.

"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம்
தெழிகுரல் அருவித் திருவேங் கடத்து
எழில்கொள் சோதிஎந் தைதந்தை தந்தைக்கே"

என்றும், அதைத் தொடர்ந்து,

"எந்தை தந்தை தந்தைதந் தைக்கும்
முந்தை வானவர் வானவர் கோனொடும்
சிந்துபூ மகிழும் திருவேங் கடத்து
அந்த மில்புகழ்க் காரெழில் அண்ணலே"

என்றும் ஆழ்வார் பாடுகிறார். இது ஓர் அருமையான பாடல் தொகுப்பாகும். இப்பாடல் வழி நமது பாரம்பரியமும்,

பண்பாடும் வாழையடி வாழையாகத் தொடரும் பாரத நாட்டின் பெருவழியாகும். பெரியாழ்வார் பெருமான்,

**“எந்தைதந் தைதந்தை தந்தைதம் மூத்தப்பன்**
**ஏழ்படி கால்தொடங்கி**
**வந்து வழிவழி ஆட்செய்கின் றோம்திரு**
**வோணத் திருவிழாவில்**
**அந்தியம் போதில் அரியுரு வாகி**
**அரியை அழித்தவனை**
**பந்தனை தீரப்பல் லாண்டுபல் லாயிரத்**
**தாண்டென்று பாடுதுமே”**

என்று அனைவரும் சேர்ந்து பாடுவோம் என்று உலக மக்களை அழைக்கிறார்.

**“எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே”** என்றும், **“எந்தை, தந்தை, தந்தை தந்தைக்கும் முந்தை, வானவர், வானவர் கோனொடும்”** என்று நம்மாழ்வார் பெருமானும் பாடுகிறார்.

**“எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி**
**இருந்ததும் இந்நாடே - அதன்**
**முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே”**

என்று மகாகவி பாரதியார் நாட்டு வணக்கப் பாடலில் பாடுகிறார்.

### புகழும்நல் ஒருவன் என்கோ?

நம்மாழ்வார் பெருமானின் திவ்யப்பிரபந்தப் பாசுரங்களுள் மிக அற்புதமான, ஈடு இணையற்ற, தமிழ் சொற்சுவை நிரம்பிய, பக்திச் சுவைமிக்க, தத்துவ ஞானமும் அனைத்தளாவிய உலகளாவிய தத்துவ நிலையும் நிரம்பிய பாசுரத் தொகுதிகளுள் ஒன்று, அவைகளுள் முதன்மையானது என்று கூறத்தக்க அளவிலானது **“புகழும் நல் ஒருவன் என்கோ”** என்று தொடங்கும் பாசுரங்களாகும்.

இப்பாசுரங்கள் திருமால் வழிபாட்டு முறையை உச்சத்திற்குக் கொண்டுசென்றிருக்கிறது. இந்தப் பாசுரங்களை எத்தனை தடவை திரும்பத்திரும்பப்

பாடினாலும் பாடக் கேட்டாலும் தெவிட்டாது இன்பமளிக்கும்.

காலையில் சூரிய உதயமும், மாலையில் சூரியன் மறைவும் தினசரி நிகழ்ச்சிகளாகும். இந்த இருநேரங்களிலும் நாம் நாள்தோறும் சூரிய வழிபாடு செய்கிறோம். இளங்கோவடிகளார் ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்று பாடினார். அதில் நமக்கு அலுப்பு ஏற்படுவதில்லை.

திருமாலை அனைத்து வடிவங்களிலும் வழிபடும் இந்தப் பாடல்கள் தினந்தோறும் பாடத்தக்கவை. நமது உள்ளத்திற்கு நல்லுணர்வையும் நமது அறிவுக்குத் தெளிவையும் ஊட்டத்தக்கவை. இந்த அற்புதமான பாசுரங்கள்மூலம் நம்மாழ்வார் பெருமான் திருமாலை வழிபட நம் அனைவரையும் விரும்பி அழைக்கிறார். அப்பாசுரங்களை முழுமையாக இங்கு காண்போம்.

1. "புகழும்நல் ஒருவன் என்கோ
பொருவில்சீர் பூமி யென்கோ
திகழும்தண் பரவை என்கோ
தீயென்கோ, வாயு வென்கோ
நிகழும்ஆ காச மென்கோ
நீள்சுடர் இரண்டு மென்கோ
இகழ்விலிவ் வனைத்து மென்கோ
கண்ணனைக் கூவு மாறே !

2. "கூவுமா றறிய மாட்டேன்
குன்றங்கள் அனைத்து மென்கோ
மேவுசீர் மாரி யென்கோ
விளங்குதா ரகைகள் என்கோ
நாவியல் கலைகள் என்கோ
ஞானநல் லாவி யென்கோ
பாவுசீர்க் கண்ணன் என்கோ
பங்கயக் கண்ண னையே !

3. "பங்கயக் கண்ணன் என்கோ
பவளச்செவ் வாயன் என்கோ
அங்கதிர் அடியன் என்கோ
அஞ்சன வண்ணன் என்கோ !

செங்கதிர் முடியன் என்கோ
திருமறு மார்பன் என்கோ
சங்குசக் கரத்தன் என்கோ
சாதிமா ணிக்கத் தையே !

4. "சாதிமா ணிக்க மென்கோ
சவிகொள்பொன் முத்தம் என்கோ
சாதிநல் வயிரம் என்கோ
தவிவில்சீர் விளக்கம் என்கோ
ஆதியஞ் சோதி என்கோ
ஆதியம் புருடன் என்கோ
ஆதுமில் காலத் தெந்தை
அச்சுதன் அமல னையே !

5. "அச்சுதன் அமலன் என்கோ !
அடியவர் வினைகெ டுக்கும்
நச்சுமா மருந்தம் என்கோ !
நலங்கடல் அமுதம் என்கோ !
அச்சுவைக் கட்டி யென்கோ !
அறுசுவை அடிசில் என்கோ
நெய்ச்சுவைத் தேறல் என்கோ
கனியென் கோ!பா லென்கோ !

*என்று கனிவாகப் பாடுகிறார். இன்னும்,*

6. "பாலென்கோ ! நான்கு வேதப்
பயனென்கோ, சமய நீதி
நூலென்கோ ! நுடங்கு கேள்வி
இசையென்கோ ! இவற்றுள் நல்ல
மேலென்கோ ! வினையின் மிக்க
பயனென்கோ ! கண்ணன் என்கோ !
மாலென்கோ ! மாயன் என்கோ !
வானவர் ஆதி யையே !

7. "வானவர் ஆதி என்கோ !
வானவர் தெய்வ மென்கோ !
வானவர் போகம் என்கோ !
வானவர் முற்றும் என்கோ !
ஊனமில் செல்வ மென்கோ
ஊனமில் சுவர்க்க மென்கோ
ஊனமில் மோக்கம் என்கோ !
ஒளிமணி வண்ண னையே !

8. "ஒளிமணி வண்ணன் என்கோ !
ஒருவனென்று ஏத்த நின்ற
நளிர்மதிச் சடையன் என்கோ !
நான்முகக் கடவுள் என்கோ !
அளிமகிழ்ந் துலக மெல்லாம்
படைத்தவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவ னெம்மான்,
கண்ணனை மாய னையே !

9. "கண்ணனை மாயன் றன்னைக்
கடல்கடைந் தமுதம் கொண்ட
அண்ணலை அச்சு தன்னை
அனந்தனை அனந்தன் றன்மேல்
நண்ணிநன் குறைகின் றானை
ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன்
யாவையும் எவரும் தானே !

10. "யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரின் உள்ளால்
ஆதுமோர் பற்றி லாத
பாவனை அதனைக் கூடில்
அவனையும் கூட லாமே !"

என்று குருகூர் வண்சடகோபனார் (நம்மாழ்வார் பெருமான்) பத்துப் பாசுரங்களை அற்புதமாகப் பாடி உலக மக்கள் அனைவரையும் திருமால் வழிபாட்டில் திருப்புகிறார்.

சாதாரண மக்களை, சாது சனங்களை, ஆடுமாடுகள் மேய்த்துக்கொண்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்த எளிய மக்களை அடாவடித்தனமாகத் துன்புறுத்திக் கொண்டிருந்த கம்சனை வதைத்து அந்த நாட்டுப்பகுதியில் நல்லாட்சியை நிலைநாட்டுவதற்காகத் திருமால் அவதார மெடுத்தார். அவர் தமது ஆதியான சோதி உருவைப் பாற்கடலில் நிறுத்தி வைத்துவிட்டு, கோகுலத்தில் பிறந்து வளர்ந்த வேதமுதல்வனாவார். அந்தத் திருமாலை வீதிதோறும் சென்று புகழ்ந்து பாடவேண்டும்; பஜனை

செய்யவேண்டும்; கூட்டாகப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அவனுடைய பெருமைகளையும், அருஞ்செயல் களையும் மக்களுக்கு எடுத்துக் கூறி, அவ்வழிபாட்டில் மக்களையும் ஈடுபடுத்த வேண்டும். அதனால் அனைவருக்கும் புகழும் பெருமையும் கிடைக்கும் என்று ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

பஜனை செய்வது, வீதிவழியாகக் கூட்டாகச் சென்று திருமால் பெருமைகளை இசையுடன் பாடிக்கொண்டு போவது திருமால் வழிபாட்டில் ஆழ்வார்கள் அனுசரித்த ஒரு வழிமுறையாகும்.

"சாது சனத்தை நலியும்
கஞ்சனைச் சாதிப் பதற்கு
ஆதியஞ் சோதி யுருவை
அங்குவைத் திங்கு பிறந்த
வேத முதல்வனைப் பாடி
வீதிகள் தோறும்துள் ளாதார்
ஓதி யுணர்ந்தவர் முன்னா
என்ச விப்பார் மனிசரே?"

என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

அனைவரையும் திருமால் வழிபாட்டில் இணைக்கும் நோக்கத்தில்,

"செய்ய தாமரைக் கண்ண னாய்உல
கேழும் உண்ட அவன்கண்டீர்,
வையம், வானம், மனிசர், தெய்வம்மற்
றும்மற்றும் மற்றும் முற்றுமாய்
செய்ய சூழ்சுடர் ஞான மாய்வெளிப்
பட்டி வைபடைத் தான்பின்னும்
மொய்கொள் சோதியொ டாயி னான்ஒரு
மூவ ராகிய மூர்த்தியே"

என்று நம்மாழ்வார் பாடுகிறார்.

புலவர்களையும், கவிஞர்களையும், வள்ளல்களையும் மன்னர்களையும் பிரபுக்களையும் பாடி, பரிசில் பெற்று வாழ்வதைக் கண்டித்து, வெறும் பரிசுக்காக மனிதர்களின் புகழ் பாடி வெற்று வாழ்வு வாழாதீர்கள். திருமாலையே

பாடிப் புகழ் பெறுங்கள். கண்ணனையும் மணிவண்ணனையும் பாடி அருள் பெறுங்கள் என்று கூறி, மனிதரைப் பாட மறுத்து !

"சொன்னால் விரோதமிது ஆகிலும்
சொல்லுவன் கேண்மினோ
என்னாவில் இன்கவி யானொரு
வர்க்கும் கொடுக்கிலேன்"

என்றும்,

"உளனாக வேயெண்ணித் தன்னையொன்
றாக்கத்தன் செல்வத்தை
வளனா மதிக்கும்இம் மானிடத்
தைக்கவி பாடியென்"

என்றும்,

எத்தனை விரோதம் ஏற்பட்டாலும் மனிதரைப் பாட மாட்டேன் என்று கூறித் திருமால் பெருமைகளையே ஆழ்வார் பாடினார். தாம் மட்டுமல்லாது இதர புலவர்களையும் கவிஞர்களையும் மனிதரைப் பாடவேண்டா, கண்ணனையே பாடுங்கள், புகழ் பெறுவீர் என்று கூறுகிறார்.

"என்னாவ தெத்தனை நாளைக்குப்
போதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப்
படைக்கும் பெரும்பொருள்?"

என்றும்,

"கொள்ளும் பயனில்லைக் குப்பை
கிளர்த்தன்ன செல்வத்தை
வள்ளல் புகழ்ந்துநும் வாய்மை
இழக்கும் புலவீர்காள்
கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்
லாம்தரும் கோதில்என்
வள்ளல் மணிவண்ணன் தன்னைக்
கவிசொல்ல வம்மினோ"

என்றும் மற்ற புலவர்களை ஆழ்வார் அழைக்கிறார்.

இன்னும், "வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேன் அல்லேன், ஆய்கொண்ட சீர்வள்ளல் ஆழிப் பிரானெனக் கேயுளன்" என்று துணிவுடன் கூறுகிறார்.

“ஒருநா யகமாய் ஓட
வுலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர்
சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையி
லேபிச்சை தாம்கொள்வர்
திருநா ரணன்தாள் காலம்
பெறச்சிந்தித் துய்ம்மினோ”

என்று தொடங்கி,

“செம்மின் முடித்திரு மாலை
விரைந்தடி சேர்மினோ”

என்றும்,

“கடிசேர் துழாய்முடிக் கண்ணன்
கழல்கள் நினைமினோ”

என்றும்,

“பனைத்தாள் மதகளி றட்டவன்
பாதம் பணிமினோ”

என்றும்,

“மணிமின்னு மேனிநம் மாயவன்
பேர்சொல்லி வாழ்மினோ”

என்றும்,

“ஆழ்ந்தார் கடல்பள்ளி அண்ணல்
அடியவர் ஆமினோ”

என்றும்,

“கோமின் துழாய்முடி ஆதியஞ்
சோதி குணங்களே”

என்றும்,

“பணங்கொள் அரவணை யான்திரு
நாமம் படிமினோ”

என்றும்,

“கொடிமன்னு புள்ளுடை அண்ணல்
கழல்கள் குறுகுமினோ”

என்றெல்லாம் திருமால் புகழ் பாட ஆழ்வார் மக்கள் அனைவரையும் கூடி அழைக்கிறார். இவ்வாறு பல வேறு

மக்கள் பகுதிகளெல்லாம் திருமால் வழிபாட்டில் ஒன்று சேர்வதால் இதை மக்கள் இயக்கமாகக் காண்கிறோம். இதைப் பக்தி இயக்கமாகவே காண்கிறோம்.

நாயகி நாயக பாவத்தில் நம்மாழ்வார் தம்மைப் பாராங்குச நாயகியாகப் பாவித்துத் தமது அன்பை வெளியிடுகிறார்; தீராத காதலை வெளியிடுகிறார்.

"ஏக மூர்த்தி இருமூர்த்தி
மூன்று மூர்த்தி பலமூர்த்தி
ஆகி, ஐந்து பூதமாய்
இரண்டு சுடராய் அருவாகி
நாகம் ஏறி நடுக்கடலுள்
துயின்ற நாரா யணனே,உன்
ஆகம் முற்றும் அகத்தடக்கி,
ஆவி யல்லல் மாய்த்ததே"

என்று மனமுருகிப் பாடுகிறார். இன்னும்,

"கால சக்க ரத்தோடு,
வெண்சங் கம்கை யேந்தினாய்
ஞால முற்று முண்டுமிழ்ந்த
நாரா யணனே !"

என்றும்,

"குரைக ழல்கள் நீட்டிமண்
கொண்ட கோல வாமனா
குறைக ழல்கை கூப்புவார்கள்
கூட நின்ற மாயனே !"

என்றும்,

"என்ன தாவி மேலையாய்
ஏர்கொள் ஏழ்உ லகமும்
துள்ளி முற்று மாகிநின்ற
சோதி ஞான மூர்த்தி !"

என்றும் பாடுகிறார்.

"யானும் ஏத்தி ஏழுலகும்
முற்றும் ஏத்தி, பின்னையும்
தானும் ஏத்தி லும்தன்னை
ஏத்த ஏத்த எங்கெய்தும்

தேனும் பாலும் கன்னலும்
அமுது மாகித் தித்திப்ப
யானும் எம்பி ரானையே
ஏத்தி னேன்யா னுய்வானே"

என்றெல்லாம் நம்மாழ்வார் பெருமான் நாயகியாக நின்று எம்பிரானை நோக்கி நெஞ்சுருகிப் பாடி மகிழ்கிறார்.

உலகில் எதைக் கண்டாலும், எப்பொருளைக் கண்டாலும், எந்தக் காட்சியைக் கண்டாலும் அவைகளைத் திருமாலின் வடிவமாக்வே ஆழ்வார் காண்கிறார். மண்ணைக் கண்டால் இது வாமனன் மண் என்று காண்கிறார். விண்ணைப் பார்த்தால் அது வைகுந்தம் என்று காண்கிறார். கடலானது அவருக்குக் கடல் வண்ணனாகக் காட்சி தருகிறது. ஞாயிற்றைக் காட்டி இது சிரிதரன்மூர்த்தி என்று கூறுகிறார். நெருப்பைக் கண்டால் அது அச்சுதன் என்றும், காற்றைத் தழுவினால் அது என் கோவிந்தன் என்றும் கூறுகிறார்.

திங்களைக் காட்டி ஒளி மணிவண்ணனே என்றும் குன்றத்தைக் காட்டி நெடுமாலே என்றும், நல்ல மழையைக் கண்டால் நாராயணனே என்றும், பசுங்கன்றுகளைக் கண்டால் இவை கோவிந்தன் மேய்த்தவையென்றும் நாகத்தைப் பார்த்து இது நாராயணன் கிடக்கையென்றும் கூத்தர் குடமெடுத்தாடினால் அது கோவிந்தன் கூத்து என்றும், குழல் சத்தம் கேட்டால் அது மாயவன் குழல் என்றும், ஆய்ச்சியர் கை வெண்ணெயைக் காணில் அது அவனுண்ட வெண்ணெய் என்றெல்லாம் ஆழ்வார் பாடுகிறார்.

"திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே என்னும்
உருவுடை வண்ணங்கள் காணில்
உலகளந் தான்என்று துள்ளும்
கருவுடைத் தேவில்க ளெல்லாம்
கடல்வண்ணன் கோயிலே என்னும்
வெருவிலும் வீழ்விலும் ஓவாக்
கண்ணன் கழல்கள் விரும்புமே !"

என்று திருமாலை நமது வாழ்க்கையில் காணும் அனைத்தினும் இணைத்து வழிபடும் வழிமுறையை ஆழ்வார் காட்டுவதைக் காண்கிறோம்.

திருமாலை வழிபட்டதால் எல்லாக் குறைகளும் நீங்கி விட்டன என்றும், எல்லா நோய்களும் தீர்ந்துவிட்டன வென்றும், எல்லாத் தீவினைகளும் அழிந்தனவென்றும், எல்லா இன்பங்களும் நிகழ்ந்தனவென்றும், இனி எனக்கு நிகர் யாருமில்லையென்றும் ஆழ்வார் பாடுகிறார்.

பராங்குச நாயகிக்கு மனநோய் ஏற்பட்டுவிட்டதாகக் கூறிக் குறி கேட்பதோ, கோடாங்கி அடிப்பதோ உடுக்கடித்துப் பேயாட்டம் ஆடுவதோ, ஆடு கோழி பலியிட்டு ஆடுவதோ, கண்ட தெய்வங்களுக்கும் கருஞ்சோறும் செஞ்சோறும் படைப்பதோ மூடத்தனமும் தீய பழக்க வழக்கங்களுமாகும். அவளுக்குத் திருமால்மீது பக்தி மேலிட்டதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சங்கு சக்கரம் என்றுரைத்து நாராயணன் திருநாமம் சொல்லித் தியானம் செய்யுங்கள், துளசித் தீர்த்தம் கொடுத்து மன அமைதி கொள்ளச் செய்யுங்கள் என்று கூறி,

"கீழ்மையில் அங்கோர் கீழ்மக
னிட்ட முழவின்கீழ்
நாழ்மை பலசொல்லி நீரணங்
காடும்பொய் காண்கிலேன்
ஏழ்மைப் பிறப்புக்கும் சேமமிந்
நோய்க்கும்ஈ தேமருந்து
ஊழ்மையில் கண்ண பிரான்கழல்
வாழ்த்துமின் உன்னித்தே !"

என்று பாடுகிறார்.

ஆழ்வார் பெருமகிழ்ச்சியுடன் அனைவரையும் அழைத்துப் பாடுகிறார். பக்த கோடிகளுக்கு மங்களாசாசனம் செய்கிறார். கலி நீங்கிக் கிருதயுகம் தோன்றி இப்பூவுலகில் வெள்ளம் பெருகிற்று என்றும், நோய், நொடி, பகை, பசி நீங்கி உலகம் எல்லாம் நல்லது பரவிற்று என்றும், திருமால் வழிபாட்டால் இவையெல்லாம் நன்கு நிறைவு பெறும் என்றும் அற்புதமாகப் பாடி மகிழ்கிறார்.

"பொலிக, பொலிக, பொலிக
போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த
நமனுக்கிங் கியாதொன்று மில்லை,
கலியும் கெடும்கண்டு கொள்மின்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடி
யாடி யுழிதரக் கண்டோம்"

என்று தொடங்கி,

"கண்டோம், கண்டோம், கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம்" என்றும்,

"திரியும் கலியுகம் நீங்கித்
தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிருதயுகம் பற்றிப்
பேரின்ப வெள்ளம் பெருக
கரிய முகில்வண்ணன் எம்மான்
கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்திசை பாடி
எங்கும் இடம்கொண் டனவே!"

என்று பெருமகிழ்ச்சி கொண்டு துள்ளிப் பாடுகிறார்; நம்மையெல்லாம் பரவசப்படுத்துகிறார். இன்னும்,

"கொன்றுயிர் உண்ணும் விசாதி
பகைபசி தீயன வெல்லாம்
நின்றிவ் வுலகில் கடிவான்
நேமிப் பிரான்தமர் போந்தார்"

என்றும் மகிழ்ச்சியுடன் பாடுகிறார்.

மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைய வாராய் வாராய் என்று திருமாலை அழைப்பதாக ஆழ்வார் பாடிய பாசுரங்கள் தத்துவஞான விளக்கம் கொண்டவையாகும்.

"நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்,
சீராய் சுடர்க ளிரண்டாய்ச் சிவனாய் அயனானாய்
கூரார் ஆழி வெண்சங் கேந்திக் கொடியேன்பால்
வாராய், ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே"

என்றும்,

மண்ணும், விண்ணும் மகிழக் குறளாய் வலங்காட்டி
மண்ணும் விண்ணும் கொண்ட மாய அம்மானே,
நண்ணி யுனைநான் கண்டு கந்து கூத்தாட,
நண்ணி யொருநாள் ஞாலத் தூடே நடவாயே"

என்று பெருமகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி மக்களையும் அழைக்கிறார்.

நாராயணனே பல அவதாரங்கள் எடுத்து நாட்டையும் நாட்டு மக்களையும் நல்லோர்களையும் காத்த பெருமைகளை ஆழ்வார் சிறப்பித்துப் பாடுகிறார். திருமாலின் பெருமையைப் பாட நாட்டு மக்கள் அனைவரையும் அழைத்துப் பாடுகிறார்.

"நாட்டிற் பிறந்தவர் நாரணற்
காளன்றி யாவரோ
நாட்டில் பிறந்து படாதன
பட்டு மனிசர்க்கா
நாட்டை நலியும் அரக்கரை
நாடித் தடிந்திட்டு
நாட்டை யளித்துய்யச் செய்து
நடந்தமை கேட்டுமே?"

என்று நம்மாழ்வார் பெருமான் பாடி நம்மைச் சிந்திக்க வைக்கிறார்.

உரத்த குரலில் உருக்கத்துடன் திருமாலை அறைகூவி அழைத்து முறையிட்டு ஆழ்வார் பாடுகிறார்.

"ஒருமூ வுலகும் படைத்த பற்ப நாபாவோ !
ஒருமூ வுலகும் அளந்த பற்ப பாதாவோ !
தாமரைக் கண்ணாவோ ! தனியேன் தனியாளாவோ !
தாமரைக் கையாவோ ! உன்னை யென்றுகொல் சார்வதுவே?"
கூத்தவெங் கூத்தாவோ ! மலையேந்திக் கன்மாரி தன்னை
காத்தவெங் கீர்த்தியினாய் !
என்னுடைக் கோவலனே ! என்பொல்லாக் கருமாணிக்கமே !
என்று புலம்துரந்த விசும்பாளியைக் காணேனோ !

என்றெல்லாம் கூவி அழைத்து முறையிடுவது திருமால் வழிபாட்டில் ஆழ்வார் காட்டும் வழிமுறையாகும்.

எம்பெருமானின் விசித்திரமான உலகளாவிய அனைத்தளாவிய தோற்றத்தைக் கண்டு வியந்து வியந்து ஆழ்வார் அற்புதமாகப் பாடுகிறார் :

**"மாயா, வாமன னே,மது சூதா ! நீயருளாய்**
**தீயாய் நீராய் நிலனாய் விசும்பாய்க் காலாய்**
**தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்**
**நீயாய் நீநின்ற வாறுஇவை யென்ன நியாயங்களே !"**

**"அங்கண் மலர்த்தண் டுழாய்முடி அச்சுத னேஅருளாய்**
**திங்களும் ஞாயிறு மாய்ச்செழும் பல்சுட ராய்இருளாய்**
**பொங்கு பொழிமழை யாய்ப்புக ழாய்ப்பழி யாய்ப்பின்னும்நீ,**
**வெங்கண்வெங் கூற்றமு மாய்இவை என்னவிசித்திரமே!"**

என்னும் அற்புதமான பாசுரங்களை நம்மாழ்வார் பெருமாளைப் பாடியுள்ளதைப் பார்க்கிறோம்.

ஆழ்வார்களின் பக்தி இயக்கத்தின் மூலம் திருமால் வழிபாட்டிலும் வழிபாட்டு முறைகளிலும், மக்கள் குழுக்களாகவும், கூட்டமாகவும், பெருந்திரளாகவும் கூடி நின்று பெருமாள் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைக் காண்கிறோம்.

ஆழ்வார்கள் தங்கள் இனிய இசையுடன் கூடிய பாசுரங்கள் மூலம் மக்களைக் கவர்ந்து அவர்களைத் திரட்டி யிருக்கிறார்கள். அக்காலத்தில் இருந்த ஆட்சிக் கொடுமைகள் அசுரக் கொடுமைகள், சமுதாயக் கொடுமைகளுக்கும், எதிராகத் தங்கள் பாசுரங்களில் குரல் கொடுத்து அதில் மக்கள் திரண்டிருக்கிறார்கள்.

இன்றுங்கூடத் திருமால் கோவில்களில் திருவிழாக்களில் தேரோட்டங்களில் பல லட்சக்கணக்கான மக்கள் கூடுவதைக் காண்கிறோம். மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும்போது பல லட்சம் மக்கள், குடும்பம் குடும்பமாக, ஊர் ஊராக, கூட்டம் கூட்டமாக, தலையில் கட்டுச்சோற்றுடன் திரண்டு குவிந்து, ஆற்றில் இறங்கி அழகரைச் சேவித்து, சாதி மதம் இன மொழி பால் வேறுபாடுகளை மறந்து, வைகை யாற்றுமணலில் அமர்ந்து கட்டுச் சோறுகளை அவிழ்த்து, ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இன்று

[illegible] ஆண்டுதோறும் சித்திரைப் பௌர்ணமி திருவிழாவில் [illegible] வைகை ஆற்றில் பல லட்சம் மக்கள் திரளுவதைக் காண்கிறோம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருவிழாவில் ஆடிப் பூரத் திருநாளின் போது பல்லாயிரம் மக்கள் திரளுவதைக் காண்கிறோம். உலகில் எந்த இடத்திலும் காணாத அளவில் திருப்பதி திருமலைக் கோயில்களுக்குப் பல லட்சக்கணக்கான மக்கள் சென்று வருவதைக் காண்கிறோம். இதேபோல் பாரத நாட்டில் எண்ணற்ற காட்சிகளை எடுத்துக்கூறலாம். திரிவேணி சங்கமத்தில் கோடி மக்கள் கூடுவதைக் காண்கிறோம்.

ஆடல், பாடல், இசை, நடனம், அறுசுவை உணவு, பால், [illegible] இயற்கைக் காட்சிகள், பசுக்கள், பறவைகள், மரங்கள், [illegible] [illegible]ரங்கள், மலர்கள், கொடிகள், தோட்டம், [illegible], துரவுகள், நந்தவனங்கள், கோவில்கள், குளங்கள், [illegible]லைகள், தீர்த்தங்கள், மக்கள் குழுக்கள், கூட்டங்கள், திருவிழாக்கள் இவையெல்லாம் இயற்கையோடிணைந்த மக்கள் சமுதாய வாழ்வைச் சித்திரிக்கும் இனிய காட்சிகளை ஆழ்வார்களின் பாடல்களில் காணமுடிகிறது.

பக்தி இயக்கம் ஒரு மகத்தான மக்களியக்கமாகப் பாரத நாட்டுப் பண்பாட்டை உயர்த்தியிருப்பதைக் காண்கிறோம். ஆழ்வார்களின் பக்தியில் திருமால் வழிபாட்டுடன் இணைந்த சமுதாய மேன்மையை மேம்பாடுகளைக் காண்கிறோம். ஆழ்வார்களின் பாசுரங்களில் சிறந்த தத்துவ ஞானக் கருத்துகளும், மனிதாபிமான உணர்வின் மேன்மைகளும் உலகிற்கு வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன. ஆழ்வார்களின் திவ்யப்பிரபந்தக் கருத்துகள் உலகம் முழுவதிலும் பரவ நாம் பாடுபட வேண்டும். ஆழ்வார்களின் பாசுரங்கள் இந்திய மக்கள் அனைவரின் உடைமைகளாக மாறவேண்டும்.

# 6. தமிழும் தமிழ்நாடும்

**சி**லப்பதிகாரமும் திவ்யப்பிரபந்தமும் சிறந்த தமிழ்ச் சுவைமிக்க பேரிலக்கியங்களாகும். சிலப்பதிகாரக் காப்பியம் முத்தமிழையும் மூன்று தமிழ் நாடுகளையும் மூன்று தமிழ் மன்னர்களையும் சிறப்பித்துக் கூறும் தனிப் பெருங்காப்பியமாகும்; தனிப்பெரும் தமிழ்க் காப்பியமாகும். சிலப்பதிகாரம் சிறந்த தமிழ்க் காப்பியம் மட்டுமன்று; தமிழ் மொழியின் சிறப்பை, தமிழிசையின் சிறப்புகளை, தமிழ் மண்ணின் சிறப்புகளை, தமிழ் மன்னர்களின் சிறப்புகளை, தமிழ் மன்னர்களின் தலைநகரங்களின் சிறப்புகளை, தமிழ் மன்னர்களின் வீரத்தைச் சிறப்பித்துக் கூறும் நெஞ்சை அள்ளும் தலைசிறந்த தமிழ்க் காப்பியமுமாகும்.

சிலப்பதிகாரக் காப்பியம் முத்தமிழை இணைக்கிறது மூன்று தமிழ் நாடுகளை இணைக்கிறது; மூன்று தமிழ் மன்னர்களின் ஒற்றுமையை, அவர்களின் புகழைப் பரப்புகிறது. மூன்று தமிழ் மன்னர்களும் இமயம்வரை சென்று தங்கள் கொடிகளைச் சின்னங்களைப் பொறித்த வீரத்தையும் பெருமையையும் வெளிப்படுத்துகிறது.

சிலப்பதிகாரக் காப்பியம், தமிழ் மக்களின் நாகரிக வளர்ச்சியைக் கல்வி கலாச்சார வளர்ச்சியை, தொழில் மற்றும் சாகுபடி வளர்ச்சியை, வாணிபப் பெருக்கத்தை விவரிக்கிறது.

திவ்யப்பிரபந்தம் சிறந்த நல்ல தமிழ்ச்சொற்களில் ஆழ்வார்கள் பாடியுள்ள பெருமைக்குரிய பக்தி நூலாகும் அது வைணவ பக்தி நூல் என்பதை நாம் அறிவோம் அப்பிரபந்தப் பாசுரங்களில் பக்திச்சுவையுடன் தமிழ்ச் சுவையும் இணைந்து மிகவும் சிறப்பாக அமைந்திருக்கிறது

தமிழ் இலக்கிய வரலாற்றில் வாழையடி வாழையாக, தொன்மையும் பாரம்பரியமும் மரபுகளும் கொண்ட இலக்கியங்கள் [illegible] நிறைந்துள்ளன. அதன் காரணமாகத் தமிழ் மொழி செம்மொழியாகவும், தமிழிலக்கியம் செம்மொழி இலக்கியமாகவும் பெயர்பெற்று புகழடைந்திருக்கிறது.

சங்க இலக்கியங்கள், அறநூல்கள், ஐம்பெருங் காப்பியங்கள், திருக்குறள், கம்பராமாயணம், பாரதம், சைவத் திருமுறைகள், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் ஆகிய இலக்கியங்களும், தாயுமானவர், அருணகிரியார், வள்ளலார், பாரதி பாரதிதாசன் ஆகியோர் இயற்றிய இலக்கியங்களும் மற்றும் தேம்பாவணி, சீறாப்புராணம் முதலிய இலக்கியங்களும், தற்காலத்தில் படைக்கப்பட்டுள்ள சிறுகதைகளும் பெருங்கதைகளுமான உரைநடை இலக்கியங்களும் தமிழின் வரலாற்றுச் சிறப்புமிக்க, கலை இலக்கியக் களஞ்சியங்களாகும் என்பதை அறிவோம். இவைகளின் சிறப்புகளை நாம் தமிழ் மக்களுக்கு இன்னும் விரிவாக எடுத்துச்செல்ல வேண்டும். தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்து இந்திய மக்களுக்கும் அனைத்து உலக மக்களுக்கும் கொண்டுசெல்ல வேண்டும். அதற்கான முயற்சிகளை, நம் நாட்டின் அறிவுச் செல்வர்களும், கல்வியாளர்களும் மேற்கொள்ள வேண்டும். நிற்க.

இந்த அத்தியாயத்தில் இளங்கோவடிகளாரும், ஆழ்வார்களும் முறையே சிலப்பதிகாரம், நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் ஆகிய தங்கள் படைப்புகளில் தமிழைப் பற்றியும் தமிழின் சிறப்புகளைப்பற்றியும் கூறியுள்ளதைக் காண்போம்.

**சிலப்பதிகாரத்தில்**

சிலப்பதிகாரம் ஒரு முழுமையான தமிழ்க் காப்பியம், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் நிறைந்த முழுமையான காப்பியம், தமிழில் உள்ள முதன்மையான மூல காப்பியம் என்பதை அறிவோம். அதன் புகழும் செல்வாக்கும் [illegible] தமிழகத்தில் சிறப்பாகப் பரவியுள்ளதை நாம் அறிவோம். ஆயினும் சிலப்பதிகாரத்தின் சிறப்புகள்பற்றி

இன்னும் பாரத தேசம் முழுவதிலும், உலக முழுவதிலும் அதன் செய்திகள் பரவ வேண்டியதும் அவசியமாகும். அத்துடன் அக்காப்பியத்தின் பல வேறு சிறப்புகளைப்பற்றி மேலும் பல ஆய்வுகளும் ஆய்வுரைகளும் விரிவுரைகளும் வரவேண்டியது அவசியமாகும். சிலப்பதிகாரக் காப்பியத்தில் தமிழகத்தின் வரலாற்றுத் தன்மையும் தமிழ்நாட்டுச் சிறப்புகளும் தமிழ்நாட்டு நகரங்களின் சிறப்புகளும் மற்றும் நாகரிக வளர்ச்சி, கலாச்சார வளர்ச்சி முதலியனவும் நேரிடையாக அமைந்திருப்பதையும் காண்கிறோம்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் வரும் மூன்று காண்டங்களும் புகார், மதுரை, வஞ்சி ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டிருக்கின்றன. இந்த மூன்று நகரங்களும் முறையே சோழ, பாண்டிய, சேர நாடுகளின் தலை நகரங்களாகும். அந்நகரங்களைப்பற்றிக் கூறப்பட்டிருக்கும் சிறப்புகளெல்லாம் தமிழகத்தின் சிறப்புகளாகும். சிலப்பதிகாரத்தின் முழு முதல் தமிழ்த்தன்மை குறித்தும் அதில் கூறப்பட்டுள்ள தமிழ்மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுச் சிறப்புகளைப்பற்றியும் பார்ப்போம்.

புகார்க் காண்டத்தின் மங்கல வாழ்த்துப் பாடலில், புகார் நகரைப்பற்றிக் குறிப்பிடும்போது குடிபெயர்தல் இல்லாத சிறப்புடைய நகரம் என்றும், சான்றோர் மிகுதியாக அந்நகரில் இருத்தலால் அது நிலைபேறுள்ள நகரமாக இருந்தது என்றும், நீண்ட நெடிய சுவர்க்கம் போலவும், நாகர் உலகம் போலவும், போகமும் புகழும் மிக்க நகரமாகவும் விளங்கியது என்றும் இளங்கோவடிகளார் கூறுகிறார்.

**"பதியெழு வறியாப் பழங்குடி மக்கள்"** என்றும், **"ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின் முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"** என்றும், **"நாக நீள் நகரொடு நாக நாடு அதனொடு, போக நீள் புகழ் மன்னும் புகார் நகர்"** என்றும் காப்பியம் குறிப்பிடுகிறது.

புகார் நகரில் செழிப்பும் தொழில்வளமும் கலை இலக்கியப் பண்பாட்டுவளமும் வாழ்க்கைவளமும் நிரம்பியிருத்தலால், அங்குள்ள மக்கள் வேறு எங்கும்

குடிபெயர்ந்து போகவேண்டிய அவசியம் இல்லாமல் அத்தனை வளமுடனும் வசதிகளுடனும் வாழ்ந்தனர்.

புகார் நகரில், சகல கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கும் உயர்ந்தோர், சான்றோர் நிறைந்து இருந்தனர். அதனால் மக்களுக்கு நிலைபேறு இருந்தது. அங்கு போகமும் புகழும் நிறைந்திருந்தன என்று காப்பியம் குறிப்பிடுகிறது.

புகார் நகரில் செல்வம் மிகுந்திருந்தது. செல்வாக்கு மிக்க அரசரும் புகழ்ந்து போற்றும்படியான செல்வங்களை உடைய வணிகப் பெருமக்கள் மிகுதியாக வாழ்ந்து வந்தனர். பெரும் அளவில் பண்டங்களும் மக்களுக்குத் தேவையான ஏராளமான பொருள்களும் சரக்குகளும் நிறைந்து குவிந்திருந்தன. கடல்வழியாகவும், தரைவழியாகவும் செல்வங்கள் வந்து நகரில் குவிந்துகொண்டிருந்தன.

மனித உழைப்பாலும் சமுதாய உழைப்பாலும் உற்பத்தியாகும் பண்டங்கள் உபரியாக மிகுந்து அதனால் பண்டமாற்றுதலும் வாணிபமும் பெருகியிருந்தன. அத்தகைய உபரிப் பெருக்கத்தையும் வாணிபச் சிறப்பையும் தமிழகம் பெற்றிருந்த காலத்தைச் சிலப்பதிகாரக் காப்பியம் சிறப்பாகக் குறிப்பிடுகிறது.

அரங்கேற்றுக்காதையில் அன்று தமிழகத்தில் நிலவியிருந்த ஆடல் பாடல், இருவகைக் கூத்து, பலவகைக் கூத்து, பதினோர் ஆடல் வகை, பாட்டு, கொட்டு, தாளம், பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கை ஆகிய வகைகளைப்பற்றியும், யாழ், குழல் ஆகியவைகளின் இசையுடன் தாளக் கூறுபாடு, வாய்ப்பாட்டு ஆகியவை பற்றியும் சிறப்பாக விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் இசையாசிரியர், பாடலாசிரியர் பயிற்சி முறைபற்றியெல்லாம் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் இசை பொதுவானது. அது இசைக் கருவிகளால் இசைக்கப்படுகின்றது. ஆனால், பாடல்கள் என்பவை மொழியின்பாற்பட்டவை. தமிழ்நாட்டின் பாடலாசிரியர் முத்தமிழும் கற்றுத் தேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பது மரபாகும்.

புகார் நகரத்துப் பாடலாசிரியன், மாதவிக்கு ஆடல் பாடல் கற்றுக்கொடுத்த பாடலாசிரியன், தமிழகம் நன்கு அறியும்படி பாடல்களை எடுத்துக்கூறும் திறனும், தமிழ் முழுதுமாக அறிந்த தன்மையும் கொண்டவன்; நாட்டிய நன்னூல் நன்கு அறிந்தவன். இசையாசிரியனுடைய திட்டத்தை உணர்ந்தவன் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

"இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் அறியத்
தமிழ்முழு தறிந்த தன்மையன் ஆகி
வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின்
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து
இசையோன் வக்கிரித் திட்டதை உணர்ந்தாங்கு
அசையா மரபின் அதுபட வைத்து
மாற்றோர் செய்த வசைமொழி அறிந்து
நாத்தொலை வில்லா நன்னூற் புலவனும்
ஆடல் பாடல் இசையே தமிழே"

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

**முத்தமிழே இனிமையான ஆடல் பாடல் இசை யனைத்தும் என்னும் பொருளில் "ஆடல் பாடல் இசையே தமிழே"** என்று அடிகளார் குறிப்பிடுவது சிறப்பாகும்.

எல்லா மொழிகளுக்கும் பொதுவான எண்ணையும் எழுத்தையும், தமிழ்மொழியில் அவற்றாலாகிய இயல் ஐந்தையும் இசைத்தமிழுக்குரிய நால்வகைப் பண்களின் பெருமையினையும், அப்பண்களோடு கூடிய பதினொரு வகைக் கூத்துகளையும் திறம்படக் காட்டி ஆடியும், தனது இனிய குரலால் பாடியும் பூம்புகார்ப் பொற்கொடியான மாதவி அனைவரும் போற்றிப் புகழும்படி செய்தாள் என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

"எண்ணும் எழுத்தும் இயல்ஐந்தும் பண்நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின்மேல்
போக்கினாள் பூம்புகார்ப் பொற்றொடி மாதவிதன்
வாக்கினால் ஆடரங்கின் வந்து."

என்பது அரங்கேற்றுக்காதையின் நிறைவான வெண்பா வாகும். இவ்வெண்பா, தமிழ்மொழியின் இயல் இசை நாடகத்தின் சிறப்பைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
மாதர்க் கோலத்து வலவையின் உரைக்கும்
மூதிர்ப் பெண்டிர் ஓதையிற் பெயர"

என்று குலவையிட்டுப் பாடி, மன்னனுக்கு ஏற்படும் இடையூறுகள் ஒழிகவெனக் கூறுவது தமிழ் மரபாகக் காப்பியத்தில் கூறப்பட்டிருக்கிறது. இதில் இளங்கோவடி களின் உயர்ந்த சமுதாயச் சிந்தனை வெளிப்படுகிறது.

"தாங்கா விளையுளும் காவிரி நாடும்"

என்று சோழநாட்டின் சிறப்பைப்பற்றி இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

"உழவர் ஓதை, மதகுஓதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி"

என்று காவிரியின் சிறப்பையும் சோழநாட்டின் வளத்தையுப் கூறும்படியாக அடிகளார் குறிப்பிடுகிறார். மேலும்,

"வாழி யவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி,
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி யாழ்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி"

என்றும் காவிரியின் சிறப்பைப்பற்றிக் கூறுகிறார்.

புகார்க் காண்டத்தின் வேனிற்காதையின் தொடக்கமாக

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம்பு அறுத்த தண்புனல் நன்னாட்டு
மாட மதுரையும் பீடார் உறந்தையும்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனல் புகாரும்
அரைசுவீற் றிருந்த உரைசால் சிறப்பின்"

என்னும் கவிதை அடிகள் மூலம் இளங்கோவடிகளார் தமிழகத்தின் ஒற்றுமைக் கருத்தையும் ஒன்றிணைப்பு உணர்வையும் எடுத்துத் தமிழகம் என்னும் கருத்து வடிவத்தை உருவாக்கியுள்ளதைக் காண்கிறோம்.

இவை மிகச்சிறந்த பிரபலமான பாடல் அடிகளாகும். இளங்கோவடிகளார் காலத்தில் தமிழகத்தின் எல்லையாக வடக்கே நெடியோன் குன்றமும் - திருவேங்கடமலையும் தெற்கே தொடியோள் பௌவமும் - குமரிக்கடலும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் கொண்ட எல்லை களையுடைய தமிழ்த் தண்புனல் நன்னாடு இருந்தது. இங்கு தமிழகத்தின் பிரதேச ஒற்றுமையும் இணைப்பும் கூறப்படுகின்றன. அத்துடன் மாடங்கள் நிறைந்த மதுரை, பெருமை பொருந்திய உறையூர், ஆரவாரம் மிக்க வஞ்சி மாநகர், கடல் ஒலிமிக்க புகார் நகரம் ஆகியவை தமிழக அரசுகளின் தலைநகரங்களாக விளங்கின என்பதும் காப்பியச் செய்தியாகும். இதன்மூலம் தமிழகத்தின் மொழி, கலாச்சாரம், தொழில், வாணிபம் ஆகிய பண்பாட்டின் ஒற்றுமைக் கருத்தும் வெளிப்படுத்தப்படுகிறது.

புகார்க் காண்டத்தின் முடிவுரைக் கட்டுரையாக :

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
தொடிவிளங்கு தடக்கைச் சோழர்குலத் துதித்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா இன்பத் தவர்உறை நாட்டுக்
குடியும் கூழின் பெருக்கமும் அவர்தம்
தெய்வக் காவிரித் தீதுசீர் சிறப்பும்
பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும்
அரங்கும் ஆடலும் தூககும் வரியும்
பரந்துஇசை எய்திய பாரதி விருத்தியும்
திணைநிலை வரியும் இணைநிலை வரியும்
அணைவுறக் கிடந்த யாழின் தொகுதியும்
ஈரேழ் சகோடமும் இடநிலைப் பாலையும்
தாரத்து ஆக்கமும் தான்தெரி பண்ணும்

ஊரகத் தேரும் ஒளியுடைப் பாணியும்
என்றுஇவை யனைத்தும் பிறபொருள் வைப்போடு
ஒன்றித் தோன்றும் தனிக்கோள் நிலைமையும்
ஒருபரிசா நோக்கிக் கிடந்த
புகார்க் காண்டம் முற்றிற்று"

என்று விரிவுடைக் காப்பியம் குறிப்பிடுகிறது.

இந்தப் பாடல் அடிகள் மிகுந்த கருத்துச்செறிவு கொண்டவையாகும். தமிழ்நாடு ஒன்று. அதில் முடியுடை வேந்தர் மூவர். அவர்களுள் சோழமன்னனின் சிறப்பையும், சோழநாட்டின் சிறப்பையும் இப்பாடல் அடிகள் சிறப்பாக விவரித்துக் கூறுகின்றன.

இப்பாடல் அடிகளில் சோழர்குல மன்னர்களின் பெருமைகள், அவர்களின் அரசியல் அறம், வீரம், ஆற்றல் ஆகியவைகளும், அவர்களுடைய பெருமைமிக்க மூதூரான புகார் நகரின் மேம்பாடுகளும் பண்புகளும், அங்கு நடைபெறும் விழாக்களின் சிறப்புகளும், விண்ணவர் வரவும், குறையாத இன்பத்தில் மகிழ்ச்சியுடன் வாழும் அந்தச் சோழ நாட்டு மக்களின் மாண்பும், உணவுப்பொருள் வளமும் பெருக்கமும், அவர்களுடைய தெய்வத்திரு நதியான காவிரியின் தீதில்லாத சிறப்புகளும், பொய்யா வானம் புதுப்புனல் பொழிதலும் (மாதம் மும்மாரி), அந்த நாட்டின் ஆடல் பாடல்களின் பெருமைகளான அரங்கு, ஆடல், தூக்கு, வரிப்பாடல் ஆகியவற்றின் சிறப்பியல்புகளும், பாரதி விருத்தியாகிய பதினோர் ஆடல்களும் அவைகளின் இயல்புகளும், திணைநிலை வரி, இணைநிலை வரி ஆகியவற்றின் இயல்புகளும், யாழின் தொகுதியும், ஈரேழ் சகோடமும், இடைநிலைப் பாலையும், தாரத்து ஆக்கமும், தான் தெரி பண்ணும், புகார் நகரின் பேரழகும் ஒளியுடைப் பாணியும் ஆகியவை அனைத்தையும் சேர்த்து இன்னும் பல பொருள்களையும் கருத்துகளையும் இணைத்துக் கூறப்பட்டுள்ளதையும், அவைகளின் பொதுத் தன்மைகளை யும் தனித் தன்மைகளையும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளதையும் புகார்க்காண்டத்தில் காண்கிறோம். அத்தகைய புகார்க் காண்டம் முற்றுப்பெறுகிறது. கட்டுரை முடிகிறது.

இதே போல, மதுரைக்காண்டத்தின் முடிவில் பாண்டிய நாட்டின் சிறப்புகளையும், வஞ்சிக் காண்டத்தின் முடிவில் சேரநாட்டின் பெருமைகளைப்பற்றியுமான பாடல்களைக் காணலாம்.

மதுரையைப்பற்றிக் குறிப்பிடும்போது இளங்கோவடிகளார் **"தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை"** என்று குறிப்பிடுகிறார். பாண்டியநாட்டைத் தமிழ்நாடு என்றும் தென்தமிழ்நாடு என்றும் பெயரிட்டு அழைப்பதுண்டு. அது சிறப்பு நிறைந்த குறிப்பாகும்.

**"பஃறுளி ஆற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள**
**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**
**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"**

என்று இளங்கோவடிகளார் மதுரைக்காண்டத்தின் காடு காண் காதையில் குறிப்பிடுகிறார். இந்தப் பாடல் அடிகளில் தமிழகத்தின் தெற்கில் இன்னும் குமரிமுனைக்குத் தெற்கில் இருந்த தமிழகத்தின் பகுதிகளைக் கடல் கொண்டதுபற்றிய செய்தியைக் காண்கிறோம். அந்த இழப்பை ஈடு கட்டுவதற் காகப் பாண்டிய மன்னன் வடதிசைக் கங்கையையும் இமயத்தையும் கைக்கொண்டு தென்திசையை ஆண்டான் என்றும் அடிகளார் பாண்டிய மன்னனைச் சிறப்பித்துக் கூறுகிறார்.

மதுரைக்காண்டம் வேட்டுவ வரிப்பாடல்களில், தெய்வம் ஏறப்பெற்ற சாலினி சாமியாடிக்கொண்டே கண்ணகியைக் குறித்துப் புகழ்ந்து கூறுவதாகக் குறிப்பிடப் படும் காப்பிய அடிகள்

**"கணவனோடு இருந்த மணமலி கூந்தலை**
**இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி,**
**தென்தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து**
**ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய**
**திருமா மணி"**

என்பவையாகும். இவற்றில் கண்ணகியைத் தென்தமிழ்ப் பாவை என்று அடிகளார் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

மதுரைக்காண்டம் புறஞ்சேரி இறுத்த காதையில், "**பகலில் வெயில் கொடுமை, கொடுங்கோல் மன்னன் ஆட்சிபோல உள்ளது. எனவே, இரவில் பயணம் மேற்கொள்ளலாம்**" என்று கோவலன் கூறக் கவுந்தி அடிகளும், அதை ஏற்று மூவரும் பயணம் தொடங்கினர். வானில் சந்திரனும் நட்சத்திரங்களும் தோன்றின. இந்தக் காட்சியை மிகநுட்பமாகத் தென்னவனான பாண்டிய மன்னனின் குல முதல்வனான சந்திரன் தோன்றினான் என்று அடிகளார் குறிப்பிடுகிறார்.

> **"கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்**
> **படுங்கதிர் அமையம் பார்த்திருந் தோர்க்குப்**
> **பன்மீன் தானையொடு பால்கதிர் பரப்பித்**
> **தென்னவன் குலமுதல் செல்வன் தோன்றித்**
> **தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும்"**

என்று காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

இனிய தமிழைத் தென்றலுக்கு ஒப்பிட்டு, பொதிகை மலையில் தோன்றி, மதுரை நகரில் வளர்ந்து, புலவர் நாவில் பொருந்திய தமிழ்த் தென்றலோடு சேர்ந்து பால் நிலா போன்ற வெண்கதிர்கள் பூமிப்பாவைமீது சொரிந்தன என்னும் பொருளில்,

> **"மலயத்து ஓங்கி மதுரையின் வளர்ந்து**
> **புலவர் நாவில் பொருந்திய தென்றலொடு**
> **பானிலா வெண்ணிலா பாவைமேல் சொரிய"**

என்று காப்பிய அடிகள் மிக அழகாகக் குறிப்பிடுகின்றன.

தமிழ்ப்புலவர்கள் போற்றும் பொதிகைத் தென்றலைக் காட்டிலும் சிறந்ததான மதுரைத்தென்றல் பல வகை மணத்துடன் வந்தது. எனவே, மதுரை மாநகரம் அருகில் வந்துவிட்டது என்னும் பொருளில்

> **"கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றிப்**
> **புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்**
> **பொதியில் தென்றல் போலாது ஈங்கு**
> **மதுரைத் தென்றல் வந்தது காணீர்"**

என்று பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

இங்கு பொதிகைத் தென்றலும் மதுரைத் தென்றலும் ஒப்பிடப்படுகின்றன. அடிகளார் இந்தப் பாடல் அடிகளில் மிகவும் நுட்பமான பொருளைச் செருகியுள்ளார். பொதிகைத் தென்றலும் மதுரைத் தென்றலும் தமிழ்மணம் கலந்தவை. பொதிகைத் தென்றலில் இயற்கை மணம் அதிகம். மதுரைத் தென்றலில் இயற்கை மணத்துடன் செயற்கை மணமும் அதிகமாக உள்ளது. வைகை ஆறு, இறைவன் கோயில், பள்ளிகள், வாசனைத் திரவியங்கள் நிறைந்த அங்காடிகள், தமிழ்ச்சங்கம் முதலியன இணைந்த தென்றல் மதுரைத் தென்றலாகும். இங்கு தமிழின் பெருமை பன்முகத் தன்மை கொண்டதாக வெளிப்படுகிறது.

வைகைத் திருநதியின் சிறப்பை அடிகளார் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

> **"உலகுபுரந் தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்**
> **புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி**
> **வையை என்ற பொய்யாக் குலக்கொடி"**

என்று கூறுகிறார்.

நமது நதிகளை ஜீவ நதிகளாக, புண்ணிய நதிகளாக, தெய்விக நதிகளாக நமது புலவர்களும், முனிவர்களும், நமது இலக்கியங்களும் குறிப்பிட்டுப் போற்றுகின்றனர். பொன்னியை வற்றாத காவிரி என்றும், வான் பொய்க்கினும் தான் பொய்யாப் பொன்னி என்றும், வைகையை கரையெதிரே ஏடு ஏறிய வையையென்றும், சோமசுந்தரக் கடவுளே உருவாக்கிய தெய்விக வைகை என்றும், காவிரி தென்பெண்ணை பாலாறு, தமிழ்க் கண்டதோர் வையை பொருனை நதியென்றும் நமது தெய்வத் திருநதிகளைப் பாடி போற்றியிருக்கிறார்கள். ஆறுகளையும் நதிகளையும் வெறும் குடிநீர்ச்சாதனங்களாகவும், நீர்ப்பாசன சாதனங்களாகவும் மட்டும் நம் மக்கள் காணவில்லை. ஆறுகளைத் தெய்வங்களாக மதித்து நம் மக்கள் அவ்வாறுகளின் பெயர்களைத் தம் குழந்தைகளுக்கும் வைத்து மகிழ்ந்திருக் கிறார்கள். அத்துடன் வையையும் பொருனையையும் **"தமிழ் கண்டதோர் வையை பொருனை"** என்று பாரதி குறிப்பிடுவது சிறப்பாகும். இளங்கோவடிகள் பொதிகைத்

தென்றலைக்காட்டிலும் சிறந்த மதுரைத் தென்றல் என்று குறிப்பிட்டு, பாண்டிய நாட்டின் பொய்யாக் குலக்கொடி வையை என்றும், புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி வையை என்றும் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

புறஞ்சேரியில் கவுந்தி அடிகளுடன் கண்ணகியைத் தங்க வைத்துவிட்டுக் கோவலன் மதுரை நகருக்குள் சென்று மதுரை நகரின் சிறப்புகளைக் கண்டுவிட்டுத் திரும்பினான்.

இங்கு, மதுரை நகரின் அமைப்பு, அதன் கோட்டை, கோட்டை வாயில், நகரின் செழிப்பு, மக்களின் மகிழ்ச்சி நிரம்பிய வாழ்க்கை நிலை, மாடங்கள், முற்றங்கள், செல்வரும் அரசரும் விரும்பும் வீதிகள், **"செழுங்குடிச் செல்வரோடு வையம் காவலர் மகிழ்தரும் வீதி", "பண்ணும் கிளையும் பழித்த தீஞ்சொல் எண்ணெண் கலையோர் (அறுபத்துநான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்றோர்) வாழும் இருபெரு வீதிகள், அரசுவிழை திருவின் அங்காடி வீதி, பகைதெறல் அறியாஃ பயங்கெழு வீதி (நவரத்தின வீதி), இலங்குகொடி யெடுக்கும் நலம் கிளர் வீதி (பொன் கடை வீதி), நறுமடி செறிந்த அறுவை வீதி (துணிக்கடை வீதி), கூலம் குவித்த கூல வீதி, பால்வேறு தெரிந்த நால்வேறு வீதிகள், அந்திச் சதுக்கம், ஆவண வீதி** முதலியவைகளைப்பற்றி விவரித்து, மதுரை நகரின் தென்தமிழ்நாட்டின் அழகிய தலைநகரின் சிறப்புகளைப்பற்றி இளங்கோவடிகள் கூறுகிறார்.

மதுரை நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிய கோவலன் அதன் சிறப்புகளைப்பற்றிக் கவுந்தியடிகளிடம் கூறுகிறான்.

"நிலம்தரு திருவின் நிழல்வாய் நேமி
கடம்பூண்டு உருட்டும் கௌரியர் பெருஞ்சீர்க்
கோலின் செம்மையும் குடையின் தண்மையும்
வேலின் கொற்றமும் விளங்கிய கொள்கைப்
பதியெழு அறியாப் பண்புமேம் பட்ட
மதுரை மூதூர் மாநகர் கண்டாங்கு
அறந்தரு நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து

> **தீதுதீர் மதுரையும் தென்னவன் கொற்றமும்**
> **மாதவத் தாட்டிக்குக் கோவலன் கூறுழி"**

என்று காப்பியம் குறிப்பிடுகிறது.

**"நிலம் தரும் திரு"** என்பது மிக உயர்வான கருத்து; மிகுந்த, விரிவான, மிக விரிவான பொருள் நிறைந்த சொற்றொடராகும். இங்கு நிலம் என்பதில் மண், மலை, காடு, ஆறு, கடல், சுரங்கம் முதலியன அடங்கும். இவற்றுள் மண்ணில் விளையும் எண்ணற்ற விளைபொருள்கள், மலையில் கிடைக்கும் - இயற்கையில் கிடைக்கும் - பொருள்கள், காடுகளில் கிடைக்கும் மரம், காய்கனிகள் முதலியன, ஆறு கடல்களில் கிடைக்கும் மீன், உப்பு முதலியன, சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் உலோகக் கனிகள் முதலிய எண்ணற்ற பொருள்கள் அடங்கும். இவையெல்லாம் மனித முயற்சியால், மனித உழைப்பால் பயன்படு பொருள்களாக ஆக்கப்படுகின்றன. இவைகளைத் தற்காலப் பொருளியல் இலக்கியத்தில் முதல்நிலை உற்பத்திப் பொருள் எனக் குறிப்பிடுகிறார்கள். இவைகளுள் பலவும் மறு உற்பத்திமூலம் நேரிடையான பயன்படுபொருளாக ஆக்கப்படுகின்றன. நெல்லும் இதர உணவுத்தானியங்களும் முதல்நிலையில் சாகுபடி மூலம் உற்பத்தி செய்யப்பட்டு அவை அரிசியாகவும் மாவாகவும் மறுஉற்பத்தியில் அல்லது இரண்டாம் நிலை உற்பத்தியில் நேரடிப் பயன்பாட்டுப் பொருளாக ஆக்கப்படுகின்றன. மலைகளிலும் காடுகளிலும் இயற்கையில் கிடைக்கும் கற்களும் மரங்களும் பல வேறு கட்டடப் பொருள்களாகவும் கலைப்பொருள்களாகவும் மறு உற்பத்தியில் மலர்ச்சி பெறுகின்றன.

இவ்வாறு பெருகும் செல்வம் அனைத்தும் - பொருள்கள் அனைத்தும் - மனிதனுக்கும், பூமியில் உள்ள இதர உயிரினங்கள் அனைத்திற்கும் தேவையான பொருள்களும் செல்வமும் நிலம் தரும் திருவும் அதன் மூலம் பெருகும் செல்வமுமாகும்.

இவ்வாறான, மனிதனுக்கும் மனித சமுதாயத்திற்கும் இதர உயிரினமனைத்திற்கும் அவசியமான பொருள்களை

இயற்கை மற்றும் சமுதாயச் செல்வத்தை அவைகளின் உற்பத்தியை, உற்பத்தி முறையை நிழல்போல் நின்று, குடை பிடித்துப் பாதுகாப்பதும் அதை நடத்திச் செல்வதும் அரசின் கடமையாகும். அக்கடமையைச் சீராக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் பாண்டிய மன்னர்களின் கோலின் செம்மை, குடையின் தண்மை, வேலின் கொற்றம் ஆகியவை சிறப்புமிக்கனவாகும் என்று, கோவலன் கவுந்தி அடிகளிடம் கூறுகிறான்.

மதுரை நகரில் வாழும் மக்கள் தங்களுக்கு வேண்டிய அத்தனை வசதிகளும் செல்வமும் தொழிலும், செழுமையும் இருப்பதால் அவர்கள் வாழ வழி தேடி வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்லவேண்டிய அவசியமில்லை என்று காப்பியம் குறிப்பிடுகிறது. (இதே கருத்து புகார் நகரைப் பற்றியும் "**பதியெழு வறியாப் பழங்குடி மக்கள்**" என்று கூறப்பட்டிருக்கிறது. இங்குக் கதையின் கருவாக இலைமறைவு காயாக ஓர் எதிர்மறை உண்மை பொதிந்திருப்பதை அறியலாம். செழுமைமிக்க புகார் நகரில் வாழ முடியாமல் கோவலன் அந்நகரைவிட்டு வெளியேறிவிட்டான். அதற்குக் காரணம் புகாரின் வறுமையன்று. இது ஓர் இலக்கியப் புதிர். அதே போலச் செல்வச் செழிப்புமிக்க மதுரைக்கு வந்த கோவலன் கொல்லப்படுகிறான். அவன் கொல்லப்படு வதற்குக் காரணம் மதுரையின் ஆட்சியன்று. வஞ்சிப்பத்தனின் வஞ்சகம் காரணமாகக் கோவலன் கொல்லப்படுகிறான். மதுரை நிகழ்ச்சியும் ஓர் இலக்கிய முடிச்சாகும். மேலும் இங்கு காரணமும் விளைவும் தொடர்பான தத்துவ ஞானக் கருத்துக்கு ஓர் உதாரணமாகவும் இந்நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன).

அத்தகைய செல்வச் செழிப்புமிக்க மதுரை நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கோவலன், அறவழியில் தங்கள் கருத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும் அறவோரும் துறவோரும் நிறைந்த புறஞ்சேரிக்கு வந்து, தீதுதீர் மதுரை மற்றும் தென்னவன் கொற்றம்பற்றிக் கோவலன் தவத்தில் மிக்க கவுந்தியடிகளிடம் கூறுகிறான்.

இங்கு தமிழகத்தின் தனிச்சிறப்புகளை அதன் நிலம் தரு திரு, செல்வச் செழிப்பு, பொருட்குவியல், நல்லாட்சி, அறவோர் நிறைந்த சமுதாயம், தீதில்லாத மக்கள் ஆகியவைகளை இளங்கோவடிகளார் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

இமயத்தின் நெற்றியில் பாண்டிய மன்னன் தனது மீன் சின்னத்தை வெற்றியின் சின்னமாகப் பொறித்தான். அதன் பின்னர் சோழனும் சேரனும் முறையே தங்கள் புலி, வில் சின்னங்களை இமயத்தில் பொறித்தனர். அவர்களும் நாவலந்தீவிலுள்ள இதர அரசர்களும் தன் ஏவலின்படி நடக்க உலகம் முழுவதையும் ஆட்சி நடத்திய பாண்டிய மன்னன் என்று இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவையில் குறிப்பிடுகிறார்.

**"கயலெழுதிய இமய நெற்றியின்**
**அயலெழுதிய புலியும் வில்லும்**
**நாவலந் தண்பொழில் மன்னர்**
**ஏவல் கேட்பப் பார்அர சாண்ட**
**மாலை வெண்குடைப் பாண்டியன்"**

என்று காப்பிய அடிகள் கூறுகின்றன. இதில் தமிழகத்தின் சிறப்பையும் தமிழ் மன்னர்களின் சிறப்பையும் அடிகளார் பெருமைபடக் கூறுவதைக் காணலாம்.

மதுரைக்காண்டம் ஆய்ச்சியர் குரவைப் பகுதியில்

**"கோவா மலையாரம் கோத்த கடலாரம்**
**தேவர்கோன் பூணாரம் தென்னவர்கோன் மார்பினவே"**

என்றும்,

**"முந்நீரி னுள்புக்கு மூவாக் கடம்பெறிந்தான்**
**மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்"**

என்றும்,

**"பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்**
**மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்"**

என்றும், மூவேந்தர்களைச் சிறப்பித்து உள்வரி வாழ்த்துப் பாடல் பாடப்படுகிறது. இதை மிக அழகாக இளங்கோவடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

மதுரைக்காண்டம் கட்டுரைக் காதையில், கடுங்கோபத்துடன் மதுரையை எரித்துக் கண்ணீரும் கம்பலையுமாய் வந்த கண்ணகியிடம், மதுராபதி தெய்வம், ஆறுதல் கூறி "**பாண்டியர் கொற்றம் இயல்பாகக் கொடுங்கோன்மை கொண்டதன்று, ஊழ்வினையால் இப்பிழை ஏற்பட்டுவிட்டது, எமது வேந்தர் தமது காதில், மறைநாவோசையல்லது யாவதும் மணிநாவோசை கேட்டதுமில்லை**" என்று கூறுவதைக் காப்பியக் கதை மதுரையின் பெருமையைக் குறிப்பிடுகிறது.

பொற்கைப் பாண்டியனது வரலாற்றுப் பெருமையை எடுத்துக்கூறிப் பாண்டியகுலப் பெருமையை விளக்கிக் கூறுகிறது. அத்துடன் பாண்டிய மன்னர்களின் ஆட்சிப் பெருமைகளை விளக்க மற்றொரு செய்தியும் காப்பியத்தில் கூறப்பட்டிருக்கிறது.

"திருநிலை பெற்ற பெருநாள் இருக்கை
அறனறி செங்கோல் மறநெறி நெடுவாள்
புறவுநிறை புக்கோன் கறவைமுறை செய்தோன்
பூம்புனல் பழனப் புகார்நகர் வேந்தன்
தாங்கா விளையுள் நன்னா டதனுள்"

அறநெறியிலே செல்லும் செங்கோலையும், வீர நெறியிலே செல்லும் வாளையும், புறாவிற்காகத் தன் சதையைக் கொடுத்தோனும், பசுவிற்காகத் தன் மகனையே தேர்ச்சக்கரத்தில் இட்டு மாய்த்தோனும் ஆண்ட, நீர்வளம் மிக்க வயல்கள் நிறைந்த, பூமியே தாங்க முடியாத அளவில் விளைச்சல் குவிந்துள்ள சோழ நன்னாட்டைச் சேர்ந்த, அறிவில் சிறந்த ஓர் அந்தணன் இருந்தான்.

"வலவைப் பார்ப்பான் பராசரன் என்போன்,
குலவுவேல் சேரன் கொடைத்திறம் கேட்டு
வண்டமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேல் சேரலற் காண்கெனக்
காடும் நாடும் ஊரும் போகி"

சோழவள நாட்டில் பிறந்த அறிவில் சிறந்த அந்தணன் பராசரன் என்பவன் பாரதப்போரில் இரு தரப்புப் படைகளுக்கும் பெருஞ்சோறு அளித்துக் கொடைச்சிறப்புக்

கொண்ட, வேலேந்திய வீரம் படைத்த சேர மன்னனுடைய சிறப்பைக் கேள்வியுற்றான். "**வளமான தமிழ் அறிந்த மறையோருக்கு நிறைவான வாழ்வு கொடுத்துக் கொடைச்சிறப்புக் கொண்ட உதியன் சேரலாதனைக் காண விரும்பிக் காடு, நாடு, ஊர்கள் கடந்து சேரனது அரண்மனையை அடைந்தான்**'' என்று பாண்டிய நாட்டின் சிறப்புகளைக் கூறுகையில் சோழநாட்டின் பெருமைகளையும் சேரநாட்டின் புகழையும் சேர்த்து விவரித்து இளங்கோவடிகளார் கூறுகிறார்.

சேரனுடைய தலைநகரில் இருந்த வேத விற்பன்னர் களிடம் வாதிட்டுப் பராசரன் தனது திறமையைக் காட்டி வெற்றி கண்டு சிறந்த பல பரிசுகளைப் பெற்றுக்கொண்டு செங்கோல் தென்னவன் ஆட்சியின்கீழ் இருந்த மறையவர் வாழும் திருத்தண்கால் என்னும் ஊருக்கு வந்தான். அங்கு ஒரு மரத்தடியில் தனது பரிசு மூட்டையை வைத்து இளைப்பாறினான்.

அப்போது அங்கு சில பிராமணக் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தனர். பராசரன் அவர்களிடம், "என்னோடு இணையாக உங்களுள் யாராவது வேதம் ஓதினால், அவர்களுக்கு இப்பரிசிலைக் கொடுப்பேன்" எனக் கூறினான். அக்குழந்தைகளுள் தக்கிணாமூர்த்தி என்னும் சிறுவன் முன்வந்து பராசரனுக்கு ஈடாக வேதம் ஓதினான். பராசரன் மிக்க மகிழ்ச்சியடைந்து தனது பரிசில் பொருள்களை அச்சிறுவனுக்குக் கொடுத்தான். அச்சிறுவன் அப்பொருள்களைப் பெற்றுக்கொண்டு தன் பெற்றோரிடம் கொடுத்து, அதிலிருந்த அணிகலன்களை அணிந்துகொண்டு வந்து தெருவில் உலவினான். அதைக் கண்ட அரசின் பணியாளர்கள், அந்த அணிகலன்கள் புதையல் பொருள்களாக இருக்கக்கூடும் என்று சந்தேகம் கொண்டு, அச்சிறுவனுடைய தந்தை வார்த்திகனைப் பிடித்து, சிறையிலடைத்தனர். அப்போது அவ்வார்த்திகன் மனைவி கார்த்திகையென்பாள் அழுது புலம்பினாள். அதை உணர்ந்து மதுரையின் கொற்றவை கோவில் கதவு மூடிக்கொண்டது. அதைக் கேள்விப்பட்ட பாண்டிய வேந்தன் தன் ஒற்றர் மூலம்

உண்மையறிந்து, வார்த்திகனை விடுவித்து, அவனிடமும், அவனுடைய மனைவியிடமும் மன்னிப்புக் கேட்டு,

"இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்
உற்றவர்க் குறுதி பெற்றவர்க் காமென"

உத்தரவிட்டு ஆணை பிறப்பித்தான். இவ்வகைப்பட்ட குற்றங்களால் சிறைப்பட்டிருந்தோர் அனைவரையும் விடுதலை செய்து புதிய அரசியல் நெறியையும் விதிமுறையையும் நீதியையும் நிலை நாட்டியவன் பாண்டிய நெடுஞ்செழியனாவான் என்பதை இளங்கோவடிகள் சிறப்பாக எடுத்துக்காட்டி விளக்குகிறார்.

இவ்வாறு தென்தமிழ்நாட்டுப் பாண்டிய மன்னனின் ஆட்சி முறைச் சிறப்புகளை எடுத்துக்கூறிப் பண்டைய பாவத்தால் - பழவினையால் - கோவலன் கொலை நிகழ்ந்து விட்டதாகக் கூறிக் கண்ணகியை மதுராபதி சமாதானப் படுத்தினாள் என்பதைச் சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகிறது.

மதுரைக் காண்டத்தின் முடிவுக் கட்டுரையாகத் தென்தமிழ்நாட்டின் சிறப்பைக் குறித்து விரிவுபடக் காப்பிய அடிகள் குறிப்பிடுகின்றன.

"முடிகெழு வேந்தர் மூவ ருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா இன்பத்து அவருடை நாட்டுக்
குடியும் கூழின் பெருக்கமும் அவர்தம்
வையைப் பேரியாறு வளம்சுரந் தூட்டலும்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிதலும்
ஆரபடி சாத்துவதி யென்றிரு விருத்தியும்
நேரத் தோன்றும் வரியும் குரவையும்
என்றுஇவை யனைத்தும் பிறபொருள் வைப்போடு
ஒன்றித் தோன்றும் தனிக்கோள் நிலைமையும்
வடவா ரியர்படை கடந்து
தென்தமிழ் நாடு ஒருங்கு காணப்

புரைதீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசுக் கட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியனோ டொருபரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்டம் முற்றிற்று”

என்று இளங்கோவடிகளார் முடிக்கிறார்.

பாண்டியர், சேரர், சோழர் என்னும் முடியுடை மூவேந்தர்களுள் படைபலம் அதிகம் கொண்ட பாண்டியர் குலத்தில் பிறந்த அரசர்கள் அறமும் வீரமும் ஆற்றலும் மிக்கவர்கள். அவர்களுடைய பழமைச் சிறப்புமிக்க மதுரை மூதூர் அறப்பண்பு மேலிட்டது. திருவிழாக்கள் அதிகமாக நடைபெறும் கோவில் நகரமாக மதுரை மாநகரம் விளங்குகிறது. அந்நாட்டில் வாழும் மக்கள் குடிச்சிறப்பு மிக்கவர்கள். அந்த நாடு உணவுப்பொருள்களை மிகுதியாகக் கொண்டது. அந்நாட்டில் வையை ஆறு வளம் சுரக்கிறது. பாண்டியரின் செங்கோன்மை காரணமாக மாதம் மும்மாரி மழை பொழிகிறது. நீர்வளம் நிரம்பியிருக்கிறது. மக்கள் மிகவும் மகிழ்ச்சியாகக் கலை உணர்வு நிரம்பி ஆடல் பாடல்களில் களிப்புடன் ஈடுபாடு கொண்டவர்களாக உள்ளார்கள். இத்தகைய சிறப்புகள் மிக்க பாண்டிய மன்னன் - வடநாட்டு ஆரிய மன்னர்களை வென்று வாகை சூடிய அந்தப் பாண்டிய மன்னன் - நீதிக்காகத் தான் கோப்பெருந் தேவியுடன் உயிர் நீத்த பெருமையை மூன்று தமிழ் நாடுகளில் வாழ்வோரும் காண, மதுரைக் காண்டம் முற்றுப்பெறுகிறது என்று சிலப்பதிகாரக் காப்பியம் தென்தமிழ்நாட்டின் சிறப்பைக் குறிப்பிடுகிறது.

வஞ்சிக் காண்டத்தின் காட்சிக் காதை தொடங்குகிறது. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காணத் தனது பரிவாரம் மற்றும் படைகளுடன் செல்கிறான். அவ்வரசனை மலைவாழ் மக்கள் சிறப்பாக வரவேற்கின்றனர். மலையில் விளைந்த சிறந்த பொருள்களைக் காணிக்கையாகச் சேரனிடம் கொண்டுவந்து குவித்தனர்.

அந்த மலைவாழ் மக்கள் மன்னனிடம், காட்டில் உள்ள வேங்கை மரத்தின்கீழ் ஒரு காரிகை, ஒரு முலை இழந்து,

தனித்துயர் எய்தி, வானவர் போற்றத் தன் கணவனோடு கூடி வானகம் சென்றாள். அவள் எந்நாட்டவளோ, யார் மகளோ என்று கூறினர். அப்போது,

"மண்களி நெடுவேல் மன்னவன் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தன்இஃ துரைக்கும்"

தண்டமிழாசானாகிய சாத்தனார் மன்னனிடம் கண்ணகியின் கதையை விரிவாக எடுத்துரைத்தார். பெரும்புலவர் சாத்தனாரை இங்கு **தண்டமிழ் ஆசான் சாத்தன்** எனக் குறிப்பிட்டிருப்பது சிறப்பாகும்.

வஞ்சிக் காண்டத்தின் காட்சிக் காதையில் வஞ்சியின் பெருமை, சேர மன்னன் செங்குட்டுவனின் பெருமை, வீரம், புகழ் ஆகிய சிறப்புகள்பற்றி இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

"சூடைநிலை வஞ்சியும் கொற்ற வஞ்சியும்
நெடுமா ராயம் நிலைஇய வஞ்சியும்
வென்றோர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்
பின்றாச் சிறப்பின் பெருஞ்சோற்று வஞ்சியும்
குன்றாச் சிறப்பிற் கொற்ற வள்ளையும்
வட்கர் போகிய வான்பனந் தோட்டுடன்
புட்கைச் சேனை, பொலியச் சூட்டிப்
பூவா வஞ்சிப் பொன்னகர்ப் புறத்துஎன்
வாய்வாழ் மலைந்த வஞ்சிசூ டுதும்எனப்
பல்யாண்டு வாழ்கநின் கொற்றம்"

என்பது காப்பிய அடிகளாகும்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலையெடுக்க இமயம் போகும்போது யாராவது வடநாட்டு மன்னர் அவரை எதிர்த்தார்களானால், அவர்களை வென்று, வஞ்சி மாலை சூடிச் செல்வோம் என்னும் பொருள்பட இந்த அடிகள் சேரன் பெருமையைக் கூறுகின்றன.

சேரன் செங்குட்டுவனுடைய புகழ்மிக்க அமைச்சர், வில்லவன்கோதை. அந்த அமைச்சர் சேரன் செங்குட்டுவனுடைய வீரத்தைப் புகழ்ந்து பேசினார். அவர் தமது தமிழ்ப்படைகளுடன் வடபுல மன்னர்களை எதிர்த்துப்

போரிட்டு வெற்றி கொண்டது, கடல்களை எல்லைகளாகக் கொண்டுள்ள இந்த நிலம் முழுவதையும் தமிழ்நாடாக்க விரும்பி இமயத்தில் கல் எடுக்க விரும்புவது, அதுபற்றி வடதிசை மன்னர்களுக்கெல்லாம் தமிழ்நாட்டு வளம் மிக்க வில், மீன், புலி என்னும் இலச்சினைகளைக் கொண்ட செய்திகளை அனுப்பச் சொல்வது ஆகியவை குறித்துக் கூறுவதாக இப்பாடல் அடிகள் அமைந்துள்ளன.

இதில் தமிழ்ப்படையின் வீரம், சேரன் செங்குட்டு வனுடைய போர்த்திறன், தமிழ்நாட்டை விரிவுபடுத்த அவன் எடுக்கும் முயற்சி, தென்தமிழ்நாட்டு அரசுகளின் சின்னங்களான வில் மீன் புலி ஆகியவைபற்றிய சிறப்பான செய்திகள் வருவதைக் காண்கிறோம்.

“வில்லவன் கோதை வேந்தற்கு உரைக்கும்
நும்போல் வேந்தர் நும்மோ டிகலிக்
கொங்கர்செங் களத்துக் கொடிவரிக் கயல்கொடி
பகைப்புறத்துத் தந்தன ராயினும் ஆங்கவை
திகைமுக வேழத்தின் செவியகம் புக்கன.
கொங்கணர், கலிங்கர், கொடுங்கரு நாடர்
பங்களர், கங்கர், பல்வேல் கட்டியர்
வடவா ரியரொடு வண்டமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டமென் கண்புலம் பிரியாது
கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்
இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்
முதுநீ ருலகில் முழுவதும் இல்லை
இமய மால்வரைக்கு எங்கோன் செல்வது
கடவு ளெழுதவோர் கற்கே யாதலின்
வடதிசை மருங்கின் மன்னர்க் கெல்லாம்
தென்தமிழ் நன்னாட்டுச் செழுவில் கயல்புலி
மண்தலை யேற்ற வரைக ஈங்கென
நாவலந் தண்பொழில் நண்ணார் ஒற்றுநம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா
வம்பணி யானை வேந்தர் ஒற்றே”

என்று காப்பியம் குறிப்பிடுகிறது. இளங்கோவடிகளாரின் இந்தச் சிறப்புமிக்க காப்பிய அடிகள் தமிழ்ப்பெருமையை சிறப்புறக் கூறுவதாகும்.

சேரன் செங்குட்டுவன் பெரும்படை திரட்டி வடக்கு நோக்கிச் செல்கிறான். இப்பெரும்படை கல் எடுத்து வருவதற்காக மட்டுமல்ல, வடநாட்டு அரசன் பாலகுமரன் மக்கள் கனகனும் விஜயனும் தமிழ் அரசர்களின் ஆற்றல்களை இகழ்ந்துரைத்தனர். அவர்களுக்குத் தமது ஆற்றலைக் காட்டிப் பாடம் புகட்டுவதற்காகவும் இப் பெரும்படை செல்கிறது என்று காப்பியம் குறிப்பிடுகிறது.

"அடல்வேல் மன்னர் ஆருயிர் உண்ணும்
கடலந் தானைக் காவலன் உரைக்கும்
பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவின் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனக்
கூற்றம் கொண்டுஇச் சேனை செல்வது"

என்பது காப்பியக் கவிதை அடிகளாகும்.

சேரன் செங்குட்டுவன் தனது பெரும்படையுடன் சென்று, தமிழ் மன்னர்களை இகழ்ந்த கனகவிஜயர்களையும் அவர்களோடு சேர்ந்த நூற்றுவர்களையும் சிறைப் படுத்தினான். மற்றவர்கள் பலரும் மாறுவேடம் பூண்டு தப்பி ஓடிவிட்டனர்.

"வாய்வாள் ஆண்மையின் வண்தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கைக் கனகனும் விசயனும்
ஐம்பத் திருவர் கடுந்தே ராளரொடு
செங்குட் டுவன்தன் சினவலைப் படுதலும்"

என்று காப்பியக் கதை குறிப்பிடுகிறது.

அரசர்கள் செங்கோல் ஏந்தி நல்லாட்சி செய்தால் அல்லாது பெண்டிரின் கற்பு சிறவாது என்பது தண்டமிழ் நல்லுரை என்பதை எடுத்துக்காட்டும் வகையில் கண்ணகி மூவேந்தர்களுக்கும் புகழ் தந்தவள் என்பதைச் சிலப்பதிகாரம் எடுத்துக்காட்டுகிறது.

"அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச்சிற வாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை
பார்தொழு தேத்தும் பத்தினி யாகலின்
ஆர்புனை சென்னி அரசர்க் களித்துச்
செங்கோல் வளைய உயிர்வா ழாமை
தென்புலம் காவல் மன்னவற் களித்து
வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
வடதிசை மருங்கின் மன்னவர் அறியக்
குடதிசை வாழும் கொற்றவர்க் களித்து"

என்பது காப்பியத்தின் பாடலாகும்.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்பது வள்ளுவர் வாசகமாகும். இதையொட்டியே இளங்கோவடிகள் தமது காப்பியத்தில்

"அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச்சிற வாதென'
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை"

என்று கூறுகிறார் எனக் கொள்ளலாம்.

இங்கு அரசியலின் அடிப்படையும் தமிழின் சிறப்பும் குறிக்கப்படுகின்றன.

வஞ்சிக்காண்டத்தின் முடிவுரையில் இளங்கோவடிகள் சேரமன்னனின் பெருமைகளைத் தமிழ்ப் பெருமையாகக் கூறுகிறார்.

"முடியுடை வேந்தர் மூவ ருள்ளும்
குடதிசை யாளும் கொற்றம் குன்றா
ஆர மார்பின் சேரர்குலத் துதித்தோர்
அறனும் மறனும் ஆற்றலும் அவர்தம்
பழவிறல் மூதூர்ப் பண்புமேம் படுதலும்
விழவுமலி சிறப்பும் விண்ணவர் வரவும்
ஒடியா இன்பத் தவருறை நாட்டுக்
குடியின் செல்வமும் கூழின் பெருக்கமும்
வரியும் குரவையும் விரவிய கொள்கையின்
புறத்துறை மருங்கின் அறத்தொடு பொருந்திய

மறத்துறை முடித்த வாய்வாள் தானையொடு
பொங்கிரும் பரப்பில் கடல்பிறக் கோட்டிக்
கங்கைப் பேர்யாற் றுக்கரை போகி
செங்குட் டுவனோடு ஒருபரிசு நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்டம்முற் றிற்று."

இவ்வாறு சிலப்பதிகாரக் காப்பியத்தின் வஞ்சிக்காண்டம் நிறைவு பெறுகிறது.

இவ்வடிகளில் மூவேந்தருள் சேர மரபினரின் சிறப்பு, அவ்வேந்தர்களின் அறம், வீரம், ஆற்றல் முதலிய பண்புகள் அவருடைய தலைநகரின் மாண்பு, அதன் உயர்வு, அந்நகரின் சிறப்புமிக்க திருவிழாக்கள், விண்ணவர் வருகை, அந்த நாட்டுக் குடிமக்களுடைய செல்வப்பெருக்கம், உணவுப் பெருக்கம் ஆகியவற்றுடன், வரிப்பாடல், குரவைக்கூத்து, புறத்திணைக்குரிய துறைகளில் அறத்துடன் பொருந்திய போர்த்துறைகளைச் செய்து முடித்தல், வெற்றி பெறுவதில் தவறாத வாளினையுடைய பெரும்படை, கடலின் பகுதிகளையும் வெற்றி கொண்டது, கங்கையைக் கடந்து இமயம்வரை சென்று போர் செய்து வெற்றியுடன் திரும்பியது முதலிய சிறப்புகளைக்கொண்ட செங்குட்டுவனுடைய பெருமைகளைப்பற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரக் காப்பிய நூலின் முடிவில் நூலின் கட்டுரையாகத் தமிழின் பெருமையை எடுத்துக்காட்டும் பாடல் அடிகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

"குமரி வேங்கடம் குணகுட கடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பிற்
செந்தமிழ் கொடுந்தமிழ் என்றிரு பகுதியின்
ஐந்திணை மருங்கின் அறம்பொருள் இன்பம்
மக்கள் தேவர் எனவிரு சார்க்கும்
ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர
எழுத்தொடு புணர்ந்தசொல் அகத்தெழு பொருளை
இழுக்கா யாப்பின் அகனும் புறனும்,
அவற்று வழிப்படூஉஞ் செவ்விசிறந் தோங்கிய
பாடலும் எழாலும் பண்ணும் பாணியும்
அரங்கு விலக்கே ஆடலென் றனைத்தும்
ஒருங்குடன் தழீஇய உடம்படக் கிடந்த

வரியும் குரவையும் சேதமும் என்றிவை
தெரியுறு வகையால் செந்தமி ழியற்கையில்
ஆடிநன் னிழலின் நீடிருங் குன்றம்
காட்டு வார்போல் கருத்துவெளிப் படுத்தும்
மணிமே கலைமேல் உரைப்பொருள் முற்றிய
சிலப்பதி காரம் முற்றும்”

என்பது நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் முடிவுரை அடிகளாகும்.

இவ்வடிகளில் தமிழின் கூறுகளும் சிறப்புகளும் கூறப்பட்டிருக்கின்றன. தமிழகத்தின் எல்லைகளாகத் தெற்கில் குமரித்துறை, வடக்கில் வேங்கடமலை, கிழக்கிலும் மேற்கிலும் கடல்கள் என்று கூறப்பட்டுள்ளன. இவற்றிற் கிடையிலுள்ள மண் திண்ணியமான நிலப்பகுதி. இது குளிர்ந்த இனிமையான தமிழ்மொழி வழங்குகின்ற நாடு. இந்த நிலத்தின் இருபகுதிகளாகச் செந்தமிழ், கொடுந்தமிழ் நாடுகள் என வழங்கப்படுகின்றன. இந்த நாடு ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய பண்புகளைக் கொண்டிருந்தது. இங்கு வாழும் மக்கள் அறம் பொருள் இன்பம் என்னும் பயன்பாடுகளை உறுதிப் பொருள்களாகக்கொண்டு, மக்கள், தேவர் ஒழுக்கங்களுடன் வாழ்கிறார்கள்.

பயன்பாடுகளுள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் பாரதநாடு முழுமைக்கும் பொதுவானவையாகும்.

பாரதி தனது விநாயகர் நான்மணி மாலைப்பாடலில், “கடமை யாவன தன்னைக் கட்டுதல், பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், ........................ உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல், இந்நான்கே இப்பூமியில் எவர்க்கும் கடமையெனப்படும், பயனிதில் நான்காம், அறம்பொருள், இன்பம் வீடெனு முறையே தன்னையாளும் சமர்த்தெனக் கருள்வாய்” என்று கூறுகிறார். இதுவே பாரதப் பண்பாட்டுத் தளத்தின் மையமாகும்.

இதில் தமிழகம் தனது தன்மையுடன் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றையும் தொகுத்து விரித்துத் தனதாக்கிக் கொண்டு தனது ஒழுக்கங்களை வகுத்துக்கொண்டிருக்கிறது.

தமிழ்மொழியானது எழுத்து, அதனால் கூடிய சொல், அதிலிருந்து எழுந்த பொருள், யாப்பு, அணி என ஐந்திலக்கணமும், அகம் புறம் என இரு இலக்கியப் பிரிவுகளும் கொண்டது. அகம் புறம் என்னும் பொருள் பிரிவில் இசைவழியில் பாடல், அதற்குரிய யாழ் குழல் முதலிய இசைக்கருவிகளுடன் பண், தாளம், கூத்தரங்கம், விலக்குறுப்பு, ஆடல் ஆகியவை இணைகின்றன. வரிக்கூத்தும் குரவைக்கூத்தும் இவைகளுடன் சேருகின்றன. இவை பற்றியெல்லாம் செந்தமிழின் இயல்போடு, அதற்குரிய தனித்தன்மையோடு நிழலில் தெரியும் குன்றத்தைப்போல ஆசிரியர் எடுத்துக் காட்டிச் சிறந்த கருத்துகளை வெளிப்படுத்தும் சிலப்பதிகாரக் கதை நிறைவுபெறுகிறது என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வாறு இளங்கோவடிகளார் தமது இனிய காப்பியத்தில் தமிழ், தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழரசர்கள், தமிழ்நாட்டின் ஆறுகள், மலைகள், தமிழ்நாட்டின் திணை, பண்பாடு, வரலாறு, பழக்கவழக்கங்கள், தொழில் வாணிபம், வழிபாடு முதலியவைகளின் தனிச்சிறப்புகளைப் பற்றியெல்லாம் மிகவிரிவாக எடுத்துக்கூறுவதைக் காண்கிறோம். அவற்றைப் படித்துப் படித்து இன்புறுகிறோம், அறிவு பெறுகிறோம். இளங்கோவடிகள் வாழ்க, அவர் புகழ் ஓங்குக, அவர் வளர்த்த தமிழ் வாழ்க, வளர்க.

**திவ்யப்பிரபந்தத்தில்**

பன்னிரு ஆழ்வார்கள் பாடிய திவ்யப்பிரபந்தப் பாடல்களில் தமிழ் துள்ளி விளையாடுவதைக் காணலாம். ஆழ்வார்கள் தங்கள் பாடல் தொகுப்புகளைத் தமிழ் மாலையென்றே குறிப்பிடுகிறார்கள்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணா!உன்
செவ்வடி செவ்வித் திருக்காப்பு"

என்று தொடங்கும் பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டுப் பாடல்கள் இன்பத் தமிழ்ச்சுவைமிக்க இனிய தமிழ்ப்பாடல்களாகும். தமிழால் மணிவண்ணனுக்கு ஆழ்வார் பல்லாண்டு பாடுகிறார்.

கண்ணனின் அம்புலிப் பருவத்தை வியந்து பாடும் வில்லிபுத்தூர் விட்டுசித்தர்,

**"மைத்தடங் கண்ணி யசோதை**
**தன்மக னுக்கு,இவை**
**ஒத்தன சொல்லி யுரைத்த**
**மாற்றம், ஒளிபுத்தூர்**
**வித்தகன் விட்டு சித்தன்**
**விரித்த தமிழிவை**
**எத்தனை யும்சொல்ல வல்ல**
**வர்க்கிடர் இல்லையே"**

என்று பெரியாழ்வார் பாடுகிறார்.

கண்ணனின் செங்கீரைப் பருவத்தைப்பற்றிப் பாடும் ஆழ்வார் :

**"அன்னமும் மீனுருவும் ஆளரி யுங்குறளும்**
**ஆமையும் ஆனவனே ! ஆயர்கள் நாயகனே**
**என்அவ லம்களைவாய் ! ஆடுக செங்கீரை**
**ஏழுல கும்உடையாய் ஆடுக ஆடுகஎன்று**
**அன்ன நடைமடவாள் அசோதை உகந்தபரிசு**
**ஆன புகழ்ப்புதுவைப் பட்டன் உரைத்ததமிழ்**
**இன்னிசை மாலைகள்இப் பத்தும்வல் லார்உலகில்**
**எண்டிசை யும்புகழ்மிக்கு இன்பம தெய்துவரே !"**

என்று அந்தப் பத்துப் பாடல்களைப்பற்றிப் "**புதுவைப் பட்டன் உரைத்த தமிழ் இன்னிசை மாலைகள் இப்பத்தும்**" என்று குறிப்பிட்டிருப்பதைக் காண்கிறோம்.

இரண்டாம் பத்தில் கண்ணனை நீராட அழைக்கும் பாடல்களில்,

**"கார்மலி மேனி நிறத்துக்**
**கண்ண பிரானை யுகந்து**
**வார்மலி கொங்கை யசோதை**
**மஞ்சன மாட்டிய வாற்றை**

பார்மலி தொல்புது வைக்கோன்
பட்டர் பிரான்சொன்ன பாடல்
சீர்மலி செந்தமிழ் வல்லார்
தீவினை யாது மிலரே !"

என்று பாடுகிறார். இதில் சீர்மலி **செந்தமிழ்** என்று பட்டர்பிரான் குறிப்பிடுவதைக் காணலாம்.

பெரியாழ்வார் திருமொழி மூன்றாம் பத்தில் "அஞ்சன வண்ணனை" என்று தொடங்கும் பாடல் வரிசையில்

"என்றும் எனக்கினி யானை என்மணி வண்ணனை
கன்றின் பின்போக்கி னேன்என் றசோதை கழறிய
பொன்திகழ் மாடப் புதுவையர் கோன்பட் டன்சொல்
இன்தமிழ் மாலை வல்ல வர்க்கிட ரில்லையே"

என்று பாடுகிறார்.

"நல்லதோர் தாமரை" என்னும் பாடல் வரிசையில்

"மாயவன் பின்வழி சென்று
வழியிடை மாற்றங்கள் கேட்டு
ஆயர்கள் சேரியி லும்புக்கு
அங்குத்தை மாற்றமு மெல்லாம்
தாயவள் சொல்லிய சொல்லைத்
தண்புது வைப்பட்டன் சொன்ன
தூய தமிழ்பத்தும் வல்லார்
தூமணி வண்ணனுக் காளரே !"

என்று தூய தமிழில் பாடுகிறார்.

**"என்னாதன்"** என்று தொடங்கும் இனிய பாடல்களில்

"நந்தன் மதலையைக் காகுத்த னைநவின்று
உந்தி பறந்த வொளியிழை யார்கள்சொல்
செந்தமிழ்த் தென்புது வைவிட்டு சித்தன்சொல்
ஐந்தினோ டைந்தும்வல் லார்க்கல்ல லில்லையே"

என்று பாடுகிறார்.

நான்காம் பத்தில் "தங்கையை மூக்கும்" என்று தொடங்கும் பாடல்கள் பத்தில்,

"பொங்கொலி கங்கைக் கரைமலி கண்டத்
துறைபுரு டோத்தம னடிமேல்
வெங்கலி நலியா வில்லிபுத் தூர்க்கோன்
விட்டுசித் தன்விருப் புற்று

தங்கிய அன்பால் செய்தமிழ் மாலை
தங்கிய நாவுடை யார்க்கு
கங்கையில் திருமால் கழலிணைக் கீழே
குளித்திருந் தகணைக் காமே !"

என்று பாடுகிறார்.

திருவரங்கம் பெரிய கோயிலின் மகிமையைப்பற்றிய பாடல்களில்,

"பருவரங்க ளவைபற்றிப்
படையாலித் தெழுந்தானை
செருவரங்கப் பொருதழித்த
திருவாளன் திருப்பதிமேல்
திருவரங்கத் தமிழ்மாலை
விட்டுசித்தன் விரித்தனகொண்டு
இருவரங்கம் எரித்தானை
ஏத்தவல்லார் அடியோமே"

என்று பாடுகிறார்.

திருவரங்கத் திருப்பதியைப்பற்றிய பாடல்களில்,

"கைந்நாகத் திடர்கடிந்த கனலாழிப்
படையுடையான் கருதும் கோயில்
தென்னாடும் வடநாடும் தொழநின்ற
திருவரங்கத் திருப்ப தியின்மேல்
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்
விரித்ததமிழ் உரைக்க வல்லார்
எஞ்ஞான்றும் எம்பெருமான் இணையடிக்கீழ்
இணைபிரியா திருப்பர் தாமே !"

என்று பாடுகிறார்.

ஐந்தாம் பத்தில் "வாக்குத் தூய்மை" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்

"காமர் தாதை கருதலர் சிங்கம்
காண வினிய கருங்குழற் குட்டன்
வாம னன்என் மரகத வண்ணன்
மாத வன்மது சூதனன் றன்னை
சேம நன்கம ரும்புது வையர்கோன்
விட்டு சித்தன் வியன்தமிழ் பத்தும்
நாம மென்று நவின்றுரைப் பார்கள்
நண்ணுவா ரொல்லை நாரண னுலகே"

என்று பாடுகிறார். இவ்வாறாகப் பெரியாழ்வாராகிய விட்டு சித்தர் சுமது திவ்யப்பிரபந்தப் பாசுரங்களைத் **தமிழ்ப்பாடல்** என்பதில், **விரித்த தமிழிவையென்றும், தமிழ் இன்னிசை மாலையென்றும், சீர்மலி செந்தமிழ்** என்றும், **இன்தமிழ் மாலையென்றும், புதுவைப் பட்டன் சொன்ன தூய தமிழ்** என்றும், **செந்தமிழ்த் தென் புதுவை விட்டு சித்தன்** என்றும், **அன்பால் செய்த தமிழ் மாலையென்றும், திருவரங்கத்தமிழ் மாலையென்றும், விட்டு சித்தன் விரித்த தமிழ்** என்றும், **விட்டுசித்தன் வியன் தமிழ் பத்தும்** என்றும் சிறப்புறக் குறிப்பிடுகிறார்.

ஆண்டாள் பாடியுள்ள திருப்பாவைப் பாடல்கள் உலகப் பிரசித்தி பெற்றவை; தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதிலும் அறிமுகமாகியுள்ள அருமையான தமிழ்ப் பாடல்கள்; பக்திச்சுவையும் தமிழ்ச்சுவையும் நிரம்பியவை; மார்கழி மாதத்தில் அதிகாலையில் வீதிதோறும் பாடப்படும் இனிய பாவைப்பாடல்கள்; நெய்யும் பாலும், மையும் மலரும், நீங்காத செல்வங்களும், குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்களும், நாடும் புகழும் ஆடைகளும் பால்சோறும் கூடிய மணம் நிறைந்த இனிய பாடல்களாகும்.

நந்தகோபன் குமரன், யசோதை இளஞ்சிங்கம், நாராயணன், பாற்கடலுள் துயிலும் பரமன், ஓங்கி உலகளந்த உத்தமன், ஆழி மழைக்கண்ணன், பத்மநாபன், மாயன், வடமதுரை மைந்தன், யமுனைத் துறைவன், தாமோதரன், புள்ளரையன், நாராயண மூர்த்தி, கேசவன், மாவாய்ப் பிளந்தான், தேவாதி தேவன், மாமாயன், மாதவன், வைகுந்தன், முகில்வண்ணன், சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன், பங்கயக் கண்ணன், மணிவண்ணன், நெடுமால், கோவிந்தன் என்றெல்லாம் நாமம் பல சொல்லி நாராயணனைப் பாடும் இனிய பாடல்களாகும் அவை. அந்த அற்புதமான தமிழ்ச்சுவைமிக்க முப்பது பாடல்களின் நிறைவாக,

**“வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்**
**திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி,**
**அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்**
**பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன**

சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவர் எம்பாவாய்"

என்று ஆண்டாள் பாடி முடிக்கிறார். திருப்பாவை முப்பது பாடல்களைச் சங்கத்தமிழ்மாலை என்று குறிப்பிடுவது சிறப்பாகும்.

நாச்சியார் திருமொழியில் நாமமாயிரம் என்று தொடங்கும் பாடல் வரிசையில் ஒரு பாட்டில்

"சீதைவா யமுதம் உண்டாய்! எங்கள்
சிற்றில்நீ சிதையேல் என்று
வீதி வாய்விளை யாடும் ஆயர்
சிறுமியர் மழலைச் சொல்லை
வேத வாய்த்தொழி லார்கள் வாழ்வில்லி
புத்தூர் மன்விட்டு சித்தன்றன்
கோதை வாய்த்தமிழ் வல்ல வர்குறை
வின்றி வைகுந்தம் சேர்வரே!"

என்று கோதை பாடுகிறார்.

இந்தப் பாடலில் மிக்க நேர்த்தியான அற்புதமான கருத்துமிக்க ஒப்பீடுகளை ஆண்டாள் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

சீதைவாயமுதம், வீதிவாய் விளையாடும் சிறுமியர் மழலைச் சொல், வேதவாய்த் தொழிலார் கூறும் வேதக் கருத்துகள் ஆகியவற்றிற்கு ஒப்பாக கோதைவாய்த் தமிழைக் குறிப்பிடுகிறார். தமிழுக்கு ஈடு சீதைவாய் அமுதமும், மழலைச் சிறுமியர் வாய்ச்சொல்லும் வேதியர் வாய் வேதமும் என்று ஆண்டாள் குறிப்பிடுகிறார்.

நாச்சியார் திருமொழி "வாரண மாயிரம்" என்று தொடங்கும் அற்புதமான பாடல் வரிசைகளுள் ஒன்றாய்

"ஆயனுக் காகத்தான் கண்ட கனாவினை
வேயர் புகழ்வில்லி புத்தூர்க்கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயுநன் மக்களைப் பெற்று மகிழ்வரே !"

என்று கோதை பாடி மகிழ்கிறார்.

"சிந்துரச் செம்பொடி" என்னும் பாடல் வரிசையில்,

"சந்தொடு காரகிலும்
சுமந்து தடங்கள் பொருது
வந்திழியும் சிலம்பா
றுடை மாலிருஞ் சோலைநின்ற
சுந்தரனை, சுரும்பார்
சுழற்கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ் பத்தும்வல்லார்
திருமாலடி சேர்வார்களே !"

என்று ஒரு பாடலில் பாடுகிறார்.

குலசேகரப்பெருமான் அருளிச்செய்த பெருமாள் திருமொழியில்,

"இருளிரியச் சுடர்மணிகள்" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்,

"திடர்விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
கடல்விளங்கு கருமேனி யம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்
குடைவிளங்கு விறல்தானைக் கொற்ற கொள்வாள்
கூடலர்கோன் கொடைக்குலசே கரன்சொற் செய்த
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணு வாரே!"

என்று ஒரு பாடலில் குலசேகராழ்வார் பாடுகிறார்.

அவர் மேலும் "தேட்டருந்திறல்" என்னும் பாடல் தொகுதியில்,

"கொல்லிக் காவலன் கூடல் நாயகன்
கோழிக் கோன்குல சேகரன்
சொல்லி னில்தமிழ் மாலை வல்லவர்
தொண்டர் தொண்டர்க ளாவரே"

என்றும்,

"ஊனேறு" என்று தொடங்கும் பாடல் வரிசையில், "கொன்னவிலும் கூர்வேல் குலசேகரன் சொன்ன **பன்னிய நூல் தமிழ் வல்லார் பாங்காய** பத்தர்களே" என்றும்,

*"தருதுயரம் தடாயேல்" என்னும் பாடல் தொகுதியில் "கொற்றவேல் தானைக் குலசே கரன்சொன்ன,* **நற்றமிழ் பத்தும் வல்லார்** *நண்ணார் நரகமே" என்றும்,*

*"ஏர்மலர்ப் பூங்குழல்" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்,* **"கொல்லி நகர்க்கிறைக் கூடற் கோமான் குலசே கரன்இன் னிசையில் மேவி சொல்லிய இன் தமிழ் மாலை பத்தும் சொல்லவல் லார்க்கில்லை துன்பந் தானே"** *என்றும்,*

*"ஆலை நீள்கரும்பு" என்று தொடங்கும் பாடல் வரிசையில்,* **"கொல்லிக் காவலன் மாலடி முடிமேல் கோல மாம்குல சேகரன் சொன்ன நல்லிசைத் தமிழ் மாலை வல்லார்கள் நண்ணு வாரொல்லை நாரண னுக்கே"** *என்றும்,*

*"மன்னுபுகழ் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே" என்று தொடங்கும் பாடல் வரிசையில்*

**"கன்னிநன்மா மதிள்புடைசூழ்**
**கணபுரத்தென் காகுத்தன்**
**தன்னடிமேல் 'தாலேலோ'**
**என்றுரைத்த தமிழ்மாலை**
**கொல்நவிலும் வேல்வலவன்**
**குடைக்குலசே கரன்சொன்ன**
**பன்னியநூல் பத்தும்வல்லார்**
**பாங்காய பத்தர்களே!"**

*என்றும்,*

*"**வன்தாளினிணை வணங்கி**" என்று தொடங்கும் பாடல் வரிசையில்*

**"கூரார்ந்த வேல்வலவன் கோழியர்கோன்**
**குடைக்குலசே கரன்சொற் செய்த**
**சீரார்ந்த தமிழ்மாலை யிவைவல்லார்**
**தீநெறிக்கண் செல்லார் தாமே!"**

*என்றும்,*

*"**அங்கணெடு மதிள்புடைசூழ்**" என்று தொடங்கும் பாடல் வரிசையில்,*

**கோழியர்கோன் குடைக்குலசே கரன்சொற் செய்த நல்லியலின் தமிழ்மாலை பத்தும் வல்லார் நலம்திகழ் நாரணடிக்கீழ் நண்ணு வாரே"** என்றெல்லாம் தமிழ்ச் சிறப்பைக் குறிப்பிட்டுப் பாடுவதைக் காண்கிறோம்.

குலசேகராழ்வார் தமது பாடல்களில் தமிழின் சிறப்புகள் குறித்து, **"நடைவிளங்கு தமிழ்மாலை"** என்றும், **"சொல்லினில் தமிழ் மாலை வல்லவர்"** என்றும், **"பன்னிய நூல் தமிழ் வல்லார்"** என்றும், **"நற்றமிழ் பத்தும் வல்லார்"** என்றும், **"இன்தமிழ் மாலை"** என்றும், **"நல்லிசைத்தமிழ் மாலை"** என்றும், **"சீரார்ந்த தமிழ் மாலையிவை"** என்றும், **''நல்லியலின் தமிழ்மாலை பத்தும்''** என்றும் இனிய தமிழ்ச்சொற்களில் நயம்படப் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலைப் பாசுரங்கள் அனைத்தும் அரங்கனைப் பற்றியனவேயாகும். இவ்வாழ்வார் திருவரங்கனைத் தவிர வேறு யாரைப்பற்றியும் பாடவில்லை. அவர் திருவரங்கத்தின் சிறப்பையும் காவிரியின் சிறப்புகளைப்பற்றியும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் பக்திச்சுவை நிரம்பப் பாடியுள்ளார். இந்தப் பாசுரங்கள் அனைத்தும் தமிழ்ச்சுவை நிரம்பியவை.

திருவரங்கத்தைப்பற்றி **"வண்டினம் முரலும் சோலை, மயிலினம் ஆலும் சோலை, கொண்டல்மீ தணவும் சோலை, குயிலினம் கூவும் சோலை, அண்டர்கோ னமரும் சோலை, அணிதிரு வரங்க மென்னா"** என்று பாடுகிறார். இன்னும், **"சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில்"** என்றும், **"கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு மாட்டு பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழில் அரங்கம்"** என்றும், **"வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழில் அரங்கம்"** என்றும், **"ஆர்த்துவண் டலம்பும் சோலை அணிதிரு வரங்கம்"** என்றும், **"தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ் திருவரங்கம்''** என்றெல்லாம் திருவரங்கத்தின் சிறப்புப்பற்றியும் அச்சிறப்பிற்குக் காரணமான காவிரியின் வளத்தைப்பற்றியும் பாடுகிறார்.

கங்கையைக்காட்டிலும் காவிரி புனிதமானது என்று பெருமைப்படுகிறார்.

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த பாசுரங்களும் அரங்கத்தம்மானைப்பற்றியவைகளேயாகும். **"நிமலன், நின்மலன், நீதி வானவன், நீள்மதிள் அரங்கத்தம்மான்"** என்றும், **"காகுத்தன் கடியார் பொழில் அரங்கத்தம்மான்"** என்றும், **''மதுரமா வண்டு பாட, மாமயிலாட ரங்கத்தம்மான்''** என்றும் **"வண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர்"** என்றும் ப்ண் இசைத்துப் பாடி மகிழ்கிறார்.

மதுரகவியாழ்வார் பாடியுள்ள ''கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்று தொடங்கும் பாசுரங்கள் நம்மாழ்வார் பற்றிய சிறப்புமிக்க பாசுரங்களாகும். தமிழ்மணம் மிக்க இனிய பாடல்களாகும்.

**"கண்டு கொண்டென்னைக் காரிமா றப்பிரான்**
**பண்டை வல்வினை மாற்றி யருளினான்**
**எண்டி சையும் அறிய இயம்புகேன்**
**ஒண்ட மிழ்ச்சட கோப னருளையே"**

என்றும்,

**"அருள்கொண் டாடும் அடியவர் இன்புற**
**அருளி னான்அவ் வருமறை யின்பொருள்**
**அருள்கொண் டாயிரம் இன்தமிழ் பாடினான்**
**அருள்கண் டீர்இவ் வுலகினில் மிக்கதே!"**

என்றும் அருமையாகப் பாடியுள்ளார்.

இப்பாசுரங்களில் **"ஒண்டமிழ்ச் சடகோபன்"** என்றும் **"அவ்வருள் நிறைந்த சடகோபனார்"** மறையின் பொருளை ஆயிரத்திற்கும் மேற்பட்ட இனிய தமிழ்ப் பாசுரங்களில் பாடினான் என்றும் பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

### திருமங்கையாழ்வார்

திவ்யப்பிரபந்தத்தில் திருமங்கையாழ்வார் பாசுரங்கள் மிகவும் சிறப்புத் தனித்தன்மை கொண்டவை; கருத்தாழம் மிக்கவை; உணர்ச்சியும் உணர்ச்சி வேகமும் கொண்டவை; சாதாரண மக்களும் திருமால் பெருமையைப் புரிந்து கொள்ளும்படியாக உள்ள தமிழ்ச்சுவை நிரம்பியவை.

திருமங்கையாழ்வார் பெருமான், தமது சொந்த வாழ்க்கையின் அனுபவத்திலிருந்து வைணவத்திற்கு வந்தவர்; திருமாலடியார் ஆனவர்; நாராயண மந்திரத்தின் பெருமையை உலகிற்குச் சிறப்பாக எடுத்துக் கூறியவர்.

அவர் பாடியுள்ள **"வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்"** என்று தொடங்கும் பாசுரங்கள் மிகச்சிறப்பு மிக்கவை; அனைவராலும் விரும்பிப் பாடப்படுபவை. அந்தப் பாடல் தொகுதியின் நிறைவாக,

**"மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்**
**மங்கையார் வாள்கலி கன்றி**
**செஞ்சொலால் எடுத்த தெய்வநன் மாலை**
**இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்**
**துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்**
**துயரிலீர் சொல்லிலும் நன்றாம்**
**நஞ்சுதான் கண்டீர் நம்முடைய வினைக்கு**
**நாராய ணாவென்னும் நாமம்"**

என்று அனைவரையும் அழைத்துச் செந்தமிழ்ச் செஞ்சொலால் எடுத்த தெய்வ நன்மாலை மூலம், நாராயண நாமத்தைப் புகட்டி அப்பாடல்களைப் பாடச் சொல்லுகிறார்.

பெரிய திருமொழியின் முதல் பத்தில் திருச்சாளக் கிராமத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைப்பற்றிய **"கலையும் கரியும் பரிமாவும்"** என்று தொடங்கும் பாடல் தொகுப்பின் முடிவில்

**"தார வாரும் வயல்சூழ்ந்த**
**சாளக் கிராமத் தடிகளை**
**காரார் புறவில் மங்கைவேந்தன்**
**கலியன் ஒலிசெய் தமிழ்மாலை**
**ஆரா ருலகத் தறிவுடையார்**
**அமரர் நன்னாட் டரசாள**
**பேரா யிரமும் ஓதுமின்கள்**
**அன்றி யிவையே பிதற்றுமினே"**

என்று பாடுகிறார். இங்கு கலியன் திருமங்கை மன்னன் ஒலி செய்யும் தமிழ்மாலையாகக் குறிப்பிடப்படுகிறது.

*சிங்கவேள் குன்றத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைப்பற்றி "**அங்கண் ஞாலம்**" என்று தொடங்கும் பாடல் வரிசையின் முடிவில்,*

"செங்கண் ஆளி யிட்டிறைஞ்சும்
சிங்க வேள்குன் றுடைய
எங்கள் ஈசன் எம்பிரானை
இருந்த மிழ்நூல் புலவன்
மங்கை யாளன் மன்னுதொல்சீர்
வண்ட றைதார்க் கலியன்
செங்கையா ளன்செஞ் சொல்மாலை
வல்ல வர்தீ திலரே"

*என்று பாடுகிறார்.*

*இங்கு, "**இருந்தமிழ் நூல் புலவன் மங்கையாளன்**" என்று திருமங்கையாழ்வார் தம்மைக் குறிப்பிடுகிறார்.*

*"**கொங்கலர்ந்த மலர்**" என்று தொடங்கும் பாடல் தொகுப்பில்,*

"செங்க யல்திளைக் குஞ்சு னைத்திரு
வேங்க டத்துறை செல்வனை
மங்கை யர்தலை வன்கலி கன்றி
வண்டமிழ்ச் செஞ்சொல் மாலைகள்
சங்கை யின்றித் தரித்து ரைக்கவல்
லார்கள் தஞ்சம தாகவே
வங்க மாகடல் வையங் காவலர்
ஆகி வானுல காள்வரே"

*என்று பாடுகிறார். இங்கு மங்கையர் தலைவன் கலியன் தொடுத்த **வண்டமிழ் செஞ்சொல் மாலைகள்** என்று சிறப்பாகத் தமது பாடல்களைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.*

*இரண்டாம் பத்தில் "**வானவர் தங்கள் சிந்தை போல**" என்று தொடங்கும் பாடல் வரிசையில்*

"மின்னு மாமுகில் மேவு தண்திரு
வேங்க டமலை கோவில் மேவிய
அன்னமாய் நிகழ்ந்த அமரர் பெருமானை
கன்னி மாமதிள் மங்கை யர்கலி
கன்றி யின்தமி ழால்உ ரைத்தஇம்
மன்னு பாடல்வல் லார்க்கிட மாகும் வானுலகே"

என்று தமிழால் உரைத்த பாடல் என்று குறிப்பிட்டுப் பாடுகிறார்.

"காசை யாடை மூடியோடிக் காதல்செய் தானவனூர்" என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவில்,

"இண்டை கொண்டு தொண்ட ரேத்த
எவ்வுள் கிடந்தானை
வண்டு பாடும் பைம்புறவில்
மங்கையர் கோன்கலியன்
கொண்ட சீரால் தண்டமிழ்செய்
மாலை யீரைந்தும் வல்லார்
அண்ட மாள்வ தாணை யன்றேல்
ஆள்வர் அமரு லகே"

என்று தண்டமிழ் செய்மாலை பத்தும் எனத் தமது பாமாலையைக் குறிப்பிடுகிறார்.

"அன்றாயர் குலக்கொடி" என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவில்

"நெடுமா லவன்மே வியநீர் மலைமேல்
நிலவும் புகழ்மங் கையர்கோன் அமரில்
கடமா களியானை வல்லான் கலியன்
ஒலிசெய் தமிழ்மாலை வல்லார்க்கு உடனே,
விடுமால் வினைவேண் டிடில்மே லுலகும்
எளிதா யிடுமன் றியிலங் கொலிசேர்
கொடுமா கடல்வை யகமாண் டுமதிக்
குடைமன் னவரா யடிகூ டுவரே"

என்று கலியன் ஒலி செய் தமிழ் மாலை எனத் தமது பாமாலையை ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

"சொல்லுவன் சொற்பொருள்" என்னும் பாடல் தொகுதியின் முடிவில்,

"பார்மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன்பணிந்
தபர மேசுர விண்ணகர்மேல்
கார்மன்னு நீள்வயல் மங்கையர் தந்தலை
வன்கலி கன்றிகுன் றாதுரைத்த

சீர்மன்னு செந்தமிழ் மாலைவல் லார்திரு
மாமகள் தன்னரு ளால்உலகில்
தேர்மன்ன ராய்ஒலி மாகடல் சூழ்செழு
நீருல காண்டு திகழ்வர்களே!"

என்று சீர்மன்னு செந்தமிழ் மாலை எனத் தமது பாடலைக் குறிப்பிடுகிறார்.

மூன்றாம் பத்தில், "இருந்தண்" என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவில்

"மூவ ராகிய ஒருவ்னை மூவுலகு
உண்டுஉமிழ்ந்து அளந்தானை
தேவர் தானவர் சென்றுசென் றிறைஞ்சத்தண்
திருவயிந் திரபுரத்து
மேவு சோதியை வேல்வல வன்கலி
கன்றி விரித்துரைத்த
பாவு தண்டமிழ் பத்திவை பாடிடப்
பாவங்கள் பயிலாவே"

என்று தமது பாடல்களைக் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

"வாட மருதிடை" என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவில்,

"தேனமர் பூம்பொழில் தில்லைச்
சித்திர கூட மமர்ந்த
வானவர் தங்கள் பிரானை
மங்கையர் கோன்மரு வார்தம்
ஊனமர் வேல்கலி கன்றி
யொண்டமிழ் ஒன்பதோ டொன்றும்
தானிவை கற்றுவல் லால்மேல்
சாரகில் லாவினை தாமே !"

என்று பாடியுள்ளார்.

"ஒரு குறளாய் இருநிலம் மூவடி மண்" என்று தொடங்கும் பாடல் வரிசையில்

"செங்கமலத் தயன்அனைய மறையோர் காழிச்
சீராம விண்ணகர்என் செங்கண் மாலை
அங்கமலத் தடவயல்சூழ் ஆலி நாடன்
அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்

கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங்கடல்சூழ் உலகுக்குத் தலைவர் தாமே !"

என்று தமது பாடல்களைச் **சங்கமுகத் தமிழ்மாலை** பத்தும் என்று மிகச் சிறப்பாக ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

"**தூவிரிய மலருழக்கி**" என்று தொடங்கும் பாசுரத் தொகுதியின் முடிவாக,

"மையிலங்கு கருங்குவளை
மருங்கலரும் வயலாலி
நெய்யிலங்கு சுடராழிப்
படையானை நெடுமாலை
கையிலங்கு வேல்கலியன்
கண்டுரைத்த தமிழ்மாலை
ஐயிரண்டும் இவைவல்லார்க்
கருவினைக ளடையாவே!"

என்று பாடியுள்ளார்.

"**கள்வன்கொல் யானறியேன்**" எனத் தொடங்கும் பாடல் வரிசையில்,

"தாய்மனம் நின்றிரங்கத்
தனியேநெடு மால்துணையா
போயின பூங்கொடியாள்
புனலாலி புகுவரென்று
காய்சின வேல்கலியன்
ஒலிசெய்தமிழ் மாலைபத்தும்
மேவிய நெஞ்சுடையார்
தஞ்சமாவது விண்ணுலகே"

என்று தமது பாடல்களை **ஒலிசெய் தமிழ்மாலை** என்று குறிப்பிடுகிறார்.

"**நந்தா விளக்கே**" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்,

"வண்டார் பொழில்சூழ்ந் தழகாய நாங்கூர்
மணிமாடக் கோயில்நெடு மாலுக்கு என்றும்
தொண்டாய தொல்சீர் வயல்மங்கை யர்கோன்
கலியன் ஒலிசெய் தமிழ்மாலை வல்லார்,

கண்டார் வணங்கக் களியானை மீதே
கடல்சூழ் உலகுக் கொருகா வலராய்
விண்தோய் நெடுவெண் குடைநீழ லின்கீழ்
விரிநீர் உலகாண்டு விரும்பு வரே"

என்று ஆழ்வார் தம் பாடல்களைக் கலியன் ஒலி செய் தமிழ்மாலை எனச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

"சலங்கொண்ட இரணியன்" என்று தொடங்கும் பாடல் வரிசையில்

"மங்கையர்தம் தலைவன்மரு
வலர்தம்உடல் துணிய
வாள்வீசும் பரகாலன்
கலிகன்றி சொன்ன
சங்கமலி தமிழ்மாலை
பத்திவைவல் லார்கள்
தரணியொடு விசும்பாளும்
தன்மைபெறு வாரே"

என்று சங்கமலி தமிழ்மாலை பத்து எனக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

நான்காம் பத்தில் "போதலர்ந்த பொழில் சோலை" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்

"காரார்ந்த திருமேனிக் கண்ணன்அமர்ந்
துறையுமிடம்
சீரார்ந்த பொழில்நாங்கைத் திருத்தேவ
னார்தொகைமேல்,
கூரார்ந்த வேற்கலியன் கூறுதமிழ்
பத்தும்வல்லார்
ஏரார்ந்த வைகுந்தத் திமையவரோ
டிருப்பாரே !"

என்று பாடியுள்ளார்.

ஐந்தாம் பத்தில், "தாம் தம் பெருமையறியார்" என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவில்,

"காவிப் பெருநீர் வண்ணன் கண்ணன்
மேவித் திகழும் கூட லூர்மேல்
கோவைத் தமிழால் கலியன் சொன்ன
பாவைப் பாடப் பாவம் போமே !"

என்று தம் பாடல்களைக் கோவைத் தமிழால் கலியன் சொன்ன பாக்கள் எனக் குறிப்பிடுகிறார்.

"கைம்மான " என்று தொடங்கும் பாடல் வரிஉ

"ஆமருவி நிரைமேய்த்த
அணியரங்கத் தம்மானை
காமருசீர்க் கலிகன்றி
யொலிசெய்த மலிபுகழ்சேர்
நாமருவு தமிழ்மாலை
நாலிரண்டோ டிரண்டினையும்
தாமருவி வல்லார்மேல்
சாராதீ வினைதாமே"

என்று நாமருவு தமிழ் மாலை எனக் குறிப்பிட்டுப் பாடுவதைக் காணலாம்.

ஆறாம் பத்தில் "வண்டுணும் நறுமலர்" என்று தொடங்கும் பாடல் தொகுதி திருவிண்ணகர், ஒப்பிலியப்பனைப்பற்றிய தமிழ்ச்சுவை மிக்க பாசுரங்கள் கொண்டதாகும். இப்பாடல் தொகுதியின் முடிவில்,

"பூமரு பொழிலணி விண்ண கர்மேல்
காமரு சீர்க்கலி கன்றி சொன்ன
பாமரு தமிழிவை பாட வல்லார்
வாம னன்அடி யிணைமரு வுவரே"

என்று அருமையாகப் பாடுகிறார்.

"பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில்" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்

"தேனார் பூம்புறவில்
திருவிண்ணகர் மேயவனை
வானா ரும்மதில்சூழ்
வயல்மங்கையர் கோன்மருவார்
ஊனார் வேல்கலியன்
ஒலிசெய்தமிழ் மாலைவல்லார்
கோனாய் வானவர்தம்
கொடிமாநகர் கூடுவரே."

என்று ஆழ்வார் பாடுகிறார்.

இவ்வாறு திருமங்கையாழ்வார் பெருமான் தம் பாடல் தொகுதிகளைச் **செஞ்சொலால் எடுத்த தெய்வநன் மாலை** யென்றும், **கலியன் ஒலிசெய் தமிழ்மாலை** யென்றும், **இருந்தமிழ் நூல்புலவன், செங்கையாளன் செஞ்சொல் மாலை** என்றும், **வண்டமிழ்ச் செஞ்சொல் மாலைகள்** என்றும், **கலிகன்றி இன்தமிழால் உரைத்த இம்மன்னு பாடல்** என்றும், **கலியன் கொண்ட சீரால் தண்டமிழ் செய்மாலை** யென்றும், கலியன் குன்றாதுரைத்த சீர்மல்கும் **செந்தமிழ் மாலை** யென்றும், கலியன் விரித்துரைத்த பாவு **தண்டமிழ் பத்திவை** யென்றும், கலியன் சொன்ன **சங்க முகத்தமிழ் மாலை** யென்றும், கலியன் கண்டுரைத்த **தமிழ்மாலை** யென்றும், கலியன் ஒலிசெய் **தமிழ்மாலை** யென்றும், கலியன் சொன்ன **சங்கமலி தமிழ்மாலை** யென்றும், கலியன் கூறு **தமிழ்பத்தும்** என்றும், **கோவைத் தமிழால் கலியன் சொன்ன பாடல்கள்** என்றும், கலியன் ஒலி செய்த மலி புகழ் சேர் **நாமருவு தமிழ்மாலை** யென்றும், கலியன் சொன்ன **பாமரு தமிழிவை** யென்றும், கலியன் **ஒலிசெய் தமிழ் மாலை** என்றும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். அப்பாடல்களில் ஆழ்வாரின் ஆழ்ந்த தமிழ்ப்பற்று சிறப்பாகப் புலப்படுகிறது.

திருமங்கையாழ்வார் சோழநாட்டைச் சேர்ந்த ஆலி நாட்டுக் குறுநில மன்னராவார். திருமங்கை மன்னர் என்றும், ஆலி நாடர் என்றும் வழங்கப்படுபவர். இவர் சோழப் பேரரசின் படைத்தலைவராய் இருந்து பணியாற்றியவர். நாலு கவிப்பெருமாள் என்று புகழ் பெற்றவர். சோழ நாட்டைச் சிறப்பித்து இவர் பாடியுள்ள பாடல்கள் சிறப்புமிக்கவை; தமிழ்ச்சுவை மிக்கவை.

திருநரையூர் சென்று அங்கு எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவித்து, அப்பெருமாளின் திருவருளைப் பெறுமாறு உலகோர் அனைவரையும் வேண்டுகிறார்.

**"அம்பரமும் பெருநிலனும் திசைக ளெட்டும்**
**அலைகடலும் குலவரையும் உண்ட கண்டன்**
**கொம்பமரும் வடமரத்தின் இலைமேல் பள்ளி**
**கூடினான் திருவடியே கூட கிற்பீர்**

வம்பவிழும் செண்பகத்தின் வாச முண்டு
மணிவண்டு வகுளத்தின் மலர்மேல் வைகுப்
செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே!"

என்று ஆழ்வார் உள்ளம் நெகிழ்ந்து பாடுகிறார். இப்பாடல் தொகுதியில் அவர் சோழநாட்டையும் அதன் வளத்தையும் சோழ மன்னனையும் காவிரியின் சிறப்பையும் சிறப்பித்துப் பாடுவதைக் காண்கிறோம்.

அடுத்தடுத்த பாசுரங்களில் "**செழும் பொன்னி வளம் கொடுக்கும் சோழன் சேர்ந்த திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே**" என்றும்,

"கவ்வைமா களிறுந்தி வெண்ணி யேற்ற
கழல்மன்னர் மணிமுடிமேல் காக மேற
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்றும்,

"வெங்கண்மா களிறுந்தி வெண்ணி யேற்ற
விறல்மன்னர் திறலழிய வெம்மா வுய்த்த
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்றும்,

"மேலெழுந்து விலங்கல் பாய்ந்து
பொன்சிதறி மணிகொணர்ந்து கரைமேல் சிந்திப்
புலம்பரந்து நிலம்பரக்கும் பொன்னி நாடன்
தென்தமிழன் வடபுலக்கோன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்றும்,

"மின்னாடு வேலேந்து விளந்தை வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலகம் ஆண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்றும்,

"மலைத்தடத்த மணிகொணர்ந்து வைய முய்ய
வளம்கொடுக்கும் வருபுனலம் பொன்னி நாடன்
சிலைத்தடக்கைக் குலச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே!"

என்றும்,

"இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்றும்,

"பாராள ரவர்இவரென் றழுந்தை யேற்ற
படைமன்னர் உடல்துணியப் பரிமா உய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே"

என்றும்,

"செம்மொழிவாய் நால்வேத வாணர் வாழும்,
திருநறையூர் மணிமாடச் செங்கண் மாலை
பொய்ம்மொழியொன் றில்லாத மெய்ம்மை யாளன்
புலமங்கைக் குலவேந்தன் புலமை யார்ந்த
அம்மொழிவாய்க் கலிகன்றி யின்பப் பாடல்
பாடுவார் வியனுலகில் நமனார் பாடி
வெம்மொழிகேட் டஞ்சாதே மெய்ம்மை சொல்ட
விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந்தக் கோட,

என்றும் இனிமையாகப் பாடி முடிக்கிறார்.

மேலும் "**ஆளும் பணியும்**" என்று தொடங்கும் பாடல் ாகுதியின் முடிவில்

"நன்மை யுடைய மறையோர்வாழ்
நறையூர் நின்ற நம்பியை
கன்னி மதில்சூழ் வயல்மங்கைக்
கலியன் ஒலிசெய் தமிழ்மாலை
பன்னி யுலகில் பாடுவார்
பாடு சாராப் பழவினைகள்
மன்னி யுலகம் ஆண்டுபோய்
வானோர் வணங்க வாழ்வாரே!"

என்று ஆழ்வார் பாடுகிறார்.

ஏழாம் பத்தில், "கறவா மடநாகு" என்னும் தலைப்பில் தொடரும் பாடல் தொகுப்பில் **வண்டார் பொழில்சூழ் நறையூர் நம்பிக்கு என்றும், தொண்டாய்க் கலிய னொலி செய் தமிழ்மாலை தொண்டீர் ! இவைபாடுமின் பாடி நின்றாட உண்டே விசும்பு உந்தமக்கில்லை துயரே** என்றும் பாடுகிறார்.

"தந்தை காலில்" என்று தொடங்கும் பாசுரத் தொகுதியில்

"நெல்லில் குவளை கண்காட்ட
நீரில் குமுதம் வாய்காட்ட
அல்லிக் கமலம் முகம்காட்டும்
கழனி யழுந்தூர் நின்றானை
வல்லிப் பொதும்பில் குயில்கூவும்
மங்கை வேந்தன் பரகாலன்
சொல்லில் பொலிந்த தமிழ்மாலை
சொல்லப் பாவம் நில்லாவே"

என்று பாடுகிறார்.

**"திருவுக்கும் திருவாகிய செல்வா"** என்று தொடங்கும் பாசுரத் தொகுதியில்

"அன்ன மன்னுபைம் பூம்பொழில் சூழ்ந்த
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானை
கன்னி மன்னுதிண் டோள்கலி கன்றி
ஆலி நாடன்மங் கைக்குல வேந்தன்
சொன்ன இன்தமிழ் நன்மணிக் கோவை
தூய மாலை இவைபத்தும் வல்லார்
மன்னி மன்னவ ராயுல காண்டு
மான வெண்குடைக் கீழ்மகிழ் வாரே!'

என்று பாடி மகிழ்கிறார்.

எட்டாம் பத்தில் **"சிலையிலங்கு பொன்னாழி"** என்று தொடங்கும் பாசுர வரிசையில்

"மாவளரும் மென்னோக்கி மாதராள்
மாயவனைக் கண்டாள் என்று
காவளரும் கடிபொழில்சூழ் கண்ணபுரத்
தம்மானைக் கலியன் சொன்ன

பாவளரும் தமிழ்மாலை பன்னியநூல்
இவையைந்து மைந்தும் வல்லார்
பூவளரும் கற்பகம்சேர் பொன்னுலகில்
மன்னவராய்ப் புகழ்தக் கோரே!"

என்று பாடுகிறார்.

*"கரையெடுத்த சுரிசங்கும்"* என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவாக,

"தேமருவு பொழில்புடைசூழ் திருக்கண்ண புரத்துறையும்
வாமனனை மறிகடல்சூழ் வயலாலி வளநாடன்
காமருசீர்க் கலிகன்றி கண்டுரைத்த தமிழ்மாலை
நாமருவி இவைபாட வினையாய நண்ணாவே !"

என்றும்,

*"வியமுடை விடையினம் உடைதர மடமகள்"* என்று தொடங்கும் பாசுர வரிசையில்,

"மலிபுகழ் கணபுர முடையவெம் அடிகளை
வலிகெழு மதிளயல் வயலணி மங்கையர்
கலியன தமிழிவை விழுமிய இசையினொடு
ஒலிசொலும் அடியவர் உறுதுய ரிலரே"

என்றும் பாடுகிறார்.

"வானோர் அளவும்" என்று தொடங்கும் பாடல் வரிசையில்,

"மீனோடு ஆமை கேழலரி
குறளாய் முன்னு மிராமனாய்த்
தானாய் பின்னு மிராமனாய்த்
தாமோ தரனாய்க் கற்கியும்
ஆனான் றன்னை, கண்ணபுரத்து
அடியன் கலிய னொலிசெய்த
தேனா ரின்சொல் தமிழ்மாலை
செப்பப் பாவம் நில்லாவே"

என்று பாடுகிறார்.

*"கைம்மான மதயானை இடர்தீர்த்த கருமுகிலை"* என்னும் அடியைத் தொடக்கமாகக் கொண்ட பாசுர அடிகளின் முடிவாக,

"செருநீர வேல்வலவன் கலிகன்றி மங்கையர்கோன்
கருநீர் முகில்வண்ணன் கண்ண புரத்தானை
இருநீரின்தமி ழின்னிசை மாலைகள் கொண்டுதொண்டீர்
வருநீர் வையமுய்ய இவைபாடி யாடுமினே"

என்று பாடியுள்ளார்.

ஒன்பதாம் பத்தில் திருக்கோட்டியூர் திவ்ய தேசத்தில் எழுந்தருளியுள்ள எம்பிரானைப்பற்றி "எங்கள் எம்மிறை எம்பிரான் இமையோர்க்கு நாயகன்" என்று தொடங்கும் பாடல் தொகுதியில்,

"கோவை யின்தமிழ் பாடு வார்குடம்
ஆடு வார்தட மாம லர்மிசை
மேவு நான்முகனில் விளங்கு புரிநூலர்
மேவு நான்மறை வாணர் ஐவகை
வேள்வி ஆறங்கம் வல்லவர் தொழும்
தேவ தேவபிரான் திருக்கோட்டி யூரானே"

என்றும்,

"ஆலுமா வலவன் கலிகன்றி
மங்கையர் தலைவன் அணிபொழில்
சேல்கள் பாய்கழனித் திருக்கோட்டி யூரானை
நீல மாமுகில் வண்ண னைநெடு
மாலை இன்தமி ழால்நி னைந்தஇந்
நாலும் ஆறும்வல் லார்க்கிட மாகும் வானுலகே"

என்று ஆழ்வார் பெருமான் பாடி மகிழ்கிறார்.

பத்தாம் பத்தில் "எங்கானும் ஈதொப்ப தோர்மாய முண்டே?" என்று தொடங்கும் பாடல் வரிசையில்,

"நின்றார் முகப்புச் சிறிதும் நினையான்
வயிற்றை நிறைப்பா னுறிப்பால் தயிர்நெய்
அன்றாய்ச் சியர்வெண் ணெய்வி ழுங்கி உரலோடு
ஆப்புண் டிருந்த பெருமான் அடிமேல்
நன்றாய தொல்சீர் வயல்மங் கையர்கோன்,
கலியன் ஒலிசெய் தமிழ்மா லைவல்லார்
என்றானும் எய்தார் இடர்,இன்ப மெய்தி
இமையோர்க்கும் அப்பால் செலவெய் துவாரே"

என்று பாடுகிறார்.

பதினோராம்பத்தில் "**மன்னிலங்கு பாரதத்துத் தேரூர்ந்து**" என்று தொடங்கும் பாடல் பத்தில்,

"பெற்றாரார் ஆயிரம் பேரானைப் பேர்பாடப்
பெற்றான் கலியன் ஒலிசெய் தமிழ்மாலை
கற்றாரோ முற்றுல காள்வர் இவைகேட்க
லுற்றார்க்கு உறுதுய ரில்லைஉல கத்தே"

என்று பாடியுள்ளார்.

திருமங்கையாழ்வார் அருளிச்செய்துள்ள, '**திருக் குறுந்தாண்டகம்**' என்னும் பிரபந்தப் பாசுரங்களின் நிறைவாக,

"வானவர் தங்கள் கோனும்
மலர்மிசை அயனும் நாளுட்
தேமலர் தூவி ஏத்தும்
சேவடிச் செங்கண் மாலை
மானவேல் கலியன் சொன்ன
வண்டமிழ் மாலை நாலைந்து
ஊனம தின்றி வல்லார்
ஒளிவிசும் பாள்வர் தாமே"

என்று பாடியுள்ளார்.

திருநெடுந்தாண்டகப் பாசுரங்களில்,

"இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் தன்னை
இருநிலம்கால் தீநீர்விண் பூதம் ஐந்தா
செந்திறத்த தமிழோசை வடசொல் லாகித்
திசைநான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி
அந்தரத்தில் தேவர்க்கும் அறிய லாகா
அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை மந்திரத்தால் மறவா தென்றும்
வாழுதியேல் வாழலாம் மடநெஞ்சமே !"

என்றும்,

"மின்னுமா மழைதவழும் மேக வண்ணா
விண்ணவர்தம் பெருமானே! அருளாய் என்று
அன்னமாய் முனிவரோடு அமரர் ஏத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை

மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்
மானவேல் பரகாலன் கலியன் சொன்ன
பன்னியநூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார் தாமே"

என்றும் சிறப்பாகப் பாடியுள்ளார்.

**பொய்கையாழ்வார்** அருளிச்செய்த இயற்பா, முதல் திருவந்தாதியின் தனியனாக,

"கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு - வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழந் தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து"

என்று முதலியாண்டான் குறிப்பிடுகிறார். இந்த நூறு பாசுரங்களும் இனிய தமிழ்ப்பாசுரங்களாகும்.

**பூதத்தாழ்வார்** அருளிச்செய்த இரண்டாம் திருவந்தாதிப் பாசுரங்களில்

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்"

என்று தொடங்குகிறார். மேலும்,

"யானே தவம்செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் - யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது"

என்றும் பாடுகிறார். இங்கு **"ஞானத்தமிழ் புரிந்த நான்"** என்றும், **''இருந்தமிழ் நன்மாலை''** என்றும் **"பெருந்தமிழன் நல்லேன்"** என்றும் தமிழைச் சிறப்பித்து ஆழ்வார் பாடுகிறார்.

திருமழிசையாழ்வார் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதிப் பாசுரங்களில் ஆழ்வார், கண்ணனே தனது **உள்ளத்தில் தமிழை விதைத்துத்** தன்னைப் பண்படுத்தினார் என்றும், தான்கற்ற **மொழியாகத் தமிழ்** தன் **உள்ளத்தில் கலந்துவிட்டது** என்றும் கூறுகிறார்.

**"கதவு மனமென்றும் காணலா மென்றும்**
**குதையும் வினையாவி தீர்ந்தேன் - விதையாக**
**நற்றமிழை வித்தியென் உள்ளத்தை நீவிளைத்தாய்**
**கற்றமொழி யாகிக் கலந்து"**

என்று உள்ளம் உணர்ந்து பாடுகிறார்.

## நம்மாழ்வார் திருவாய்மொழி

நம்மாழ்வார் பெருமான் தமது சிறப்புமிக்க திருவாய் மொழிப் பாசுரத் தொகுதியில் பல பாசுரங்களிலும் தமிழைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழி தமிழ் வேதம் என்று போற்றப்படுகிறது.

**"ஏய்ந்தபெருங் கீர்த்தி யிராமா னுஜமுனிதன்**
**வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகிறேன் - ஆய்ந்தபெரும்**
**சீரார் சடகோபன் செந்தமிழ்வே தம்தரிக்கும்**
**பேராத வுள்ளம் பெற"**

என்று அனந்தாழ்வான் அருளிச்செய்த தனியன் சிறப்பாகக் குறிப்பிடுகிறது. சடகோபன் பாடிய பாசுரங்கள் செந்தமிழ் வேதமாகும்.

நம்மாழ்வார் தமது திருவாய்மொழிப் பாசுரங்களில், **"வளவேழ் உலகின் முதலாய்"** என்று தொடங்கும் பாடல் வரிசையில்,

**"மாலே, மாயப் பெருமானே**
**மாமா யவனே என்றென்று**
**மாலே யேறி மாலருளால்**
**மன்னு குருகூர்ச் சடகோபன்**
**பாலேய் தமிழ ரிசைகாரர்**
**பத்தர் பரவும் ஆயிரத்தின்**
**பாலே பட்ட இவைபத்தும்**
**வல்லார்க் கில்லை பரிவதே!"**

என்று பாடுகிறார்.

**"கேசவன் தமர் கீழ்மேல்"** என்று தொடங்கும் பாசுர வரிசையில்

"வண்ண மாமணிச் சோதியை
அமரர் தலைமகனை
கண்ணனை நெடுமாலைத்
தென்குரு கூர்ச்சட கோபன்
பண்ணிய தமிழ்மாலை ஆயிரத்துள்
இவைபன் னிரண்டும்
பண்ணில் பன்னிரு நாமப்பாட்
டண்ணல்தாள் அணைவிக்குமே"

என்று பாடுகிறார்.

திருவாய்மொழி இரண்டாம் பத்தில் "**அணைவது அரவணைமேல்**" என்று தொடங்கும் பாடல் வரிசையில்,

"கண்டலங்கள் செய்ய கருமேனி யம்மானை
வண்டலம்பும் சோலை வழுதி வளநாடன்
பண்டலையில் சொன்னதமிழ் ஆயிரத்துப் பத்தும்வல்லார்
விண்டலையில் வீற்றிருந் தாள்வரெம் மாவீடே"

என்று பாடியுள்ளார்.

நான்காம் பத்தில் "**நண்ணாதார் முறுவலிப்ப**" என்று தொடங்கும் பாசுரத் தொகுதியின் முடிவாக,

"திருவடியை நாரணனைக்
கேசவனைப் பரஞ்சுடரைத்
திருவடிசேர் வதுகருதிச்
செழுங்குருகூர்ச் சடகோபன்
திருவடிமே லுரைத்ததமிழ்
ஆயிரத்துள் இப்பத்தும்
திருவடியே அடைவிக்கும்
திருவடிசேர்ந் தொன்றுமினே!"

என்று பாடுகிறார்.

ஐந்தாம் பத்தில் "**கையார் சக்கரத் தென் கருமாணிக்கமே**" என்று தொடங்கும் பாடல் தொகுதியின் முடிவில்,

"கார்வண்ணன் கண்ணபிரான்
கமலத்தடங் கண்ணன்றன்னை
ஏர்வளவொண் கழனிக்
குருகூர்ச்சட கோபன்சொன்ன

சீர்வண்ண வொண்டமிழ்கள்
இவையாயிரத்துள் இப்பத்தும்
ஆர்வண்ணத் தாலுரைப்பார்
அடிக்கீழ்புகு வார்பொலிந்தே"

என்று பாடியுள்ளார்.

ஐந்தாம் பத்தில் "கடல் ஞாலம் செய்தேனும் யானே" என்று தொடங்கும் பாடல் தொகுதி சிறப்புமிக்க பாசுரங்களைக் கொண்டதாகும். தம்மை எம்பெருமானாகவே கருதி உணர்ச்சி பொங்கப் பாடும் இனிய பாசுரங்களாகும்.

"கற்கும்கல் விக்கெல்லை யிலனே என்னும்,
கற்கும்கல்வி யாவேனும் யானே என்னும்
கற்கும்கல்வி செய்வேனும் யானே யென்னும்
கற்கும்கல்வி தீர்ப்பேனும் யானே என்னும்
கற்கும்கல்விச் சாரமும் யானே என்னும்
கற்கும்கல்வி நாதன்வந் தேறக் கொல்லோ?
கற்கும் கல்வியீர்க் கிவையென் சொல்லுகேன்?
கற்கும் கல்வியென் மகள்காண் கின்றவே?"

என்று பாடுகிறார். இப்பாடல் தொகுதியின் முடிவாக,

"கூந்தல்மலர் மங்கைக்கும் மண்மடந் தைக்கும்
குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் றன்னை
வாய்ந்த வழுதிவள நாடன் மன்னு
குருகூர்ச் சடகோபன் குற்றே வல்செய்து
ஆய்ந்த தமிழ்மாலை ஆயி ரத்துள்
இவையும் ஓர்பத்தும் வல்லார், உலகில்
ஏய்ந்து பெரும் செல்வந்தராய்த் திருமால்
அடியார்களைப் பூசிக்க நோற்றார்களே"

என்று பாடி முடிக்கிறார்.

ஆறாம் பத்தில் "மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார்" என்று தொடங்கும் பாசுர வரிசையில்,

"ஆய்ச்சி யாகிய அன்னையால் அன்று வெண்ணெய்
வார்த்தையுள் சீற்ற முண்டழு
கூத்த அப்பன் றன்னைக் குருகூர்ச் சடகோபன்
ஏத்திய தமிழ்மாலை யாயிரத்துள் இவையும்
ஓர்பத் திசையொடும்
நாத்தன்னால் நவில உரைப்பார்க் கில்லை நல்குரவே"

என்று பாடியுள்ளார்.

"**துவளில் மாமணி**" என்று தொடங்கும் பாசுர வரிசையில்,

**"சிந்தையாலும் சொல்லாலும் செய்கையி**
**னாலும் தேவ பிரானையே**
**தந்தை தாயென்றடைந்த வண்குரு**
**கூரவர் சடகோபன் சொல்**
**முந்தை யாயிரத்துள் இவை தொலை**
**வில்லி மங்கலத்தைச் சொன்ன**
**செந்தமிழ்ப் பத்தும் வல்லவரடிமை**
**செய்வார் திருமாலுக்கே."**

ஏழாம் பத்தில் "**மாயா! வாமனனே மதுசூதா! நீயருளாய்**" என்று தொடங்கும் பாசுரத் தொகுதியின் முடிவில்,

**"ஆம்வண்ண மின்னதொன் றென்றறி**
**வதரிய அரியை**
**ஆம்வண்ணத் தால்குரு கூர்ச்சட**
**கோபன் அறிந்துரைத்த**
**ஆம்வண்ண வொண்டமிழ் களிவை**
**யாயிரத் துளிப்பத்தும்**
**ஆம்வண்ணத் தாலுரைப் பாரமைந்**
**தார்தமக் கென்றைக்குமே!"**

என்று பாடியுள்ளார்.

"**என்றைக்கும்**" என்று தொடங்கும் பாசுரத் தொகுதியில் முதல் பாசுரத்திலேயே ஆழ்வார் "**இன்றமிழ் பாடிய ஈசனை யாதியாய்**" என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

**"என்றைக்கும் என்னைஉய் யக்கொண்டு போகிய**
**அன்றைக்கன் றென்னைத்தன் னாக்கியென் னால்தன்னை**
**இன்றமிழ் பாடிய ஈசனை யாதியாய்**
**நின்றவென் சோதியை என்சொல்லி நிற்பனோ?"**

என்று ஆதியாய், நின்ற சோதியாக நின்ற ஈசனே இனிய தமிழில் பாடியதாக ஆழ்வார் குறிப்பிடுவது தமிழில் அவருக்குள்ள ஈடுபாட்டைக் குறிக்கிறது.

எட்டாம் பத்தில் "**கரு மாணிக்க மலைமேல்**" என்று தொடங்கும் பாசுர வரிசையின் நிறைவாக,

"நேர்பட்ட நிறைமூ வுலகுக்கும்
நாயகன் றன்னடிமை
நேர்பட்ட தொண்டர்தொண் டர்தொண்டர்
தொண்டன்சட கோபன்சொல்
நேர்பட்ட தமிழ்மாலை ஆயிரத்
துள்இவை யோர்பத்தும்
நேர்பட்டாரவர் நேர்பட் டார்நெடு
மாற்கடி மைசெய்யவே !"

*என்று தாம் பாடியுள்ள ஆயிரம் பாசுரங்களையும் தமிழ்மாலை என்றே மிகச் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.*

*ஒன்பதாம் பத்தில் "**கொண்ட பெண்டிர்**" என்று தொடங்கும் பாடல் வரிசையில்,*

"ஆதும் இல்லை மற்ற
வனில்என் றதுவே துணிந்து
தாது சேர்தோள் கண்ணனைக்
குருகூர்ச் சடகோபன் சொன்ன
தீதி லாத வொண்டமிழ்கள்
இவைஆ யிரத்து ளிப்பத்தும்
ஓத வல்ல பிராக்கள்நம்மை
யாளுடை யார்கள் பண்டே"

*என்று பாடியுள்ளார்.*

*"**அறுக்கு வினையாயின**" என்று தொடங்கும் பாசுரங்களின் முடிவில்*

"வண்ணம் மணிமாட நன்னாவாய் உள்ளானை
திண்ணம் மதிள்தென் குருகூர்ச் சடகோபன்
பண்ணார் தமிழா யிரத்திப்பத் தும்வல்லார்
மண்ணாண்டு மணம்கமழ் வர்மல் லிகையே"

*என்று பாடியுள்ளார். இதிலும் **தமிழாயிரம்** என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.*

*"**மாலை நண்ணி**" என்று தொடங்கும் பாடல் வரிசைத் தொகுதியில்*

"பாடுசா ராவினை பற்றற வேண்டுவீர்
மாடநீ டுகுரு கூர்ச்சட கோபன்சொல்
பாடலா னதமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்
பாடியா டிப்பணி மின்அவன் தாள்களே!"

என்று இப்பாடலிலும் தமிழ் ஆயிரம் என்று ஆழ்வார் குறிப்பிட்டு ஆடிப்பாடிப் பணிமின் என்று அனைவரையும் அன்புடன் அழைக்கிறார்.

பத்தாம் பத்தில் "அருள் பெறுவார்" என்று தொடங்கும் பாசுரத் தொகுதியில்

"என்னெஞ்சத் துள்ளிருந்திங்
கிருந்தமிழ்நூல் இவைமொழிந்து
வன்னெஞ்சத் திரணியனை
மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப்
பாண்டவர்க்காய் படைதொட்டான்
நன்னெஞ்சே, நம்பெருமான்
நமக்கருள்தான் செய்வானே!"

என்றும்,

"காட்டித்தன் கனைகழல்கள்
கடுநரகம் புகலொழித்த
வாட்டாற்றெம் பெருமானை
வளம்குருகூர்ச் சடகோபன்
பாட்டாய தமிழ்மாலை
ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டுஆரார் வானவர்கள்
செவிக்கினிய செஞ்சொல்லே"

என்று பாடுகிறார்.

"திருமாலிருஞ்சோலை மலை" என்னும் தலைப்பில் தொடங்கும் பாடல் தொகுதியில்

"நில்லா அல்லல் நீள்வயல்சூழ் திருப்பேர்மேல்
நல்லார் பலர்வாழ் குருகூர்ச் சடகோபன்
சொல்லார் தமிழா யிரத்துள் இவைபத்தும்
வல்லார் தொண்ட ராள்வது சூழ்பொன் விசும்பே"

என்று பாடியுள்ளார்.

இவ்வாறு நம்மாழ்வார் தமது ஓராயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் "சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம்" என்றும், "சடகோபன் பாலேய் தமிழர் இசைகாரர்" என்றும், "சடகோபன் பண்ணிய தமிழ் மாலை ஆயிரம்" என்றும், "சோலை வழுதி வளநாடன்

பண்டலையில் சொன்ன தமிழ் ஆயிரம்'' என்றும், "குருகூர்ச் சடகோபன் திருவடிமேல் உரைத்ததமிழ் ஆயிரம்" என்றும், "குருகூர்ச் சடகோபன் சொன்ன சீர்வண்ண வொண்டமிழ்" என்றும், "குருகூர்ச் சடகோபன் குற்றேவல் செய்து ஆய்ந்த தமிழ் மாலை ஆயிரம்" என்றும், "குருகூர்ச் சடகோபன் ஏத்திய தமிழ் மாலை" யென்றும், "தொலை வில்லிமங்கலத்தைச் சொன்ன செந்தமிழ்ப் பத்தும்" என்றும், "குருகூர்ச் சடகோபன் அறிந்துரைத்த ஆம்வுண்ண வொண்டமிழ் களிவை" என்றும், "இன்றமிழ் பாடிய ஈசனை யாதியாய்" என்றும், "சடகோபன் சொல் நேர்பட்ட தமிழ் மாலை ஆயிரம்" என்றும், ''குருகூர்ச் சடகோபன் சொன்ன தீதிலா வொண்டமிழ்கள் இவை ஆயிரம்'' என்றும், "தென்குருகூர்ச் சடகோபன் பண்ணார் தமிழாயிரத்தில் இப்பத்தும்" என்றும், "குருகூர்ச் சடகோபன் சொல் பாடலான தமிழாயிரத்துள் இப்பத்தும்'' என்றும், "என்னெஞ்சத் துள்ளிருந்திங் கிருந்தமிழ் நூல்" என்றும், ''குருகூர்ச் சடகோபன் பாட்டாய தமிழ் மாலை ஆயிரத்துள்" என்றும், "குருகூர்ச் சடகோபன் சொல்லார் தமிழாயிரத்துள் இவைபத்தும்'' என்றும் தமிழைச் சிறப்பித்துப் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

ஆழ்வார்கள் தனித்தமிழில் பக்திச்சுவையுடன் திருமாலைப்பற்றியும், திருமாலவதாரப் பெருமைகளைப் பற்றியும், திருமால் அவதாரங்களின் செயல் சிறப்புகள் பற்றியும், திருமால் பல வேறு பெயர்களில் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்களைப்பற்றியும், திருமாலடியார்களைப்பற்றியும், அவ்வடியார்களின் பெருமைகளைப்பற்றியும், நான்மறை களைப்பற்றியும், அவைகளில் பொதிந்துள்ள சிறந்த சீரிய கருத்துகள்பற்றியும், அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய பயன்பாடுகளைப்பற்றியும் மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளதைப்பற்றியும் தமிழ்மாலைகளாகக் கோத்து தமிழன்னைக்கும் பாரதத் தாயிற்கும் சமர்ப்பித்துள்ளதைக் காண்கிறோம்.

ஆழ்வார்களின் தமிழையும் தமிழ்ப்பாசுரங்களையும் தமிழ் மாலைகளையும் பாராட்டிப் பல சாத்துமுறைப் பாசுரங்களிலும், மற்றும் பல அடியார்களின் தனிப் பாசுரங்களிலும் தனியன்களிலும் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள், பேசியுள்ளார்கள்.

**சாத்து முறைப் பாசுரங்களில்**

"பொய்கைமுனி பூதத்தார் பேயாழ் வார்தண்
பொருநல்வரும் குருகேசன் விட்டு சித்தன்
துய்யகுல சேகரன்நம் பாண நாதன்
தொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிளங்க வாள்வே லேந்தும்
மங்கையர்கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யதமிழ் மாலைகள்நாம் தெளிய ஓதித்
தெளியாத மறைநிலங்கள் தெளிகின் றோமே!"

என்னும் அருமையான செய்தியைக் காண்கிறோம்.

நம்மாழ்வார் அருமறைகளைத் தமிழில் இயற்றியதைப் பெருமைப்படுத்தி மதுரகவி பாடியுள்ளதைக் குறிப்பிட்டுக் கூறும் பாடல்,

"இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில்
இகழாத பல்லுறவில் இராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கில் தகவோக் கத்தில்
தத்துவத்தை உணர்த்துதலில் தன்மை யாக்கில்
அன்பர்க்கே யவதரிக்கு மாயன் நிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தானே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார் கட்கே!"

என்று சிறப்பாகக் குறிப்பிடுகிறது. மேலும்,

"விண்ணவர் வேண்டி விலக்கின்றி மேவும் அடிமையெல்லாம்
மண்ணுல கத்தில் மகிழ்ந்தடை கின்றனர் வண்துவரைக்
கண்ணன் அடைக்கலம் கொள்ளக் கடன்கள் கழற்றியநம்
பண்ண மருந்தமிழ் வேத மறிந்த பகவர்களே !"

என்று ஆழ்வார்களைத் தமிழ் வேதமறிந்த பெரியோர் களாகச் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது.

**இன்னும்**

**"செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்துரைப்போன் வாழிய"** என்றும், **"செந்தமிழ்த் தூப்புல் திருவேங்கடவன் வாழியே"** என்றும் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆண்டாள் பாடல்களைப்பற்றிய சாத்துமுறைப் பாடலில்,

"பாதங்கள் தீர்க்கும் பரம னடிகாட்டும்
வேத மனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு"

என்றும் குறிப்பிடுகிறது.

இராமானுஜ நூற்றந்தாதியில் திருமங்கையாழ்வார் பாசுரங்களைப்பற்றியும் நம்மாழ்வார் பாசுரங்களைப்பற்றியும் சிறப்பித்து மிகப் பெருமைப்படுத்தியும் திருவரங்கத் தமுதனார் நெஞ்சாரப் பாடுகிறார்.

"முனியார் துயரங்கள் முந்திலும் இன்பங்கள் மொய்த்திடிலும்
கனியார் மனம்கண்ண மங்கைநின் றானைக் கலைபரவும்
தனியா னையைத்தண் டமிழ்செய் நீலன் தனக்குலகில்
இனியானை எங்கள் இராமா னுஜனைவந் தெய்தினரே"

என்றும்,

"எய்தற் கரிய மறைகளை ஆயிரம் இன்தமிழால்
செய்தற் குலகில் வரும்சட கோபனைச் சிந்தையுள்ளே
பெய்தற் கிசையும் பெரியவர் சீரை உயிர்களெல்லாம்
உய்தற் குதவும் இராமா னுசனெம் உறுதுணையே!"

என்றும்,

"உறுபெறும் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர்
நெறிதரும் செந்தமிழ் ஆரண மேயென்றிந் நீணிலத்தோர்
அறிதர நின்ற இராமா னுசனெனக் காரமுதே"

என்றும்,

**"ஆரப் பொழில்தென் குருகைப் பிரான்அமு தத்திருவாய்,
ஈரத் தமிழின் இசையுணர்ந் தோர்கட்கு இனியவர்தம்
சீரைப் பயின்றுய்யும் சீலம்கொள் நாத முனியைநெஞ்சால்
வாரிப் பருகும் இராமா னுசனென்றன் மாநிதியே"**

என்றும் இரு ஆழ்வார் பெருமான்களைப்பற்றியும் அவர்களுடைய தமிழைப்பற்றியும் சிறப்பித்துப் பாடுகிறார்.

மேலும் திருவரங்கத்தமுதனார்,

**"சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமி ழால்அளித்த
பாரிய லும்புகழ்ப் பாண்பெரு மாள்சர ணாம்பதுமத்
தாரியல் சென்னி இராமா னுசன்றன்னைச் சார்ந்தவர்தம்
காரிய வண்மைஎன் னால்சொல்லொ ணாதிக் கடலிடத்தே"**

என்றும், ·

**"செய்யும் பசுந்துள பத்தொழில் மாலையும் செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ் மாலையும் பேராத சீரரங்கத்
தையன் கழற்கணி யம்பரன் தாளன்றி ஆதரியா
மெய்யன் இராமா னுசன்சர ணேகதி வேறெனக்கே!"**

என்றும் சிறப்பாகப் பாடுகிறார்.

இப்பாடல்களில் தமிழின் சிறப்புப்பற்றி, **செந்தமிழ்** என்றும், **மறைத்தமிழ்** என்றும், **தண்டமிழ்** என்றும், **இன்தமிழ்** என்றும், **ஈரத்தமிழ்** என்றும், **தமிழொரு மூன்றும்** என்றும், **வாட்டமிலா வண்டமிழ்** என்றும், **பசுந்தமிழ்** என்றும் பெருமைபடத் திருவரங்கத்தமுதனார் குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

ஆழ்வார்கள் தங்கள் இனிய தமிழ் மூலம், இனிய தமிழ்ப் பாடல்கள் மூலம் தமிழகத்தின் மேன்மையையும் சிறப்பையும், நாகரிகப் பெருமைகளையும் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுகிறார்கள்; தமிழின் வளத்தைப் பெருமைப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

தமிழ் வளர்த்த ஆழ்வார்கள் வாழ்க! ஆழ்வார்கள் வளர்த்த இசைத்தமிழ் என்றென்றும் வாழ்க !!

## எங்கள் புதிய வெளியீடுகள்

1. தாயுமானவர் பாடல் தொகுப்பு
(ஆங்கில - தமிழ் உரை விளக்கம்)
- பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்

2. அண்ணல் அநுமன் - பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார்

3. வளரும் பூக்கள் - கவிஞர் செல்ல கணபதி

4. விடுகதைக் களஞ்சியம் - ஆச்சா குருசாமி

5. இந்திய வரலாறு - தொகுதி - 2
- முனைவர் ந.க மங்களமுருகேசன்

6. சிதையாத உண்மைகள் - மா. கமலவேலன்

7. அன்றாட, பாரம்பரியச் சமையல் - எளிய முறைகள்
- ராசாமணி சண்முகசுந்தரம்

8. சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும் - ஓர் ஆய்வு
- அ. சீனிவாசன்

9. மின் அஞ்சல் - மு. சிவலிங்கம்

10. வடிவுடைக் காந்திமதியே! - நெல்லை கண்ணன்